

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்ஸிஸ்ட்)
13-வது தமிழ் மாநில மாநாடு



சென்னை, P.R.-V.P.C. அரங்கம்
நவம்பர் 23-26, 1988
மாநிலக் குழுவின் வேலை அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
13வது மாநில மாநாடு, சென்னை
மாநிலக் குழுவின் வேலையறிக்கை

தோழர்களே!

1. இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தமிழ் மாநில 13-வது மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் பிரதிநிதிகளாகிய உங்கள் அனைவரையும் மாநிலக்குழு புரட்சி வாழ்த்துக்களுடன் வரவேற்கிறது.

2. நமது கட்சியின் 13-வது மாநாட்டில் விவாதித்து இறுதியாக்குவதற்கான சர்வதேசிய, தேசிய நிலைமைகளைப் பற்றிய மத்திய கமிட்டியின் நகல் அரசியல் தீர்மானம் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் அதனைப் படித்திருப்பீர்கள். கட்சி அமைப்புகளில் அதனை விவாதிக்கவும், கருத்துக்கள் கூறவும், கட்சிக் காங்கிரசுக்குத் திருத்தங்கள் அனுப்பி வைக்கவும் உங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆகவே அவைகளைப் பற்றி மீண்டும் இங்கு குறிப்பிட வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

3. நமது மாநிலத்தின் அரசியல்நிலைமை, கடந்த மூன்றாண்டு காலத்தில் கட்சியும், அதன் தலைமையிலான வர்க்க-வெகுஜன அமைப்புகளும் நடத்தியுள்ள இயக்கங்கள், போராட்டங்கள், பின்பற்றிய தந்திரோபாயங்கள், அரசியல் சித்தாந்தத் துறைகளில் நாம் ஆற்றியுள்ள பணிகள் ஆகியவைகளே நாம் விவாதிக்க வேண்டிய விஷயங்கள். கல்கத்தா கட்சி காங்கிரஸ் தீர்மானத்தின் அடிப்படையிலும் நமது கடந்த மாநில மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையிலும் இடதுசாரி அணியை கட்டுவது, இடதுசாரி ஜனநாயக அணியினை உருவாக்குவது, மற்றும் எதேச்சாதிகார, வகுப்புவாத சக்திகளுக்கெதிராக மதசார்பற்ற எதிர்க்கட்சிகளை ஒன்றுபடுத்துவது போன்ற நமது கடமைகளை எவ்வாறு நிறைவேற்றியுள்ளோம்; இதில் நமக்கு ஏற்பட்ட பலாபலன்கள் என்ன, படிப்பினைகள் என்ன, என்பதே இம்மாநாட்டின் பரிசீலனைக்குரிய முக்கிய விஷயங்கள்.

4. கடந்த மூன்றாண்டு காலம் இதற்கு முன் என்றும் கண்டிராத அளவில் நாடு முழுவதும் பெருந்திரளான மக்கள் பல்வேறு இயக்கங்களில், கிளர்ச்சிகளில், போராட்டங்களில் ஈடுபட்ட காலம். தமிழக மக்கள் மத்திய அரசின் எதேச்சாதிகார அரசியல் போக்கினாலும், மக்கள் விரோத பொருளாதார கொள்கைகளினாலும், அ தே ப ா தை யி ல் அ. தி. மு. க. அரசுபின்பற்றிய கொள்கைகளினாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இக்கொள்கைகளுக்கெதிராக வலுவான பல மக்கள் போராட்டங்களை தமிழ்நாடு இக்காலத்தில் கண்டது. இவற்றில் நாம் முக்கிய பங்கு வகித்துள்ளோம்.

5. ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளின் விளைவாகவும், தங்களின் குறுகிய அரசியல் ஆதாயத்திற்கு ஜாதி மத சக்திகளுடன் சமரசம் செய்து கொள்வதனாலும், வகுப்புவாத, பிரிவினைவாத, சீர்குலைவு சக்திகள் இக்காலத்தில் மேலும் பலமடைந்துள்ளன. தமிழகத்திலும் என்றுமில்லாத அளவில் ஜாதீய சக்திகளும் மதவாதசக்திகளும் தலைதுக்கியுள்ளதைப் பார்க்கிறோம். உழைப்பாளிமக்கள் வகுப்புவாத அடிப்படையில் ஜாதி, மத வாரியாக பிளவுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

6. தமிழகத்தின் பொருளாதார நிலையில் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து வருகிறது. மக்களின் வாழ்க்கை மேலும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. தமிழ்நாடு மக்களில் 39. 6 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வதாக இவ்வாண்டு மார்ச் 17 ம் தேதி ராஜ்ய சபையில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது. தேசிய சாராசரி 37. 4 சதவிகிதத்தைக் காட்டிலும் இது அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு துவக்கத்தில் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்திருந்த படித்த வேலையற்றோர் எண்ணிக்கை 24லட்சம்; பதிவு செய்யாதோர் இன்னும் பல பத்துலட்சம். வேலையற்றோர் எண்ணிக்கையில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிக அதிகமான ஆலைகள் மூடப்பட்டுள்ளன. 1987 ஜூன் மாத இறுதியில் இந்தியாவில் நலிவுற்று மூடப்பட்டிருந்த ஆலைகளின் எண்ணிக்கை 1 லட்சத்து 58ஆயிரமாக இருந்தது. அதில் தமிழகத்தில் மட்டும் 25 ஆயிரத்து 146 ஆலைகள் மூடப்பட்டிருந்தன என்று அமைச்சர் எட்வர்ட் பெலேரோ நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இதில் தமிழகம்முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் சிறுதொழில்களில் 30 சதவிகிதம் நலிவுற்றுள்ளது.

7. இந்திய நாடு முழுவதும் 133 பஞ்சாலைகள் நலிவுற்று மூடப்பட்டுள்ளன. இதில் 41 தமிழகத்தில் மட்டும். இதிலும் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இந்த காலத்தில் அரிசி உட்பட அனைத்

துப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. நகரப்புறங்களைக் காட்டிலும் கிராமப்புற மக்களின் நிலை படுமோசமாக உள்ளது. தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களில் 44.8 சதவிகிதம் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்வதாக அரசு புள்ளிவிபரம் கூறுகிறது. கூலி விவசாயிகள் முதற்கொண்டு நடுத்தர விவசாயிகள், பணக்கார விவசாயிகள் வரையிலான, கிராமங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைக்கும் சட்டக்கூலிக்கும் உத்தரவாதமில்லை, விவசாயிகளுக்கு விளைபொருட்களின் விலைக்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. நில விநியோகம் மிகக் குறைவாக நடைபெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு.

8. கடந்த மூன்றுண்டுகள் தமிழ்நாட்டு அரசியலில் பல முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. சிக்கலான பல பிரச்சனைகளையும், நிலைமைகளையும் நாம் சந்தித்து வருகிறோம். தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்னையை மையமாகக் கொண்டு தி.மு.க.வும் வேறு சில குழுக்களும் முன் வைத்த இனவெறிப் போக்குகள், என்றுமில்லாத அளவில் தமிழ்நாட்டில் கிளறி விடப்பட்டுள்ள ஜாதிய உணர்வுகள், குறிப்பாக ராமதாஸ் தலைமையிலான வன்னியர் அமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகள், போராட்ட முறைகள், ஆகியவைகளை இக்காலத்தில் நாம் சந்திக்க வேண்டி வந்தது. மத்திய-மாநில அரசுகளின் ஜனநாயக உரிமைகளுக்கெதிரான தாக்குதல்கள், மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகள், இவைகளுக்கெதிரான தொடர்ச்சியான போராட்டங்கள், குறிப்பாக, என்றும் கண்டிராத அளவில், மிக விரிவாகவும், தீவிரமாகவும் நடைபெற்ற அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்கள், இடதுசாரி கட்சிகளின் பிரச்சாரப்பயணம், பாரத்பந்த் மற்றும் தொழிலாளர், விவசாயிகள், மாதர், மாணவர்கள், வாலிபர் பகுதியினர் நடத்திய பல்வேறு போராட்டங்கள் ஆகியவற்றில் இக்காலத்தில் நாம் நமது நிலையில் நின்று செயல்பட்டுள்ளோம். பல்வேறு பிரச்னைகளில் நமது சரியான கொள்கையினை மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளோம். இதன் மூலம் புதிய பகுதி மக்களிடம் நாம் சென்றுள்ளதுடன் கட்சியின் அரசியல் அந்தஸ்தும், செல்வாக்கும் முன்னைக் காட்டிலும் இக்காலத்தில் ஓரளவு அதிகரித்துள்ளது. இவைகளையெல்லாம் இங்கு பரிசீலனைசெய்து படிப்பினைகளைப் பெறுவது அவசியம்.

9. தமிழக அரசியலில் எம்.ஜி.ஆர், மறைவுக்குப் பிறகு பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அ.இ.அ.தி.மு.க. வில் ஏற்பட்ட பிளவைப் பயன்படுத்தி கவர்னர் ஆட்சி திணிக்கப்பட்டது.

இ.காங்கிரஸ் கட்சி தங்களுக்குச் சாதகமான நிலைமையை உருவாக்கிக் கொள்ள தொடர்ந்து முயற்சித்து வருகிறது. மத்திய மாநில அரசு அதிகார அமைப்புகளைப் பயன்படுத்தியும், ஜாதி மத சக்திகளைப் பயன்படுத்தியும், தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ள காங்கிரஸ் முயற்சிக்கிறது. அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் எப்படியும் வெற்றிபெற முயலுகின்றனர். இந்நோக்குடன் தான் கோடிக்கணக்கில் அரசு பணத்தை செலவழித்து ராஜீவ் காந்தி இங்கு தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். இதற்குத் தேவையான அவகாசத்திற்காக தேர்தலைத் தள்ளி வைத்தனர். காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைக்கும் நோக்குடன் பல கட்சிகளையும் ஜாதி-மத அமைப்புகளையும் சேர்த்து சந்தர்ப்பவாத கூட்டணி அமைக்க முயற்சிக்கின்றனர். தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தேக்கம், மற்றும் பல்வேறு பிரச்சனைகளையும், பயன்படுத்தி கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தாங்கள் ஆட்சியில் இல்லாதிருந்த நிலையில், தமிழகத்தின் இன்றைய பிரச்சனைகளுக்கெல்லாம் தி.மு க.; அ.தி மு.க. ஆட்சிகளின் பலவீனங்களையும், ஊழல்களையும் காரணம் காட்டி, இவைகளைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர். சட்டமன்றத் தேர்தல் வெற்றியானது, அனைத்திந்திய நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கு அடிகோலும் என்று கருதுகின்றனர். எப்படியும் வெற்றிபெற பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே சட்டமன்றத் தேர்தலில் இ. காங்கிரசை தோற்கடிப்பது இந்திய அரசியல் நிலைமையில் ஜனநாயக சக்திகளின் முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

10. அ.இ.தி.மு.கவினர் மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளனர். தெளிவான கொள்கையேதும் இல்லாத நிலையில் காங்கிரசுக்கு துணை போகும் போக்கு இவர்களிடம் காணப்படுகிறது. எல்லா பிரிவுகளுடனும் காங்கிரஸ் தொடர்பு கொண்டுள்ளது. இறுதியில் ஜெ. ஜா. ஏதாவது ஒரு பிரிவுடன் கூட்டு வைக்க அவர்கள் முயற்சிக்கின்றனர். அ. இ. அ. தி. மு. க. பிளவுபட்டபின் எம். ஜி. ஆர். ஆதரவாளர்கள் அனேகமாக ஜெ. ஜா. அணிகளிலேயே சேர்ந்துள்ளனர். நால்வர் அணியில் குறிப்பிடத்தக்க அளவில் சேரவில்லை. இதர கட்சிகள் பின்னால் சென்றவர்கள் மிகக் குறைவு என்றே கூறலாம்.

11. அ.இ.அ.தி.மு.க. வைப் பிளவுபடுத்தவும், கவர்னர் ஆட்சியை திணிக்கவும் செய்த [முயற்சியின் விளைவாக இ.காங்கிரஸ்

கட்சியிலும் பிளவு ஏற்பட்டது. இ.காங்கிரஸ் கட்சியிலிருந்து சிவாஜி கணேசன் அக்கட்சியை விட்டு வெளியேறி த.மு.மு. என்று ஒரு தனிக்கட்சி அமைத்துள்ளார். சிவாஜி ரசிகர்களாக இருந்த இளைஞர் காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலும் இவரோடு சென்று விட்டனர். இதனால் காங்கிரசுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிவாஜி செல்லுமிடங்களில் பெரும் கூட்டம் கூடுகிறது. இவர்கள் அஇஅதிமுக ஜானகி அணியுடன் நெருக்கமாக உள்ளனர். ஆனால் இறுதியாக தேர்தலில் என்ன நிலை எடுப்பார்கள் என்பதை இப்போது கூறமுடியாது.

சி.பி.ஐ: கல்யாண சுந்தரம் கோஷ்டி பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்ததனால் இக்கட்சி மேலும் பலவீனமடைந்துள்ளது. இதனால் சென்னை, செங்கை, திருச்சி, சேலம், பெரியார் தர்மபுரி, பசும்பொன், மதுரை, முகவை, வட ஆற்க்காடு, தென் ஆற்காடு, மாவட்டங்களில் சி.பி.ஐ. கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இவர்கள் ஓரளவு செல்வாக்கு பெற்றிருந்த தஞ்சை, நெல்லை, கோவை, காமராஜர் ஆகிய மாவட்டங்களில் பெரிய பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. தமிழகத்திலுள்ள ஒரே இடதுசாரி கட்சி என்ற முறையில் உடன்பாடான பிரச்னைகளில் கூட்டு இயக்கங்களில் இவர்களை இணைத்துச் செல்ல நாம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். சமீப காலத்தில் நடைபெற்ற பல கூட்டு இயக்கங்களில் இவர்கள் பங்கு கொண்டுள்ளனர். ஆனால் அவர்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. அடுத்தடுத்து தொடர்ச்சியாக இயக்கங்கள் வருகிறபோது சலித்துக் கொள்கிறார்கள். உற்சாகமற்ற நிலையில் பங்கு கொள்கின்றனர். இலங்கைப் பிரச்சனை, மொழிப் பிரச்சனை போன்ற தி.மு.க. வுடன் மாறுபாடு உள்ள பல பிரச்சனைகளில் இவர்களுடன்சேர்ந்து கூட்டு இயக்கம் நடத்த முயற்சித்தோம். அவர்கள் முன்வரவில்லை. பல பிரச்சனைகளில் நமக்கும், அவர்களுக்கும் அரசியல் அணுகுமுறையிலும் வேறுபாடுகள் உண்டு. அடிப்படையான தத்துவார்த்த அரசியல் வேறுபாடுகளும் நீடிக்கின்றன. இருப்பினும், இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டுமென்ற நமது அடிப்படை அரசியல் கொள்கைக்கேற்ப நாம் இவர்களுடன் ஒற்றுமையை உருவாக்க முயற்சி செய்து வருகிறோம். இது தொடரவேண்டும். அனைத்து மட்டங்களிலும் இந்த பார்வையுடன் இவர்களை அணுக வேண்டும்.

13. ஐ.சி.பி: கல்யாண சுந்தரம் தலைமையில் ஒரு பகுதி வெளியேறி ஐ.சி.பி. என்ற புதிய கட்சி அமைத்தனர். சி. பி. ஐ. யில் இருந்த இளைஞர்களில் பெரும்

பகுதியினர் இவர்களுடன் சேர்ந்துள்ளனர் என்று தெரிகிறது. கூத்தக்குடி ஷண்முகம் ஏற்கெனவே அமைத்திருந்த லெனினிஸ்ட் கட்சியும் இவர்களுடன் இணைந்தது. ஆனால் இவர்கள் பின்பற்றி வரும் காங்கிரஸ் ஆதரவு அரசியல் கொள்கையின் விளைவாக இவர்கள் வளர்ந்து உறுதிப்படும் நிலையில் இல்லை. இவர்கள் மொகித் சென், டாங்கே கோஷ்டியோடு நெருக்கமாக உள்ளனர். கல்யாணசுந்தரம் மறைவும் இவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது. வரவிருக்கும் தேர்தலில் இவர்கள் காங்கிரஸ் அணியில் இடம்பெறும் வாய்ப்புண்டு.

14. தி.மு.க: அ. இ. அ. தி. மு.க பிளவுக்குப் பின் தமிழகத்தில் முதல் பெரும் கட்சியாக இது திகழுகிறது. இலங்கை, இந்தி போன்ற பிரச்சனைகளை மையமாக வைத்து மொழி, இன உணர்வைத் தூண்ட இக்காலத்தில் இவர்கள் பெருமுயற்சி செய்த போதிலும், இதன் காரணமாக இவர்களின் செல்வாக்கு இக்காலத்தில் அதிகரித்துள்ளதாகக் கூற முடியாது. ஆனால் வரும் தேர்தலில் ஆட்சிக்கு வர வாய்ப்புள்ள கட்சி என்று எதிர் பார்க்கப்படுவதனால் அவர்களின் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. மக்கள் பிரச்சனைகளிலும் அவர்களுடன் கூட்டு இயக்கம் நடத்த முயற்சிக்கிறோம். பல பிரச்சனைகளில் இது சாத்தியமாகிறது. இது அவசியமானதும் கூட. இக்காலத்தில் நாம் இலங்கை, இந்தி, முஸ்லிம் லீகுடன் உறவு போன்ற பல பிரச்சனைகளில் தி.மு.க.வுடன் முரண்பட்ட நிலையினை மேற்கொண்டுள்ளோம். இதனால் சில காலங்களில் அவர்களுக்கும் நமக்கும் தொடர்பற்ற நிலையும் இருந்தது. உடன்பாடான பிரச்சனைகளில் ஒன்றுபடுவதற்கான முயற்சியும் அவ்வப்போது நடைபெற்றுவந்தது. நாம் முன்முயற்சி எடுக்கும் நேரங்களில் தி. மு. க. தலைமையும் கூட்டுஇயக்கங்களுக்கு அக்கறை காட்டியது. நாம் தொடர்ந்து திமுகவுடன் ஜனநாயகப் பிரச்சனைகளில் கூட்டு இயக்கம் நடத்துகிற நேரத்திலேயே அவர்களின் மொழி வெறி, இனவெறி கொள்கைகளை எதிர்த்துப் போராடுவது அவசியமானது. அவர்கள் இப்போது ''தேசிய அணியில்'' சேர்ந்திருப்பதனால் இக்கொள்கைகளை விட்டுவிடுவார்கள் என்று எதிர் பார்க்கமுடியாது. தங்களது அடிப்படைக் கொள்கைகளில் எந்த மாறுதலும் ஏற்படாது என்று அவர்கள் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தேசிய அணியும் இலங்கைப் பிரச்சனையில் இவர்களுக்கு சாதகமான நிலையை எடுத்துள்ளது. தமிழ் நாட்டில் திராவிட இயக்க சித்தாந்தத்தினை எதிர்த்து போராடுவதன் அவசியத்தை சால்கியா தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். முஸ்லீம் லீக் பற்றி தி. மு. க. தலைமை வெளியிட்ட தவறான கருத்தை மறுத்து

நமது நிலைபாட்டை விளக்கி மாநில செயற்குழு அறிக்கை வெளியிட்டது. இருப்பினும் தொடர்ந்து அவர்கள் இப்பிரச்சனையில் முன்வைக்கும் தவறான கருத்துக்களுக்கு சிலநேரங்களில் உடனே பதில் அளிக்காத நிலையும் உள்ளது. விழிப்புடன் இருந்து இப்பிரச்சனைகளில் உடனுக்குடன் பதில் கொடுக்கவேண்டும்.

15. ஜனதா கட்சி வலுவான, செல்வாக்கு மிக்க ஒரு கட்சி என்று கூறமுடியாது. ஏற்கெனவே காமராஜர் தலைமையில் ஸ்தாபன காங்கிரசாக இருந்து, காமராஜர் மறைவுக்குப்பின் இந்திரா காங்கிரசில் இணைய விரும்பாத ஒரு பகுதியினர் ஜனதா கட்சி என்ற பெயரில் இருந்து வருகின்றனர். மாநிலம் முழுவதும் பரவலாக இருப்பதாகச் சொல்ல முடியாது. சில மாவட்டங்களில் சில பகுதிகளில் இருந்து வருகின்றனர். வர்த்தகர்கள் மத்தியில் இவர்களுக்கு ஓரளவு செல்வாக்குண்டு. தெளிவான கொள்கையோ, ஸ்தாபன கட்டுப்பாடோ ஏதும் இல்லாத கட்சியாக உள்ளது. இவர்கள் தி.மு.க. எதிர்ப்பாளர்கள்—திமுக ஆதரவாளர்கள் என இரு கோஷ்டிகளாகப் பிரிந்துள்ளனர். இப்போது இரு பிரிவுகள், இரு தலைவர்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் பலத்தை மிகைப்படுத்திக் காட்டி தேர்தலில் தொகுதி பங்கீட்டுக்கு பேரம் பேசுவதனால் பொதுவாக தேர்தல் உடன்பாட்டில் இக்கட்சி வர முடியாமல் போகிறது. அத்துடன் தி.மு.க.வுக்கும் இவர்களுக்குமிடையிலான மோதலும் ஒரு காரணமாகும். சமீபத்தில் நடந்த பாரத் பந்த் உட்பட பல கூட்டு இயக்கங்களில் இவர்கள் பங்கு கொண்டுள்ளனர். அனைத்திந்திய அளவிலான ஒரு மதசார்பற்ற எதிர்கட்சி என்ற முறையில் இவர்களை எதேச்சாதிகாரத்திற்கெதிரான போராட்டங்களில் பங்குபெறச் செய்ய நாம் தொடர்ந்து முயற்சி செய்வது அவசியம்.

16. முஸ்லீம் லீக்: தமிழ் நாட்டில் முஸ்லீம் மக்களில் ஒரு பகுதியினரின் ஆதரவு பெற்ற கட்சியாக உள்ளது. சமீப காலமாக மத மூலாதாரக் கொள்கைகளை தீவிரமாக பிரச்சாரம் செய்து மதவெறியை வளர்த்து வருகின்றது. இந்த வகுப்புவாதப் போக்கினை நாம் கடுமையாக எதிர்த்து வருவதனால் நம்மையும் கடுமையாகத் தாக்குகின்றனர். நம்மையும் தி.மு.க. "தேசிய அணியில்" சேர்ந்ததையும் காரணம் காட்டி தி.மு.க.வுடனான உறவை முறித்துக் கொள்ள முடிவு செய்தனர். முஸ்லீம் லீக்கை எப்படியும் தங்களுடன் இருக்கச் செய்ய தி.மு.க. செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. முஸ்லீம் லீக் இப்போது பிளவு பட்டுள்ளது. சமது தலைமையிலான பிரிவு காங்கிரசுடன் உறவு

ள்ள முயற்சிக்கிறது. லத்திப் தலைமையிலான பகுதி தி.மு.க ரவு நிலை எடுத்துள்ளது. முஸ்லீம் லீக் பற்றிய நமது நிலை டில் எந்த மாறுதலும் இல்லை. நாம் வகுப்பு வாதத்திற் ிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். லீம் வகுப்புவாதத்தை எதிர்க்கிற நேரத்திலேயே முஸ்லீம் ளை வென்றெடுப்பது நமது கடமை. காங்கிரஸ் ஆட்சி நடக் மாநிலங்களில் இவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், பான்மையோர் என்ற முறையில் அவர்களுக்குள்ள தனியான ச்சனைகள், பெரும்பான்மை (இந்து) வகுப்புவாதத்தினால் ஏற் க்கூடிய ஆபத்து, நாம் ஆளுகின்ற மாநிலங்களிலும், நமது ி வலுவாக உள்ள பகுதிகளிலும் முஸ்லீம் மக்களைப் பாது க, நாம் எடுத்துவரும் நடவடிக்கைகள், அனைத்தும் முஸ்லீம் ன் மத்தியில் விரிவாக கொண்டு செல்ல வேண்டும்.

அ) தமிழ் நாட்டில் திராவிடக் கழகம் ஒரு ிய அமைப்பாகும். இது தொடர்ந்து இன றி, மொழிவெறி, ஜாதிவெறிகளை மையமாகக் கொண்ட ள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வருகிறது. இது ்மைக் காலம் வரையில் தி.மு.க. வுடன் நெருக்கமாக இருந்து ந்து. பல்வேறு காரணங்களால் இவர்களின் உறவு இப்போது ித்துள்ளது. அ.இ.அ.தி.மு.கவின் ஜானகி அணியுடன் இப் து உறவு கொண்டுள்ளது. இவர்களின் கொள்கை மக்களின் றுமைக்கும், ஜனநாயக இயக்கத்திற்கும் விரோதமானது என் ை நாம் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்.

ஆ) பார்வார்ட் பிளாக்-இது மேற்கு வங்கத்தில் ஒரு இடது கட்சி என்ற முறையில் நமது அணியிலும்அமைச்சரவை ய் இடம் பெற்றுள்ளது. ஆனால் தமிழ் நாட்டில் இது ஒரு து சாரி [illegible]சியின் தன்மைக்கேற்ற முறையில் செயல்பட ல இது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அடிப்படையாகக் ண்டு பல்வேறு சிறு பிரிவுகளாக பிளவுபட்டுள்ளது. இடது ி இயக்கத்துடனும் இவர்கள் உறுதியான நிலையில் நிற்ப லை, அனைத்திந்திய பார்வார்ட் பிளாக் தலைமையின் அரசி நிலையிலும் இவர்கள் நிற்பதில்லை.

17. ஜாதிய அமைப்புகள்: இக்காலத்தில் மிழகத்தில் ஏராளமான ஜாதிய அமைப்புகள் தோன்றியுள்ளன. இவைகளைத் தூண்டி விடுவதில் காங்கிரஸ் ட்சி ஈடுபட்டுள்ளது. குறிப்பாக ராமதாஸ் தலைமையிலான வன் ிய ஜாதி அமைப்பு வெறித்தனமான ஜனநாயக விரோத நட

வாடிக்கைகளில் இறங்கியுள்ளது. ஜாதி மோதல்கள் குறிப்பாக வன்னிய-அரிஜன மோதல் ஏற்பட்டுள்ளது. தென் ஆற்காடு மாவட்டம் இதன் மையமாக உள்ளது. இதர மாவட்டங்களிலும் இது பரவியுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் ஜாதீய அமைப்புகளும் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியுள்ளன. உழைக்கும் மக்கள் ஒற்றுமை பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் சிறுபான்மையோர் என்ற முறையில் அதிக பாதிப்புக்குள்ளாகின்றனர். வன்னியர்களிலும் மிகப் பெரும்பாலோர் உழைப்பாளி மக்கள். இவ்விரு பகுதி மக்களிடையே பகை உணர்வு வளராமல் தடுப்பதும், இருபகுதி உழைப்பாளி மக்களையும் ஒற்றுமைப்படுத்துவதும் நமது கடமையாகும். இந்த நிலையிலிருந்து இப்பிரச்சனையை நாம் அணுகியுள்ளோம். கலவரம் ஏற்படக் கூடிய இடங்களில் நமது சக்திக்கு உட்பட்டு அதனைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் நாம் முயற்சி செய்கிறோம். கலவரச் சூழ்நிலையில் நமது கருத்துக்களை இம்மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுகிறோம். நம்முடைய கட்சி மட்டுமே அனைத்து ஜாதீயப் போக்குகளையும் எதிர்த்துப் போராடும் நிலையில் உள்ளது. இப் பிரச்சனையில் ஒன்றுபட்ட நடவடிக்கைக்கு மற்ற கட்சிகள் முன் வரவில்லை. முதலாளித்துவ கட்சிகளில் உள்ள பலவேறு ஜாதியினர் அவரவர் ஜாதிப் பிரிவுகளுடன் இணைந்து நிற்கும் போக்கு அதிகரித்துள்ளது. அவரவர் கட்சிக்கு சாதகமாக இந்நிலையைப் பயன்படுத்துவது எப்படி என்று தான் சிந்திக்கிறார்கள். குறிப்பாக இ.காங்கிரஸ் கட்சி தங்களது தேர்தல் வெற்றிக்கு இதனைப் பயன்படுத்த முயற்சிக்கிறது. கவர்னர் ஆட்சியும் அதற்கு சாதகமான முறையிலேயே இப்பிரச்சனையை அணுகுகிறது. அரசு எந்திரம் நிலைகுலைந்துள்ளது. மக்களின் உயிரையும், உடமையையும் பாதுகாக்கவும், கலவரங்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுப்பதில்லை. ஜாதி வெறிக்கு இரையாகியுள்ள உழைப்பாளி மக்களை அதிலிருந்து வென்றெடுக்கும் முறையில் நமது அணுகுமுறையும், நடவடிக்கைகளும் அமையவேண்டும். இத்தகைய மோதல்களுக்குப் பின்னால் அந்நிய சக்திகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

18. ஆர்எஸ்எஸ்:- இந்து முன்னணி போன்ற இந்து மத வகுப்புவாத அமைப்புகளின் நடவடிக்கைகளும் தமிழகத்தின் பல பகுதிகளில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்து-முஸ்லீம், இந்து-கிறிஸ்தவ மோதல்களை உருவாக்க முயற்சிக்கின்றனர். சில இடங்களில் மோதல்களும், பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. இப்

போது கோவில் பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரால் இந்து மத உணர்வை தூண்ட முயற்சிக்கின்றனர். பெரும்பான்மை மதத்தின ருக்கு மதவெறியூட்டும் முயற்சி ஆபத்தானது. மக்களின் ஒற்றுமை யையும், தேசத்தில் ஒருமைப்பாட்டையும் அது பெருமளவு பாதிக் கும் என்பதை மக்களிடம் விரிவான முறையில் எடுத்துக் கூறவேண் டும். இவைகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த இதுபற்றிய நமது நிலையை தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

19. நக்சலேட் குழுக்கள், எஸ் யூ சி ஐ ஆகியனவும் தமிழகத் தின் பல பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு அதிக செல்வாக்கு இல்லாவிட்டாலும், இடதுசாரி இயக்கத்தை சீர்குலைக்கும் முயற்சியிலீடுபட்டுள்ளனர். சில நக்சலேட் குழுக்கள் மொழி வெறி, பிரிவினை உணர்வுகளைத் தூண்டவும், பயன்படுத்த வும் முயற்சிக்கின்றனர். இலங்கைப் பிரச்சனையை பின்னணியாகக் கொண்டு இதைச் செய்கின்றனர். தமிழர் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைப் படை போன்ற பல பெயர்களில் செயல்படுகின் றனர். ஜாதிவெறியையும், ஜாதிய அமைப்புகளையும் அவர்கள் தங் களது சீர்குலைவு வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். ரயில், பாலம் தகர்ப்பது, வங்கிக் கொள்ளை, வெடிகுண்டு வைப்பது போன்ற பல காரியங்களில் ஈடுபட்டுள்ளனர். இதில் இவர்களுக்கு ஈழப்புலிகளுடனும், திராவிட இயக்க அதிதீவிரவாதிகளுடனும் தொடர்பு ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் இடதுசாரி இயக்கத்திற்கு பெரும் களங்கம் ஏற்படுத்தக் கூடியது ஆகும். சில கேந்திரத் தொழிற்சாலைகளிலும் மத்தியதர வர்க்க படிப்பாளிகள் மத்தியிலும் இவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இடது அதிதீவிரவாதத் திற்கு எதிரான நமது சித்தாந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டும்.

20. கிறிஸ்துவ மிஷனரிகள்.- இவைகளில் பல்வேறு விதமான அமைப்புகள் உள்ளன. பல அமைப்புகள் அயல்நாடுகளிலிருந்து பணம் பெறுவதற்காகவே உள்ளன. அவைகளில் சில அன்னிய சக் திகளின் ஏஜண்டுகளாக செயல்பட்டு இங்கு இடதுசாரி இயக்கங் களை சீர் குலைக்க முயற்சிக்கின்றனர். இடதுசாரி போர்வையில் இடதுசாரி கருத்துக்களைப் பேசி மக்கள் மத்தியில் ஊடுருவுகின்ற னர். இவர்களில் சில குழுக்கள் நக்சலேட்களுடனும், ஈழப்புலி களுடனும் தொடர்பு கொண்டுள்ளனர். சமீபத்தில் இவர்களுடன் சேர்ந்து வங்கியில் கொள்ளையடிப்பதில் இரண்டு பாதிரிமார்கள் பங்கு கொண்ட செய்தி வெளிவந்துள்ளது. கிறிஸ்துவ மக்களை அவர்களுடன் இணைத்துப்பார்க்கக் கூடாது, சந்தேகிக்கக் கூடாது.

அன்னியஏஜண்டுகளாகச் செயல்படும் கிறிஸ்துவமிஷனரிகளை நாம் பிரித்துப் பார்க்கவேண்டும். அவர்களை அம்பலப்படுத்த வேண்டும் மாநிலம் முழுவதும் பல்வேறுபெயர்களில் நடைபெற்று வருகின்ற மிஷனரிகளின் நடவடிக்கை குறித்து முழுமையான விவரங்கள் சேகரித்து பரிசிலனை செய்வதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதும் அவசியமாகும். அண்மைக்காலத்தில் இவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்பதையே பல மாவட்டமாநாடுகளின் விவாதங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

21. இந்த அரசியல் பின்னணியில்தான் தமிழ்நாட்டில் நாம் தனித்தும் கூட்டாகவும் பல்வேறு இயக்கங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள் இக்காலத்தில் நடத்தியுள்ளோம். அவைகளில் முக்கியமான சிலவற்றை மட்டுமே இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறோம். மாநிலம் முழுவதும் இக்காலத்தில் நடைபெற்றுள்ள அனைத்து இயக்கங்களையும் நடவடிக்கைகளையும் இந்த அறிக்கையில் குறிப்பிடுவதும் பரிசீலிப்பதும் சாத்தியமல்ல, அவசியமும் இல்லை.

22. கடந்த மூன்றாண்டு காலம் தொடர்ச்சியாக பல இயக்கங்களும், கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடந்த காலம். அனைத்திந்திய அளவில் திட்டமிடப்பட்ட பல இயக்கங்களையும் மாநில அளவில்திட்டமிடப்பட்ட பல இயக்கங்களையும் நாம்தனித்தும், கூட்டாகவும் நடத்தியுள்ளோம். நடந்த இந்த இயக்கங்களில் மக்களைத் திரட்டுவதில் எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளோம், நமது கட்சியின் தலைமையில் உள்ள வெகுஜன அமைப்புகளைச் சார்ந்த மக்களை எந்த அளவுக்கு இந்த இயக்கங்களில் திரட்டினோம், புதிய பகுதியினரை எந்த அளவுக்கு வென்றெடுக்க முடிந்தது என்பதை பரிசிலிப்பதும் படிப்பினைகளை வரையறுப்பதும் அவசியமானது. எதிர்காலப் பணிகளுக்கு இது இன்றியமையாதது.

23. டில்லி பேரணி - பிரச்சார இயக்கம்:-

இடதுசாரி கட்சிகளின் தலைமையில் இயங்கும் வெகுஜன அமைப்புகளின் சார்பில் 1987 டிசம்பர் 9-ம் நாள் டில்லி மாநகரில் நடத்தப்பட்ட பேரணி இந்திய அரசியலில் முக்கிய நிகழ்ச்சியாகும். அதனையொட்டி நாட்டின் 7-முனைகளிலிருந்தும் பிரச்சாரப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. திருவனந்தபுரம்-டில்லி பிரச்சார பயணக்குழுவை கோவையிலிருந்து பெங்களூர் வரையிலும் நடத்திச் செல்வதும், கன்னியாகுமரி-டில்லி பிரச்சாரப் பயணக்குழுவை திருப்பதி வரை

யில் நடத்திச் செல்வதும் நமது பொறுப்பாக இருந்தது. இதனை நாமும் சி.பி.ஐ-யும் கூட்டாக நிறைவேற்றினோம். திருவனந்தபுரம் ஜாதாவுக்கு 17-11-87-ல் கோவையிலே நாம் பொறுப்பேற்று 20-11-87 இரவு பெங்களூர் கொண்டு போய் சேர்த்தோம். கன்னியாகுமரி ஜாதா 9-11-87 அன்று புறப்பட்டு 19-11-87 அன்று திருப்பதி கொண்டுபோய் சேர்த்தோம். நமது கட்சியின் தலைவர்களும் சிபிஐ தலைவர்களும் இந்த ஜாதாக்களில் பங்கு கொண்டனர். நம் தரப்பில் தோழர்கள் ஏ என், பி. ராமச்சந்திரன், நன்மாறன், டி கே. ரங்கராஜன், எஸ். ஏ பெருமாள், வி. ஏ. கருப்பசாமி, ஆர். வெங்கிடு, கோவிந்தசாமி, வெள்ளியங்கிரி, என். வீ. தாமோதரன் ஆகியோர் பங்கு கொண்டனர். கன்னியாகுமரி பயணக்குழுவில், புதுவையிலிருந்து டில்லி வரை தோழர்கள் டி. லட்சுமணன், கே. வைத்தியநாதன் ஆகியோர் சென்று வந்தனர். சிபிஐ தோழர்கள் தமிழ்நாட்டு எல்லையோடு நின்றுவிட்டது. குறிப்பிடத்தக்கது.

24. இந்த இயக்கத்தை மிகக்குறுகிய காலத்தில் நாம் திட்டமிட்டு நடத்த வேண்டியிருந்தது. கோவையில் 14-16. 10. 87—ல் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டத்தில் தான் இதைப்பற்றிய தகவல் மத்தியக் கமிட்டியிலிருந்து நமக்கு கிடைத்தது. அக்கூட்டத்திலேயே இந்த இயக்கத்திற்கான திட்டத்தினை வகுத்து நடவடிக்கைகளிலிறங்கினோம். 29. 10. 87ல் இதற்கென அவசரமாக மாநிலக்குழு கூட்டத்தினை நடத்தினோம். இரு ஜாதாக்கள் கடந்து செல்லும் பாதை மற்றும் இதர ஏற்பாடுகள் குறித்து ஆலோசனைகளை உருவாக்கினோம். பின்னர் சிபிஐ தலைமையுடன் கலந்து பேசி அதனை இறுதியாக்கினோம்.

25. 1988 ஜனவரி 21, 22, 23—பிரச்சாரப் பயணம் பற்றிய மாநிலக்குழு பரிசிலனையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

"பொதுவாக பிரச்சார பயணக் குழுவினருக்கு கிராமப் புறங்களிலும்நகர் புறங்களிலும்நல்லவரவேற்புஇருந்ததுபுதியஇடங்கள் பலவற்றில் நாம் எதிர்பார்த்ததற்கும் அதிகமான அளவில் மக்கள் திரண்டு வரவேற்பு அளித்தனர். ஒவ்வொரு வரவேற்பு நிகழ்ச்சியிலும் குறைந்தது 400 — முதல் 500 — பேர் வரை கலந்து கொண்டனர். ஆனால் அதில் பெரும்பாலோர் நமது அணிகளையும், சி. பி. ஐ. அணிகளையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, பொதுமக்கள் கணிசமாக கலந்து கொண்டது நமக்கு செல்வாக்குள்ள சில பகுதிகளில் மட்டுமே. பயணக்குழு செல்லாத மாவட்டங்களான ராமநாதபுரம், புதுக்கோட்டை, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து உப

ஜாதாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு அவை அம்மாவட்டங்களில் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு பிரதான ஜாதாவுடன் இணைந்து கொண்டன. இப்பிரச்சார பயண இயக்கத்தினையொட்டி மாவட்ட கமிட்டிகளும், கிளைகளும் சுமார் 4லட்சம் துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டன. மாநில மையத்திலிருந்து 10,000 போஸ்டர்கள், ஸ்தல, மாவட்ட கமிட்டிகள் சார்பில் 20,000 போஸ்டர்கள் ஆகியவை மூலம் விளம்பரம் செய்யப்பட்டது.

ஜாதாவின் கோரிக்கைகளை விளக்கியும், டெல்லியில் அக்டோபர் 12ல் நடைபெற்ற வகுப்புவாத மற்றும் பிரிவினைவாதத்திற்கு எதிரான தேசிய மாநாட்டின் அறைகூவலும் அடங்கிய சிறு பிரசுரம் 30000 பிரதிகள் அச்சிடப்பட்டு இப்பிரச்சார இயக்கத்தின் போது விற்கப்பட்டது.

பிரச்சார பயணத்தின் நோக்கத்தினை விளக்கிமாவட்டங்களில் விரிவான பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வேன்பிரச்சாரம், சைக்கிள் பிரச்சாரம், தெருமுனைக் கூட்டங்கள், துண்டு நோட்டீஸ் விநியோகம் ஆகியவற்றின் வாயிலாக இப்பிரச்சார பயணக்குழுவின் நோக்கம் மாநிலம் முழுவதும் பரவலாக எடுத்துச் செல்லப்பட்டது.

அகில இந்திய மையத்திலிருந்து நமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் இ. எம். எஸ்., திருப்பூர், கோவை, சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற மூன்று பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டது மிகவும் உதவியாக இருந்தது. பயணக்குழுவின் பிரச்சாரத்தில் அகில இந்திய ரீதியில் தீர்மானிக்கப்பட்டிருந்த கோரிக்கைகளை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதோடு, தமிழகத்தில் முக்கிய அரசியல் பிரச்னையாக இருக்கும் இலங்கைப் பிரச்னை பற்றியும் அதில் இடதுசாரி கட்சிகளின் நிலையையும் தெளிவாக விளக்கிக்கூறப்பட்டது. தமிழகத்தில் திமுக உள்ளிட்ட சில கட்சிகள் இலங்கை பிரச்னையில் மேற்கொண்டு வரும் இனவெறி நிலையினை இப்பிரச்சாரத்தின் போது அம்பலப்படுத்தி நமது நிலையினை தெளிவாக பிரச்சாரம் செய்யப்பட்டது. பல்வேறு மக்கள் பிரச்னைகளில் இடதுசாரி கட்சிகள் மேற்கொண்டு வரும் நிலையினை விளக்க சந்தர்ப்பம் அளிப்பதாக இப்பயணக்குழு பிரச்சாரம் அமைந்தது.

பிரச்சார பயணம் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் தொடர்ந்து கடுமையான வறட்சிக்குப்பின் சிறிது மழைபெய்ததையொட்டிவிவசாயப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தா

லும், ஏற்பாடுகளை செய்ய குறைந்த கால அவகாசமே அளிக்கப்பட்டதாலும், வெகுஜன ஸ்தாபனங்களை இதில் முழுமையாக ஈடுபட வைக்க முடியவில்லை. இதனால் பயண ஏற்பாடுகளை செய்வதில் சிரமமேற்பட்டது. இருப்பினும் ஓரளவு வெற்றிகரமாகவே பயண பிரச்சாரம் நடைபெற்று முடிந்தது.

டிசம்பர் 9-ல் டில்லியில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் தமிழகத்திலிருந்து சுமார் 300பேரை மட்டும் அனுப்பி வைத்தோம். வாலிபர் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டு தயாரிப்பு பணிகளில் தீவிர கவனம் செலுத்த வேண்டியிருந்ததாலும், வாலிபர் மாநாட்டுப் பேரணிக்கு பெருமளவு தோழர்களை திரட்ட வேண்டியிருந்ததாலும் நாம் டெல்லிபேரணிக்கு அதிக அளவு தோழர்களை அனுப்பி வைக்க முடியாது என்று முடிவு செய்தோம். இந்த பிரச்சார இயக்கத்தின்போது எல்லா இடங்களிலும் சிபிஐ நம்முடன் முழுமையாக ஒத்துழைத்துள்ளது என்றே கூறலாம். அவர்களுடைய கட்சிக்குள் ஏற்பட்டிருந்த பிளவினால் கட்சி அணிகள் பெருத்த குழப்பத்திற்கு உட்பட்டிருந்த நிலையில் இந்த பிரச்சாரபயண இயக்கம் அவர்களுக்கு மிக உதவியாக இருந்தது. நமது கட்சி மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் மிக ஆர்வத்தோடும், கடுமையாகவும் பிரச்சார பயண ஏற்பாடுகளை சிறப்பாக செய்தது பாராட்டத்தக்கது.''

26. பாரத் பந்த்

அண்மைக்காலத்தில் இந்திய நாட்டில் நடைபெற்ற பெரும் போராட்டம் இது. நமது கட்சியும் மற்ற இடதுசாரி கட்சிகளும் முன்முயற்சி எடுத்து அனேகமாக அனைத்து மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளையும் பல்வேறு தலைமைகளிலுள்ள வெகுஜன அமைப்புகளையும் ஒன்றுபடுத்தி நடத்திய போராட்டம் இது. நிர்வாக உத்தரவின் மூலமாக விலை உயர்வு, வரி உயர்வு, ரெயில் கட்டண உயர்வு, தபால் கட்டண உயர்வு என்று மக்கள் மீது மத்திய அரசு தொடர்ச்சியாக தாக்குதல் தொடுத்து வந்த நேரத்தில் இப்போராட்டத்தை நடத்தியது, இப்போராட்டம் வெற்றிகரமாக நடைபெற முக்கிய காரணமாக இருந்தது

27. தமிழ்நாட்டில் நாம் சி. பி. ஐ. யுடன் முதலில் தொடர்பு கொண்டு இதற்கான தயாரிப்புகளில் இறங்கினோம். அதே நேரத்தில், திமுக வுடனும் தொடர்பு கொண்டோம். அவர்கள் தயங்கித் தயங்கியே இதில் பங்கு கொள்ள முன்வந்தார்கள். ஆரம்பத்தில் தொழிற்சங்க அளவில் பங்கு கொள்ளும் நிலையை மேற்

கொண்டனர். நமது தொடர்ச்சியான வற்புறுத்தல், இறுதியாக தோழர் ஹரிகிஷன்சிங் சுர்ஜித் சென்னையில் கருணாநிதியை சந்தித்து பேசிய பின்னர்தான் திமுக கட்சி ரீதியாக பங்கு கொள்ள முன் வந்தது. இருப்பினும், கடைசி கட்டத்தில்தான் அவர்களுடைய அணிகள் பிரச்சாரப் பணிகளில் பங்கு கொண்டன. அவர்களுடைய மேடையில் இதைப்பற்றி பேசுவதைத்தவிர்த்தனர். சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் சி. பி. எம்., சிபிஐ தலைவர்களுடன் கருணாநிதியும் பங்கு கொண்டு பேசினார். கோவை, மதுரை ஆகிய இடங்களில் மாவட்ட திமுக தலைவர்கள் பங்கு கொண்டனர். இது தவிர ஸ்தலமட்டங்களிலும் பல கூட்டு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. பந்த் போராட்டத்தை ஆதரிக்க முன் வந்த ஜனதா, தமுமு., அஇஅதிமுக (ஜானகிஅணி) ஆகிய கட்சிகளையும் இணைத்துக் கூட்டான பிரச்சார இயக்கம் நடத்துவதை, திமுக விரும்பவில்லை. அவர்களின் தேர்தல் நிலைபாட்டிற்கு இது பாதகத்தை ஏற்படுத்தும் என்று கருதினர். இருப்பினும் விரிவான ஒற்றுமையை உருவாக்க நாம் தொடர்ந்து முயற்சித்தோம். சில மாவட்டங்களில் ஸ்தல மட்டத்தில் இக்கட்சிகள் அனைத்தும் கூட்டாக பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் த.மு.மு ஏற்பாடு செய்த பந்த் ஆதரவு கூட்டத்தில் தி.மு.க. உட்பட வரும் பங்கு கொண்டனர்.

28. இப்போராட்டத்தையொட்டி தமிழ்நாட்டில் ஒருமாத காலத்திற்கு மேலாக தீவிர அரசியல் பிரச்சார இயக்கம் நடைபெற்றுள்ளது. மாநிலம் முழுவதும் நமது கட்சியின் சார்பில் மாநில மையத்தில் நிச்சயித்த படி 150கூட்டங்கள் வரை நடந்துள்ளது. இக்கூட்டங்களில் வழக்கத்தைவிட அதிகமான அளவில் மக்கள் கலந்து கொண்டுள்ளனர். ஸ்தல பேச்சாளர்களைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கணக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. சுவரெழுத்து, சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள்மூலம் விரிவான பிரச்சாரம் செய்யப்பட்டது. பல லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் நம் கட்சி சார்பில் விநியோகிக்கப்பட்டுள்ளன. பந்த்தின் நோக்கத்தைவிளக்கி தோழர் சுர்ஜித் எழுதிய பிரசுரம் 60,000 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டது. நாம் சுயேச்சையாக நடத்திய பிரச்சாரம் மற்றவர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபடச் செய்வதில் முக்கிய பங்கு வகித்தது. நமது கட்சி அணிகள் வேறு எந்த இயக்கத்திலும் காணாத அளவில் இந்த இயக்கத்தில் உற்சாகத்துடன் பங்கு கொண்டன. கட்சி முழுவதும் செயலில் இறங்கியது. கட்சியின்தலைமையிலான வெகுஜன அமைப்புகளும் இந்த இயக்கத்தில் முன் எப்போதையும் விட

அதிக அளவில் பங்கு கொண்டுள்ளன. சுயேச்சையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டே மற்றவர்களை ஒற்றுமைப்படுத்துவதிலும் நமது தோழர்கள் திறம்பட செயல்பட்டுள்ளனர். இ. காங்கிரஸ், ஜெயலலிதா கட்சிகளை தலைமைப்படுத்தி, மற்றவர்களை ஒன்றுபடுத்த நாம் செய்த முயற்சி பந்த் வெற்றி பெற பெரிதும் உதவியது.

29. இத்தகைய பலவிதமான முயற்சிகள், கடுமையான உழைப்பின் மூலம்தான் தமிழகத்தில் பந்த்திற்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்க முடிந்தது. திமுக உள்ளிட்ட பலமுக்கியஎதிர்க் கட்சிகள் பந்த்திற்கு ஆதரவளித்தது இதன் வெற்றிக்கு பெரிதும் உதவியது. இந்த அளவுக்கு விரிவான சக்திகள் ஒன்றுதிரண்டதனல்தான் பந்த்தை முறியடிக்க கவர்னர் ஆட்சியும், இகாங்கிரசும், ஜெயலலிதா கட்சியும் செய்த கடும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. தொலைக் காட்சி, வானொலி பிரச்சாரத்திற்கு மக்கள் செவிசாய்க்கவில்லை. மக்கள் தாங்களாகவே வேலை நிறுத்தம் செய்து, கடைகள் அடைத்து பந்த்தை வெற்றி பெறச் செய்தனர். பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் முன்கூட்டியே கைது செய்யப்பட்டும் பந்த் வெற்றி பெற்றது. பந்த் தினத்தன்றும் போலீசின் அடக்குமுறை சென்னையிலும் மற்றும் பல நகரங்களிலும் தலைவிரித்தாடியது. நமது தோழர்கள் அடக்குமுறைகளையும் தாங்கி இப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர் என்பது பாராட்டத்தக்கது. இது தொடர்பான பல வழக்குகள் இன்னும் நீடிக்கிறது. தமிழகத்தில் பொதுவாக அமைதியான முறையில் பந்த் முழு வெற்றியடைந்தது என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. மக்கள் தானாகவே முன்வந்து ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் அமைப்பு ரீதியாக திரட்டப்பட்டுள்ள தொழிலாளர்கள்-ஊழியர்களில் ஒருபகுதியினர் இப்போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்தனர். நமது தலைமையிலுள்ள தொழிலாளர்கள் கூட முழுமையாக பங்கு கொள்ளாத நிலை இருந்தது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும், ஒட்டு மொத்தமாக பார்த்தால் பாரத் பந்த் தமிழகத்தில் முழு வெற்றியடைந்தது. இதில் நாம் தான் பிரதான பங்காற்றினோம் என்று அனைத்து தரப்பினரும் அங்கீகரித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இயக்கத்தில் நமது அரசியல் கருத்துக்களை விரிவான அளவில் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடிந்தது.

30. 1987வது ஆண்டில் நாடு தழுவிய முறையில் நாம் நடத்திய விவசாயிகள் போராட்டமும் 1988வது ஆண்டில் தாமும்

மற்ற இடதுசாரி கட்சிகளின் தலைமையிலான விவசாயிகள் சங்கங்களும் கூட்டாக நடத்திய போராட்டங்களும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். (இதைப்பற்றிய விபரங்கள் விவசாயப் பகுதியில் தரப்பட்டுள்ளது) விவசாயிகள் இயக்கத்தைத் திசை திருப்ப நிலப்பிரபுக்கள் தலைமையில்பல முயற்சிகள் நடைபெறும்நேரத்தில் நிலத்தில் பாடுபடும் உண்மையான விவசாயிகளின் கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற இப்போராட்டங்கள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கட்சி அணிகளும், நமது தலைமையிலான வெகுஜன அமைப்புகளும் இப்போராட்டத்திற்கு ஆதரவாக செயல்படச் செய்ய கட்சி நடவடிக்கைகள் எடுத்தது. மாநில செயற்குழு அதற்கான ஆலோசனைகளை மாவட்டக் கமிட்டிகளுக்கு வழங்கியது. நமது அமைப்புகள் பெரும் அளவில் இவைகளில் உதவி செய்துள்ளன. தொழிலாளி—விவசாயி ஒற்றுமை உணர்வை ஊட்டி வளர்க்க இத்தகைய ஆதரவு நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்க வேண்டும்.

31. பிரிவினை சக்திகளுக்கெதிரான இயக்கம்

நாடு முழுவதும் வகுப்புவாத-பிரிவினை சக்திகள், தலை தூக்கி வந்த நேரத்தில் இதனை முறியடிக்க விரிவான பகுதி மக்களைத் திரட்ட மத்தியக் கமிட்டி அறைகூவல் விடுத்தது. 9.8.86 முதல் 16.8.86 வரை ஒருவார காலம் நாடு முழுவதும் பிரச்சார இயக்கம் நடத்தக் கோரியது. மாநில செயற்குழு இதற்கான ஆலோசனைகளையும், திட்டத்தையும் மாவட்டக் குழுக்களுக்கு அனுப்பி வைத்தது. கூட்டங்களுக்கு பேச்சாளர்களையும் நிர்ணயம் செய்தது. இக்கூட்டங்கள் விரிவான அளவில் வெற்றிகரமாக நடைபெற்றதாகக் கூறமுடியாது. இப்பிரச்சனையைப் பற்றி தோழர் சுர்ஜித் எழுதிய பிரசுரம் 10,000 பிரதிகள் தமிழில் அச்சிட்டு விற்பனைக்காக மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தோம். இதுஅனேகமாக விற்கப்பட்டுள்ளது

இந்த இயக்கத்தின் துவக்க நாளான ஆகஸ்ட் 9-ம் நாள் சி.ஐ.டி.யூ. வின் சார்பாக நடந்த இயக்கமும் பெயரளவுக்கே நடந்துள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும், வகுப்புவாத பிரிவினை சக்திகளால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை உழைப்பாளி மக்களுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை நாம் இன்னும் போதுமான அளவுக்குஉணரவில்லைஎன்ற நிலையே நீடிக்கிறது.

32. தேசிய ஒற்றுமை நாள்

1987ல் நாமும் சி. பி. ஐ.யும் இணைந்து இந்திய நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை நாள் அனுஷ்டித்தோம். வகுப்புவாத-பிரிவினைச் சக்திகளுக்கெதிரான கூட்டு இயக்கமாக இது நடை

பெற்றது. பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவைகளும் பெருமளவு மக்கள் பங்குகொண்ட வெற்றிகரமான கூட்டங்கள் என்று கூறமுடியாது. பல இடங்களில் சி.பி.ஐ.-யின் பங்கெடுப்பு பெயரளவுக்கே இருந்தது. இப்பிரச்சனையில் அடங்கியுள்ள அபாயத்தை மக்களுக்கு உணர்த்த நாம் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். அனேகமாக நாம் நடத்துகின்ற அனைத்து கூட்டங்களிலும் இப்போது இப்பிரச்சனை பற்றி பேசப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்னும் திட்டமிட்ட முறையில் செய்ய வேண்டும்.

33. பஞ்சாப் ஆதரவு இயக்கம்

சீக்கிய மதவெறியர்களான காலிஸ்தான் பிரிவினைவாதிகள் பஞ்சாபில் தொடர்ந்து கலகம் விளைவித்து படுகொலை செய்து வருவதைக் கண்டித்து 1986 ஏப்ரல் 5-ம் தேதி நாடு முழுவதும் நமது கட்சியும் சிபிஐ, பார்வர்ட் பிளாக், ஆர்எஸ்பி ஆகிய இடது சாரி கட்சிகளும் சேர்ந்து கண்டன இயக்கம் நடத்த அறைகூவல் விடுக்கப்பட்டது. ஆனால்தமிழ்நாட்டில் விவசாயிகள் சங்கமாநாடு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததினால் ஏப்ரல் 11ம் தேதி இயக்கம் நடத்த சிபிஐ-யுடன் கலந்து முடிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் இரு கட்சிகளின் சார்பில் மாவட்டத் தலைநகர்களில் கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்களும் சிறப்பான முறையில் நடைபெற்றது என்று கூற முடியாது. இது போன்ற கூட்டங்களுக்கு நமது மக்களை அணி திரட்டிக் கொண்டு வருவதற்கு திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இத்தகைய இயக்கங்களை வலுவான முறையில் நடத்த திட்டமிட்ட முயற்சிகள் தேவை. நமது மேடைகளிலிருந்து பஞ்சாப் பிரச்சனையைப் பற்றிய பிரச்சாரம் தொடர்ந்து செய்யப்படுகிறது. இது தொடர வேண்டும்.

34, பஞ்சாப் நிதி

பஞ்சாபில் நமது பல முக்கிய தோழர்கள் காலிஸ்தான் பிரிவினைவாதிகளால் கொலை செய்யப்பட்டு வந்த நிலையில் நமது தற்காப்புக்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொள்ள வேண்டுமென்று மத்திய கமிட்டி முடிவு செய்தது. ஒவ்வொரு மாநில கமிட்டியும் அதற்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரியது. நமது மாநிலக் கமிட்டி அதனை நிறைவேற்ற நடவடிக்-கை மேற்கொண்டது ஒவ்வொருகட்சி கிளையும் குறைந்தபட்சம் ரூ. 10 தர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தது. பிரச்சனையின் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து பல கட்சிக் கிளைகள் அதற்கு மேலாகவும் அனுப்பி வைத்தார்கள். குறுகிய காலத்தில் ரூ 54,704-45 வசூலாகியது. அதனை பஞ்சாப் தோழர்கள் பாதுகாப்பு நிதிக்காக மத்திய கமிட்டியிடம் ஒப்படைத்தோம்.

35. திரிபுரா ஆதரவு நிதி:

பஞ்சாப் நிதி வசூல் செய்து முடித்த சில நாட்களிலேயே திரிபுரா தோழர்களுக்கு உதவ நிதி வசூலித்து அனுப்ப வேண்டுமென்று மத்திய கமிட்டி முடிவு செய்தது. திரிபுராவில் நமது தோழர்கள்தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். நமது தோழர்களின் வீடுகளைச் சூறையாடுகின்றனர்! ஏராளமான பொய் வழக்குகள், தொடர்ந்து கொலைகளும் செய்கின்றனர். இந்நிலையில் அவர்களைப் பாதுகாக்க அனைத்து மாநிலங்களிலும் நிதி வசூல் மேற்கொள்ளப்பட்டது. நமது மாநிலக் குழுவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஒரே நாள் மாநிலம் முழுவதும் உண்டியல் வசூல் செய்ய முடிவு செய்யப்பட்டது. வசூலாகும் தொகை முழுவதும் மாநிலக் கமிட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட ரூ. 71,960—10 மாநில மையத்திற்கு வந்தது. அதனை மத்திய கமிட்டியிடம் ஒப்படைத்தோம். பஞ்சாப், திரிபுரா நிதி வசூல் கிளைவாரியாக மாநில மையத்திற்கு வந்த விபரத்தை தீக்கதிரில் பிரசுரித்துள்ளோம். திரிபுரா தேர்தல் மோசடியைக் கண்டித்தும் படுகொலைகளைக் கண்டித்தும் மாநிலம் முழுதும் திரிபுரா தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. நமது பிரச்சார இயக்கத்தில் தொடர்ந்து திரிபுரா பிரச்சினை இடம் பெற்று வருகிறது. இன்னும் விரிவான அளவில் திரிபுரா பிரச்சினையை மக்கள் மத்தியில் திட்டமிட்டு கொண்டு செல்ல வேண்டும்.

36. வகுப்புவாத, பிரிவினைவாத மற்றும்பல்வேறு சீர்குலைவு சக்திகளால் நாட்டிற்கும் உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்கும் ஏற்படக்கூடிய அபாயத்தை உணர்ந்து அதற்கெதிராக மக்களைத் திரட்டுவதில் நாம் உரிய கவனம் செலுத்தவில்லை என்றே குறிப்பிட வேண்டும். நமது அணிகளுக்கு இதனை ஆழமாக உணர்த்துவது நமது முக்கிய அரசியல் கடமையாகும்.

கேரள தேர்தல்

37. கேரள சட்டமன்றத்திற்கு 1987 மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் கேரள மாநிலக்குழுவிற்கு நிதி உதவி செய்ய நாம் முடிவு செய்தோம். ஒவ்வொரு கிளையும் குறைந்தது ரூ. 10தர வேண்டுமெனக் கோரினோம். ரூ. 42,676-25 வசூலாகியது. இப்பணத்தினை கேரள மாநிலக்குழுவிற்கு அனுப்பி வைத்தோம். இது தவிர, மாநிலம் முழுதிலிருந்தும் நமது தோழர்கள் தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பேற்று செயல்பட்டுள்ளனர். மாநிலத் தலைவர்களும் பிரச்சாரத்திற்கும் தேர்தல் பணிகளுக்கும் சென்றுள்ளனர். பெரும்பாலும் நமது சொந்த செலவிலேயே பணியாற்றியுள்ளனர்.

ஏதேச்சாதிகார சக்திக்கெதிராகவும், வகுப்புவாத சக்திகளுக்கெதிராகவும் கேரளத்தில் நாம்நடத்திய இலட்சியப் போராட்டத்திற்கு நமது பங்கினை ஓரளவு செலுத்தியுள்ளோம்.

38. ஆந்திர வெள்ள நிவாரண நிதி

1986-வது ஆண்டு ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் ஆந்திர மாநிலத்தில் வெள்ளத்தினால் பெரும் அளவில் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டபோது, அவர்களின் நிவாரணப் பணிகளுக்கு உதவ வேண்டுமென்று மாநிலக்குழு முடிவு செய்தது. உடனடியாக கட்சியின் மையத்திலிருந்து ரூ. 1000-மும், சி.ஐ.டி.யூ. மையத்திலிருந்து ரூ. 1000/-மும், வி.ச. மையத்திலிருந்து ரூ. 1000-மும் அனுப்புவதென்று முடிவு செய்து அனுப்பப்பட்டது. ஒவ்வொரு மாவட்டக் கமிட்டியும் ரூ. 100/-நேரடியாக ஆந்திர மாநிலக்குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்றும் தகவலை நமது மாநில மையத்திற்கு அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது. முழுமையான விபரம் கிடைக்கவில்லை. இத்தகைய நிலைமை ஏற்படுகிறபோது அவசர உணர்வுடன் உதவுவது அவசியமாகும்.

39. மே தின நூற்றாண்டு விழா

1986-ல் சிறப்பான முறையில் கொண்டாட வேண்டுமென்று கல்கத்தா காங்கிரஸ் அறைகூவல் விடுத்தது. நமது கட்சியும் சி.பி.ஐ.-யும், சி.ஐ.டி.யூ.-வும். ஏ.ஐ.டி.யூ.சி.யும் இணைந்து நடத்தலாம் என்றும் கட்சி காங்கிரஸ் முடிவு செய்தது. அதற்கேற்ப தமிழ்நாட்டில் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட திட்டமிட்டோம். காலையில் நாம் தனியாக கொடியேற்று விழா நடத்துவதென்றும், மாலையில் சி.பி.ஐ.-யுடன் இணைந்து மேதினப் பொதுக்கூட்டம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மே முதல் நாளன்று இவ்வாறு நடைபெற்றது. தொடர்ந்து மே மாதம் முழுவதும் நம்மால் தனியாக மாநிலம் முழுவதும் மே தின விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது. தீக்கதிர் மே தின சிறப்பு மலர் புத்தக வடிவில் வெளியிடப்பட்டது. மே தினத்தின் புரட்சிகரத் தன்மையைப் பற்றி தோழர் பி.டி.ஆர். எழுதிய பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது. தொழிலாளி வர்க்க அரசியலையும் விஞ்ஞான சோசலிசக் கருத்துக்களையும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வையும் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் கொண்டு செல்ல மே தின நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் ஓரளவு பயன்பட்டுள்ளது. கட்சியும், நமது தொழிற்சங்கங்களும் இதில் முக்கிய பங்கு வகித்தன.

சமாதானத்திற்கான இயக்கம்

40. அணுயுத்த அபாயத்திற்[illegible]திராக மக்களை அணிதிரட்ட வலுவான சமாதான இயக்கத்தைக் கட்டி வளர்க்க வேண்டுமென்று மத்திய கமிட்டி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது, சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தில் பணியாற்ற நாம் முன் வந்தோம். அந்த அமைப்பு சி.பி.ஐ.-யின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அதன் நிர்வாகத்தில் நமக்கு உரித்தான இடத்தைத் தரு வதற்கு அவர்கள் தயங்கினார்கள். இதன் காரணமாக இணைந்து செயல்படுவது தடைபட்டது. 1987-வது ஆண்டில் இதில் உடன்பாடு ஏற்பட்டது. இப்போது அனைத்திந்திய அமைப்பிலும் பல மாநில அமைப்புகளிலும் நாம் சேர்ந்து செயல்படுகிறோம். தமிழ்நாட்டிலும் இணைப்பு ஏற்பட்டுள்ளது. அதனுடைய மாநில அமைப்பில் நம் தரப்பில் 50-பேர்கள் இடம் பெற்றுள்ளனர். மாநில செயற் குழு உறுப்பினர்கள் பி ஆர். பரமேஸ்வரன் ஒரு உப தலைவராகவும், டி. லட்சுமணன் ஒரு பொதுச்செயலாளராகவும் இருக்கிறார்கள். கூட்டாக சில இயக்கங்கள் நடத்தப்பட்டன. இப்போதும் இது சிபிஐ -யின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. தொடர்ந்து செயல்படும் அமைப்பாகவும் இல்லை. அதனை செயல்பட வைக்கவும் பலப்படுத்தவும் நாம் தான் முன் முயற்சி எடுக்க வேண்டும். அது சிபிஐ தோழர்களின் ஒத்துழைப்போடு இணைந்த பிரச்சனையாகவும் உள்ளது.

41. அமெரிக்கா தொடர்ச்சியாக அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வந்ததையும், சோவியத் யூனியன் முன் வைத்த சமாதான ஆலோசனைகளை ஏற்க மறுத்து வந்ததைக் கண்டித்தும் 1987 பிப்ரவரி 16அன்று மாநிலம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டுமென்று மாநில செயற்குழு முடிவு செய்தது. அனைத்திந்திய இயக்கத்தின் பாகமாகவே இது நடத்தப் பட்டது. கட்சியும் கட்சியின் தலைமையிலுள்ள வெகுஜன அமைப்புகளும் பெரும் அளவில் மக்களைத் திரட்டி இந்த இயக்கத்தினை நடத்த வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் இந்த இயக்கத்தில் திரட்டப்பட்ட மக்கள் மிகக்குறைவு. மாவட்டக்குழுக்கள் இதனை வெற்றிகரமாக நடத்த விசேஷ முயற்சிகள் முழு அளவில் மேற்கொண்டதாக தெரியவில்லை. மனிதகுலத்தை அச்சுறுத்தும் அணுயுத்த அபாயம் குறித்து மக்களை விழிப்படையச் செய்வது யுத்த வெறியர்களான ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக மக்களை அணிதிரட்டுவது நமது முக்கிய அரசியல் கடமை என்பதனை நமது தோழர்களே போதுமான அளவு உணராத நிலையே நீடிக்கிறது. இதனைப் போக்கியாக வேண்டும். சமாதான இயக்கத்தில் வெகு

ஜனங்களைத் திரட்டுவது முக்கிய அரசியல் கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

42. ராஜீவ் காந்தி ராஜினமா செய்ய வேண்டுமென்று மத்திய கமிட்டி விடுத்த அறைகூவலைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அதற்கான இயக்கத்தை விரிவான அளவில் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முயற்சி செய்தோம். திண்டுக்கல்லில் கூடிய மாநிலக்குழு கூட்டத்தில் அதற்கான விரிவான திட்டம் வகுக்கப்பட்டது 1987 செப்டம்பர் 21-ல் ஒரே நாளில். முக்கியமான 44 மையங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்தோம். மாநில மையத்திலிருந்து பேச்சாளர்கள் நிச்சயித்து அனுப்பப்பட்டனர். இந்த இயக்கத்திற்கு உதவி செய்யக்கூடிய முறையில் தோழர் இ எம் எஸ் சென்னையில் நிகழ்த்திய உரையின் சுருக்கத்தை சிறு பிரசுரமாக 60,000 பிரதிகள் அச்சிட்டு விற்பனை செய்தோம். நமது அரசியல் கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல இந்த இயக்கம் உதவியது. நமது அரசியல் நிலைபாட்டை எதிரிகள் திரித்துக் கூறுவதை முறியடிக்கவும், நமது அரசியலுக்காதரவாக மக்களைத் திரட்டவும் இத்தகைய இயக்கங்களை வலுவாக நடத்துவது அவசியம். சில இடங்களில் சடங்காக நடக்கும் நிலை உள்ளது. அதனை மாற்றியாக வேண்டும்.

43. கடந்த மாநில மாநாட்டிற்குப்பின் நாம் சந்தித்த முதல் அரசியல் பணி உள்ளாட்சித் தேர்தல். தமிழகத்தில் 16 ஆண்டு காலம் நடக்காமலிருந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்தக் கோரி தொடர்ச்சியாக நடைபெற்ற கிளர்ச்சிகளுக்குப்பின் தேர்தல் நடத்த அஇஅதிமுக அரசு முன் வந்தது. இத்தேர்தலில் நாம் திமுகவுடனும், சிபிஐயுடனும் தொகுதி உடன்பாடு செய்து கொள்வது என்று முடிவு செய்தோம். இதன் அடிப்படையில் இக்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திஞேம். பேச்சுவார்த்தை கடைசிவரை இழுபறியாகவே இருந்தது. இறுதியில் உடன்பாடு ஏற்பட்டது. 1986 ஏப்ரல் மாதம் திருப்பூரில் நடைபெற்ற மாநிலக்குழு கூட்டத்தின் பரிசீலனை அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

44. மாவட்ட—வட்ட அளவில் உள்ள திமுகவினர் நமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பெரும்பாலானவற்றில் கடும் எதிர்ப்புடன் நடந்து கொண்டனர். சில இடங்களில் போட்டி திமுக வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றியும் பெற்றனர். சில இடங்களில் இப்போட்டியின் மூலம் எதிர் அணி வெற்றி பெறும் நிலையை ஏற்படுத்தினர். கட்சி சின்னங்களில் போட்டியிடும் இடங்களை மாநில தி.மு.க. தலைமையுடன் பேசி முடிவு செய்தோம். மற்றும்

ஊராட்சிகள், வார்டுகள் பற்றி மாவட்ட தி.மு.க. தலைமையுடன் பேசி முடிவு காணுவது என்று முடிவு செய்தோம். இந்த முடிவு பெருவாரியான மாவட்டங்களில் முறையாக அமுலாகவில்லை. தி.மு.க. மாவட்ட தலைமையும் இதைக் கவனத்தில் கொள்ளவில்லை. சில பகுதிகளில் சாதி, பணம் இவற்றிற்கு இரையாகி நமக்கு விரோதமாகவும் செயல்பட்டனர். தி.மு.க. தலைமையினாலும் இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த விபரங்களையெல்லாம் எழுத்துமூலமாக தி. மு. க. தலைமையிடம் கொடுத்து விரிவாகப் பேசியுள்ளோம்.

தி.மு.க.வுடன் சி.பி.ஐ. தனியாக உடன்பாடு கண்டது. சி.பி.ஐ.யின் அனைத்து மட்டங்களிலும் தி.மு.க. நமக்கு அதிகமான தொகுதிகளை ஒதுக்கிவிட்டது என்ற கோபம் இருந்தது. பொதுவாக நமக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. குமராட்சி ஒன்றியம், சித்தாமூர் ஒன்றியம், மணலி பேரூராட்சி, பூவாளூர் பேரூராட்சி ஆகிய இடங்களில் நம்மைத் தோற்கடிக்க வேண்டுமென்றே எதிர்த்துப் போட்டியிட்டனர்; சில பாதிப்பையும் உண்டாக்கினர்; திருப்பூர் போன்ற இடங்களில் எக்காரணம் கொண்டும் சி பி எம்-க்கு தொகுதியை ஒதுக்கக் கூடாதென தி மு க விடம் நிபந்தனை விதிக்கும் அளவுக்கு சென்றனர். நமக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களைக் கூட தர விடாமல் தடுத்தனர். மாநிலம் முழுவதும் பார்த்தால், ஒரு சில தொகுதிகளில் மட்டுமே சி பி ஐ ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது என்பதே நிலைமை. நாம் தி மு கவுடன் உடன்பாடு கண்ட பின்னர் மாநில மட்டத்தில் சி பி ஐ யுடன் பேசினோம். அவர்கள் கோபமாகபதில் அளித்தனர். பின்னர் இதனைத் தொடர முடியாமல் போனது. பேசியிருந்தால் சரியாக இருப்பார்களா? என்ற கேள்வி எழுந்தாலும், நாம் மாநில மட்டத்தில் இன்னும் கூடுதலான முன் முயற்சி எடுத்திருக்க வேண்டுமென்பதே இவ்விஷயத்தில் சரியான பார்வை ஆகும்.

"இத்தேர்தலில் 4—நகராட்சிகள், 6—ஒன்றியங்கள், 26—பேரூராட்சிகள்,200க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் நம்மால் வெற்றி பெற முடிந்தது. வார்டு உறுப்பினர்களாக தமிழகம் முழுவதும் பரவலாக நமது சக்திகேற்ற வகையில் நமது தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தி மு க., சி பி ஐ. கட்சிகளின் ஒத்துழைப்பின்மை; தேர்தல் களத்தில் மற்றெல்லா கட்சியினராலும் சாதி, மதம், பணம் ஆகியவை பயன்படுத்தப்பட்ட சூழல்; இத்தனைக்கும் மத்தியில் குறுகிய காலத்தில் மிகுந்த நிதி நெருக்கடியுடன் நாம் இந்தப் பெரிய தேர்தல் போராட்டத்தை நடத்தவேண்டிய நிலை ஆகிய பின்னணியில் இத்தேர்தலில் நமக்கு கிடைத்த

வெற்றி நிச்சயமாக முன்னேற்றம்தான். நமது செல்வாக்கு ஓரளவு உயர்ந்துள்ளதும், நமது கட்சி அணிகளின் சிறப்பான பணியும் தான் இதனை சாத்தியமாக்கியது. எனினும், ஒட்டு மொத்தமான தொகுதிகள் எண்ணிக்கையையும், நாம் போட்டியிட்ட, வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கையையும் கணக்கிட்டால், நாம் தீர்மானமான சக்தியாக வளர இன்னும் வெகுதூரம் முன்னேற வேண்டும் என்பதை காணமுடியும்''.

''இத்தேர்தலில் நமது பணி, பெற்ற வெற்றி ஆகியவை யும், பின்னர் நடந்த எம்.எல்.சி., தேர்தலில், நமது ஆதரவாளர் கள் ஆசிரியர் அமைப்புக்களின் பிரதிநிதிகளாக நின்று போட்டி யிட்ட இரண்டு ஸ்தானங்களிலும் வெற்றி பெற்றிருப்பதும், தமிழ கத்தில் நமது அரசியல் அந்தஸ்தை உயர்த்தியுள்ளது பரவலாக நம் அணிகள் மத்தியில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது''.

''மேற்கண்ட முன்னேற்றத்தைப் பார்க்கிற அதே நேரத்தில் இத்தேர்தலில் ஒரு புரட்சி கட்சிக்கு ஒவ்வாத போக்குகள் கட்சி அமைப்புகளில் சில இடங்களில் இருந்ததை காண முடிந்தது. இதனையும் இன்ன பிற பலஹீனங்களையும், தத்துவார்த்தரீதியாக வும், ஸ்தாபன ரீதியாகவும் தலையிட்டு களைந்திட வேண்டும்''.

பலஹீனங்கள்

அ) ''பொதுவாக ஊழியர் பற்றுக்குறை; தேர்தல் பணியாற்ற வேண்டிய முக்கிய தோழர்களே பல இடங்களில் வேட்பாளர் எனும் நிலை ஆகியவை நமது வேலைகளில் பெரும் கஷ்டத்தை உரு வாக்கின.

ஆ) கடன் வாங்கித்தான் தேர்தல் செலவை ஈடுகட்டவேண் டிய நிலை; சில இடங்களில் வேட்பாளர்கள் சொந்தச் செலவு செய் வது என்பதும் ஏற்பட்டுள்ளது.

இ) தொகுதிகளில் நமது பலம் பற்றிய சரியான நிர்ணயிப்பு இன்மையால், ஸ்தாபன பலம் இதர வாய்ப்புகள் பற்றிய பார் வையின்றி சில குறிப்பிட்ட நபருக்கென தொகுதி கேட்டு போட் டியிடுவது ஆகியவை சில மாவட்டங்களில் நடந்துள்ளது.

ஈ) சில தொகுதிகளில் குறிப்பாக நகராட்சி வார்டுகளில் நாம் பெற்றுள்ள மிகமிகக் குறைந்த வாக்குகள் நமது பலவீனத்தை அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

உ) நாம் ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய வற்றில் போட்டியிடும்பொழுது, கீழே உள்ள தொகுதிகளில் விட் டுக் கொடுத்து அதிகபட்ச ஒற்றுமையை உருவாக்க வேண்டு

மெற்றும் பார்வை கூட சில மாவட்டங்களில் இல்லாததையும் இத் தேர்தலில் காண முடிந்தது.

ஊ) நாம் போட்டியிடும் தொகுதிகளில் ''அரசியல் பேசவேண்டாம். இது மற்றவர்கள் நமக்கு வாக்களிப்பதை பாதிக்கும்'' என்ற தவறான, அரசியல் அற்ற சந்தர்ப்பவாதப் பார்வையும் ஒரு சில இடங்களில் தலை தூக்கியது.

எ) மிகச் சில இடங்களில் என்றாலும்-கட்சியைக் கேட்காமல் போட்டியிடுவது; கட்சி சொல்வதை மீறி போட்டியிடுவது; கட்சி போட்டியிடச் சொல்வதை ஏற்க மறுப்பது, இதர காரணங்களுக்காக தேர்தல் பணி செய்ய மறுப்பது, ஆகியவை இங்கொன்றும், அங்கொன்றுமாக நடந்துள்ளது. இது குறித்து ஸ்தூலமான விபரங்களுடன் பரிசீலித்து ஒழுங்குபடுத்த உரிய நடவடிக்கைகளை மாவட்டக் குழுக்கள் (மாநில செயற்குழு ஆலோசனையுடன்) எடுத்திட வேண்டும்.

ஏ) கட்சி சின்னங்களில் போட்டியிடும் இடங்களையும். வேட்பாளர்களையும் மாவட்டக் குழுக்களின் ஆலோசனையோடு மாநில செயற்குழு இறுதிப்படுத்தியது. ஊராட்சித் தலைவர்கள், வார்டுகள், போன்றவற்றிற்கு இடங்களையும் வேட்பாளர்களையும் மாவட்டக் குழுக்கள் முடிவு செய்ய வேண்டுமென்று தீர்மானித்தோம். ஒரு சில மாவட்டங்களில்தான் இந்த முடிவு சரியாக அமுலாகி உள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் இதை முறைப்படுத்துவதில் பலவீனங்கள் ஏற்பட்டன. சில முக்கிய தோழர்கள் வேட்பாளர்களாக நின்றதால் மாவட்ட மையங்களை கவனிக்க முடியாமல் போன நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஐ) நமது அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதிதான் தேர்தல் போராட்டம். ஆனால், இதற்கு ஓரளவு தயாரிப்பு பணிகளைக் கூட செய்திடாத போக்குகள் நம்மிடம் இருக்கின்றது. நமது முக்கிய தோழர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்கின்றனவா என்பதைக் கூட வேட்புமனு தாக்கல் செய்யும்போதுதான் பார்க்கிறோம்.''

சட்டமன்றப் பணிகள்

கடந்த மூன்றாண்டுகாலத்தில் சட்டமன்றத்தில் தமது உறுப்பினர்கள் மக்களின் பல்வேறு பிரச்சனைகளில் இடைவிடாமல் போராடியுள்ளனர். மத்திய அரசின் பாதையில் அ.இ.அ.தி.மு.க. அரசு பின்பற்றிய பிற்போக்கான பொருளாதாரக் கொள்கைகளை

எதிர்த்தும், குறிப்பாக ஏதேச்சாதிகாரப் போக்குகளை எதிர்த்தும் சட்டமன்றத்தில் நமது தோழர்கள் முன்வைத்தகருத்துக்களும்மேற் கொண்ட நடவடிக்கைகளும் நமது இயக்க நிலைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல பெரிதும் பயன்பட்டது. குறிப்பாக பத்திரிகைகள்மீது தாக்குதல், உள்ளாட்சி உரிமை பறிப்பு, திரைப்படத் தடைச்சட்டம் போன்றவற்றுக்கெதிராக நாம் நடத்திய போராட்டம் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில நடைபெற்ற தொழிலாளர், விவசாயிகள், மற்றும் அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் போராட்டம், மீனவர்களுக்கெதிரான போலீஸ் அடக்குமுறை, மாநிலத்தின் பல பகுதிகளில் நடைபெற்ற போலீஸ் அடக்கு முறைகள், அ.இ.அ.தி.மு.க. அரசின் பயங்கரமான லஞ்ச ஊழல்களை அம்பலப் படுத்துவது போன்ற காரியங்களில் நமது தோழர்களின் பணிகள் அனைவரும் பாராட்டும்படியாக இருந்தது. நாம் சிறிய குழுவாக இருந்தாலும் இக்காலத்தில் சட்டசபையில் அனைத்துப் பிரச்சனைகளிலும் தலையிட்டு செயல்பட்டுவந்தோம் என்பது குறிப்பிடத்தக்கதாகும், மாநில செயற்குழுவும் அவ்வப்பொழுது வழிகாட்டி வந்தது.

46. கோவை அரசியல் மாநாடு

இக்காலத்தில் தமிழகத்தில் நமது கொள்கையை மக்களிடம் கொண்டு செல்ல நடத்தப்பட்ட இயக்கங்களில் முக்கியமானது கோவை அரசியல் மாநாடு. 1987 ஜனவரி 31 பிப்ரவரி 1 தேதிகளில் நடைபெற்ற இம்மாநாட்டையொட்டி மாநிலம் முழுவதும் ஒரு மாதகாலம் விரிவான அளவில் பிரச்சாரம் செய்யப்பட்டது. கோவை, நீலகிரி, பெரியார், அண்ணா, சேலம் மாவட்டங்களில் விரிவாக பேரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மாநில செயற்குழு தோழர்கள் இவைகளில் பங்கு கொண்டனர். மாநாட்டுப் பணிகளில் கோவை மாவட்டக்குழுவிற்கு உதவி செய்ய கே.ஆர்., பி.ஆர்.சி., என்.வி., பி.ஆர்.பி., கே.வி. ஆகியோர் கொண்ட உப கமிட்டி அமைக்கப்பட்டது. தோழர் கே.வி. ஒருமாத காலம் கோவையில் தங்கியிருந்து உதவி செய்தார்.

இன்று நாட்டையும் மக்களையும் எதிர்நோக்கும் அடிப்படையான அனைத்து பிரச்சனைகள் குறித்தும் நம்முடைய முக்கிய தோழர்கள் இம் மாநாட்டில் உரை நிகழ்த்தினர். பொதுச் செயலாளர் தோழர் இ. எம். எஸ். அவர்களும் இம் மாநாட்டில் சிறப்புரையாற்றினர். மொழிப் பிரச்சனை தீவிரமாக முன்னுக்கு வந்திருந்த நேரத்தில் இம் மாநாடு நடைபெற்றது. நமது சரியான மொழிக் கொள்கையை மக்களிடம் கொண்டுசெல்ல இம்மாநாடும்

மாநாட்டையொட்டி மாநிலத்தில் நடைபெற்ற பிரச்சார இயக்கமும் பெரிதும் பயன்பட்டது.

47. மாநாட்டிற்கான ஏற்பாடுகளை கோவை மாவட்ட கமிட்டி சிறப்பாக செய்தது. நகரமே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. மாநிலம் முழுவதுமிருந்து பஸ்கள், லாரிகள், வேன்கள், ரெயில்கள் மூலமாக நமது ஆதரவாளர்கள், கட்சி தோழர்கள் மாநாட்டிற்குத் திரட்டப்பட்டனர். மாவட்டக் குழுக்கள் திட்டமிட்டு இந்த ஏற்பாட்டினை செய்தன. மாநாட்டினையும், ஊர்வலத்தையும் பார்த்த மக்கள் நமது கட்சி வளர்ந்து வரும் ஓர் இயக்கம் என்பதை உணர்ந்தனர். கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைவரின் பாராட்டுதலைப் பெற்றது. பெரும் அளவில் மக்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர். உற்சாக மூட்டக்கூடிய முறையில் மாநாட்டு நிகழ்ச்சிகள் அமைந்தன. தமிழ்நாட்டு மக்களிடம் நமது அரசியலை எடுத்துச் செல்ல, ஏற்கச் செய்ய இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு வடிவங்களில் நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

48. மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு

கடந்த மாநில மாநாடு முடிந்த உடனேயே சென்னையில் மீனவர்கள் மீது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டைக் கண்டித்தும், அப்போது நடைபெற்று வந்த ஆசிரியர்- அரசு ஊழியர் போராட்டத்திற்காதரவான இயக்கத்திலும் நாம் ஈடுபட்டோம். மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தினோம். 11-12-85ல் ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த தி.மு.க., சி.பி.ஐ. பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் ஏற்பாடு செய்தார்கள். முடிந்தால் பந்த் நடத்தவும் முயற்சிக்கப்பட்டது. நாம் இதற்கு முன் முயற்சி எடுத்தோம். இந்த ஆதரவு போராட்டம் மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக நடைபெற்றது என்று கூற முடியாது. மாநிலம் முழுவதும் மக்கள் உணர்வு பூர்வமாக பங்கு கொள்ளும் பிரச்சனையாக இது இருக்கவில்லையென்றே கூற வேண்டும். இருப்பினும், போராடிக் கொண்டிருந்த மக்களுக்கு இது நம்பிக்கையூட்டியது. மெரினா கடற்கரையிலிருந்து மீனவர்களை அப்புறப்படுத்தும் முயற்சியிலிருந்து அரசு பின்வாங்கியது. ஆசிரியர்களுடன் ஒரு சமரசத்திற்கு வர அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. நமது கட்சி அணியினர் இந்த ஆதரவு நடவடிக்கைகளில் நல்ல முறையில் பங்கு கொண்டார்கள். மாநிலம் முழுவதும் ஆசிரியர்களின் நன்மதிப்பை நாம் பெறுவ

தற்கு அது உதவியது. சென்னையில் மீனவ மக்களுக்கு ஆதரவாக தொடர்ந்து நமது கட்சி இயக்கம் நடத்தியது. அனைத்து கட்சிக் கூட்டங்களும் நடத்தினோம். ஜனநாயக மாதர் சங்கமும், வழக்கறிஞர் சங்கமும் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கது. நிவாரண நிதி வசூலிக்கப்பட்டது. இத்தகைய போராட்டங்கள் நடத்துவது உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட போராட்ட உணர்வையும் ஒற்றுமையையும் வளர்க்க மிகவும் அவசியமானது என்ற முறையில் இதனைப் பார்க்கவேண்டும்.

9. ஆசிரியர் போராட்டம்

ஆசிரியர்களுடன் செய்யப்பட்ட உடன்பாட்டை அரசு அமுல்படுத்தவில்லை. அதிருப்தி மேலும் வளர்ந்தது. போராட்டச் சூழ்நிலை உருவாகியது. மத்திய அரசு ஊழியருக்கு ஈடான ஊதியம் என்ற கோரிக்கையில் இரு பிரிவினரும் ஒன்றுபட்டனர். 1988 ஜுன்—ஜுலை மாதங்களில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 31 நாட்கள் நீடித்த இந்த போராட்டம் தமிழகத்தில் அண்மைக்கால வரலாற்றில் நடைபெற்ற மிக முக்கிய போராட்டம். இந்த போராட்டத்திற்காக பல்வேறு சக்திகளை ஒன்றுபடுத்துவதில் நாம் முக்கிய பங்கு வகித்துள்ளோம். நமது கட்சியும் நமது வெகுஜன அமைப்புகளும் தீக்கதிர் பத்திரிக்கையும் தங்களுக்கு உறுதுணையாக இருந்தது என்ற கருத்து பரவலாக போராடும் ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. போராடும் ஊழியர்களுக்கு ஆதரவாக பெருமளவில் மறியல், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தினோம். ஆரம்பத்தில் திமுகவுக்கு தயக்கம் இருந்தபோதிலும் நமது முயற்சியினால் திமுக, சிபிஐ, மற்றும் இதர கட்சிகள் இணைந்துவந்தன. நாம் நடத்திய தனி இயக்கங்கள் மற்றும் இத்தகைய கூட்டு இயக்கங்கள் ஆகியவை அடக்குமுறைகளை எதிர்த்து நிற்க அவர்களுக்குத் தெம்பூட்டியது. அரசு போராட்டத்தை உடைக்கச் செய்த சகல சாகசங்களையும் அடக்குமுறைகளையும் எதிர்த்து நின்றார்கள். இறுதி கட்டத்தில் மாநிலம் முழுவதும் இருந்து திரண்டு வந்த ஆண்களும், பெண்களும், பல்லாயிரக்கணக்கான ஊழியர்களும் நடத்திய ஆர்ப்பாட்டம் அரசையும், போலீசையும் பின் வாங்கச்செய்தது. துரோகத் தலைமைகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை செல்லா காசாக்கியது. உறுதியுடன் தொடர்ந்து போராடிவந்த சங்கங்களின் தலைவர்களுடன் ஊழியர்கள்—ஆசிரியர்கள் ஏற்கக்கூடிய கௌரவமான உடன்பாடு கண்டுதான் போராட்டம் முடிவடைந்தது. இப்போராட்டத்தில் உருவான ஒற்றுமை, போராட்ட முறைகள், போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில் அவர்கள் பெற்ற

சரியான வழிகாட்டுதல்கள், ஊழியர்களின் உறுதி, வலுமிக்க ஆதரவு இயக்கங்கள் இவையனைத்தும் இப்போராட்டம் வெற்றிபெற உதவிகரமாக இருந்தது. தோழர் சுகுமால்சென் உட்பட இந்த இயக்கத்தின் பல அனைத்திந்திய தலைவர்கள் நேரடியாக பங்கு கொண்டு உதவினர். நமது கட்சியின் அனைத்திந்திய தலைவர்கள் இக்காலத்தில் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்ததும் இதற்கு உதவியது. இப்போராட்டத்தில் நமது பங்கினை அனைத்துத்தரப் பினரும் பாராட்டினர். ஆரம்பத்தில் நாம் இப்போராட்டத்திற்கு இந்த அளவுக்கு வீச்சு இருக்குமென்று எதிர் பார்க்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

50. இலங்கை தமிழர் பிரச்சனை :

1983ம் ஆண்டிலிருந்து நமதுமாநில அரசியலில் இப்பிரச்சனை முக்கியபிரச்சனையாக உள்ளது. நாம் இனவெறியையும், பிரிவினைக் கோரிக்கையையும்எதிர்ப்பதனால், நமது நிலையை மக்களுக்குவிளக்க வேண்டிய கடினமான பணியினை நாம் செய்ய வேண்டியுள்ளது. அதேநேரத்தில் நமது மாற்று ஆலோசனைகளை மக்களுக்கு எடுத்து கூறவேண்டியுள்ளது. குறிப்பாக தி.மு க., தி.க. கட்சியினர் முன் வைக்கும் இனவெறிக் கருத்துக்களை எதிர்த்துப் போராடவேண்டி யுள்ளது. 1987-ம் ஆண்டு மத்தியில் இலங்கை அரசு தமிழர்பகுதி யில் முற்றுகையிட்டபோது இப்பிரச்சனை மீண்டும் சூடுபிடித்தது. நாம் நமது கொள்கை நிலையில் நின்று உறுதியாகப்போராடினோம். மத்தியக் கமிட்டியின், பொலிட்பீரோவின் தீர்மானங்களை பல்லா யிரக் கணக்கில் அச்சடித்து மக்களிடம் விற்பனை செய்தோம். நமது அணிகளுக்கு கட்சியின் நிலையை விளக்க மாநிலம் முழுவதும் பேரவைக் கூட்டங்கள் நடத்தினோம். பொதுக்கூட்டங்கள் மூல மாக மக்களுக்கு நமதுநிலைபாட்டை எடுத்துக் கூறினோம். தி.மு.க. வும், மற்றவர்களும் முன்னுக்கு கொண்டுவர முயற்சித்த இன வெறிப் போக்கினை பின்னுக்குத் தள்ளினோம். திரு எம்.ஜி.ஆர் இப்பிரச்சினையில் மேற்கொண்ட நிலையும் தமிழகத்தில் இனவெறி பரவாமல் தடுக்க உதவிகரமாக இருந்தது என்பதையும் நாம் கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டும். இருப்பினும் இப்பிரச்சினை யைப்பயன்படுத்தி தமிழகத்தில் இனவெறியைக் கிளறிவிடும் அபா யம் நீடிக்கிறது என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

இந்திய—இலங்கை உடன்பாடு ஏற்பட்டபோதும் இப்பிரச்சனை தமிழகத்தில் சூடுபிடித்தது. இந்தியாவுக்கெதிரான ஏகாதிபத்தியச் சதிகளை முறியடிக்கவும், இலங்கையில்

தமிழ் மக்கள் சம அந்தஸ்தும், சுயாட்சியும் பெறுவதற்கும் இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது என்பதனால் நாம் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தோம். ஆனால் தி.மு. க வும் இன்னும் சிலரும் ஒப்பந்தத்திற்கெதிரான நிலையை எடுத்தனர். இந்த நேரத்திலும் நமது நிலையை விளக்கும் சிரமமான பணி நமக்கு ஏற்பட்டது. நமது நிலையை விளக்கி பிரசுரம் வெளியிட்டு விரிவான அளவில் மக்கள் மத்தியில் விற்பனை செய்தோம். கட்சி அணிகளுக்குப் பேரவைக் கூட்டங்கள் மூலம் நமது நிலைபாட்டை விளக்கினோம். தேசிய இனப் பிரச்சனையோடு ஒட்டிய இப்பிரச்சனையை தத்துவார்த்தரீதியாக விளக்கி கட்சிக் கடிதம் அனுப்பினோம். பொதுக் கூட்டங்களும் விரிவான அளவில் நடத்தினோம். நமது கட்சி அணிகள் நமது நிலைபாட்டில் தெளிவு பெற்றுள்ளார்கள், உடன்பட்டுள்ளார்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் தான் கட்சியின் நிலையை புரிந்துகொள்ள முடியாத நிலையில் இன்னமும் உள்ளனர். இதையும் நாம் கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டும்.

51. தி, மு.க; வும் மற்ற அமைப்புகளும் அண்மைக்காலத்தில் இலங்கைப் பிரச்சனையை முன் வைத்து நடத்துகின்ற இயக்கங்களில் மக்களின் பங்கெடுப்பு மிகக் குறைவாகவே உள்ளது. அவர்கள் நடத்திய மனிதச் சங்கிலி இயக்கம் முதற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்ட மக்கள் மிகக் குறைவு. ஆனால் இலங்கைப் பிரச்சனை தீராமல் நீடிப்பதில் மக்களுக்கு கவலையும் அதிருப்தியும் உண்டு. ஆனால் அது எல்.டி.டி.இ, அல்லது தி.மு.க. வினருக்கு ஆதரவாக இல்லை என்றே கூறலாம். இந்நிலையில் உள்ளாட்சித் தேர்தல் காலத்திலும் இடையிடையே பல்வேறு மக்கள் பிரச்சனைகள் முன்னுக்கு வருகிற காலங்களிலும் இலங்கைப் பிரச்சனையை ஒதுக்கி வைத்துவிட்டு நம்முடன் சேர்ந்து கூட்டு இயக்கம் நடத்த தி.மு.க. வருகிறது.

52. இலங்கை பிரச்சனையை தமிழ் நாட்டில் தனது அரசியல் நிலைக்குச் சாதமாக பயன்படுத்தும் நோக்குடன் தி. மு. க. தலைமை 31-5-86ல் அர்த்தால் நடத்த தன்னிச்சையாக முடிவு செய்து அறிவித்தது. நாம் இலங்கை தமிழருக்கு ஆதரவு தரும் பிரச்சனையை ஒரு கட்சிப்பிரச்சனையாக்கக்கூடாது என்ற நிலையினைமேற்கொண்டு தமிழக அரசு ஏற்பாடு செய்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டோம். தி. மு. க. அதனைப் புறக்கணித்தது. அக்கூட்டத்தில் 31-5-86 அனைத்துக்கட்சிகள் சார்பில் மாநிலத்தில் வேலைநிறுத்தம், பந்த் நடத்த முடிவு செய்யப்பட்டது. நமது கட்சி இதற்கான முயற்சிஎடுத்தது. அக்கூட்டத்தில் இந்த ஆலோசனையை

ரம்தான் முன் வைத்தோம். தேதியைதான் எம்.ஜி.ஆர்.கூறினர். தி.மு.க. தனிமைப்பட்டு நிற்கும் நிலை ஏற்பட்டது. இது நாம் மேற்கொண்ட ஒரு சரியான முன்முயற்சி என்றே குறிப்பிட வேண்டும்.

53. இந்தி எதிர்ப்பு போராட்டம் குறித்து:

இதுவும் தமிழகத்தில் திராவிட இயக்கம், குறிப்பாக, திமுக வலுவாக பயன்படுத்திவந்த ஆயுதங்களில் ஒன்று. மத்திய அரசின் தவறான மொழிக் கொள்கை இவர்களுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குகிறது. 1986வது ஆண்டில் மத்திய அரசு வெளியிட்ட சில சுற்றறிக்கைகளைக் காரணமாகக் காட்டி ஆட்சிமொழி பற்றிய அரசியல் சட்டப் பிரிவை எரிக்கும் போராட்டத்தை இவர்கள் துவக்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களையும் இதில் ஈடுபடுத்தினர். இந்தி மொழியையும், இந்தி பேசும் மக்களையும் எதிர்த்து மொழி வெறியைத் தூண்டும் பிரச்சாரத்தைத் தீவிரமாக நடத்தினர். ஆட்சி மொழிபற்றிய நேருவின் வாக்குறுதியை சட்டமாக்க வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாக இருந்தது இதனை நிராகரித்து நமது மாநில செயற்குழு நிறைவேற்றி. பிரசுர வடிவில் வெளியிடப்பட்ட தீர்மானமும், ''இந்தி திணிப்பு கூடாது என்றும், இடைக்காலத்தில் இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் துணை ஆட்சி மொழியாக நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழியைக் கறாராக அமுலாக்க வேண்டும்'' என்றும் கோரியது இது அடிப்படையான தீர்வாகாது என்றும் அனைத்து மொழிகளுக்கும் சமஅந்தஸ்து, அனைத்துமொழிகளும்மத்திய ஆட்சி மொழி என்பதுதான் சரியான நிலை என்றும் மத்திய கமிட்டி தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாம் திமுகவின் மொழிக் கொள்கையையும், போராட்ட வடிவத்தையும் ஏற்கவில்லை. நமது மாறுபட்ட கருத்தினை எடுத்துக் கூறினோம். இதன் காரணமாக இக்காலத்தில் நமக்கும் திமுகவுக்கும் நல்லுறவு இல்லாத நிலை ஏற்பட்டது. இந்தப்போராட்டத்தின் உச்சகட்டமாக கருணாநிதி சட்ட எரிப்பில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பரவலாக வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. பஸ்கள், ரெயில்களில் மற்றும் பொது இடங்களில் வெடிகுண்டுகள் வைப்பது பரவலாக நடைபெற்றது. பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. தமிழ்நாட்டில் முகாமிட்டுள்ள ஈழ விடுதலைப்புலிகள்-திமுக அணிகளுக்கு இடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டிருந்த பின்னணியில் இதுநடைபெற்றது இதனை வன்மையாகக் கண்டிக்கவும் திமுக முன்வரவில்லை. தங்களுக்குச் சம்பந்தமில்லை என்று மட்டும் கூறினார்கள். இதனை நாம் ஏற்கவில்லை.

54. இக்காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் திமுக நிலைக்கு மாறான மொழிக் கொள்கையை முன்வைத்து விரிவான அளவில் இயக்கம் நடத்திய ஒரே கட்சி நாம்தான். மொழிப்பிரச்சனையை பற்றிய தீர்மானம் ஒரு லட்சம் பிரதிகள் அச்சிட்டு மக்களிடம் விற்பனை செய்துள்ளோம். பரவலாக பொதுக்கூட்டங்கள் நடத்தினோம். கட்சி அணிகளுக்கு பேரவைக் கூட்டங்கள் நடத்தி நம் நிலையை தெளிவுபடுத்தினோம். திமுக எவ்வளவு முயற்சித்தும் மக்களிடம் மொழி வெறியை முன்போல் கிளறிவிட முடியவில்லை. அவர்களின் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவுகிடைக்கவில்லை. 10சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி இழந்தது கூட மக்களின் அனுதாபத்தைப் பெறவில்லை. அதிமுக அரசின் நடவடிக்கைக்கு எதிராகத்தான் கண்டனக்குரல்எழுந்தது. நீண்ட அனுபவத்திற்குப்பின் இப்போது திமுகவும் நேருவின் வாக்குறுதியை சட்டமாக்க வேண்டுமென்பதல்ல, அனைத்து இந்திய மொழிகளும் மத்திய அரசின் ஆட்சிமொழியாகவேண்டுமென்பதே தங்கள் கொள்கை என்று அறிவித்தது. நாம் முன்வைத்துள்ள மொழிக் கொள்கை எவ்வளவு சரியானது என்பதையே இது மேலும் நிரூபிக்கிறது, மத்தியஆட்சியாளர்களின் தவறான மொழிக் கொள்கையை எதிர்த்து நமது சரியான மொழிக் கொள்கையை தொடர்ந்து மக்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டும்.

55. திமுக நடத்திய இந்தி எதிர்ப்பு போரில் அரசியல் சட்டத்தை எதிர்த்த ஏழு தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளதாக சபாநாயகர் பாண்டியன் 24-11-86 அன்று ஒரு தலைப் பட்சமாக அறிவித்தார். இது சட்டவிரோதமானதென்று பலதரப்பிலிருந்தும் தெரிவிக்கப்பட்டதனால், 22-12-86-ல் சட்டமன்றத்தைக் கூட்டி தங்களின் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மேலும் மூவரையும் சேர்த்து 10 பேர்களை பதவி நீக்கம் செய்ய தீர்மானித்தனர். இது இந்திய சட்டமன்ற சரித்திரத்தில் இது வரை கண்டிராத ஒரு சர்வாதிகார நடவடிக்கை. இதனை நாம் வன்மையாக கண்டனம் செய்தோம். இதற்கு எதிராக 2-1-87 அன்று தி. மு.க., சி.பி ஐ. கட்சியுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினோம். தி.மு.க. வுடன் நமக்கு மொழிப்பிரச்சனையில் இருந்து வந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக ஆர்ப்பாட்ட இறுதியில் பேச்சுக்கள் எதுவும் வேண்டாம் என்றும், மூன்று கட்சிகளின் மாநிலத் தலைமைகள் ஏற்றுக்கொண்ட தீர்மானத்தின் நகல் படித்து நிறைவேற்றினால் போதும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது பல இடங்களில் பின்பற்றப்பட்டது. இதற்கு மாறாக அவரவர் நிலைமையில் பேசும் போக்கும் சில இடங்களில் ஏற்பட்

டது. கூட்டு இயக்கங்களில் இத்தகைய போக்குகள் ஏற்படாமல் தடுப்பது அவசியமாகும்.

56. அ.தி.மு.க.ஆட்சி கலைப்பு

எம்.ஜி.ஆர். மறைவிற்குப் பின் ஆட்சி அமைத்த ஜானகி அணிக்கு சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவில்லை. காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சியில் நீடிக்க முயற்சித்தார்கள். அதே நேரத்தில் காங்கிரஸ் ஆதரவுடன் ஜானகி ஆட்சியை கவிழ்க்க ஜெயலலிதா அணி தீவிர முயற்சியில் ஈடுபட்டது. இந்நிலையை இ.காங்கிரஸ் நன்கு பயன்படுத்திக் கொண்டது. ஜானகி அரசை இ. காங்கிரஸ் எதிர்த்தால் நாம் ஆதரிக்கலாம் என்றும் இதன் மீது பொலிட்பீரோவின் ஆலோசனையை பெறுவது என்றும் நமது மாநிலக்குழு முடிவு செய்தது. காங்கிரஸ் எதிர்த்தாலும் ஜானகி அரசை நாம் ஆதரிக்கக் கூடாது என்று பொலிட்பீரோ வழிகாட்டியது- நம்பிக்கை ஓட்டு பெறுவதற்காக சட்டமன்றம் கூட்டப்பட்ட அன்று சட்டமன்றத்தில் பெரும் அமளி ஏற்பட்டது. தங்களுக்கு காங்கிரஸ் ஆதரவு இல்லை என்று தெரிந்தபோது அதிகாரத்தில் நீடிக்க சபாநாயகர் மூலம் பல அத்து மீறிய காரியங்கள் செய்யப்பட்டன. ஜெ. அணி உறுப்பினர்கள் கட்சி தாவல் சட்டப்படி பதவி இழந்ததாக அறிவிக்கப்பட்டது. சட்டமன்றம் மூன்றுமுறை ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையில் தி.மு.க., சி.பி.ஐ. கட்சிகளை நாடி ஜா.அணி ஆதரவு கேட்டது. கடைசியில் நம்மிடம் வந்தனர். நாம் மறுத்துவிட்டோம். நம்முடைய உறுதியான நிலையின் காரணமாக திமுகவும், சிபிஐயும் ஆதரிப்பதில்லை என்று அறிவித்தன. இருப்பினும், சிபிஐ யின் ஊசலாட்டத்தின் காரணமாக நடுநிலைமை என்று அறிவித்தார்கள்.

சட்டமன்றம் மூன்றுவது முறையாக ஒத்திவைக்கப்பட்ட போது, ஆத்திரமடைந்த ஒரு பகுதி உறுப்பினர்கள், குறிப்பாக காங்கிரஸ் அணியினர் போட்டி சட்டமன்றக்கூட்டம் நடத்த மற்றவர்களையும் அழைத்தனர். இதில் நமது உறுப்பினர்களும் பங்கு கொண்டனர். அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, கவர்னரிடம் அளிக்க, கவர்னர் மாளிகைக்கு சென்றனர். இதிலும் நமது உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். இந்த இரு நிகழ்ச்சிகளிலும் நம் தோழர்கள் பங்கு கொண்டது தவறானது-பங்கு கொண்டிருக்கக்கூடாது என்று மாநிலக்குழு விமர்சித்தது.

இவ்விரு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டதன் காரணமாக இறுதியாக வாக்களிப்பு நடந்த நேரத்தில் சட்டமன்றம் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் நமது நிலையைப் பற்றி மக்

கள் மத்தியிலும் கட்சி அணிகளிலும் குழப்பம் ஏற்பட்டது. எதிர் காலத்தில் இத்தகைய தவறுகள் ஏற்படாமல் இருக்க நாம் எச்சரிக் கையாக இருக்க வேண்டும்.

57. 59வது அரசியல் சட்ட திருத்த எதிர்ப்பு இயக்கம்

அரசியல் சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட 59வது சட்ட திருத்தம் மற்றும் எதேச்சாதிகார போக்குகளை எதிர்த்தும், மக்கள் நல கோரிக்கைகளை முன்வைத்தும், திமுக, சிபிஐ கட்சிகளுடன் சேர்ந்து கூட்டு இயக்கங்கள் நடத்தி வந்தோம். திருச்சியிலும், சென்னையிலும் நடந்த மாநில ரீதியான பேரணிகள் குறிப்பிடத் தக்கது. திருச்சி பேரணியில் மூன்று கட்சிகளும் கிட்டத்தட்ட சம அளவில் மக்களை திரட்டினார்கள். சென்னை பேரணியில் திமுக., சி பி ஐ. கட்சியினர் மக்களை திரட்டுவதில் அதிக அக்கறை காட்டவில்லை. அணி வகுப்பில் பங்கு கொண்ட மக்களில் நம் தரப்பினரே அதிகம். சென்னையில் நடந்த இப்பேரணி யில் பங்குகொண்ட கட்சிகளின் செல்வாக்குகளுக்கு ஏற்ப பலமாக இருக்கவில்லை என்று குறிப்பிடவேண்டும். சென்னை பேரணியில் இ.எம்.எஸ். பேசினார்.

58. விலைவாசி உயர்வு எதிர்ப்பு இயக்கம்

இக்காலத்தில் விலைவாசி உயர்வினை எதிர்த்தும், ரயில், தபால் கட்டணங்களை எதிர்த்தும், வரி உயர்வை எதிர்த்தும், நாம் பல இயக்கங்களை நடத்தியுள்ளோம். குறிப்பாக, 86 பிப்ரவரியில் மத்திய அரசு நிர்வாக உத்தரவின் மூலம் பெட்ரோலிய பொருட் களின் விலையை ஆயிரம்கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தியதைக் கண்டித்து நடத்திய இயக்கம் குறிப்பிடத்தக்கது. நமது அனைத் திந்திய தலைமை சி பி ஐ. தலைமையுடன் பேசி நாடு தழுவிய அளவில் 11—2—86 அன்று இயக்கம் நடத்த திட்டமிட்டது. மேற்குவங்கம், திரிபுரா, கேரளா மாநிலங்களில் "பந்த்" நடைபெற்றது. தமிழ் நாட்டில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருந்ததினால் நாம் 13—2—86 அன்று திமுக., சி பி ஐ. கட்சிகளுடன் சேர்ந்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தினோம்.

அதே ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்த வரிகளை எதிர்த்தும், ரயில் கட்டண உயர்வுகளை எதிர்த்தும் 6—3—86 அன்று நாம் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும், நடத்தியுள்ளோம்.

59. வறட்சி நிவாரண இயக்கம்

1987-வது ஆண்டு ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் கடும் வறட்சி உருவாகியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

அளிக்க மத்திய—மாநில அரசுகள் உடனே நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையை பரிசீலித்து நிவாரண நடவடிக்கை உடனே எடுக்க அரசை நிர்ப்பந்திக்க 87 மார்ச்11 முதல் 17 வரை ஒருவார காலம் மாநிலம் முழுவதும் நம் கட்சியின் சார்பில் தீவிர பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டது. 17ம் தேதி அன்று தாலுகா தலைநகர், ஒன்றிய தலைநகர், பேரூராட்சிகள் முதலிய இடங்களில் மக்களை திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினோம். நமது வெகுஜன அமைப்புகள் அனைத்தும் இதில் பங்கு கொள்ள செய்தோம். மார்ச் 5, 6 தேதிகளில் நடந்த மாநிலக் குழுக் கூட்டத்தில் வறட்சி நிவாரணத்திற்கான கோரிக்கைகளை உருவாக்கினோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிந்த அளவு நேரடியான உதவிகள் செய்ய வேண்டுமென முடிவு செய்தோம். பல இடங்களில் நடந்துள்ளன.

60. 87வது ஆண்டில் உள்ளாட்சி உரிமைகளைப் பறிக்கவும், திரைப்படத்தில் அரசியல் விமர்சனங்கள் செய்யப்படுவதை தடுக்கவும், அ. இ. அ. தி. மு. க. அரசு தடைச் சட்டங்களை கொண்டு வந்தது. இது மக்களின் ஜனநாயக உரிமைகளின்மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். இதனை எதிர்த்து நாம் சட்டசபை உள்ளும், வெளியிலும் விரிவான அளவில் இயக்கம் நடத்தியுள்ளோம். கலை-இலக்கியத்துறை தோழர்கள் இதில் அதிகமாக பங்கு கொண்டனர்; இச்சட்டங்களின் கொடுமைகளை விளக்கி தடைச் சட்டங்களை தகர்த்தெறிவோம் என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் வெளியிட்டு விற்பனை செய்தோம். ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க நாம் தொடர்ச்சியாக நடத்திய பல இயக்கங்களில் இது ஒன்று. ஆனந்த விகடன் ஆசிரியர் தண்டிக்கப்பட்டது, பத்திரிகைகள்மீது தாக்குதல் போன்ற ஜனநாயக விரோதச் செயல்களை எதிர்த்தும் நாம் தொடர்ந்து தனித்தும், கூட்டாகவும் இயக்கம் நடத்தியுள்ளோம்.

61. தீக்கதிர் அபிவிருத்தி இயக்கம்

சேலம் மாநாட்டில் தீக்கதிர் பத்திரிக்கை அபிவிருத்தி செய்ய நவீன அச்சு இயந்திரம் வாங்குவதற்கு 20-லட்சம் ரூபாய் நிதி வசூலுக்கு அறைகூவல் விடப்பட்டது. மாநாட்டு பந்தலிலேயே வசூல் ஆரம்பமாகியது. அதனை தொடர்ந்து மாநிலம் முழுவதும் ஓராண்டு காலத்திற்கு மேல் கட்சி முழுவதும் ஈடுபாடு கொண்டு ஓர் இயக்கமாக இது நடத்தப்பட்டது. நமது கட்சி தோழர்கள் வரலாற்றில் என்றும் காணாத அளவு உற்சாகத்துடன் இந்த வசூலில் ஈடுபட்டதனாலும் தங்கள் பங்கை செலுத்தியதனாலும் அச்சு இயந்திரம் வாங்க மாநில மையத்திற்கு ரூ. 16,26,659-45 வந்து சேர்ந்தது. மாவட்டத் தேவைகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகையையும் சேர்த்தால் மொத்த வசூல் ரூ. 30 லட்சத்தை

எட்டியுள்ளது. இது நமது அரசியல் செல்வாக்கு வளர்ச்சியடைந்துள்ளதையே காட்டுகிறது.

ரூ. 12 லட்சத்தில் இயந்திரம் வாங்கப்பட்டது. அச்சகம் செயல்படுவதற்கு புதிய கட்டிடமும் பழைய தீக்கதிர்கட்டிடத்தின் பக்கத்திலேயே கட்டப்பட்டுள்ளது. 18-7-87-ம் தேதியிலிருந்து இந்த புதிய இயந்திரத்தில் நமது பத்திரிக்கை அச்சாகி வெளிவருகிறது. செய்தி பத்திரிகையாக ஆக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. உள்ளடக்கத்திலும், வடிவத்திலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இன்னும் பெரிய அளவு அபிவிருத்தி ஏற்பட வேண்டும். விற்பனையும் ஓரளவு அதிகரித்துள்ளது. ஆனால் நமது வாய்ப்புக்கும், தேவைக்கும் வெகுதூரத்தில் இருக்கிறோம். அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி கண்டாகவேண்டும், பத்திரிகைதான் நமது அரசியல் போராயுதம். லெனின் கூறியபடி ''கட்சி பத்திரிகை ஒரு கட்சி அமைப்பாளன்'' இதன் பொருளை உணர்ந்து கட்சி பத்திரிகையில் அனைத்து துறைகளிலும் நாம் முன்னேற்றம் காண வேண்டும்.

62. வி.பி.சி. நினைவு நிதி

தோழர் வி. பி. சி. 1987 மே 8-ம் தேதி சோவியத் யூனியனில் காலமானார். நமது இயக்கத்தில் பல்வேறு துறைகளில் 50 ஆண்டுகாலம் அவர் பெரும் பங்காற்றியவர். அவருக்குபொருத்தமான நினைவுச் சின்னம் சென்னையில் எழுப்பப்பட வேண்டும் என்று சென்னை மாவட்டக் குழுவும், தமிழ் மாநிலக்குழுவும் முடிவு செய்தன. அதற்குத் தேவைப்படும் பெரும் தொகையினை வசூலிக்க அறைகூவல் விடுக்கப்பட்டது. தமிழ் நாட்டின் உழைப்பாளி மக்கள் 15 லட்சம் ரூபாய் அளித்துள்ளனர். இதில் பெரும்பகுதி சென்னை நகரிலும், குறிப்பாக தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளிகளிடமிருந்தும், மின்சாரத் தொழிலாளர்களிடமிருந்தும் வசூலிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டக்கமிட்டிகளும் தங்கள் பங்கை செலுத்தியுள்ளன. ஆனால் சில மாவட்டக்கமிட்டிகள் இன்னும் இதன் கணக்கை முடிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது. சென்னையில் பெரம்பூர் பகுதியில் அவர் பெயரில் கட்சி, தொழிற்சங்க பணிகளுக்கு பயன்படக்கூடிய நினைவுச்சின்னம் எழுப்ப சுமார் 25 செண்ட் நிலம் வாங்கப்பட்டுள்ளது. விரைவில் இதன் பணிகள் ஆரம்பிக்கப்படும். இதனை நிர்வகிக்க கட்சி, சிஐடியூ சார்பில் கீழ்க்கண்ட 9 தோழர்கள் கொண்ட டிரஸ்ட் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1) ஏ. நல்லசிவன்
2) பி.ஆர். பரமேஸ்வரன்
3) என். வரதராஜன்
4) வி. மீனாட்சி சுந்தரம்
5) மைதிலி சிவராமன்
6) ஆர். உமாநாத்
7) உ. ரா. வரதராசன்
8) டி.ஜானகிராமன்
9) ஏ. சௌந்தரராஜன்

63. பி. ஆர். நினைவு சின்னம்

தோழர் பி. ஆர். தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும் கட்டி வளர்த்ததில் பெரும் பங்கு வகித்தவர். கட்சியின் மிக உயர்ந்த பொறுப்புகளிலிருந்து நீண்ட காலம் செயல்பட்டவர். அவர் 1987 டிசம்பர் 15ம் நாள் நம்மை விட்டு மறைந்தார். அவருக்குரித்தான நினைவகம் உருவாக்குவது நமது கடமை. அவர் பெயரில் சென்னையில் மாநிலக்குழு அலுவலகமும் வசதியாக செயல்பட ஒரு கட்டடத்தை எழுப்ப வேண்டுமென தமிழ் மாநிலக்குழு முடிவு செய்துள்ளது. அதற்கென ரூ 50 லட்சம் வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட கமிட்டிகளுக்கு கோட்டா நிர்ணயிக்கப்பட்டது. இடையில் அரசியல் நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதலின் காரணமாகவும், பல்வேறு இயக்கங்கள் குறுக்கிட்டதாலும், இந்த வசூல் நிறுத்தி வைக்கப்பட்டது. கூடிய விரைவில் நாம் இதனை நிறைவேற்றியாக வேண்டும், தோழர் பி.ஆர். நினைவாலயம் சென்னையில் அமைக்க வேண்டும்.

64. கடந்த மூன்றாண்டு காலத்தில்

நாம் நடத்திய போராட்டங்கள், அரசியல் தத்துவார்த்த பிரச்சாரம், வெகுஜன அமைப்புகளைக் கட்டி வளர்க்க மேற்கொண்ட தீவிர முயற்சிகள், கட்சி அமைப்புக்களை பலப்படுத்த எடுத்த முயற்சிகள், கட்சியின் பத்திரிகை, பிரசுரங்கள் விரிவான அளவில் மக்களிடம் கொண்டுசெல்ல எடுத்த தொடர்ச்சியான முயற்சிகள், கலை-இலக்கிய துறைகளில் நாம் மேற்கொண்ட முயற்சிகள், தொடர்ச்சியாக கட்சி மேற்கொண்ட சுயேச்சையான இயக்கங்கள் போன்ற நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இவைகளின் விளைவாக நமது பொதுவான செல்வாக்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக நமது கட்சி உறுப்பினர் எண்ணிக்கை, வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர் எண்ணிக்கை, பத்திரிகை—பிரசுர விற்பனை, நிதி வசூல், வகுப்புகள், பொதுக் கூட்டங்கள் அனைத்தும் அதிகரித்துள்ளது. விவரங்கள் அந்தந்த பகுதிகளில் தரப்பட்டுள்ளது.

இக்காலத்தில் நடுத்தர வர்க்கத்தினர்—குறிப்பாக, நடுத்தர வர்க்க ஊழியர்கள் மத்தியில் நமது செல்வாக்கு கணிசமாக அதிகரித்துள்ளது என்றே கூறலாம். அனைத்துத் துறைகளைச் சார்ந்த ஊழியர்களும் இக் காலத்தில் நமது இயக்கத்தின்பால் கவரப்பட்டுள்ளனர். ஆராய்ச்சியாளர்கள், அறிவு ஜீவிகள் பலரும் நமது இயக்கத்தில் பங்கு கொண்டுள்ளனர். அறிவியல் பிரச்சாரப் பணி

களிலும் நமது கருத்துடைய பலர் பணியாற்றி வருகின்றனர். சமுதாயத்தின் சகல பகுதி மக்கள் மத்தியிலும் கட்சி செயல்பட்டு வருகிறது. கட்சியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்பதையே இவைகள் எடுத்துக்காட்டுகின்றன.

65. இக்காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல்நிகழ்ச்சி போக்குகள் ஒவ்வொன்றிலும் நாம் நமது நிலைபாட்டினை மக்கள் முன் வைத்துள்ளோம். முன்னுக்கு வந்த பிரச்சனைகள் சம்பந்தமாகவும், நமது கருத்தினை பத்திரிக்கைகள் வாயிலாக மக்களுக்கு அறிவித்தோம். மக்களை பாதித்த முக்கியமான அனைத்து பிரச்சனைகளிலும் நாம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். தமிழ் நாட்டில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களிலும் முன்னணியில் நின்றுள்ளோம். தமிழ்நாட்டில் கட்சியை பலப்படுத்தவும், இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்தவும், மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளை ஒன்றுபடுத்தவும் பாடுபட்டுள்ளோம். வகுப்புவாத சக்திகளை தனிப்படுத்த, ஏதேச்சாதிகார சக்திகளை முறியடிக்க, மக்களை அணிதிரட்ட நாம் இடைவிடாது போராடி வருகிறோம் என்று கூறினால் அது மிகையாகாது. இவைகளின் ஒட்டுமொத்த விளைவே நாம் இன்று அடைந்துள்ள முன்னேற்றம். இப்பணிகளில் மேலும் அபிவிருத்தி காண வேண்டும். தமிழ்நாட்டில் நாம் ஒரு தீர்மானமான அரசியல் சக்தியாக வளர்ச்சியடையவேண்டும்.

இன்று பொதுவாக இந்திய நாட்டிலும்குறிப்பாக தமிழ் நாட்டிலும் உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலையில் அதற்குச்சாதகமான வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. அவைகளை நாம்முழுமையாகப் பயன்படுத்த சகல முயற்சிகளும் செய்ய வேண்டும்.

கடந்த மூன்றுண்டுகளில் கல்கத்தா காங்கிரஸ் வழி காட்டுதலுக்கிணங்க, நமது சுயேச்சையான அரசியல், பிரச்சார இயக்க நடவடிக்கைகள், போராட்டங்களை தொடர்ந்து நடத்தியுள்ளோம். நமது இயக்கம் பலமடைய இது பெரிதும் உதவியுள்ளது. இதே காலத்தில் இடதுசாரி ஒற்றுமையும் தமிழ்நாட்டில் முன்னைக் காட்டிலும் வலுவடைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஜனநாயக சக்திகள் மற்றும் மதசார்பற்ற அனைத்துச் சக்திகளையும் பாரத் பந்த் போன்ற இயக்கங்களில் ஒன்றுபடுத்துவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். நமது கட்சியின் அரசியல் செல்வாக்கும் ஸ்தாபன பலமும் அதிரிகத்துள்ளது. நமது சரியான அரசியல் கொள்கை, அணுகு முறை, நமது தோழர்களின் கடுமையான உழைப்பு ஆகியவைகளின் காரணமாக தமிழ்நாட்டு அரசியலில் நாம் ஒரு புறக்கணிக்க முடியாத சக்தியாக வளர்ச்சியடைந்துள்ளோம்.

தொழிற்சங்க அரங்கம்

1. சேலம் மாநாட்டிற்குப் பின், நாடு தழுவிய நிலைமைக்கேற்ப, தமிழகத்தில் தொழில் நெருக்கடிமேலும் தீவிரமடைந்துள்ளது, ஆலைமூடல்கள் மேலும் பரவலாகியுள்ளது. சேலம் மாநாட்டின்போது, தமிழகத்தில் 12 பஞ்சாலைகள்தான் மூடப்பட்டிருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை 41 ஆக பெருகியுள்ளது. மேலும் 30 ஆலைகள் மூடப்படும் தறுவாயில் இருப்பதாக "சைமா" கூறுகிறது. ஆலைமூடல்கள் சிறிய, நடுத்தர, பெரிய இன்ஜினீயரிங் தொழில்களுக்கும், ரசாயன தொழில்களுக்கும், கைத்தறி, விசைத்தறி, முந்திரி, கயிறு போன்ற தொழில்களுக்கும் பரவியுள்ளது. இந்த காலகட்டத்தில் மீதமுள்ள தொழில்களும், தொழிற்சாலைகளிலும், குறிப்பாக பஞ்சாலைகள், இன்ஜினியரிங், சிமெண்ட், சர்க்கரை போன்றவற்றில் நவீனமயமாக்குதல்கள் கடந்த மூன்றாண்டுகள் வேகமாக நடத்தப்பட்டுள்ளன. இந்த தொழில்களில் ஒப்பந்த வேலைமுறைகள், காஷுவல் வேலை முறைகளும் அதிகரித்து விட்டன.

இப்படிப்பட்ட காரணங்களினால் வேலையிழப்பு பெருமளவில் ஏற்பட்டுள்ளது. ஆலைமூடல்களும், கதவடைப்பும் இரண்டு, மூன்றாண்டுகள் நீடித்ததின் காரணமாக பல தொழிலாளிகள் இறந்துள்ளனர். ஆட்குறைப்பு, வேலைப்பளு உயர்வு, ஊதிய வெட்டு, பஞ்சப்படி முடக்கம், பெற்றுள்ள மற்ற சலுகைகள் வாபஸ் பெறுதல் போன்றவை— சேலம் மாநாட்டிற்கு முன் அங்குமிங்குமாக இருந்த நிகழ்ச்சி — இன்று அரசாங்கமே அங்கீகரித்த ஒரு கொள்கையாகவே மாறிவிட்டது. அதற்கு மேலாக தொழிலாளிகள் பல்லாண்டுகளாக சேர்த்து வைத்த பிராவிடண்ட் பண்ட் பணமும் மற்ற சேமிப்புகளும் தொழிற்சாலைகளில் முடக்குவது என்ற போக்கு அதிகரித்து வருகின்றது. ஓய்வு பெறக்கூடிய தொழிலாளிகளின் கிராஜுவிட்டியைக் கூட தவணைகளில் பெறுவதற்கு நிர்ப்பந்திப்பதும் அதிகமாகிவிட்டது. மத்திய தர வர்க்க ஊழியர்கள் பணியாற்றும் இலாக்காக்கள், நிறுவனங்களில் நவீனமயமாக்குதல். கம்ப்யூட்டர்கள் புகுத்தலின் மூலம் புதிய வேலைவாய்ப்புகள் அனைத்தும் முடமாக்கப்பட்டுள்ளன. காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படுவதும் இல்லை.

இந்த நெருக்கடியின் விளைவுகளை எதிர்த்து கடந்த மூன்றாண்டுகளில் தொழிலாளிகளின் போராட்டங்கள் முன்னைவிட அதிகமாகவும், பரவலாகவும் நடந்துள்ளன. மாநில ரீதியிலும்,

தொழில் அடிப்படையிலும், பொது வேலை நிறுத்தங்களும், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தங்களும், மறியல்களும், ஸ்தல மட்டங்களில் வீரமான வேலைநிறுத்தங்களும். பந்த்களும் கடந்த மாநாட்டிற்கு முன் காலத்தை விட கூடுதலாகவே நடந்துள்ளது. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மீனவர்கள், பொதுத் துறை தொழிலாளிகள் போன்ற பகுதியினரின் போராட்டங்கள் இந்த கட்டத்தில் பிரமிக்கத் தக்க முறையில் வீராவேசமுடன் நடந்துள்ளன.

அதே நேரத்தில் கதவடைப்புகளும், மூடல்களும் நீடித்த நிலைமைகளை தாங்க முடியாமல் பல போராட்டங்கள் நடத்தியும் பிரச்னைகள் தீராதநிலையில், தொழிலாளிகள் சங்கத்தை தவிர்த்தோ அல்லது சீர்திருத்த தலைமைகளின் உதவியுடனோ, முதலாளிகள் முன்வைத்த நிப்பந்தனைகளுக்கு பணிய வைக்கக்கூடிய நிகழ்ச்சிகள் அதிகமாகக் கூடியதைப் பார்க்கிறோம்.

2 கட்சியின் தொழிற்சங்க அரங்க கடமைகள் என்று நாம் குறிப்பிடும்போது தொழிலாளி வர்க்கத்தின் அனைத்து பிரிவினரிடையேயும் நாம் செயலாற்றுவதைக் குறிக்கிறோம். சிஐடியு—வின் தலைமையில் பணியாற்றும் தொழிலாளர்கள் தவிர, இதர பகுதி தொழிலாளர்கள்—ஊழியர்களிடையேயும் கட்சி செயல்படுகிறது. அனைத்துப் பகுதியினரிடையிலும் நாம் செய்துள்ள பணிகளை விரிவாக இங்கு பரிசீலிக்க முடியாது.

சேலம் மாநாடு பணித்த கடமைகள்

3. தொழிற்சங்க அரங்கில் நமது கடமைகள் எனும் மத்திய கமிட்டி தீர்மானத்தை ஸ்தூலப்படுத்தி நமது மாநிலத்தில் அமுல் படுத்துவது; நமது செல்வாக்கிற்கு ஏற்ப தொழிற்சங்க எண்ணிக்கையைப் பெருக்குவது; மாவட்ட சிஐடியூ குழுக்களை புதுப்பித்து செயல்படுத்துவது, போராட்டங்களை அவ்வப்போது பரசீலனை நடத்தி, அதன் படிப்பினைகளை மாநிலம் முழுவதும் அணிகளுக்கு கொண்டுசெல்வது, உழைக்கும் பெண்களை திரட்டுவது, சமாதான இயக்கம் சம்பந்தப்பட்ட பலவீனத்தை களைவது, தொழிலாளி வர்க்கத்திலிருந்து கூடுதலாக கட்சி அங்கத்தினர்களை சேர்த்து, கட்சிக்கிளைகளை அமைப்பது, மாநில சப்கமிட்டி, மாவட்ட சப் கமிட்டிகள், பிராக்ஷன்கள், கட்சிக் கிளைகள் மூலம் கட்சி நிலையை தொழிலாளிகள் மத்தியில் கொண்டு செல்வதற்கும், அரசியல் உணர்வு ஊட்டுவதற்கான பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கும் வழிகாட்டுவது போன்றவை சேலம் மாநாடு நமக்கு பணித்த கடமைகளில் சில பிரதான கடமைகளாகும்.

சேலம் மாநாட்டு முடிவின்படி, மத்திய கமிட்டி தீர்மானத்தை ஸ்தூலப்படுத்துவது பற்றி 1986 மார்ச் 8, 9 தேதிகளில் நமது டி. யு. சப்-கமிட்டி, திருச்சியில் கூடி விவாதித்தது. அதற்குப் பின் அதே ஆண்டில் நவம்பர் மாதத்தில் மாநில செயற்குழு கூடி, தோழர் பி.டி.ஆர். முன்னிலையில் விரிவாக விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தின் தொகுப்புரையில், மத்தியக் கமிட்டி தீர்மானத்தின் அடிப்படையில், தமிழகத்தில் தொழிற்சங்க அரங்கில் உடனடியாக அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகளை பொலிட்பீரோ சார்பாக தோழர் பி. டி. ஆர். குறிப்பிட்டார்.

அதன்படி:

- டெம்ப்ரரி, அப்ரண்டீஸ், காண்ட்ராக்ட், கேஷுவல் தொழிலாளிகளை திரட்டுவது; வேலையில்லாதவர்களை திரட்டுவது; உழைக்கும் பெண்களை திரட்டுவது - இவை தொழிற்சங்க அன்றாட நடவடிக்கைகளின் பகுதியாக மாற்றுவது, முன்னுரிமை வேலையாகவே பணிக்கப்பட்டது.
- தொழிலாளர்களுக்கு அரசியல் உணர்வு உண்டாக்குவதற்கான முயற்சியில் மொழி, கலை, இலங்கை பிரச்சனை போன்றவைகளுக்கு இனவெறி, பிரிவினைவாதத் தன்மை கொடுக்கப்படுவதை எதிர்த்து, தமிழக இயக்கத்தில் ஒரு ஸ்தூலமான போராட்டமாக நடத்தப்பட வேண்டுமெனவும் பணிக்கப்பட்டது.
- கிளர்ச்சிப் பிரச்சார நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்காக இரண்டு, மூன்று பிரச்சார பிரசுரங்கள் வெளியிடப்பட வேண்டுமென்றும், நமது பல்வேறு தொழிற்சங்க மாத வெளியீடுகளில் மற்ற பகுதியினர்களின் பிரச்சனைகளைப் பற்றியும் கொள்கை பிரச்சனைகள் பற்றியும் தொடர்ந்து எழுதப்பட வேண்டுமெனவும் நமது சங்க ஏடுகளின் உள்ளடக்கத்தை அவ்வப்போது கட்சி பரிசீலனை நடத்த வேண்டுமெனவும் பணிக்கப்பட்டது. தீக்கதிர் விற்பனையை தொழிலாளிகள் மத்தியில்அதிகப்படுத்துவதும் ஒரு முக்கிய கடமையாக பணிக்கப்பட்டது.
- அதே போல் போராட்டங்கள் பற்றி பரிசீலனை நடத்துவது என்பது, கட்சியின் உணர்வின், நடைமுறையின் பகுதியாக மாற்ற வேண்டுமெனவும், உடனடியாக செயற்குழு முன்கையெடுத்து, ஓரிரு போராட்டங்களை

பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் பணிக்கப்பட்டது. மேலும், இந்தக் கடமைகளை நிறைவேற்றவேண்டுமானால், அதற்கான முன் முயற்சி மையத்திலிருந்துதான் கிளம்ப வேண்டும் என்னும், ஒரு பழக்கத்தை மாற்ற வேண்டும் என்றாலோ ஒரு கொள்கையில் மாற்றம் வேண்டும் என்றாலோ ஒரு கொள்கையை அமல்படுத்த வேண்டுமென்றாலோ முன் முயற்சி கட்சி செயற்குழுவில் இருந்துதான் தொடரப்பட வேண்டும் என்றும் பொலிட்பீரோ சார்பாக பணிக்கப்பட்டது.

ஆகவே, கடந்த மூன்றாண்டுகளில் நமது வேலைகளை பரிசீலனை செய்கின்ற பொழுது சேலம் மாநாட்டு முடிவுகளும், மத்திய கமிட்டி தீர்மானத்தை ஸ்தூலப்படுத்தும் முறையில் செயற்குழு எடுத்த முடிவுகளையும் மனதில் கொண்டு நாம் பரிசீலனை செய்ய வேண்டும்.

மத்திய கமிட்டி தீர்மானத்தையும், மேலே குறிப்பிட்ட செயற்குழு முடிவுகளையும் அணிகளுக்கு எடுத்துச்செல்ல பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- டி. யு. சப்-கமிட்டியில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மத்திய கமிட்டி தீர்மானம் ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது. இந்த ரிப்போர்ட்டிங் சில இடங்களில் விரிவாக செய்யப்பட்டது என்று கூறமுடியாது.
- பொலிட்பீரோ சார்பாக செய்யப்பட்ட தொகுப்புரை மாநிலக்குழு கூட்டத்தில் ரிப்போர்ட்செய்யப்பட்டதுடன் சைக்ளோ செய்து அனைத்து மாநிலக்குழு உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.
- இந்த தொகுப்புரையை மாவட்டங்களுக்கு ரிப்போர்ட் செய்யபொறுப்பு நிர்ணயிக்கப்பட்டதில், பெரும்பாலான மாவட்டங்களில் ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது.

4. இந்த தொகுப்புரை மற்றும் சேலம் மாநாடு வகுத்த கடமைகளை நிறைவேற்றும் முறையில் மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் விவாதங்களை நடத்தி போராட்ட பரிசீலனை, பிரசுர வெளியீடு, அரங்க பத்திரிகைகள் பரிசீலனை உள்ளிட்ட சில முடிவுகளை மேற்கொண்டது. ஆனால் அந்த முடிவுகள் அமுல் படுத்தப்படுவதை உத்திரவாதப்படுத்த மாநில செயற்குழுவும், டி. யு. சப் கமிட்டியும் தவறியுள்ளன.

5. அனைத்து மாவட்டங்களிலும் சி. ஐ. டி. யூ. மாவட்ட மாநாடுகள் நடத்தப்பட்டு, புதிய மாவட்ட சி.ஐ.டி.யு.கமிட்டிகள்

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாநாடுகளிலும் சிஐடியு மையத் தோழர்கள் கலந்துகொண்டு, மத்தியகமிட்டி தீர்மானப் படி தொழிற்சங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னுரிமைப் பணிகள் பற்றி விரிவாக ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புதிய மாவட்டக்குழுக்கள்கூடுகின்றபொழுது, அதில் கலந்துகொண்டு புதிய திசை வழியில் நடைமுறைமுடிவுகள் எடுப்பதற்கு வழிகாட்ட, சி.ஐ.டி.யு. நிர்வாகிகளுக்கிடையில் மாவட்டப் பொறுப்புக்கள் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளன. இது முழுமையாக நிறைவேற்றப்படவில்லையென்றாலும் பல மாவட்டங்களில் தோழர்கள் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளனர்.

கொள்கைக்கான போராட்டங்களில் பங்குபெறுதல்

6 கொள்கை பிரச்சனைகளையும், பல்வேறு பகுதி மக்களின் பிரச்சனைகளையும், முக்கியமான அரசியல் பிரச்சனைகளையும் முன் நிறுத்தி நடந்த போராட்டங்களில் அகில இந்திய இயக்கம் என்ற முறையில் நடைபெற்ற மிகப்பெரிய போராட்டம் 1988மார்ச்15ல் நடைபெற்ற "பாரத் பந்த்" ஆகும். பாரத் பந்த்-க்கு முன்னதாக 1987 நவம்பர் மாதத்தில் டெல்லிக்கு சென்ற இரு பிரச்சாரப் பயணக்குழுக்களுக்கு வரவேற்பு. அதனையொட்டிய பிரச்சாரம் போன்றவற்றின் மூலம் தொழிலாளர்களிடையே கொள்கைப் பிரச்சனைகளை ஓரளவு விரிவாக கொண்டு செல்ல முடிந்தது.

டிசம்பர் 9-அன்று டெல்லிப் பேரணி நடைபெற்றுமுடிந்தவுடன், பாரத் பந்த்-க்கான தயாரிப்பு பணிகள் துவக்கப்பட்டன. 1988 ஜனவரி இறுதியில் சி.ஐ.டி.யு. மாநிலக்குழு தயாரிப்பு பணிகளை இறுதிப்படுத்தியது. தமிழகத்தில் இந்த பந்த்ஐ வெற்றிபெறச் செய்ய வேண்டுமானால், இதர கட்சிகள், இதர அமைப்புகள் இவற்றின் தீவிரமான பங்கேற்பு மிகவும் அவசியமான நிலையில், அவர்களில் பெரும்பாலானோர் ஆரம்பத்தில் அக்கறையில்லாத நிலையில் இருந்தனர். இந்தநிலையை மாற்றுவதற்கு கடும் முயற்சி தேவையாக இருந்தது. அதற்காக கட்சி மட்டத்திலும், தொழிற்சங்க மட்டத்திலும் இதர அமைப்புகளுடன் தொடர்ச்சியாக தொடர்புகளை வைத்துக் கொண்டு பணியாற்றினோம். அதில் வெற்றியும் கண்டோம்.

16-2-88 அன்று சென்னையில் அனைத்து சங்கக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் சிஐடியு, ஏஐடியுசி, எல்.பி.எப், ஏ.டி.பி, பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பிறகு டி என் டி யு சி யும் இணைந்து கொண்டது.

அனைத்து மாவட்டங்களிலும் விரிவான தயாரிப்புகள் பிரச்சார இயக்கங்களோடு இந்த இயக்கம் நடைபெற்றுள்ளது.

இந்த இயக்கத்தில் பங்கேற்காத உயிருள்ள சங்கம் எதுவுமில்லை என்கிற அளவுக்கு — அதேசமயம் ஏற்றத்தாழ்வான பங்கேற்போடு—இந்த இயக்கத்தை நடத்தினோம். நாடு தழுவிய முறையில் ரயில்வேயில் வேலைநிறுத்தம் முடிவுசெய்யப்படாத நிலையில், செயற்குழு டி.ஆர்.இ.யு.-வுக்கு மட்டும் வேலை நிறுத்தத்திலிருந்து விலக்களித்திருந்தது.

வேலை நிறுத்தத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாக நாம் பார்க்க வேண்டியவை பற்றி சிஐடியூ மாநிலக்குழுவின் பரிசீலனை அறிக்கை கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளது:—

- முதல் முறையாக அரசியல் கோரிக்கைகளுக்காக பெருமளவில் தொழிலாளி வர்க்க பங்கேற்புடன் நடைபெற்ற முழுமையான பந்த் இது.
- மாறுபட்ட கருத்துக்களுடைய பல்வேறு அமைப்புகளை ஓரணியில் திரட்ட முடிந்ததால், இது வெற்றிகரமாக அமைந்தது.
- பந்த்-தையொட்டி பிரச்சார இயக்கம் விரிவாகவும், பெருமளவிலும் நடைபெற்றது. பந்த் பற்றிய பிரச்சாரத்தில் அரசியல் உணர்வு பெற்றுள்ள தொழிற்சங்க முன்னணியினர் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்றுள்ளனர்.
- தொழிற்சங்கத் தலைமை நம்மிடம் இல்லாத இடங்களிலும் கூட நமது தோழர்களின் முன் முயற்சியும், விரிவான பிரச்சாரமும் வேலை நிறுத்தமும் நடைபெற்றுள்ளது. வேலை நிறுத்தம் இல்லை என சீர்திருத்த தலைமைகள் முடிவுசெய்த பல இடங்களில் அந்த முடிவுகளை மாற்ற முடிந்துள்ளது. சென்னையில் இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.
- மார்ச் 14—முதல் துவங்கப்பட்ட பொதுத்துறை வேலை நிறுத்தம் பந்த்தின்வெற்றிக்கு ஊக்கமளிப்பதாக அமைந்தது.
- வேலை நிறுத்தம் குறைந்த அளவில் நடைபெற்றுள்ள மின்சாரம், போக்குவரத்து போன்ற அரங்கங்களில் கூட இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவில் தொழிலாளர்கள் இந்த பொது இயக்கத்தில் பங்கேற்றுள்ளனர். அதே நேரத்தில் இந்தப் போராட்டத்தில் ஏற்பட்ட நமது பலவீனங்கள் பற்றியும் அந்த பரிசீலனை அறிக்கை கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது:—

* பொதுவான பிரச்சாரத்தில் கவனம் செலுத்தப்பட்ட போதிலும், ஆலை வாரியாக வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வதற்கான குறிப்பான தயாரிப்புகள் நமது சக்திக்கேற்ப இல்லாமலிருந்தன. தொழிற்சாலை பகுதி மட்டுமல்லாது, மின்துறை அலுவலகங்கள், போக்கு வரத்து பணிமனைகளிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. (இன்னும் அதிகமான கவனம் செலுத்தியிருக்க முடியும் என்று பல மாவட்டக் குழுக்களின் அறிக்கைகளில் குறிப் பிடப்பட்டுள்ளது).

* போக்குவரத்து, மின்சாரத்தில் மட்டுமல்லாது சில பெரும் தொழிற்சாலைகளிலும் குறிப்பிடத்தக்க வேலை நிறுத்தம் நடந்திருந்தாலும், நமது உறுப்பினர்களையே முழுமை யாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடச் செய்ய முடியாத நிலை யும் இருந்தது.

* மிகப் பெரும்அளவில் பொதுவேலை நிறுத்தமும், பந்த்தும் நடைபெற்ற போதிலும், பல மாவட்டங்களில் சீர்திருத்த தலைமையிலான பெரும் தொழிற்சாலைகள் சிலவற்றில் வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. சென்னையில் ரிஃபைனரி, ஃபெர்டிலைசர், டி.சி.எஸ்., சேலத்தில் இந்தியா சிமெண்ட் (மிகச் சிலரே பங்கேற்றனர்), சேஷசாயி காகித ஆலை, அம்பாசமுத்திரம் கோட்ஸ் போன்றவை உதாரணங்கள்.

* சர்க்கரை ஆலைகளில் பல இடங்களில் நமது தோழர்கள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். சில ஆலைகளில் வேலை நிறுத் தம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டது. இருந்த போதி லும் சில ஆலைகளில் விவசாயிகள் கரும்பு அனுப்பாத நிலையில் வேலை நடைபெறவில்லை.

★ இந்த பலவீனங்களை ஸ்தூலப்படுத்தும் முறையில் போக்கு வரத்து, மின்சாரம் மற்றும் குறிப்பிட்ட சங்கங்களில் விசேஷமான பரிசீலனைகள் நடத்தி சி.ஐ.டி.யூ. மையத் திற்கு அனுப்ப வேண்டுமென சி.ஐ.டி.யூ. மாநிலக் குழு முடிவு செய்தது. இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் 1987 ஜனவரி 21 வேலை நிறுத்தம் பொதுத்துறையை நாசப்படுத்தும் மத்திய அர சின் கொள்கைகளுக்கு எதிரான வேலைநிறுத்தமாகும். அதில் தொ.மு.ச. பேரவை கலந்துகொள்ள மறுத்த நிலையில் தமிழ்நாட் டில் சி.ஐ.டி.யூ., ஏஐடியூசி, மற்றும் வங்கி, இன்ஷூரன்ஸ் சங்கங்

களை ஒன்றிணைத்து உறுதியாக நடத்தப்பட்டது. இந்த வேலை நிறுத்தம்.

1988 மார்ச் 14—16-ல் நடைபெற்ற 3 நாள் வேலை நிறுத்தத்தையும் ஐ.என்.டி.யு.சி. தலைமைதவிர மற்றவர்களின் ஒத்துழைப்போடு வெற்றிகரமாக நடத்தினோம்.

8. புதிய விலைவாசிப் புள்ளி மற்றும் தொழிலுறவு மசோதாவுக்கு எதிராக நாம் தனியாகவும், கூட்டாகவும் நடத்திய கண்டன இயக்கங்கள், மாநில—மாவட்ட மாநாடுகள், மத்திய அரசின் கொள்கையின் விளைவுகளை எடுத்துக்காட்டி, ஒரு கணிசமான பகுதியினரை உணரச் செய்ய உதவியுள்ளது. இது பற்றிய நமது பிரசுரங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிரான போராட்டம் என்பது குறிப்பிட்ட சில இயக்கங்களோடு நின்றுவிடக் கூடாது. அன்றாடப் பணிகளின் பகுதியாக தொழிலாளர்கள் மத்தியில் கொள்கைப் பிரச்சனைகளை எடுத்துச் செல்வது அவசியம். தற்போது இந்தப் பணிகள் நடைபெறுவதே இல்லை என்று கூறலாம்.

மாநில இயக்கங்கள்

9. இதே காலத்தில் நாம் தனியாகவும், கூட்டாகவும் திட்டமிட்டு பல இயக்கங்களை மாநில மட்டத்தில் நடத்தியிருக்கிறோம். விலைவாசி உயர்வு மற்றும் வரிக் கொள்கைகளுக்கு எதிராக ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் காலத்தில் ஆர்ப்பாட்டங்கள், தர்ணா நடத்துவது என முடிவு செய்யப்பட்டாலும், அவையெல்லாம் பெயரளவிலான, மிகக்குறைவான தொழிலாளர்களே பங்கேற்ற சம்பிரதாயப்பூர்வமான இயக்கமாகத்தான் இருந்துள்ளது. 1986 பிப்ரவரி 13 முதல் 20 வரை ஒருவார காலம் பட்ஜெட்டுக்கு முன்னரே திட்டமிடப்பட்ட தீவிர பிரச்சார இயக்கமும் கூட தொழிலாளர்களை திரட்டுவதில் வெற்றிகரமாக நடைபெறவில்லை.

ஆலைமூடல், ஆட்குறைப்பு, கதவடைப்பு :

10. ஆலை மூடல், ஆட்குறைப்பு, கதவடைப்புக்கு எதிராக இந்தக் காலத்தில் தனியாகவும், கூட்டாகவும், ஆலை மட்டத்திலும், ஸ்தல மட்டத்திலும், மாநில மட்டத்திலும் பிரச்சார இயக்கங்களையும் போராட்டங்களையும் நடத்தி உள்ளோம். மூடப்பட்ட ஆலைகளை, குறிப்பாக பஞ்சாலைகளை திறக்கக்கோரி நடைபெற்ற கூட்டு இயக்கங்கள் கோவையை மையப்படுத்தியே நடைபெற்று வந்தன. 1986 மார்ச் மாதத்தில் கோவையிலிருந்து சென்னைக்கு நடைபயணமும், சென்னையில் மார்ச் 31-ல் மறிய

லும், தலைவர்கள் கைது என்ற செய்தி அறிந்தவுடன் துவங்கி 8 நாட்கள் கோவை பஞ்சாலைகளில் நடைபெற்ற கூட்டான வேலை நிறுத்தம் குறிப்பிடத்தக்கதொரு இயக்கமாகும். மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கக் கோரி வேலையிலுள்ளவர்களின் 8 நாள் வேலைநிறுத்தம் அந்தப்பிரச்சனையின் ஆழத்தை எடுத்துக்காட்ட உதவியது. கீழ்மட்டத்திலிருந்து ஏற்பட்ட நிர்ப்பந்தம் இந்த கூட்டு இயக்கத்தை உருவாக்க பெரிதும் உதவியது. நெருக்கடி முற்றிவந்த நிலையிலும், இனி போராட்டம் நடத்தி பயனில்லை என்று சீர்திருத்தவாத தலைவர்கள் பகிரங்கமாக அறிவித்தனர். நீடித்த போராட்டங்களுக்கு அவர்கள் தயாராக இல்லை என்பது தெளிவாயிற்று.

இதே காலத்தில், ஆலைமூடல், ஆட்குறைப்புக்கு எதிராக மேட்டூர் பந்த்(1986 ஜனவரி),சேலம் மாவட்டத்தில் கட்சி சார்பில் நடைபெற்ற பிரச்சார பயணங்கள் (1987 ஜூன் 18—24), புதுக்கோட்டையில் அனைத்து சங்கங்கள், எதிர்கட்சிகள் நடத்திய பந்த்(22-7-87),செங்கற்பட்டில்-சென்னையில் பின்னி இன்ஜினியரிங் மில்லை திறக்ககோரி,சிஐடியூ சார்பிலும்,கூட்டாகவும் இயக்கங்கள், குமரியில் நாக்ம்மாள் மில் கதவடைப்பு எதிர்ப்புபோராட்டம், மதுரை மகாலட்சுமி மில் மூடலுக்கு எதிரான போராட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்க போராட்டங்களாகும்.

11. 1988 ஜனவரி 17 அன்று நாம் மதுரையில் வெற்றிகரமாக நடத்திய மாநில சிறப்பு மாநாடு அரசின் கொள்கைகளின்பால் நமது முன்னணியினரின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியாகும். சிறு முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளையும் இதில் உரையாற்ற வைக்க முயன்றோம். ஏற்றுக்கொண்ட சிலரும் தேதி மாற்றத்தால் பங்கேற்க இயலாது போயிற்று.

ஆலைமூடல் போன்ற பிரச்சனைகளில், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒட்டுமொத்த சக்தியும் பயன்படுத்த முடியாமல் போகும் நிலையில், கல்கத்தா காங்கிரஸ் அறிக்கை சுட்டிக்காட்டுவது போல் ''நெருக்கடியின் சுமை முழுவதையும் தொழிலாளர் மீது திணிப்பதற்கு முதலாளி வர்க்கத்திற்கு எளிதில் சாத்தியமாகிறது.''

சென்னை பின்னி இன்ஜினீயரிங் போன்று மூன்று ஆண்டு காலம் விடாப்பிடியாக போராடிய தொழிலாளர்களைக் கூட பணிய வைக்க முதலாளிக்கும், அரசுக்கும் சாத்தியமாகிறது.

இதுபோன்ற இடங்களில் கட்சி தலையிட்டு தொழிலாளர்களை ஒன்றுபடுத்த இயக்கங்களை நடத்துவது அவசியம்.

12. அதேநேரத்தில், நீடித்த வீரமிக்க போராட்டம் நடத்தி தொழிலாளிகள், அவர்களது எதிர்ப்பு சக்தி குறைந்து வரும் நேரத்தில் அந்த போராட்டத்தை எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டுமென விரும்பும் நேரத்தில் அவர்களது ஒற்றுமையையும், சங்க நம்பிக்கையையும் காக்கும் வகையில் அந்த போராட்டத்தை முடித்து வைப்பதற்காக தொழிலாளர்களின் ஒப்புதலுடனும், சிஐடியூ தலைமையின் வழிகாட்டுதலுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

12. இந்தக் காலத்தில் மாநிலந் தழுவிய முறையில் நடைபெற்ற மற்றுமொரு இயக்கம் புதிய ஜவுளிக் கொள்கை எதிர்ப்பு இயக்கமாகும். பஞ்சாலை மூடல்களையொட்டி பஞ்சாலைத் தொழிலாளர்களிடையேயும், குறிப்பிடத்தக்க அளவில் கைநெசவாளர்களிடையேயும் கடந்த 3ஆண்டு காலமாக புதிய ஜவுளிக்கொள்கை எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றுள்ளது.

சிஐடியூ சார்பிலும், கூட்டாகவும் இந்த இயக்கங்கள் நடைபெற்றன. 1986 மே மாதம் கோட்டைக்கு பேரணி, செப்டம்பரில் 6000 கைநெசவாளர்கள் பங்கேற்ற 3நாள் மறியல், பாராளுமன்றத்திற்கு மகஜர் ஆகிய இயக்கங்கள் குறிப்பிடத்தக்கவை. கைநெசவு நெருக்கடி தொடர்ந்ததால் ஜவுளிக் கொள்கை எதிர்ப்பு பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற்றது. நாடாளுமன்ற மனுக்கள் குழுவும், அதன் சிபாரிசில் புதிய ஜவுளிக் கொள்கை, கைநெசவாளர்களுக்கு எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை ஒப்புக் கொள்ளச் செய்து, அம்பலப்படுத்தியுள்ளோம்.

சகோதார ஆதரவு இயக்கம்

14. நாடு தழுவிய முறையிலும், மாநில ரீதியாகவும் நடைபெற்ற பல போராட்டங்களை ஆதரித்து பல இயக்கங்கள் இந்தக் காலத்தில் நடைபெற்றன.

★ 1985 டிசம்பர் 11-ல் ஆசிரியர் போராட்டத்தை ஆதரித்தும் சென்னையில் மீனவர்கள் மீது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் மாநில ரீதியான வேலை நிறுத்தம் சென்னை, கோவையில் பெருமளவில், இதர மாவட்டங்களில் ஓரளவு நடைபெற்றது.

★ 1987ல்- கல்லூரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம், 1988 பிப்வரி மாநில அரசு ஊழியர் ஒரு நாள் வேலை நிறுத்தம், 1988 அரசு ஊழியர்-ஆசிரியர் மறியல் மற்றும் வேலை நிறுத்த ஆதரவு இயக்கங்கள்.

★ ராணிப்பேட்டை போலீஸ் அடக்குமுறை பொய் வழக்குகளுக்கு எதிரான மாநிலந்தழுவிய கண்டன ஆர்ப்பாட்டங்கள் போன்ற ஆதரவு இயக்கங்கள் குறிப்பிடத் தக்கதாகும்.

1988 ஜூன் ஜூலையில் அரசு ஊழியர் ஆசிரியர் வேலைநிறுத்த காலத்தில் நடைபெற்ற தொழிற் சங்க ஆதரவு நடவடிக்கைகளில் குறிப்பாக ஜூலை 15 ல் மறியல், சிஐடி யூ நடவடிக்கைகளின் பால் போராடும் ஊழியர்களின் கவனத்தை ஈர்க்க உதவியது.

ஆதரவுஇயக்கங்களில் நமது முழுபலத்தையும் திரட்டமுடியாத பலவீனம் நீடிக்கின்றது. ஆனால் அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டம் போன்ற சில இயக்க காலங்களில் ஓரளவு அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்களையும் ஓரளவு பங்கேற்கச் செய்ய முடிந்துள்ளது. ஆனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மாநிலந் தழுவிய முறையில் ஒருமாத காலம் வேலைநிறுத்தம்செய்த போது ஒரு நாள் ஆதரவு வேலைநிறுத்தத்திற்கான முடிவை மேற்கொள்ள முடியாத அளவில்தான் நமக்கு ஸ்தாபன பலம் உள்ளது. மாநிலம் தழுவிய மறியல் என்ற அளவிற்கே நாம் முடிவெடுக்க முடிந்தது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

போக்குவரத்து

15. மாநிலத்தில் போக்குவரத்துத் துறையில் அரசு போக்குவரத்து கழகங்களில் நாம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளோம். 1985-ல் 12,000 ஆக இருந்த அரசு போக்குவரத்து ஊழியர் சம்மேளன உறுப்பினர்எண்ணிக்கைதற்போது21,000ஆகஉயர்

ந்துள்ளது. ஆனால் இதில் 13,000 பேர் பல்லவன், திருவள்ளுவர், சேரன், பட்டுக்கோட்டை, பாண்டியன் கழகம் ஆகிய சங்கங்களில் தான் உள்ளனர். 10-கழகங்களில் சுமார் 8,000பேர். இரண்டில் நூற்றுக்கும் குறைவு. உறுப்பினர் எண்ணிக்கையில் எல்லா கழகங்களிலும் உயர்வு ஏற்பட வாய்ப்புண்டு. அதற்குரிய ஸ்தாபன ஏற்பாடுகள், முழுநேர ஊழியர்கள், மாவட்ட கமிட்டிகளுடன் நெருக்கமான உறவு, தலைமையின் முறையான வழிகாட்டுதல்களுடன் செயல்பட்டால், நமது சங்கங்கள் நல்ல வளர்ச்சி பெற வாய்ப்பு உண்டு. அரசியல் ரீதியாகவும், தனியாக கவனம் செலுத்த வேண்டிய துறை இது.

இளம் தொழிலாளர்கள், காஷுவல், டெம்ப்ரவரி தொழிலாளர்கள் பிரச்னைகளில் விசேஷ கவனம் செலுத்தி செயல்பட்டுள்ளோம். நமது உறுப்பினர் எண்ணிக்கையில் 70சதம், 1977-க்குப் பின் வேலைக்கு சேர்ந்த புதிய தொழிலாளர்கள்.

நிர்ணயிக்கக்கூடிய சக்தியாக மாறவில்லையானாலும், புறக்கணிக்க முடியாத சக்தியாக இருக்கின்றோம். கோஷங்களை உருவாக்கவும், தொழிலாளர்களின் கவனத்தை ஈர்க்கவும் நம்மால் முடிகிறது. நமது முன்னேற்றம் தொழில் பிரிவு வாரி அமைப்புகள் வளராமல் தடுக்கவும், ஜாதிய முயற்சிகளை முறியடிக்கவும்சாத்தியமாகியுள்ளது. போனஸ் மற்றும் இடைக்கால நிவாரணத்திற்காக இந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற இயக்கங்கள், ஒப்பந்தம், மற்றும் அதற்குபின் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்ட பிரதிபலிப்புகள் பற்றி சம்மேளனமும் டி.யு.சப்கமிட்டியும் விரிவாக பரிசீலிக்க வேண்டும்.

மாநில பிராக்ஷன் சமீப காலமாக செயல்பட்டு வருகின்றது. அதன் செயல்பாடுகளையும் சம்மேளன மைய செயல்பாடுகளையும் மேலும் முறைப்படுத்தி மாநில கட்சி, தொழிற்சங்க மையத்துடன் நெருக்கமான உறவு ஏற்படுத்த வேண்டியுள்ளது.

போக்குவரத்துத் துறையில் நமக்கு மிகப் பெரும் பலவீனம், தனியார் துறையில் தான். பயணிகள் போக்குவரத்தில் 40-சதமும் சரக்கு போக்குவரத்து முழுமையாகவும் தனியார் துறையில்தான் உள்ளது. அதில் நாம் ஒரு சக்தியாகவே இல்லை. அதில் இயக்கத்தைக் கட்டும் அவசியத்தையும் உணரவில்லை. பொதுத்துறையில் உள்ள பலத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி தனியார் துறையில் இயக்கம் கட்ட வேண்டும்.

ஆட்டோ தொழிலாளர்களை ஒன்று திரட்டும் பணி சென்னை, குமரி, கோவை, சேலம், திருச்சியில் துவக்கப்பட்டுள்

ளது. இதை ஸ்திரப்படுத்துவதும், மற்ற நகரங்களில் விரிவு படுத்துவதும் அவசியம்.

16. மின் அரங்கம்

சி.ஐ.டி.யூ.வின் உறுப்பினர் எண்ணிக்கை 10,000-லிருந்து 12,000 ஆக (1,500 காண்ட்ராக்ட் தொழிலாளர்கள்) மட்டுமே உயர்ந்துள்ளது. சேலம் மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்ட செக்டேரியன் போக்குகள் திருத்தப்படுவதற்கான முயற்சி நடைபெற்று கூட்டு இயக்கங்களுக்கு திட்டமிட்டு முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடுமையான பழிவாங்குதல்களுக்கிடையே, அதையும் தாங்கி நின்று இந்தப் பணிகளை ஓரளவு வெற்றிகரமாகச் செய்ய முடிந்துள்ளது. அகில இந்திய ரீதியில் சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ.சி., சம்மேளனங்கள் கூட்டுப்போராட்டங்கள் நடத்தும் நிலையிலும் மாநிலத்தில் அந்த நிலை இல்லை. மார்ச் 15 வேலை நிறுத்தமும், மின் அரங்கப் பிரச்சனைகளுக்காக என்று சுருக்கி கூட்டாக அறிக்கை வெளியிட்டும், தனியான பிரச்சாரமே நடைபெற்றது.

நமது விடாப்பிடியான கூட்டு இயக்க முயற்சியால் தற்போது அனைத்து சங்க கூட்டு இயக்கம் உருவாக்கியுள்ளது.

மிக முக்கியத்துவம் வாய்ந்த அரங்கத்தில் மாநில ரீதியான சங்கமாக செயல்படுகின்றோம், மாவட்ட கமிட்டிகளுடன் மேலும் நெருக்கமான நிலையும், அரங்கத்திலுள்ள ஊழியர்களில், சங்கப் பணிகளுக்கு பொறுப்புக்கள் நிர்ணயிப்பதில் கவனமும் தேவைப்படுகிறது, மாநில, மாவட்ட மட்டங்களில் இது பற்றி விவாதிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்த காலத்தில் மாநில மாநாடு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மாநில பிராக்ஷன் செயல்படுகின்றது.

இந்த அரங்கில் கடந்த மூன்று ஆண்டு செயல்பாடுகளை கணிப்பதில், இந்த மாநிலஸ்தாபனத்தை குறிவைத்து தாக்கி அழிப்பதற்கு மறைந்த முதல்வர் எம் ஜி ஆர். தனி அக்கறை எடுத்து, தொடுக்கப்பட்ட பலமுனை மூர்க்கத்தனமான தாக்குதல்களிலிருந்து நமது சங்கத்தை பாதுகாத்து நிலை நிறுத்தி செயல்பட வைப்பது என்பது தான் அதன் பிரதான கடமையாக அமைந்தது. அதை வெற்றிகரமாகவே நிறைவேற்றியுள்ளனர் என்பது தான் மதிப்பீடு. இருப்பினும் 80, 000 நிரந்தர தொழிலாளர்களும், பல்லாயிரம் காண்ட்ராக்ட் தொழிலாளர்களும் பணியாற்றும் இந்த முக்கியமான துறையில் நமது உறுப்பினர்கள் 12, 000ம் தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ரயில்வே

17 நமது தலைமையிலுள்ள டி ஆர் இ யூ—வில் உறுப்பினர் எண்ணிக்கை 7,000—லிருந்து 10,000—மாக உயர்ந்துள்ளது. இந்த உயர்வில் கணிசமான பகுதி சென்னை டிவிஷனில் ஏற்பட்டுள்ளதாகும். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் ஒரு சிறு பகுதியினரிடையே மட்டும் தான் நாம் பணியாற்றி வருகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சங்கச் செயல்பாடுகளில் முன்னேற்றம் உள்ளது. நிர்வாகத்தின் கடும் பழிவாங்குதலுக்கு மத்தியில் இந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. மாநில பிராக்ஷன் கூட்டங்கள் நடைபெறுகின்றது. அகில இந்திய பிராக்ஷனுக்கு ரிப்போர்ட்டுக்களும் முறையாக அனுப்பப்படுகின்றது.

ரயில்வே அரங்கப் பணிகளில் முன்னேற்றம் காண்பதற்காக மதுரை, திருச்சி, தென் ஆற்காடு, பெரியார், சென்னை ஆகிய ஐந்து மாவட்டங்களில், முழுநேர ஊழியர்களை மாவட்டக்குழுக்கள் அமர்த்த வேண்டுமென மாநிலக்குழு முடிவு செய்திருந்தது. இதில் மதுரை, திருச்சி மாவட்டங்களில் முழுநேர ஊழியர்கள் ஒதுக்கப்பட்டனர். ஆனல், பல்வேறு காரணங்களால் அந்த முழுநேர ஊழியர்களும் ரயில்வே அரங்கில் தொடரவில்லை. இந்த ஐந்து மாவட்டங்களிலும் ரயில்வே அரங்கப் பணிகளுக்கான முழுநேர ஊழியர்களை மாவட்டக்குழுக்கள் ஒதுக்குவது மிகவும் அவசியமாகும். ரயில்வே அரங்கில் கட்சியின் நடைமுறைத் தந்திரங்கள் பற்றிய மத்திய கமிட்டி தீர்மானத்தை அந்த அரங்கத் தோழர்களிடம் விளக்கி கூறப்படாத நிலை இருந்து வந்தது. அதைப் போக்கும் முறையில் மாநில பிராக்ஷன் மூலம் மூன்று இடங்களில் ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது. நமது ஊழியர்களிடையே இதை விரிவாக எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

துறைமுகம்

18. துறைமுகத் தொழில் ஒரு கேந்திரமான தொழில். கடந்த காலத்தை ஒப்பிடுகையில் நமது தோழர்கள் சற்று கூடுதல் கவனம் செலுத்துகிருர்கள். சற்று முன்னேற்றமும் உண்டு.

சென்னை துறைமுகம் சம்பந்தமாக மாவட்ட கமிட்டி ஒரு தோழரை முழுநேர ஊழியராக நியமித்துள்ளது. உறுப்பினர் எண்ணிக்கையில் அபிவிருத்தியில்லை. ஆனல் வாய்ப்புக்கள் நன்ருக இருக்கிறது. அடுத்த மூன்ருண்டுகளில் நமது [சங்கத்தை ஒருபெரிய வெகுஜன ஸ்தாபனமாக கட்ட வேண்டும். துறைமுகத் துறையில் அரசியல் பணிகளை திட்டமிட்டு செய்வது அவசியம்.

தூத்துக்குடியில் துறைமுகத் தொழிலாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட சங்கம், நமது அகில இந்திய சம்மேளனத்துடன் மட்டும் இணைக்கப்பட்டிருந்தது. தற்போது சி.ஐ.டி.யூ-விலும் இணைக்கப்பட்டுவிட்டது. டாக் பகுதியிலும் நாம் வலுவான சங்கமாக இருக்கின்றோம். பாரத் பந்தின் போது தூத்துக்குடி துறைமுகத்தில் முழுவேலை நிறுத்தம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

19. கேந்திரத் தொழில்களில் நமது தொழிற்சங்க, அரசியல் பணிகளை விஸ்தரிப்பதில் கட்சியின் அனைத்துக் கமிட்டிகளும் முனைப்பான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதன் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து பணியாற்றுவதை உத்தரவாதப் படுத்த வேண்டும்.

20. மத்திய பொதுத்துறை

மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் அகில இந்திய இயக்கங்களின் வளர்ச்சி, நமது சங்கங்களின் பொதுவான செயல் பாடுகளை அதிகரித்துள்ளது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்சில் 75 சதம் தொழிலாளர்கள் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

திருச்சி பி.ஹெச்.இ.எல்., போட்டோ பிலிம்ஸ் சங்கங்களில் உறுப்பினர் எண்ணிக்கை உயரவில்லை. இந்த இரண்டு சங்கங்களின் பலத்தை அதிகப்படுத்தவும், செயல்பாட்டை மேலும் செமுமைப்படுத்தவும் சம்பந்தப்பட்ட மாவட்டக் குழுக்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

நெய்வேலியில் நமது வேலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளுக்கு கூட உரிமை மறுக்கப்பட்ட நிலையிலும், நாம் செயல்பாட்டை முறைப்படுத்த முயன்று, ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம்.

சேலம் மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட செக்டேரியன் போக்குகளைக் களையும் போராட்டம்தொடருகின்றது. தொடர்ந்து கவனமாக இருக்க வேண்டியுள்ளது. நமது சரியான அணுகுமுறை பயன் தரும் என்பதன் எடுத்துக்காட்டு தான்மார்ச் 14-16 வேலை நிறுத்தத்தின் முழு வெற்றி.

சேலம் ஸ்டீலில், பல்வேறு பழிவாங்குதல்களிடையே, பெரும்பான்மையினர் உறுப்பினர்களாகியும், மாநில அரசின் குழு பரிந்துரைத்தும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட நிலையில் செயல்பட்டு வருகின்றோம்.

ராணிப்பேட்டை பெல்லில், சி ஐ டி யூ தலைமை தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாக்க முடியவில்லை. இருப்

பினும், கடந்த மூன்றாண்டுகளில், நமது தோழர்கள் அங்குசெயல் பட்டதன் விளைவாக, அந்த சங்கத்தில் சி ஐ டி யூ நிலைக்கு ஆதர வான சுயேட்சையான ஒரு பலத்தை வளர்த்துள்ளோம். கட்சி பலமும் வளர்ந்துள்ளது. அரசியல் வேலைகளும்செய்யப்படுகின்றது அங்கு எதிர்கால வளர்ச்சிக்கு இதை ஒரு அஸ்திவாரமாக வைத்து நமதுபணிகளை விஸ்தரிக்கவும், செல்வாக்கை பெருக்கவும் செயல் பட வேண்டும்.

மாநிலத்திலுள்ள மத்திய பொதுத்துறை நிறுவன தொழிற்சாலைகளிலும், இதர கேந்திர தொழில்களிலும் பெருந் தொழிற்சாலைகளிலும் நமது ஸ்தாபன பலத்தையும், அரசியல் பலத்தையும் அதிகப்படுத்த தேவையான ஊழியர்களை ஒதுக்கி பணியாற்ற வேண்டும். புரட்சி இயக்கத்திற்கு கேந்திர தொழில் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்ந்து பணியாற்ற வேண்டி யுள்ளது.

இதர துறைகள்

21 பஞ்சாலைகளில் மாநில சம்மேளனம் அமைக்கப்பட்டுள் ளது. இந்த தொழிலில் உறுப்பினர் எண்ணிக்கையில் முன்னேற் றமே இல்லை என்பது மட்டுமல்ல, 1985-ல் 12,000-ஆக இருந்த உறுப்பினர் பலம் தற்போது 10,000க்கும் சற்று கூடுதலாகத்தான் இருக்கின்றது. ஜவுளித் தொழில் நெருக்கடி, ஆலைமூடல்கள், ஆட் குறைப்பு, ஓய்வு பெறும் திட்டங்கள் ஆகியவை நமது உறுப்பினர் பலம் குறைவதற்கான காரணங்களில் ஒன்றாகும். அதே நேரத்தில் ஸ்தலத்திலும் மாவட்ட மட்டத்திலும் திட்டமிட்ட முயற்சியின் மையும் ஒரு காரணமாகும். உறுப்பினர் எண்ணிக்கை குறைவு அல்லது தேக்கத்திற்கு இப்படிப்பட்ட காரணங்களில் எதுபொருந் தும் என்பதை மாவட்டக்குழுக்களும் சம்பந்தப்பட்ட பிராக்ஷன் களும் விவாதித்து முடிவுசெய்து அதன் அடிப்படையில் பணியாற்ற வேண்டும். பஞ்சாலைத் தொழிலாளர் சம்மேளனமும் டி.யு.சப் கமிட்டியும் இந்தப் பிரச்சனைகளை விவாதித்து மாநில ரீதியாக பொதுமைப்படுத்த வேண்டும்.

இன்ஜினியரிங் தொழிலில் கோவையில் முதல் சங்கமாக நீடிக்கிறோம். சென்னை உட்பட இதர மாவட்டங்களில் பெருமள வில் முன்னேற்றம் ஏற்பட வேண்டியுள்ளது.

சிமெண்ட், சர்க்கரை, டானரி, ஸ்தல ஸ்தாபனம், பீடி, குடிநீர்-வடிகால் வாரியம், கூட்டுறவு சங்கங்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கான கமிட்டிகள் அமைக்கப்பட்டு பணியாற்றி வருகின்றோம். இந்த அரங்கங்களில் நமது பலத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை.

சி.ஐ.டி.யு-வுடன் இணைக்கப்படாத, ஒரு சங்க அமைப்புடைய சங்கங்களில் சென்னை சுற்றுப்புறப் பகுதிகளில், நமது தோழர்களின் தலைமையில் 25,600 உறுப்பினர்கள் உள்ளனர். ஒரு குறிப்பிட்ட துறை என்ற முறையில் தோட்டத் தொழில் பற்றிய நமது பெரும் பலவீனம் நீடிக்கிறது. குமரியில் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களிடையே கணிசமான செல்வாக்கு உடைய சங்கம் தவிர, குறிப்பிட்டு சொல்லும் பலம் எந்த மாவட்டத்திலும் இல்லை. லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை நமது அணியில் திரட்ட சம்பந்தப்பட்ட கமிட்டிகள் தனி கவனம் செலுத்த வேண்டும். மத்திய தர வர்க்க ஊழியர்களின் அமைப்புக்களில் பெருமளவு உறுப்பினர்கள் கொண்ட ஸ்தாபனங்களில் நம் தோழர்கள் பணியாற்றுகிறார்கள். இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் உள்ளது.

கூட்டு நடவடிக்கைகள்

22 சேலம் மாநாட்டிற்கு பிறகு கூட்டு நடவடிக்கைகள் பல துறைகளிலும் நடைபெற்றுள்ளது. பொதுத்துறை (1987) ஆலை மூடல் எதிர்ப்பு, வேலைநிறுத்தங்கள் (1986, 87), சிமெண்ட் (1987) ஸ்தல ஸ்தாபனத் துறைகளில் (1987) ஒரு நாள் வேலை நிறுத்தங்கள், கைத்தறியில் கூட்டான மாநிலம் தழுவிய, ஸ்தல மட்ட மறியல்கள், போக்குவரத்தில் சென்னையில் ஒரு நாள் வேலைநிறுத்தம் மற்றும் கூட்டு இயக்கங்கள், சர்க்கரை, பீடி, டேனரி, குடிநீர்-வடிகால் வாரியம் ஆகியவற்றில் கூட்டு இயக்கங்கள் என மாநில இயக்கங்கள் நடைபெற்றுள்ளன.

தொழிலாளர் போராட்டங்களை ஆதரித்து கோவை, திருப்பூர், புதுக்கோட்டை, மேட்டூர், தூத்துக்குடி, செங்கற்பட்டு, மணலி ஆகிய இடங்களில் பந்த் நடைபெற்றுள்ளது.

23. அனுபவங்களும் பரிசீலனையும்

பெரும்பாலான கூட்டு நடவடிக்கைகளை உருவாக்குவதில் நாம் கீழ் மட்டத்திலும், மேல் மட்டத்திலும் எடுத்த முன் முயற்சியே காரணமாகும். பல சந்தர்ப்பங்களில் சீர்திருத்த தலைமைகள் ஒற்றுமைக்கு வர மறைமுகமாகவோ பகிரங்கமாகவோ மறுத்தாலும் நாம் எடுக்கும் முன் முயற்சிகளினாலும், சுயேட்சையான நடவடிக்கைளின் காரணமாகவும் அவர்களின் எதிர்ப்பையும் முறியடித்து, கூட்டு நடவடிக்கைகளில் சேர நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் தொடர்ந்து கூட்டு நடவடிக்கைகளில் பங்கெடுத்ததின் காரணமாக தொழிலாளிகள் மத்தியில்

ஒற்றுமை உணர்வு வளர்ந்திருப்பதினுல், சில சந்தர்ப்பங்களில் நாம் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களை அணுகினுல், கூட்டு அறிக்கைகள் வெளியிடுவதும் மற்ற கூட்டு வடிவங்களுக்கு பலர் நேரடியாக முன்வருவதும் நமது அனுபவமாகும்.

சில சந்தர்ப்பங்களில், தங்களை பின்பற்றக்கூடிய தொழிலாளிகள் எழுச்சியை நாம் பயன்படுத்தாமல் தடுக்கவும், அது பொது வேலை நிறுத்தத்திற்கு போகாமலிருப்பதற்கும், சீர்திருத்தத் தலைமைகள் முன்கையெடுத்து, 'உண்ணுவிரதம், "நடைபயணம்" போன்ற வடிவங்கள் கொடுக்கும்போது, நாம் அதில் பங்கெடுத்து, தொழிலாளிகளின் உத்வேகத்தை தட்டி விட்டு பொது வேலை நிறுத்தம், பந்த் போன்ற வடிவங்களுக்கு கொண்டு செல்ல முடிவதையும் பார்த்தோம்.

ஆனுல், வேலை நிறுத்தத்தில் இறங்கிய பின், அதன் முழு பயன் அடைவதற்கு முன், நம்மையும் மீறி வேலை நிறுத்தங்களை வாபஸ் பெற்று போராட்டத்தை கலைப்பதற்கு சீர்திருத்தத் தலைமையினுல் இன்னமும் முடிகின்றது. நம்மால் அது தடுக்க முடியவில்லை. (போக்குவரத்தில் ஊதியஉயர்வு போராட்டத்தில் மட்டும் தான் அதுவும் நமது பலம் குறிப்பிட்டத்தக்கதாக இருப்பதனுலும், ஆரம்பத்தில் இருந்தே கீழ்மட்டத்திலேயே அனைத்து பகுதி தொழிலாளிகளை திரட்டியதாலும், சி ஐ டி யூ சங்கம் பேசி ஒப்புதல் தெரிவித்த பின், தானும் கையெழுத்து இடுகின்றேன் என்று ஐ என் டி யூ சி கூற வேண்டியதாயிற்று. கூட்டான ஒப்பந்தமும் ஏற்படுத்த முடிந்தது.)

தமிழ்நாட்டில் கூட்டு நடவடிக்கைகளின் அவசியத்தை உணர்த்துவது ஒரு பிரச்சனையல்ல. கூட்டுநடவடிக்கைகளின்மூலம் தொழிற்சங்க அரங்கில் நிலவும் இன்றைய பலாபலனை நமக்கு சாதகமாக மாற்ற முடிந்துள்ளதா என்பதுதான் பிரச்சனை. அனைத்து பகுதி தொழிலாளிகளின் வர்க்க உணர்வை எந்த அளவு வளர்க்க முடிந்தது, ஸ்தாபன ரீதியில் சி ஐ டி யூ எந்த அளவு பலம் அடைந்துள்ளது என்பது தான். அதைப் பரிசீலித்துப் பார்த்தால் சேலம் மாநாட்டின் பொழுது இருந்த பலவீனம் தொடர்கின்றது என்பது தான் உண்மை.

மாநிலத்தில் சி ஐ டி யூ உறுப்பினர் எண்ணிக்கை இன்னமும் சுமார் 1.5 லட்சம் தான்,

பஞ்சாலை, இன்ஜினியரிங், மின்சாரம் மற்றும் பல சங்க உறுப்பினர் எண்ணிக்கையிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை.

பொதுவாக மற்ற சங்கங்களில் பிளவு ஏற்பட்டால் அதன் பகுதிகள் இன்னமும் வேறு சங்கங்களுக்கு செல்லும் நிலை உள்ளது. திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலையிலும், பி.எச்.இ.எல்.லிலும்உள்ள என்.எல்.ஓ.சங்கங்களில் உடைப்புஏற்பட்டதும் அந்த பகுதி சிஐடியுவிற்கு வரவில்லை. பி.எம்.எஸ்சுக்கு சென்றது. ஒரு பகுதி எச். எம். எஸ்சுக்கு சென்றது. அதிமுக பிளவின் காரணமாக ஏ. டி. பி. சங்கத்தில் ஏற்பட்ட பிளவினால் சிஐடியுவிற்கு எந்த பகுதியும் வரவில்லை. அதேபோல் சி.பி.ஐ பிளவிற்கு பின் எந்தப் பகுதியும் சிஐடியுவிற்கு வரவில்லை.

24. இத்தனை கூட்டு நடவடிக்கைகளுக்கு பிறகும் அனைத்து சங்கங்களுக்கும் இடையில் உள்ள பலாபலனில் அடிப்படை மாறுதல்கள் இல்லையென்பதே உண்மை. இதுபற்றி சேலம் மாநாட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பலவீனங்கள் தொடர்கின்றன.

கூட்டுப்போராட்டங்கள் நடைபெறுகின்ற போது, அந்த தொழிலாளர்களின் மத்தியில் சிஐடியுவின் நிலை மற்றும் கட்சியின் கொள்கையை பரப்புவதற்கும், அரசின் கொள்கைகளை அம்பலப்படுத்துவதற்கும் தனி மேடைகளிலிருந்தோ, கட்சி உறுப்பினர்கள் மூலமாகவோ திட்டமிட்ட முயற்சிகள் நடப்பதில்லை.

நமது சங்கங்களில் அன்றுடச் செயல்பாடுகளிலுள்ள பலவீனங்கள் தொடருகின்றன. தலைமைத் தோழர்களுக்கும் அணிகளுக்கும் தொடர்பு குறைந்துள்ளது. வாயிற் கூட்டங்கள், டிபார்ட்மெண்ட் வாரி இயக்கங்கள் மிகவும் குறைந்துள்ளன. வாயிற் கூட்டங்களில் அரசியல் பிரச்சனைகள் எடுத்துச் செல்லப்படுவதும் மிகக் குறைவு.

அங்கத்தினர் சேர்ப்பு பற்றி திட்டமிடுதலும் பரிசீலனையும் அற்ற நிலை.

மேலும், தொழிற்சங்கப் போராட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் மூலமாக மட்டும் பலாபலனை மாற்ற இயலாது என்பதும் முழுமையாக உணரப்படவில்லை. இது பற்றி தோழர் பி.டி.ஆர். மாநில செயற்குழுவில் தொழிற்சங்க அரங்க கடமைகள் பற்றிய தொகுப்புரையின் போது குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்:

"தொழிற்சங்க போராட்டம் மூலமாக மட்டும் அரசியல் சக்திகளின் பலாபலனை மாற்ற முடியாது. அந்தக் காலமெல்லாம்

போய்விட்டது. வேலைச்சந்தைக்கு வருகிற போதே ஒவ்வொருவரும் ஓர் அரசியலுடன் தயாராகத்தான் வருகிறார்கள். ஆகவே தன் தலைவன் துரோகம் செய்ததாக தெரிந்தாலும் அந்த தொழிலாளி தன் அரசியல் விசுவாசத்தை விட்டுவிட மாட்டார். ஆகவே, தொழிற்சங்க நடைமுறை தந்திரம் மட்டும் போதாது. அதற்கும் மேலான உணர்வு தேவைப்படுகிறது'' ஆகவே, தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் முதலாளித்துவ அரசியல் கருத்துக்களை போராடி அகற்றுவதும் நமது உறுப்பினர் பலத்தை பெருக்குவதற்கான போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும்.

25. போராட்ட பரிசீலனைகள்

சேலம் மாநாட்டு அறிக்கையில், ''நாம் நடத்திய ஏராளமான போராட்டங்களை அவ்வப்போது பரிசீலனை செய்து, அதன் படிப்பினைகளை மாநிலம் முழுவதுமுள்ள தொழிலாளிகளின் பொது உணர்வாக்குவதன் மூலம் அவர்களுடைய உணர்வை நாம் உயர்த்தவேண்டும்'' என்பது ஒரு கடமையாக பணிக்கப்பட்டது. மத்திய கமிட்டி தீர்மானத்தைவிவாதித்த செயற்குழு கூட்ட தொகுப்புரையிலும் தோழர் பி.டி.ஆர் அவர்களும் இதை வலியுறுத்தியுள்ளார்.

இந்த திசையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் போக்குவரத்து அரங்க ஊதிய உயர்வுப் போராட்டப் பரிசீலனையை டி.யூ. சப்-கமிட்டி நடத்தியது. இறுதிப்படுத்தி எழுதி முடிக்காமல் நின்றுவிட்டது.

ஸ்தல ஸ்தாபன அரங்கில் ஒரு நாள் வேலை நிறுத்த பரிசீலனை கீழ் அணிகளுக்கு ரிப்போர்ட் செய்யப்படாமல் விடப்பட்டது.

பாரத் பந்த் பரிசீலனை முடிக்கப்பட்ட போது சில குறிப்பிட்ட சங்கங்களில் ஏற்பட்ட பலவீனம் பற்றி பரிசீலனை செய்ய முடிவு செய்யப்பட்டு நடைபெறவில்லை.

இவ்வாறு, இந்த முக்கிய கடமையை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நிறைவேற்ற மாநில செயற்குழுவும் டி யு சப் கமிட்டியும் தவறியது.

சீர்திருத்தத் தலைமையிலான சங்கங்களில் நமது செயல்பாடு

26. சீர்திருத்தத் தலைமைகளில் இயங்கும் சங்கங்களில் செயல்பட்டு, அதிலிருக்கும் உறுப்பினர்கள் மத்தியில் சிஐடியூ லைனுக்கு ஆதரவு திரட்டுவது, வர்க்க உணர்வையும்

ஒற்றுமை உணர்வையும் வளர்ப்பது, "தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டத்தின் பகுதியாகும்" என்று சேலம் மாநாடு ரிப்போர்ட் சுட்டிக் காட்டியதுடன், ரயில்வே, துறைமுகம் போன்ற தொழில்களிலும், பஞ்சாலை, போக்குவரத்து மற்றும் பெரும் தொழில்களிலும் இவ்வேலையைத் துவக்க வேண்டுமென பணித்தது. ரயில்வேயில் சிலகுறிப்பிட்ட பிரிவுகள் மத்தியில் இந்த வேலை துவக்கப்பட்டுள்ளது. துவக்கிய அளவு பலனும்தந்தது மத்திய மாநில அரசு ஊழியர்கள் மத்தியிலும் செயல்படுகின்றோம். புகளூர் தமிழ்நாடு காகிதஆலை தொழிலாளர் சங்கத்திலும் செயல்படுகின்றோம். அங்கும் பயனளித்தது. உதகையில் ராலிஸ் இந்தியாவில் ஐஎன்டியூசி யூனியனுக்குள் செயல் பட்டோம். முழுவதும் நம் பக்கம் திரண்டது. தூத்துக்குடியில் ஒரு முக்கியமான யூனியனில் பலனளிக்கும் முறையில் செயல்படுகின்றோம். மதுரையில் பென்னர் இந்தியா சங்கத்திலும் கல்பாக்கத்திலும் செயல்பட்டு வருகிறோம்.

ஆனால் பஞ்சாலை, மின்சாரம், போக்குவரத்து போன்ற தொழில்களில் பல லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளிகள் பல சங்கங்களுக்கு பின்னால் பிளவுபட்டு திரண்டு நிற்கும் பொழுது இந்த வேலை அந்த தொழில்களில் முற்றிலும் துவங்கப்படவில்லை. சிஐடியூ சங்கங்கள் செயல்படும் தொழில்களுக்கு இந்த கடமை பொருந்துமா என்றஎண்ணம்கூட சில மட்டங்களில் இருக்கின்றது. ரயில்வேயில் கூட ஏராளமான தொழிலாளிகளை உறுப்பினர்களாக கொண்ட சங்கங்களில் செயல்படுவது பற்றி சிந்திக்கக்கூட இல்லை

இந்தச் செயல்பாடுகள் பெருமளவில் நடக்கக் கூடியது, சென்னையில் உள்ள "ஒரு சங்கத்" தொழிற்சாலைகளில்தான். சென்னையில் நமது தோழர்களின் செயல்பாட்டைப் பற்றி சேலம் மாநாடு மதிப்பிடுகிறபொழுது:-

> "பல குழுக்களுடன் சேர்ந்து ஆரம்பத்தில் சில சங்கங்களில் வெற்றி பெற்றிருந்தாலும், பிறகு அந்த வெற்றியைப்பயன் படுத்தி, நமது சொந்த பலத்தைப் பெருக்குவதும், நமது நிலையை ஸ்திரப்படுத்துவதும் நாம் மேலும் உபயோகப் படுத்த வேண்டிய தந்திரமாகும். இதனால் புயலென கிளம்பிய குசேலர், பென்வால்டர், ஏஐடியுசி, ஜனதாதலைமை, பேரவை ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளது" என்று கணித்தோம்.

சேலம் மாநாட்டிற்கு பின் 'அசோக் லேலண்ட் சங்கத் தேர்தலில் நாம் தலைமையை இழந்தோம். நாம் மூன்றாவது இடத்தைத்தான் பெற்றோம். ஸ்ரீராம்பைபர்ஸ் யூனியனிலும் தலைமையை இழந்தோம். 5-ஆண்டுகளாக நமது தலைமையிலிருந்த விம்கோ யூனியன்,

தொழிற்சாலை மூடும் நிலை உருவானதாக பிரச்சாரம் செய்யப் பட்ட பின்னணியில் நடந்த தேர்தலில் தலைமையை இழந்தோம். குமாரமங்கலம் வென்றார். இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸில் மும்முனைப் போட்டியில் தோல்வியடைந்தோம். ஜனதா கே.எஸ் நாராயணன் வென்றார். மெட்டல்பாக்ஸ் யூனியனில் ஒரு முறை இழந்ததை மறுமுறை வென்றோம். ஆனால் அந்தத் தொழிற்சாலை தற்பொழுது மூடப்பட்டுள்ளது. இந்தக் காலத்திலேயே சிம்சன் யூனியனில் நாம் தலைமையை மீண்டும் வென்றோம். குசேலர் தோற்கடிக்கப்பட்டார். தோழர் வி.பி.சி. மறைவுக்கு பிறகு இந்த சங்கத் தலைமைகளை எளிதில் கைப்பற்றிவிடலாம் என்ற சீர்திருத்த வாத தலைமைகளின் எண்ணம் நிறைவேறவில்லை.

ஆனால் சங்கத் தேர்தல் காலங்களில் உருவாகும் கூட்டணிகளை ஆதாரமாக்கியே, இந்தத் தேர்தல்களில் நமது வெற்றி அமைகிறது. சேலம் மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்ட முறையில், ''நமது பலத்தைப் பெருக்குவதிலும், நமது நிலையை ஸ்திரப்படுத்து வதிலும்'' நாம் மிகப் பெருமளவிற்கு கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் பலவீனங்கள் தான் இழப்புகளுக்கு காரணமாகின்றன.

27. முன்னுரிமை கடமைகள்

''தொழிற் சங்க அரங்க கடமைகளும்'' கல்கத்தா மாநாட்டு அறிக்கையும் வலியுறுத்துகின்ற, நமது தொழிற்சங்க முன்னுரிமைப் பணிகளை அமுல்படுத்துவதற்கான முயற்சிகள் கடந்த மூன்றாண்டுகளில் சற்று உணர்வு பூர்வமானதாக இருந்துள்ளது.

அ) உலக சமாதானம் சர்வதேச ஒருமைப்பாடு பிரச்சனைகளில் தொழிலாளர்களின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியில்- மே தின விழாக்கள், குறிப்பாக 1986-ல் பரவலாக நடைபெற்ற மே தின நூற்றாண்டு விழா, செப்டம்பர் 1, ஹிரோஷிமா தினம் 1987 அக்டோபர் 24 சமாதான நாள் ஆகிய இயக்கங்கள் நடைபெற்றுள்ளன.

நிகரகுவா போராட்ட உதவி நிதியாக ரூ. 10,000 நமது சங்கங்கள் மூலம் வசூலித்து அனுப்பினோம்.

தென்ஆப்பிரிக்க போராட்ட ஆதரவு இயக்கங்கள், 1987 தென்ஆப்பிரிக்க நிதி திரட்டுதல் குறிப்பிடத் தக்கவை. சி.ஐ.டி. யூ. சங்கங்களிலிருந்து மையத்தின்மூலம் ரூ.40,589 அனுப்பினோம். நமது சங்க முன் முயற்சியினால் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்

லிலிருந்து ரூ. 61,815 அனுப்பப்பட்டது. இந்த இயக்கத்தில் போக்குவரத்து சம்மேளனம் விசேஷ கவனம் செலுத்தி பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டது. 8-மாவட்டக்குழுக்கள் மட்டும் இந்த பணிகளில் ஈடுபட்டன. உலக சமாதானம்-சர்வதேச ஒருமைப் பாடு இயக்கங்கள் பற்றி முன் காலங்களைவிட தொழிலாளர் கூட்டங்களில் பேசுவதும், தொழிற்சங்க அரங்க பத்திரிகைகளில் எழுதுவதும் நடைபெற்றாலும், சாதாரணத் தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்கும் அன்றாட இயக்கங்களாக மாற்றாத அபாயகரமான பலவீனம் நீடிக்கின்றது.

ஆ) காண்ட்ராக்ட் காஷுவல் தொழிலாளர்களை ஒன்று திரட்டும் பணியில் சில முன்னேற்றங்கள் உண்டு. இளம் தொழிலாளர்களான, சட்ட உரிமைகள் அற்ற நிலையிலுள்ள இவர்களை சங்க ரீதியாக திரட்ட, போக்குவரத்து, மின்சாரம், நெய்வேலி, ரயில்வே மற்றும் சில ஆலைவாரியாகவும், எப். சி. ஐ., வேர் ஹவுசிங் கார்ப்பரேஷன், சிவில் சப்ளைஸ் போன்றவற்றிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக போக்குவரத்தில் நமது முன் முயற்சியால் தொடர்ச்சியாக நடைபெற்ற இயக்கங்கள் கடந்த காலத்தில் ஒப்பந்தத்தின் போது அனைவரையும் (சுமார் 12,000) நிரந்தரம் செய்ய அரசை ஒப்புக்கொள்ளச் செய்தது. இந்த இயக்கம் நமதுஉறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்தவும் உதவியது.

மாநில ரீதியாக கையெழுத்து இயக்கமும், மாநிலம் முழுவதுமிருந்தும் 3000 பேர் பங்குகொண்டு சென்னையில் பேரணியும் (23-2-88) நடைபெற்றது. கையெழுத்து இயக்கத்திலும், பேரணியிலும் சென்னை மாவட்டக் குழுவும், மின் அரங்கமும் கவனம் செலுத்தியது.

மே 5 அன்று மின் அரங்கில் சுமார் 10,000காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் மாநிலம் தழுவிய ஒருநாள் வேலைநிறுத்தம் நடைபெற்றது. சென்னையில் நவம்பர் 3 அன்று மாநிலம் முழுவது மிருந்தும் திரட்டப்பட்ட 2500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட பேரணியும் நடைபெற்றது.

சென்னை மணலியில், காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் போராட்டத்தையொட்டி போலீசாரின் தாக்குதலைக் கண்டித்து, சென்னையில் ஆதரவுஇயக்கங்களும்,மணலியில்பந்தும் நடைபெற்றுள்ளன. நெய்வேலியிலும் பல போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. திருச்சி பி.எச்.இ.எல்.லில் நமது சங்கம் காண்ட்ராக்ட் தொழிலாளிகளின் புதிய சங்கத்தை அமைத்துள்ளது. இந்த

நடவடிக்கைகள் வரவேற்கத் தகுந்ததாக இருந்தாலும், தேவைக்கும், வாய்ப்பிற்கும், செய்துள்ள வேலைகளுக்கும், பெரிய இடைவெளி இருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இ) ஸ்தாபன ரீதியாக திரட்டப்படாத தொழில்களில் நாம் நீண்டகாலமாக பணியாற்றி வந்திருக்கிறோம். ஆனால் சேலம் மாநாட்டில் சுட்டிக்காட்டியிருப்பது போல், அதன் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து இதைச் செய்ததாகக் கூறமுடியாது. கைத்தறி, விசைத்தறி, பீடி, தோல், கட்டுமானம், பனியன் போன்ற பல துறைகளிலும் நாம் ஏற்கனவே சங்கங்கள் அமைத்துள்ளோம்.

கைத்தறியில், பீடியில் சம்மேளனமும், தோல் கட்டுமானம் தொழில்களுக்கு ஒருங்கிணைப்புக்குழுக்களும்உள்ளன. கைத்தறியில் தொடர்ச்சியான இயக்கங்கள் நடைபெற்றுள்ளன, உறுப்பினர் எண்ணிக்கையில் சிறு முன்னேற்றம் உண்டு. இதர துறைகளில் நாம் சங்க ரீதியாக திரட்டியுள்ளவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமில்லை. அதே நேரத்தில் இந்த துறைகளில் தொழில்வாரி இயக்க நடவடிக்கைகள் முன் காலங்களை விட சற்று கூடுதலாக நடைபெற்று வருகின்றன.

மிகவும் கொடூரமாக சுரண்டப்படுகிற லட்சக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்கள் நமது மாநிலத்தில் உள்ளனர். அவர்களது பிரச்சனைகளில் தலையிடுவதிலும் அவர்களை ஸ்தாபன ரீதியாக திரட்டுவதிலும் நமது சங்கங்களுக்குபெரும்பலவீனமுள்ளது. இவர்களது பிரச்சனைகளில் கவனம் செலுத்தும் நோக்கோடு ஜூன் 1 குழந்தைத் தொழிலாளர் சுரண்டல் எதிர்ப்பு நாளாக இயக்கம் நடத்துவது என்ற நமது முடிவு பெயரளவுக்கே அமலாகியுள்ளது.

இந்த அரங்கில் இன்றுள்ள நிலையில் ஒரு முறிப்பு ஏற்படுத்தியாக வேண்டும்.

ஈ) வேலையின்மைக்கெதிராக வேலையற்ற இளைஞர்களைத் திரட்டி தொழிற் சங்கங்கள் இயக்கங்கள் நடத்தவேண்டுமென்றகடமையை நிறைவேற்ற சிஐடியூ மாநிலக்குழு திட்டமிட்டது. 1986 சென்னையில் நடைபெற்ற மாவட்ட மாநாடு தொழிலாளர்கள் மட்டும் கலந்துகொண்ட மாநாடாக நடைபெற்றது. இந்த பலவீனம் பற்றி விவாதித்து தொழிற் சங்கங்கள் முன் கை எடுத்து உண்மையான வேலையற்றவர்களைத் திரட்டி கோவை, சேலம், திருச்சி, தென்ஆற்காடு மாவட்ட மாநாடுகள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

திருச்சி மாநாடு நமது நோக்கத்திற்கேற்ப, மாவட்ட மையத்தில் திட்டமிட்டு விரிவான பிரச்சார இயக்கங்களோடு, வேலையற்றவர்களைத் திரட்டிய மாநாடாக நடைபெற்றது. இப்படி செய்வது சாத்தியம் என்பதை திருச்சிமாநாடு ஊர்ஜிதம் செய்தது.

ஆனால் கோவை, சேலம் மாநாடுகள் தொழிலாளர்கள் மட்டும் கலந்து கொண்ட, அதுவும் பெயரளவிலான மாநாடாக தோல்வி கண்டது. தென்ஆற்காடு மாநாடு இன்னமும் நடைபெற வில்லை.

இந்த மிக முக்கியமான கடமையின் அரசியல் முக்கியத்துவத்தையும், அவை நிறைவேற்றப்படாததால் ஏற்படும் விளைவுகளையும், அபாயங்களையும் நம் தோழர்கள் உணரவில்லை.

உ) **உழைக்கும் பெண்கள்:** இந்தத் துறையில் முதல் முதலாக சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நிலைமையில் முறிப்பு ஏற்படுத்த, பம்பாய் சிஐடியூ மாநாட்டுக்கும், உழைக்கும் பெண்கள் மாநாட்டிற்கும் பிரதிநிதித் தோழர்கள் தேர்விலும், பிறகு மாநில ரீதியான பிரதிநிதிகள் கூட்டங்கள் இருமுறை நடத்தியும் கவனம் செலுத்தினோம். பம்பாய் மாநாடு முடிவுகள் ரிப்போர்ட் செய்ய மையத்திலிருந்து குறிப்பு தயாரித்து மாவட்ட சிஐடியூ கவுன்சில்களுக்கு அனுப்பப்பட்டது. சில மாவட்டங்களில் ரிப்போர்ட்டிங்கும் நடத்தப்பட்டுள்ளது.

மதுரையில் ஒருபெண் தோழரை உழைக்கும் பெண்கள் இயக்கத்திற்கென முழுநேர ஊழியராக ஒதுக்கியுள்ளார்கள். சென்னையில் மாவட்ட மாநாடுநடத்தி கமிட்டி அமைக்கப்பட்டது. ஆனால் அதை செயல்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. வேறு சில மாவட்டங்களிலும் கமிட்டிகள் உள்ளன. பெண்களை சங்க நிர்வாகத்தில் தேர்ந்தெடுப்பதில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தன்பாத்தில் நடந்த அனைத்திந்திய ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு விசேஷ முயற்சி எடுத்து ஐந்து பெண்களை அனுப்பி வைத்தோம். சிஐடியூ மாநில மாநாட்டையொட்டி ஒருநாள் மாநில மாநாடு நடத்துவது என முடிவு செய்துள்ளோம்.

இந்தக் காலத்தில் இன்ஷூரன்ஸ், ரயில்வே அரங்கங்களில் பெண் ஊழியர்களைத் திரட்ட விசேஷ முயற்சி நடைபெற்றது. இன்ஷூரன்ஸ் அரங்கில் இது நல்ல வெற்றி கண்டுள்ளது. அத்துடன், அனைத்திந்திய ஒருங்கிணைப்பு கமிட்டியின் இருமாத இதழுக்கு (உழைக்கும் பெண்களின் குரல்) சுமார் 200, வருட சந்தாக்களும்

அனுப்பியுள்ளனர்... ரயில்வேயில் டிஆர்இயூ முன்முயற்சி எடுத்து திருவனந்தபுரம்-பாலக்காடு டிவிஷன் உழைக்கும் பெண்கள் கன் வென்ஷன் வெற்றிகரமாக நடத்தி, கிளர்ச்சித் திட்டமும் தீட்டி யுள்ளனர். இருப்பினும் தொழிற்சங்க அரங்கில் இந்த கடமை பற்றிய உணர்வு பின் தங்கிய நிலைமையிலேயே உள்ளது.

ஊ) விவசாயிகளுக்கு ஆதரவு: விவசாயிகளுக்கு ஆதரவான இயக்கங்களின் முக்கியத்துவத்தை சேலம் மாநாட்டில் வலியுறுத்தி காட்டினோம். தொழிற்சங்க அரங்கில் இந்தக் கடமையை உணரச் செய்ய பயனுள்ள கருவியாக விவசாய இயக்க நிதி வசூலை பயன் படுத்த வலியுறுத்தினோம். நிலைமையில் பெரிய மாறுதல் ஏற்பட வில்லை. விவசாய இயக்க நிதி வசூலில் பல மாவட்டக் குழுக்கள் கவனம் செலுத்துவதில்லை. சென்னையைத் தவிர ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்தி முடிக்கும் இயக்கமாக இது மாற்றப்பட வில்லை. 1986-ல் ரு 40,000, 1987-ல் ரு 30,000, 88-ல் ரு 40,000 மட்டுமே விவசாய இயக்கத்திற்கு அளிக்க முடிந்துள்ளது. 1989 ஜனவரி 19 நிதியளிப்பின் போது மேலும் குறையும் நிலையும் உள்ளது.

நெய்குப்பையில் அரிஜனக் குடிசைகள் எரிக்கப்பட்ட பொழுது அதைக் கண்டித்தும், நிவாரணம் திரட்டுவதிலும்பெரும் பாலான சிஐடியூ சங்கங்கள் பரவலாக பங்கு கொண்டுள்ளன.

1987 செப்டம்பர், 1988 செப்டம்பர் விவசாயிகள் போராட்டத்தையொட்டி தொழிற்சங்க அரங்கில் குறிப்பிடத்தக்க பிரச்சாரம் நடைபெற்றுள்ளது. பெருமளவில் துண்டு பிரசுரங் கள், போஸ்டர்கள் வெளியிடப்பட்டுள்ளது. மறியலிலும் இரு முறையும் கணிசமான தொழிலாளர்களை பங்கேற்கச் செய்ய சிஐடியூ மாநிலக்குழு திட்டமிட்டது. நமது சங்கங்கள் அதை ஓரளவு நடைமுறைப்படுத்தவும் செய்துள்ளன.

சென்னையில்,சுற்றுப்புறப் பகுதிகளில் விவசாய சங்கத்தைக் கட்டுவதில், தொழிற்சங்கக் கட்சிக் கிளைகள் பிரச்சார இயக்கங் களில் ஈடுபட்டுள்ளன.. மதுரையில் உறுப்பினர் சேர்க்க தொழிற் சங்க அரங்கத் தோழர்களின் ஸ்குவார்டுகள் செல்லும் முறை உள் ளது.

தமிழகத்தில் வலுவான விவசாய இயக்கம் உருவாக வேண்டுமென்பதற்கு, தொழிலாளி வர்க்கத் தோழர்கள் பெரும் பணியாற்ற நல்ல வாய்ப்புகள் உள்ளன. இதன் அரசியல் அவ சியத்தை தொழிலாளர்களுக்கு உணர்த்தும் பணியைக் கட்சித் தோழர்கள் நிறைவேற்ற வேண்டும்.

எ) ஜாதி, மத, மொழி, இன உணர்வை தூண்டும் சக்திகளுக்கு எதிரான இயக்கங்கள் பற்றி அரசியலில் மிகப் பகுதியில் ஏற்கனவே குறிப்பிட்டு உள்ளோம். தமிழ்நாட்டின் அரசியல் சூழ்நிலையில் தொழிற்சங்க அரங்கில் விசேஷ கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சமீப காலத்தில் வலுப்பெற்றுள்ள ஜாதிய இயக்கங்கள் இன்னும் 'தொழிற்சங்க இயக்கத்தைப் பெருமளவில் தாக்கவில்லை என்றாலும், அந்த அபாயம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. சில இடங்களில் தொழிற்சாலை தேர்தல்களிலும்; அங்கொன்றும், இங் கொன்றுமாக பாரத் பந்த் போராட்ட காலத்திலும் ஜாதி-மத அமைப்புகள் சீர்குலைவு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

பஞ்சாப், அசாம், டார்ஜிலிங், திரிபுரா, பிரச்சனைகள் பற்றி நமது தொழிலாளர்களிடையே ஓரளவு பிரச்சாரமும், நிதி திரட்டுதலும், கண்டன கடித இயக்கமும் நடைபெற்றுள்ளது.

நமது தொழிற்சங்க அரங்க பத்திரிக்கைகளும் இதில் கவனம் செலுத்தி வந்துள்ளன.

ஏ) பிளவுவாத, ஜாதி-மதச் சக்திகளை எதிர்த்துப் போராடும் போதே சிறுபான்மை மக்கள், தாழ்த்தப்பட்டோரது பிரச்சனைகளில் விசேஷ கவனம் செலுத்தி செயல்பட வில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். சமீ பத்தில் திருச்சி பெல்லில், அரசியல் சட்டப்படியான உரிமைகளை கேட்டு, எஸ்.சி./எஸ்.டி. அசோஸியேஷன் போராடியபோது நமது சங்கம் சரியான நிலை எடுத்தது. இவர்களது நியாயமான சில பிரச்சனைகளில் 'தொழிற்சங்கங்கள் கவனம் செலுத்தாமல் போனால், பிற்போக்கு சக்திகள் அதைப் பயன்படுத்தி ஒற்று மையை குலைக்கும் ஆபத்தும் ஏற்படுகின்றது என்பதை நாம் உணர வேண்டும்.

ஸ்தாபனம்

28) டி யு சப்-கமிட்டியின் மூலம் தொழிற்சங்க அரங்கப் பணிகளுக்கு வழிகாட்டுவதற்கும், தொழிற்சங்க அரங்க கடமை களை நிறைவேற்றுவதற்கும் சேலம் மாநாடு முடிந்த பிறகு மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள் ளோம்.

மநிலத்தில் டி. யு' சப்கமிட்டி தவிர ரயில்வே, போக்கு வரத்து, மின் அரங்க மாநில பிராக்ஷன்கள் உள்ளன. கைத்தறி பிராக்ஷன் அமைக்கப்பட்டதோடு நிற்கின்றது. இதுதவிர மத்திய

நூ வர்க்க தொழிற்சங்க அரங்கங்களுக்கான 6-மாநில பிராக்ஷன் களும் உள்ளன.

டி. யு. சப் கமிட்டி 3 ஆண்டுகளில் 7 முறை கூடியுள்ளது. 1986ல் மூன்று முறையும், '87ல் இரண்டு முறையும், 88ல் இரண்டு முறையும் இந்தக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கூட்டங்களில், தொழிற்சங்க அரங்க கடமைகள், அந்த தீர்மானம் மாநில முழுவதும் ரிப்போர்ட் செய்தல், பஞ்சாலே அரங்கப் பிரச்சனைகள், மாநில மைய செயல்பாடுகள், மாவட்ட பொறுப்புகள் உள்ளாட்சி தொழிலாளர் ஒரு நாள் வேலைநிறுத்த பரிசிலனை பொதுத்துறை வேலைநிறுத்தம், பொதுத்துறை வேலைநிறுத்தத்தை ஒட்டிய மின் அரங்கப்பிரச்சனைகள், மின் அரங்கம், போக்குவரத்து சம்மேளன மாநாடுகள், அகில இந்திய மாநாட்டு தயாரிப்புகள், பாரத் பந்த் பரிசீலனை போன்றவை இந்தக்கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட முக்கிய பிரச்சனைகளாகும்.

மாவட்ட சிஐடியு செயல்பாடு பற்றியும், மாவட்டங்களுக்கு உதவி செய்ய பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட்டது எந்த அளவு அமுல்படுத்தப்பட்டது என்பது பற்றியும்,டி.யு.சப்கமிட்டி விவாதிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டபடி நிர்வாகிகள் கூட்டத்திற்கு மாற்றாக மாநில டி. யு. சப்கமிட்டி என்ற நிலை இல்லாவிட்டாலும், டி. யு. சப்கமிட்டி தொழிற்சங்க அரங்கத்திற்கு வழிகாட்டும் கமிட்டியாகவோ, தொழிலாளர்கள் மத்தியில் நமது அரசியலை கொண்டு செல்வதற்கு திட்டமிடும் கமிட்டியாகவோ இன்னும்செயல்படவில்லை. "அரங்க பிராக்ஷன்களின்டி.யு. சப்கமிட்டிகளின் வேலைக்கும், கட்சிக்கமிட்டிகளின் வேலைகளுக்கும் இடையில் இருக்க வேண்டிய வரையறைகள் தெளிவு படுத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது" என்று சேலம் மாநாட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதை நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டியுள்ளது.மாநில மட்டத்திலும், மாவட்டங்களிலும் டி.யு. சப் கமிட்டிகள், பிராக்ஷன்கள், கட்சி, அரசியல் பணிகளை முறைப்படுத்த வேண்டும்.

மாவட்டங்களில் டி.யு. சப் கமிட்டிகள் இருந்தாலும் அதன் செயல்பாடுகள் பற்றி முறையான, முழுமையான மதிப்பீடுகளை மாநில டி.யு. சப்-கமிட்டியோ, செயற்குழுவோ இன்னும் செய்யவில்லை.

அந்தந்த மாவட்டங்களிலுள்ள தொழிற்சங்க அரங்கப் பணிகளையும் சிஐடியு மாவட்டக் குழுக்களின் செயல்பாடுகளையும் கட்சி மாவட்டக் குழுக்கள் அவ்வப்போது பரிசீலனை செய்து வழி காட்ட வேண்டியது அவசியம்.

ஐ.டி.யு. அமைப்பு

29. நமது தோழர்கள் தலைமை தாங்கும் சங்கங்களில் மிகப் பெரும்பாலான சங்கங்கள் சிஐடியு-வில் இணைக்கப்பட்டுள்ளன. சென்னையில் "ஒரு சங்கம்" என்ற நிலையில் செயல்படும் சில சங்கங்களைத் தவிர, இதர சங்கங்கள் அனைத்தையும் இணைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. திட்டமிட்ட முயற்சி இல்லாத நிலையில் பல சங்கங்கள் இணைக்கப்படாமல் உள்ளன. முறையாக இணைக்கப்படாமல் சிஐடியு-வில் இணைக்கப்பட்டது என்று அறிவிப்பதும், பல ஆண்டுகளாக பதிவு செய்யப்படாமல் செயல்படுத்துவதும் கூட நடைபெறுகிறது. நமது தலைமையில் உள்ள தொழிலாளர்களின் உண்மையான எண்ணிக்கை பதிவு செய்யப்படாமல் போகும் ஆபத்தைப் பல முக்கிய தோழர்கள் உணரவில்லை.

தற்போது நமது மாநிலத்தில் இணைக்கப்பட்ட 320-க்கும் மேற்பட்ட சங்கங்களில் 1.5 லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இணைக்கப்படாத, நமது தலைமையிலுள்ள சங்கங்களில் சுமார் 30,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளில் உறுப்பினர் எண்ணிக்கையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சில குறிப்பிட்ட அரங்கங்களில் முன்னேற்றம் ஏற்பட்டும், ஒட்டு மொத்த நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

மாவட்டரீதியாக இந்த நிலைமை பற்றி பரிசீலித்து உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த திட்டமிட வேண்டும். இது பற்றி பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வந்தும், அன்றாட வேலையோடு முடிந்துவிடும் நிலையே நீடிக்கிறது.

சம்மேளனங்கள் :

30. மின்சாரம், ரயில்வே, மாநில சங்கமாகவும், போக்குவரத்து, கைத்தறி, பஞ்சாலை, பீடி சம்மேளனங்களாகவும், வீட்டுவசதி ஸ்தாபனம், டானரி, கூட்டுறவு, குடிநீர் வடிகால் வாரிய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழுக்களாகவும், சர்க்கரை, சிமெண்ட் சங்கங்களின் தொழில்வாரி கூட்டங்களாகவும், மாநில ரீதியான செயல்பாட்டில் இந்தக் காலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த அமைப்புகளின் செயல்பாட்டில் மேலும் அதிகமான முன்னேற்றம் காண்பது அவசியமாகும்.

சி ஐ டி யூ. மையம் - மாநிலக் குழு

31. தற்போது சி ஐ டி யூ மையத்தில் ஏ. கே. பத்மநாபன், கே. வைத்தியநாதன், எஸ். சந்திரசேகரன் ஆகியோர் முழுமை

யாக பணியாற்றுகின்றனர். இரண்டு அலுவலக உதவியாளர் களும் இருக்கிறார்கள். மையத்தின் பணிகள் மேலும் அதிகமாகி உள்ளன.

இந்த காலத்தில் நிர்வாகிகள் கூட்டம் 1986-ல் 5—முறை யும், 87-ல் 4—முறையும், 88-ல் 3—முறையும் நடைபெற்றுள்ளது. மாநிலக் குழு கூட்டம் 86-ல் 3—ம், 87-ல் 2—ம், 88-ல் 3—ம் நடைபெற்றுள்ளன.

மையத்தில் வேலைகளை மேலும் முறைப்படுத்துவதும் மாவட்டக் கமிட்டிகளுக்கு ஸ்தாபன வேலைகளிலும், தொழி பிரச்சனைகளிலும் மேலும் உதவுவதும் உத்திரவாதப்படுத்தப்பட வேண்டும்.

32. சங்க இணைப்புகள், ''ஈ'' பாரம் சமர்ப்பித்தல் போன்ற மிக முக்கியமான பிரச்சனைகளில் பெரும் பலவீனம் தொடர்ந்து நீடிக்கிறது. இன்று இந்தப்பிரச்சனையிலுள்ள பலவீனத்தைசுட்டிக் காட்ட ஒரே ஒரு உதாரணம் போதுமானது. அகில இந்திய ரீதியில் மத்திய அமைப்புகளின் உறுப்பினர் எண்ணிக்கையை நிர்ணயிக்க வெரிஃபிகேஷன் அறிவிக்கப்பட் டதையொட்டி நமது சங்கங்கள் கணக்கு முடித்து ''ஈ'' பார நகல்களை அனுப்புவதும், இணைப்புக் கட்டணம் அனுப்புவதும் முறைப்படுத்த எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகும் நிலைமையில் உத்திரவாதமான முன்னேற்றத்தை ஏற் படுத்த இயலவில்லை.

33. இணைக்கப்பட்ட சங்கங்களில் ''ஈ'' பாரம் சமர்ப்பித்துள்ள சங்கங்களின் விபரம்

ஆண்டு	சங்கங்கள்	உறுப்பினர்கள்
1986	178	1,09,319
1987	193	1,20,468
1988 (இதுவரை)	143	96,275

(அகில இந்திய மையத் தகவல்)

வெரிஃபிகேஷன் எவ்வளவு முக்கியமானது என்பதும் அதில் ஏற்படும் பலவீனம் என்ன விளைவுகளை உருவாக்கும் என் பதும் தெரிந்தபின்னரும் இதில் கவனம் செலுத்தாத கவலையற்ற போக்கு பல மாவட்டங்களில் நீடிக்கின்றது.

34. சி ஐ டி யு மையத்திற்கு செலுத்தவேண்டிய நிதி, விவசாய இயக்க நிதி, தொழில்வாரி கூட்டங்கள், சம்மேளனங்கள் எடுக்கும் முடிவுகள் அமுல்படுத்தப்படுவது ஆகியவற்றிலும் பல மாவட்டங்களில் பெரும் பலவீனங்கள் உள்ளன. கட்சியின் மாவட்டக் கமிட்டிகள் கவனித்து, நிலைமையில் மாறுதல் காண வேண்டியுள்ளது.

மாநாடுகள்

35. சி ஐ டி யு—வின் மாவட்ட மாநாடுகள் நடத்தி முடிக்கப்படுவதற்கு இடையே 1987 ஜூன் மாதத்தில் அகில இந்திய மாநாடு பம்பாயில் நடைபெற்றது. மாநிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொண்டனர். மொத்தம் 200 பிரதிநிதிகள், 2 பார்வையாளர்கள், இவர்களில் 21 பேர் பெண்கள்.

1988 ஏப்ரல் மாதத்தில் மாநில மாநாடு நாகர்கோவிலில் நடத்த முடிவு செய்யப்பட்டதை ஒத்திவைத்துள்ளோம்.

இந்தக் காலத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பு, போக்குவரத்து சம்மேளனம், கைநெசவுத் தொழிலாளர் சம்மேளனம், பஞ்சாலைத் தொழிலாளர் சம்மேளன அமைப்பு மாநாடு, டேனரி தொழிலாளர்களின் மாநில மாநாடு ஆகிய மாநிலமாநாடுகளும் நடைபெற்றுள்ளன.

பத்திரிகை-பிரசுரங்கள்

36. நமது பிரச்சாரப் பணியில் தீக்கதிர் மற்றும் தொழிற்சங்க மாத ஏடுகள் குறிப்பிடத்தக்க பணியாற்றுகின்றன. தீக்கதிர் விற்பனை தொழிலாளர்களிடையே மிக குறைவான பிரதிகள்தான் இருக்கிறது. சி.ஐ.டி.யூ. செய்தியின் விற்பனை 13,500 லிருந்து 15,000—ஆக உயர்ந்துள்ளது. இதிலும் சென்னை 6,500, மதுரை 1,100, கோவை 1,100, அண்ணா 750, தென்ஆற்காடு 800, பெரியார் 650, என விற்பனையாகின்றது. பல மாவட்டங்களில் பெயரளவிற்கான விற்பனைதான். இந்த விற்பனையை பெருக்கத் திட்டமிட்டு முயற்சித்தால் பெரும் வாய்ப்புண்டு.

போக்குவரத்து தொழிலாளி 16,000-லிருந்து 30,000-ஆக உயர்ந்துள்ளது. நமது உறுப்பினர் எண்ணிக்கையைவிட பிரதிகள் கூடுதல் விற்பனையாகின்றது.

மின்கதிர் 5000 பிரதிகளும், தொழிலரசு 1500 பிரதிகளும் விற்பனையாகின்றது.

மேலும் இந்தக் காலத்தில், பம்பாய் மாநாட்டு அறிக்கை தமிழில் 1000 பிரதிகள், விலைவாசி புள்ளி பிரசுரம் 8000, சிஐடியூ செய்தி சார்பில் சிறப்பு மலர் 5000 பிரதிகள்—ஆகிய பிரசுரங்கள்

சிஐடியூ மாநிலக் குழுவின் சார்பிலும், தொழிலுறவு மசோதா பற்றி (30,000 பிரதிகள்) சென்னை மாவட்டக்குழுவின் சார்பிலும், ஜவுளிக் கொள்கையை மனுக்கள் குழு சிபாரிசு பற்றி (7500 பிரதிகள்) கைத்தறி சம்மேளனத்தின் சார்பிலும் வெளியிடப்பட்டன.

தொழிலாளர்களிடையே பத்திரிக்கை-பிரசுர விற்பனையை மேலும் பல மடங்கு அதிகப்படுத்துவதன் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து இதில் முன்னேற்றம் காண வேண்டும்.

கட்சி உறுப்பினர் சேர்ப்பு

37. தொழிற்சங்க அரங்கில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை நிலைமை கவலை தரக்கூடியதாக இருக்கின்றது. தொழில்துறையிலுள்ள கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை, அந்தந்த மாவட்டத்தின் மொத்த கட்சி உறுப்பினர் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்ந்தால் 12 சதவிகிதத்திலிருந்து 45 சதவிகிதம் வரை உள்ளது. 1985 ம் ஆண்டுடன் இன்றைய சதவிகிதத்தை ஒப்பிட்டால், பெரும்பாலான மாவட்டங்களில் தேக்க நிலையும், சில மாவட்டங்களில் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. ஒரு மாவட்டத்தில் தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை 60 சதம் கூடியுள்ளபோது கட்சி உறுப்பினர் எண்ணிக்கை குறைந்துள்ளது. கட்சி உறுப்பினர் எண்ணிக்கையை அந்தந்த சங்க உறுப்பினர் எண்ணிக்கையுடனோ அல்லது மொத்த தொழிலாளர்கள் எண்ணிக்கையுடனோ ஒப்பிட்டுப்பார்த்தால், மிகவும் சிறிய அளவிலேயே உள்ளது. அத்துடன், தொழிற்சங்க அரங்க கிளைகளுக்கும், தொழிற்சங்க ஸ்தாபன இயக்க வேலைகளுக்கும் இருக்க வேண்டிய இணைப்பு பலவீனமாகவே உள்ளது.

இந்த அரங்கில் நமது பெரும் கடமையாக பணிக்கப்பட்டுள்ள கட்சி உறுப்பினர் சேர்ப்பு வேலையை உணர்வுபூர்வமாகவோ, திட்டமிட்ட அடிப்படையிலோ செய்யப்படவில்லை என்றும், கவனம் செலுத்தப்படவில்லை என்றும் பெரும்பாலான மாவட்ட கட்சி மாநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்த பெரும்பலவீனம் நீடிக்குமேயானால், கட்சி விரும்பும் முன்னேற்றம் ஏற்படாது என்பதோடல்லாமல், எதிர்காலத்தில் ஏற்படும் தாக்குதல்களை சந்தித்து இயக்கத்தை பாதுகாப்பதிலும் சிக்கல்கள் ஏற்படும்.

ஆகவே தொழிற்சங்க அரங்கில் கட்சி உறுப்பினர் சேர்ப்புக்கு விசேஷ கவனம் செலுத்துவது என்பது மட்டுமல்லாது, உணர்வு பூர்வமான திட்டமிடுவதும் தேவை.

38. இறுதியாக, கடந்த மூன்றாண்டு காலத்திய நமது தொழிற்சங்க அரங்க செயல்பாட்டின், இந்தப் பரிசீலனையில் அடங்கியுள்ள முன்னேற்றங்களையும், பலவீனங்களையும் தொகுத்துப்பார்ப்போம்.

முன்னேற்றங்கள்

1) சிஐடியூ-வின் பொதுவான செல்வாக்கும்; உறுதியுடனும், ஒற்றுமைக்காகவும் போராடுகின்ற ஸ்தாபனம் என்ற அந்தஸ்தும், அனைத்துப்பகுதி தொழிலாளர்கள், ஊழியர்கள் மத்தியிலும் பரவலாக வளர்ந்துள்ளது.

நமது போக்குவரத்து ஊழியர் சம்மேளனம் ஊதிய உயர்வு, போனஸ், காஷுவல் தொழிலாளர் கோரிக்கைகள், சம்பந்தமாக முன் முயற்சியுடன் நடத்திய போராட்டங்கள், கடும் அடக்கு முறைக்கு மத்தியிலும், தற்காப்பு போராட்டம் நடத்திக் கொண்டே தொழிலாளர் ஒற்றுமைக்காக நமது மின் ஊழியர் மத்தியஅமைப்பு நடத்திய முயற்சிகளும், போராட்டங்களும், ஆலை மூடல்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களில் நமது தொடர்ச்சியான பங்கு, அரசின் கொள்கைகளுக்கு எதிராக நாம் நடத்திய போராட்டங்கள், பரவலாக நடத்தப்பட்டுள்ள ஆதரவு இயக்கங்கள், கைத்தறி, ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர்கள் போன்றவர்களிடையே நடைபெற்றுள்ள தொடர்ச்சியான முனைப்பான நடவடிக்கைகள் இவை அனைத்தும் நமது செல்வாக்கை பரவலாக்குவதற்கு அஸ்திவாரமாக அமைந்துள்ளன.

2) கேந்திரத் தொழிலான போக்குவரத்தில், அரசுப் போக்குவரத்து கழகத் தொழிலாளர்களிடையே நாம் அடைந்துள்ள முன்னேற்றம், இக்காலத்தில் விசேஷகவனத்திற்குரியதாகும். பொருத்தமான பிரச்சனைகளைத் தேர்ந்தெடுத்து, அதோடு காஷுவல் தொழிலாளர் பிரச்சனையையும் இணைத்து இயக்கங்கள் நடத்தப்பட்டதும், அந்த இயக்கங்களை கட்சி உறுப்பினர்கள், தொழிற்சங்கமுன்னணியினர் மூலம் வழிநடத்திசென்றதும், கட்சிப்பணியில் முன்னேற்றம் காண்பதன் மூலம், ஸ்தாபன வளர்ச்சிக்கு வழிகோல முடியும் என்பதற்கும் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றம் ஓர் எடுத்துக் காட்டாகும். மாநிலத்தில் பிரதேசவெறியும், மொழி வெறியும் தூண்டிவிடப்படும் நிலையில், அனைத்திந்திய உணர்வை வலுப்படுத்தும் ஒரு சீரிய முயற்சியாக பீகார் மாநிலத்தில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமாக போக்குவரத்து தொழிலாளர்கள் உணர்வுபூர்வமாக ரூ. 20,003.55 வசூலித்து அனுப்பியுள்ளது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

3) ரயில்வேயில் செக்டேரியன் போக்குகளைத் திருத்தும் நோக்கோடு செயல்படத்துவங்கியதன் மூலம் நமது சங்க உறுப்பினர் எண்ணிக்கையில் 3000 உயர்வு ஏற்பட்டுள்ளது. இதில் 1500 சென்னை சுற்றுப்புறங்களில்தான் என்றாலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

4) மின்சாரத் துறையில் அரசாங்கத்தின் மூர்க்கத்தனமான அடக்குமுறைகளையும் தாங்கி நமது அமைப்பை பாதுகாக்க முடிந்துள்ளது.

5) நாம் நடத்திய கிளர்ச்சிகளையொட்டி மாநாடு முழுவதும் நமது சங்கங்களின், மாவட்ட குழுக்கள் சார்பில் துண்டு பிரசுரங்கள், போஸ்டர்கள் வெளியிடுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நமது மாத இதழ்களின் விற்பனை வாய்ப்புக்கு ஏற்ப இல்லாவிட்டாலும் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

6) சிஐடியூ மையத்தின் செயற்பாட்டிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து சுற்றறிக்கைகள், கடிதப் போக்குவரத்துக்கள் மூலம் மாவட்டக் குழுக்கள் மற்றும் சங்கங்களுடனும் தொடர்பு, அகில இந்திய மையத்திற்கு அறிக்கைகள், அரசு மட்டத்திற்கு பிரச்சனைகள் கொண்டு செல்வது, அரசாங்க கமிட்டிகளின் செயல்பாடு, தொழிலாளர் கூட்டங்கள். நிர்வாகக்குழு கூட்டங்களை தயாரிப்புகளுடன் நடத்துவது, பத்திரிகை அறிக்கைகள், இதரத் தொழிற்சங்க அமைப்புகளுடன் நெருக்கமான தொடர்புகள், கூட்டு இயக்க முயற்சிகள் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

39. இந்த முன்னேற்றங்களைக் காணக்கூடிய அதே நேரத்தில் இக்காலத்தின் செயல்பாடுகளில் நமக்கு இருந்துவரும் பலவீனங்களை நாம் குறைத்து மதிப்பிடலாகாது.

1) நமக்கு கிடைத்த பரவலான செல்வாக்கை ஸ்தாபன பலமாக மாற்றுவதில் பெரும் பலவீனம் உள்ளது.
சிஐடியூ வின் மாநில உறுப்பினர் எண்ணிக்கை பிரதான சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை உயராமல் தேங்கி இருப்பது அதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

2) நமது கட்சியின் அஸ்திவாரமான வர்க்க அரங்கத்தில். நாம் ஒரு புறக்கணிக்க முடியாத சக்தியாக இன்னும் வளரவில்லை. முன்கையெடுத்து தீவிரமான கூட்டுப் போராட்டங்களை கட்டவிழ்த்துவிட நம்மால் முடிகிறது. ஆனால் அவை நடுவில் சீர்குலைப்பதிலிருந்து, சீர்திருத்த

தலைமைகளை தடுக்கும் சக்திவாய்ந்த ஒரு சக்தியாக இன்னும் வளரவில்லை. இந்த நிலையிலும் ஆசிரியர்— ஊழியர்களின் சமீபத்திய போராட்டத்திற்காதர மாநில ரீதியான ஒருநாள் பொது வேலைநிறுத்தத்தி ஒன்றுபடுத்த முடியவில்லை. நமது தனியான மறியலு நிறுத்த வேண்டிய நிலை

3. அரசியல் நடவடிக்கைகளில் நமது சி.ஐ டி. யூ. உறுப்பின களின் அனைத்து பகுதியையும் ஈடுபடுத்த முடியாத பல வீனம்.

4. மத்தியக் கமிட்டி தீர்மானத்தினடிப்படையில் போராட்ட பரிசீலனை நடத்தாமலிருக்கும் பலவீனம் தொடர்கின்றது.

5. கேந்திரத் தொழில்களில், சில பிரிவுகளில் சிறு முன்னேற் றம் கண்டாலும், அந்தத் துறையில் இன்னமும் அடிப் படையான உடைப்பு ஏற்படுத்தாத நிலைமை.

6. மொழி, இனம், ஜாதி, போன்ற பிரிவினை சக்திகளை எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டத்தில், தொழிற் சங்கங்களின் தலையீடு விஷயத்தில் முன்னேற்றம் இல்லாத நிலை.

7. நமது வர்க்கத்தின் உணர்வை சோசலிச உணர்வு மட்டத் திற்கு உயர்த்துவதற்கு பிரச்சாரத்துறையில் முறிப்பு ஏற்படுத்துவதற்கு கவனம் செலுத்தாத நிலை. இரு பிரசு ரங்கள் வெளியிடுவதென்று எடுக்கப்பட்ட முடிவும் அமு லாகவில்லை.

8. மாவட்ட சி. ஐ. டி. யு. அமைப்புகளை தொடர்ச்சியாக இயங்க வைப்பதிலும், அவர்கள் மூலம் இணைக்கப்பட்ட சங்கங்களை இயங்க வைப்பதிலும் முன்னேற்றம் இல்லாத நிலை. சங்கங்களிடமிருந்து "ஈ" பாரம் சி. ஐ. டி. யு மையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு மாநில மையத்தில் இருந்து கடும் முயற்சிகள் நடத்தியும், போதிய அபிவி ருத்தி இல்லாதது இதற்கு உதாரணமாகும்.

9. தொழிற்சங்க ஜனநாயகம் பெரியளவில்தொடர்ந்துமீறப் பட்டுவருகின்றது.நான்கு ஆண்டுகள்வரை பேரவை நடத் தப்படாமலிருப்பது, தொழிற்சங்கம் நடத்தும் போராட் டத்தை கட்சி தலைவர்கள் தலையிட்டு நிறுத்துவது போன்ற நிலை ஏற்படுகிறது. முடிவுகளை உருவாக்குவதில் உறுப்பி னர்களுக்கு பங்கு என்பது இல்லை என்பதே பொதுவான நிலை.

10. சேலம் மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட இரண்டு திரிபுகள் கட்சியின் வழிகாட்டுதலுக்கு உட்படாமல் சங்கங்களை நடத்துவது அல்லது கட்சியின் கிளை போல் வெகுஜன ஸ்தாபனத்தை நடத்துவது தொடர்கின்றது. மாவட்டங்களில் தொழிற்சங்க அரங்கப் பணிகளை கண்காணிப்பதிலும், வழிகாட்டுவதிலும் பலவீனங்கள் தொடர்கின்றன.

40. இந்த் பலவீனங்களைக் களைவதற்கான போராட்டத்தில் சி.ஐ.டி.யு. மையம் நமது மாநில டி.யு. சப்-கமிட்டியின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு குறிப்பிட்ட திசையில் செயல்பட வேண்டியுள்ளது. அதாவது, சிஐடியு மையம் அனைத்து தொழில்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கும் வழிகாட்டுவதும், அனைத்து மாவட்ட குழுக்களையும் செயல்படுத்துவதும் செய்ய வேண்டும். சிஐடியு மாவட்ட குழு கூட்டத்தை நடத்தி வைக்கச் செல்லும் சி.ஐ.டி.யு நிர்வாகி, அதில் எழுந்துள்ள பிரச்சனைகள் பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர்களிடம் ரிப்போர்ட் செய்வதுடன், சிஐடியு மாநில மையத்திற்கும் அந்த பிரச்சனைகள் பற்றி ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். அதை வைத்து சிஐடியு மையமும், கட்சி மையமும் தலையிட வேண்டிய பிரச்சனைகள் இருந்தால் தலையிட வேண்டும்.

அத்துடன் நிற்காமல், அரசியல்-ஸ்தாபன - கொள்கை வேலைகளை செய்யும் மையமாக சி ஐ டி யூ மையம் செயல்பட வேண்டும். இந்த அடிப்படையில் சி ஐ டி யூ மையம் செயல்படவில்லை என்ற பலவீனம் உள்ளது.

இன்றைய இந்த பலவீனங்களைப் போக்குவதற்காக, கட்சியின் மாநில செயற்குழு முன் முயற்சி எடுப்பதிலும் பலவீனம் உள்ளது.

தோழர்களே,

நாம் குறிப்பிட்ட பலவீனங்கள் போக்கக் கூடியவையாகும். நாம் இவற்றை நமது உணர்வின் பகுதியாக மாற்றி, அவற்றைப்போக்குவதற்கு போராடுவோமேயானால், நிச்சயமாக அவற்றை போக்க முடியும். இந்த அரங்கில் அதற்கு வாய்ப்பு பெரிய அளவில் எழுந்துள்ள காலம் இது.

கடமைகள்

41. இந்த பின்னணியில் நமது செயல்பாட்டில் ஒரு அடிப்படையான மாறுதல் ஏற்படுத்துவதற்கு கீழ்க்காணும் கடமைகளை நாம் நிறைவேற்ற வேண்டும்:

1. மாநில-மாவட்ட தொழிற்சங்க மையங்களை மேலும் பலப்படுத்துவதற்கான விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. தொழிற்சங்க அரங்கப் பிரச்சனைகளையும் நமது செயல்பாடுகளையும் அவ்வப்போது, அனைத்து மட்டங்களிலும் கட்சி கமிட்டிகள் பரிசிலனை செய்வது ஒரு நடைமுறையாக மாற்றப்பட வேண்டும்.

3. சி ஐ டி யூ உறுப்பினர் எண்ணிக்கையில் தற்போது நிலவும் தேக்கத்தை உடைத்து எண்ணிக்கையை கணிசமாக உயர்த்துவதற்கு, திட்டமிட்டு, விசேஷ சந்தா சேர்ப்பு இயக்கம் நடத்துவது, டிபார்ட்மெண்ட் நடவடிக்கைகள், கேட் கூட்டங்கள், போன்றவை சங்கங்களின் அன்றாட நடவடிக்கையாக மாற்றுவது, தொழிற்சங்க ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்துவது.

4. கேந்திரத் தொழில்களில் ஒரு உடைப்பு ஏற்படுத்தி முன்னேறுவது- அதற்கு தேவையான ஊழியர்களை ஒதுக்குவது.

5. அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளிகளை விசேஷ கவனம் செலுத்தி திரட்டுவது.

6. "பிரச்சார" பிரசுரங்கள் திட்டமிட்டு தயார் செய்து தொழிலாளிகள் மத்தியில் பரவலாக விற்பது.

7. இந்த அரங்கில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு தனி வகுப்புகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

8. "சிஐடியூ செய்தி" அடுத்த ஓராண்டில் 20,000—ஆக உயர்த்துவது, அரங்கப் பத்திரிக்கைகள் அனைத்தின் விற்பனையிலும் முன்னேற்றம் காண்பது.

9. தொழிலாளர்கள் மத்தியில் தீக்கதிர் விற்பனையை உயர்த்துவதற்கு திட்டமிட்டு செயல்படுவது.

10. "முன்னுரிமை" கடமைகளை முழு அளவில் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டு செயல்படுவது.

11. விவசாய இயக்கத்திற்கான தொழிலாளர்களிடம் நடத்தப்படும் வசூல் அனைத்து சிஐடியூ உறுப்பினர்களிடமும் வசூல் செய்வது.

12. இந்த அரங்கில் கட்சி உறுப்பினர் சேர்ப்பு கணிசமாக உயர்த்துவதற்கு திட்டமிட்டு, தனி கவனம்செலுத்துவது.

இந்த கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம், இன்றைய தேக்கம் உடைவது மட்டுமல்ல, நமது மாநிலத்தில் புரட்சிகரமான இயக்கம் விரிவடைவதற்கு வழிகோலவும் முடியும்.

விவசாயிகள் அரங்கம்

1. நாற்பதாண்டு காலமாக இந்தியாவில் முதலாளித்துவத்தைக் கட்ட எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள நெருக்கடி கிராமப் புறங்களை வலுவாகத் தாக்கியுள்ளது என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

2. தமிழக கிராமப்புறங்களில் நிலைமை மேலும் மேலும் மோசமாகிக்கொண்டு வருகிறது. விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றியும், உருப்படியான கூலியின்றியும் வறுமையின் விளிம்பிற்கே தள்ளப்பட்டுள்ளனர். இதன் விளைவாகவே மற்றெல்லா மாநிலங்களையும்விட வறுமைக்கோட்டிற்குகீழுள்ளோர் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகமாக (39.6%) உள்ளதைப் பார்க்க முடியும்.

3. கிராமப்புற ஏழை மக்களின் உண்மைக் கூலி வேகமாகக் குறைவதும், அவர்களுடைய வாங்கும் சக்தி பெருமளவு குறைந்திருப்பதும் தமிழக கிராம மக்களின் நிலையை பெருமளவு மோசமாக்கியுள்ளது.

4. உருப்படியான நிலச்சீர் திருத்தம் செய்யப்படாத நிலையில் தமிழகத்தில் நில உடமைகளில் பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. கிராமப்புற குடும்பங்களில் 10 சதவீத உயர்மட்டக் குடும்பங்கள் கையில் 60 சதவீத நிலங்கள் இருந்ததாக 1950 சர்வே கூறுகிறது. இதே நேரத்தில் அடிமட்டத்தில் வாழ்ந்த 60 சதவீத குடும்பங்களிடம் 4.40 சதவீத நிலங்களே இருந்தன என்றும் 1950-ல் கூறப்பட்டது. நிலஉறவு குறித்து ஆய்வு நடத்திய பேராசிரியர் சி. டி. குரியன், 1975 லும், நில உடமை விஷயத்தில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை என்று கூறுகிறார். 1975-க்குப் பின் செய்யப்பட்ட ஆய்வு விவரங்கள் நம்மிடம் இல்லை என்றாலும் நில உடமையில் இக்காலத்தில் பெரும் மாற்றம் ஏற்பட வாய்ப்பு ஏதும் இல்லை என்பது தெளிவு. (அதற்குப் பின் நில உச்சவரம்பு சட்டம் ஏதும் மாற்றமில்லை. இருக்கும் சட்டங்களும் பெரும் மாற்றம் உண்டாக்கும் அளவு அமுலாக்கப்படவில்லை.) அரசாங்கம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கென அமுலாக்கிய பல்வேறு திட்டங்கள், ஊக்க தொகைகள், மானியங்கள், பசுமைப் புரட்சி திட்டங்கள் ஆகியவை பெரும்பாலும், நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகளுக்கே பலன் தருவதாய் அமைந்தன. இவைகள் ஓரளவு உணவு உற்பத்தியை கூட்டுவதற்கு உதவினாலும் கிராமப்புறத்தில் பல்வேறு வர்க்கங்களுக்கு இடையே

வாழ்நிலை இடைவெளியை மேலும் அதிகமாக்கவே உதவி யுள்ளது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

15. விளைபொருட்களுக்கு நியாயமற்ற விலை நிர்ணயம், இடு பொருட்களின் விலை செங்குத்தாக உயர்தல் ஆகியவை தொடர்ந்து விவசாயிகளை வாட்டுகிறது. இது தவிர. பெரும் வெள்ளம், கடுமையான வறட்சி, புயல் ஆகியவை மாறி மாறி தாக்குவதன் விளைவாக சிறுவிவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பணக்கார விவசாயிகள் உள்ளிட்ட சகலபகுதி விவசாயிகளும் சொல்லொணாத்துயரத்துக்கு உள்ளாகின்ற னர். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் சேதம் ஏற்படும் நிலையிலும் இவர்களுக்கு இத்தகைய காலங்களில்நிவாரணம் வழங்க அரசு போதிய நடவடிக்கை எதுவும் எடுக்காததன் விளைவாக இவர்களது வாழ்க்கை நிச்சயமற்ற சூன்ய நிலைக்கு தள்ளப்படுகிறது.

16. 1981 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி தமிழக மக்கள் தொகை சுமார் 70 சதவீதம் பேர் (3.5 கோடி) கிராமப் புறங்களில் வசிப்பதாக கூறுகிறது. இவர்களில் குறைந்த பட்சம் 60 சதமானப் பேர் கூலித்தொழிலாளராகவும், சிறு விவசாயியாகவும், குத்தகை விவசாயியாகவும் உள்ளனர் எனக் கணக்கிட்டாலும், இந்த வகையில் எண்ணிக்கை ஏறத்தாழ 2 கோடிப் பேர் ஆகிறது.

7. நம்முடைய 12 வது காங்கிரசும், சேலம் மாநில மாநாடும் கிராமப்புற பாதிக்கப்பட்ட மக்களை திரட்ட நாம் எந்த திசை வழியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வழிகாட்டிஇருக்கிறதோ, அவைகள்மீது நாம் எடுத்த நடவடிக்கைகள், நடத்திய இயக்கங்கள், போராட்டங்கள் பற்றி பரிசிலிப்போம்.

8. அகில இந்திய இயக்கங்கள்:

12-வது கட்சி காங்கிரஸ் 1986-ம் ஆண்டு வி. ச. வின் பொன்விழா ஆண்டையொட்டி மலர் வெளியிடவும், முக்கிய போராட்டங்கள் குறித்து பிரசுரங்கள் வெளியிட வும், விவசாய புரட்சி இயக்கத்திற்கு விவசாயிகளை திரட்டவும், அரசின் கேடுகெட்ட கொள்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை நடத்துமாறும், கொடி ஏற்றுவது. பொதுக் கூட்டங்கள் நடத்துவது ஆகியவைகளை சிறப் பாக செய்ய அறைகூவல் விடுத்திருந்தது. இவற்றை யொட்டி பிரச்சாரம், கொடியேற்று விழா, சில பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

9. மறியல் இயக்கம்

1987. செப்டம்பர் 7-முதல் 13-முடிய நிலச் சீர்திருத்த விவசாய விளைபொருள்களுக்குக் கட்டுப்படியான விலை, வி சாயத் தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கூலிச்சட்ட வேண்டும் என்பது உட்பட சில மாநில கோரிக்கைகளுடன் 1 அம்ச கோரிக்கைகளுக்கான அகில இந்திய அளவில் நடைபெற் மறியல் போராட்டத்தின் பகுதியாக தமிழகத்திலும் நடத்தினே இப்போராட்டத்தை சக்தியாக நடத்த ஸ்தாபன ஏற்பாடுக விரிவாகச் செய்யப்பட்டது. இம்மறியல் இயக்கத்தை விளக் 65,000 பிரசுரம் 25 காசில் வெளியிட்டு விற்கப்பட்டது. தமி நாட்டில் நம் ஸ்தாபனம், இயக்கம் இல்லாத ஆயிரக்கணக்கா கிராமங்களில் இக்கோரிக்கைகளை விளக்கி பிரச்சாரம் செய்ய பட்டது. 4,71,950 துண்டு பிரசுரங்களும். 29, 350 போஸ்ட களும் வெளியிடப்பட்டன. 342-ஸ்குவார்டுகள் மூலமும், 2 பொதுக்கூட்டங்கள் மூலமும் பிரச்சாரம் செய்யப்பட்டது. 4 பேரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 8,325 ஊழியர்களிட மறியலை விளக்கி பேசப்பட்டது. மறியலில் நாம் திட்டமிட் தற்கு (29,500) மேலாக 30,764 பேர்கள் கைதானார்க இதில் 3,847 பெண்களும், 406 குழந்தைகளும் இருந்த குறிப்பிடத்தக்கதாகும். இம்மறியல் இயக்கத்திற்கு சி.ஐ.டி.யூ தொழிற்சங்கங்கள்,மாதர்,வாலிபர் சங்கங்கள் ஆதரவளித்ததுட நேரடியாக மறியலில் பங்கு கொண்டார்கள். மாநிலம் மு வதும் கட்சி அணிகள் முழுமையாக இந்த இயக்க வெற்றிகரமாக நடக்க உதவியது.

10. 1988 செப்டம்பர் 12 முதல் 16 வரை மறியல்

இடதுசாரி கட்சிகளின் தலைமையிலுள்ள விச., விதொ அமைப்புக்களின் சார்பில் அகில இந்திய ரீதியில் இந்த மறிய போராட்டம் நடைபெற்றது. தமிழகத்திலுள்ள இடதுசாரி கட் களான சிபிஐ(எம்),சிபிஐ, தலைமையிலுள்ள விச,விதொச சார்பி கூட்டுக்குழு அமைத்து இந்த இயக்கத்திற்கு தாயாரிப்பு வேலைக செய்யப்பட்டது. மாநில, மாவட்ட அளவில் கூட்டுக் குழுக்க அமைக்கப்பட்டது. 2000பேர்கள் கலந்து கொண்ட மாநில மாந டும், சுமார் 12,000 பேர்கள் வரை கலந்துகொண்ட 36 பிராந்தி மாநாடுகளும்நடத்தப்பட்டது.சுமார் 25லட்சம் துண்டுப்பிரசுரம் 15,000-க்கும் மேற்பட்ட போஸ்டர்கள், 520க்கும் மேற்பட் ஸ்குவார்டுகள் மூலம் தெருமுனைப் பிரச்சாரம்,100க்கும் மேற்பட் பொதுக்கூட்டங்கள் மூலம் இம்மறியல் விளக்க பிரச்சாரம் 1000 கிராமங்களில் நடத்தப்பட்டது. நாம் மட்டும் 50,000 மறிய

கோரிக்கைவிளக்க பிரசுரம் வெளியிட்டோம். CPI 25 ஆயிரம்வெளியிட்டார்கள். இந்தஇயக்கத்தை சிபிஐ தலைமையிலுள்ளவர்களுடன் சேர்ந்து நடத்துவதில் ஏற்பட்ட சில சிரமங்களையும், இடையூறுகளையும் சமாளித்து முன் முயற்சி எடுத்து நமது தோழர்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். இம்மறியலில் 330 மையங்களில் நமது சார்பில் சுமார் 47,000 பேர்களும், சிபிஐ சார்பில் 25,000 பேர்களும் கலந்து கொண்டனர். இதில் 14,000க்கும் மேற்பட்ட பெண்களும் 500க்கும் மேற்பட்ட குழந்தைகளும் கைதாயினர்கள்.

தமிழகத்தில் பரவலாக மழை இருந்தும், கட்சி மாநாடுகள், மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்கு மத்தியிலும், திருமணம் போன்ற விசேஷங்கள் இருந்த போதிலும் இவ்வளவு பேர் மறியலில் பங்கெடுத்துக் கொண்டது இயக்கத்தின் வளர்ச்சியையும், நமக்குள்ள வாய்ப்பையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்த மறியலில் இதர சகோதர தொழிற்சங்க, மாதர், வாலிபர் அமைப்புகளும் கணிசமான அளவு மறியலில் கலந்துகொண்டதாலேயே நமது எண்ணிக்கை இந்த அளவு உயர்ந்தது. இந்த போராட்டத்தின் பகுதியாக தென்ஆற்காடு மாவட்டம் செப்ளாநத்தம் கிராமத்தில் பினாமி நிலத்திலும், காமராஜர் மாவட்டம் கான்சாபுரம் கிராமத்தில் தரிசு நிலத்திலும் இறங்கியது அப்பகுதியில் இயக்க வளர்ச்சிக்கு உதவியது.

11. சமாதான இயக்கம்:

அ இ வி ச வின் அறைகூவலுக்கிணங்க தமிழ் நாட்டில் குறிப்பாக தஞ்சை, செங்கை மற்றும் சில மாவட்டங்களில் பொதுக்கூட்டம், ஹால் கூட்டம், பேரவைக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த இயக்கத்தில் விவசாய மக்களை திரட்டுவதிலுள்ள பெரும் பலஹீனம் நீடிக்கிறது.

12. 1987 டிசம்பர் டில்லி பேரணி.

இப்பேரணிக்கு முன்பு நவம்பர் மாதம் தமிழகத்தில் இடதுசாரி வெகுஜன அமைப்புகள் சார்பில் நடத்தப்பட்ட பிரச்சார பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்வதில் வி ச, வி தொ ச அமைப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவு செயல்பட்டன.

13. 1988 மார்ச் 15 - பாரத் பந்த்

இந்த இயக்கத்தில் இதுவரை இல்லாத அளவு கிராமப்புற விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பங்கெடுத்துக் கொண்டு கிராமப்புறங்களில் பந்த் வெற்றிகரமாக நடைபெற

செய்தனர். தஞ்சை மற்றும் பல மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து பந்தில் கலந்துகொண்டனர்.

மாநில இயக்கங்கள்

14. வறட்சி நிவாரண இயக்கம்

1986-87 இரு ஆண்டுகளில் தமிழகத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருந்தது. 23-மாவட்டங்களில் 12மாவட்டங்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்த நிலையில் மத்திய-மாநில அரசுகள் உரிய நிவாரண வேலைகளைக்கூட செய்யவில்லை. மேலும் விவசாயிகளின் கூட்டுறவு கடனுக்காகவும், நிலவரி பாக்கிக்காகவும் ஜப்தி நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டது. இத்தகைய நிலையை எதிர்த்து உடனடியாக தமிழகம் முழுவதையும் வறட்சி மாநிலமாக அறிவித்து நிவாரண வேலைகளை செய்ய வேண்டும், கூட்டுறவு கடன் பிரச்சனைக்கு முனுஆதிக் குழுவின் பரிந்துரைப் படி தீர்வு காண வேண்டும், வி தொ-க்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி நாம் தனியாக தீவிரப்பிரச்சாரம் செய்தோம். உண்ணுவிரதம், தர்ணு நடத்தினோம். நெல்லை, புதுக்கோட்டை, மாவட்டங்களில் வறட்சி நிவாரண மாநாடுகள் நடத்தினோம். 16-6-86ல் மாநிலம் முழுவதும் மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்தோம். அதே தேதியில் உழவர் உழைப்பாளர் கட்சி, ஜனதா, நமது கழகம், சி பி ஐ, வி ச ஆகியவைகளும் மறியல் செய்ய முடிவு செய்திருந்தன. நாம் கூட்டு இயக்கமாக முடிவு செய்து சிபிஐ-யுடன் பேசினோம். ஆனால் சி பி ஐ அகில இந்திய ரீதியில் தொடர் மறியல் நடத்துவதால் கூட்டு இயக்கத்துக்கு வர மறுத்துவிட்டனர். மற்ற 3-கட்சிகளும் எம் ஜி ஆர் உடன் பேச்சு வார்த்தை நடத்தி மறியல் போராட்டத்தை கைவிட்டனர். இறுதியில் நாம் தனியாக நடத்திய மறியலில் 16,000 பேர்கள்வரை பங்கு கொண்டு கைதுசெய்யப்பட்டார்கள். இந்த இயக்கம் அரசை வறட்சிநிவாரண வேலை துரிதமாக செய்ய வைக்க உதவியது. எனினும் இப்பிரச்னைக்கு நிரந்தரப் பரிகாரம் காணப்படவில்லை. தொடர்ந்து போராட வேண்டும்.

15. கடன் நிவாரணம்

கடன் பிரச்னையைத் தீர்த்திட முன்வராமல் தமிழக அரசு ஜப்தி போன்ற கடும் நடவடிக்கையில் இறங்கியபோது நாம் எதிர்ப்பு இயக்கம் நடத்தினோம். சில இடங்களில் ஜப்தியை

தடுத்து நிறுத்த நம்மால் முடிந்தது. ஜப்தி செய்த பொருட்களைத் திரும்பப் பெறவும் செய்தோம். இதுகுறித்த வழக்குகளையும் சந்தித்தோம்.

பின்னர் நமது தொடர்ந்த போராட்டம் காரணமாக வட்டி தள்ளுபடி என்று அரசு அறிவித்தபோது தவணை நீட்டிக்கக் கோரி 12-11-86 அன்று கோட்டை முன் மாநிலம் முழுவதிலும் இருந்து வந்த பிரதிநிதிகளைக் கொண்ட உண்ணாவிரதம் நடத்தினோம். இதர சங்கங்களும் இக்கோரிக்கைகளை ஆதரித்து நின்றது. போராடியது. பின்னர் அரசு தவணையை நீட்டித்தது. இது ஓரளவு சிறு விவசாயிகளுக்கு உதவியாக இருந்தது.

16. காவேரி நதி நீர் பிரச்னை

கடந்த 3 ஆண்டுகளில் காவிரி பாசனப் பகுதியில் விவசாயத்திற்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம், நாம் தண்ணீர் பெற போராடி வந்திருக்கிறோம். உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், தர்ணா என நடத்துவதுடன் 21.7.86-ல் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் நாம் மறியலும் நடத்தினோம். 5000-க்கும் மேற்பட்டவர்கள், கைது செய்யப்பட்டனர். நாம், சி.பி.ஐ. தி.மு.க. சேர்ந்து 1.9 87-ல் பந்த் போராட்டம் நடத்தினோம். அனைத்து பகுதியினர் ஆதரவுடன் இப்போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணப்படாத நிலையில் காவிரிப் பாசன பகுதியில் நெல் விவசாயத்திலிருந்து வேறு விவசாயத்திற்குசெல்வதும், இருபோகம் ஒருபோகமாவதும், தெளிப்பு விவசாயத்திற்கு செல்வதும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. இதனால் பல்லாயிரம் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருப்பதுடன், உணவு உற்பத்தியும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. விரைவில் நிரந்தரத் தீர்வுகாணப்படவில்லையெனில் நிலைமை மேலும் மோசமாகும் அபாயம் உள்ளது.

17. குத்தகை விவசாயிகள் பற்றி

இது குறித்து 30.7.87ல் திருத்துறைப்பூண்டியில் நடத்தப்பட்ட மாநில மாநாட்டில் கோர்ட் உத்தரவிட்டாலும் நிலத்தை விட்டு வெளியேறமாட்டோம் என்ற உறுதியான முடிவினை மேற்கொண்டோம். அதன்பின் மாநில அரசு குத்தகைகாரர்களை வெளியேற்றுவதில்லை என்று அப்போது அறிக்கை வெளியிட்டது.

தற்போது ரெவின்யூ கோர்ட்டை திறந்து வழக்குகளை முடித்து நிலவெளியேற்றம் செய்ய போலீஸ், ரெவின்யூ அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. இதனல் நிலவெளியேற்ற ஆபத்து அதிகரித்துள்ளது. இந்த இயக்கத்தில் சம்பந்தப்பட்ட விவசாயி களை திரட்டுவதில் பலஹீனம் இருந்து வருகிறது. கூட்டு இயக் கம் நடத்தவும் முடியாத நிலை இருந்து வருகிறது. இன்று குத் தகை விவசாயிகளுக்கான இயக்கத்தில் அவர்களை சக்தியாக திரட்ட முடியாத நிலை உள்ளது. எதிர்காலத்தில் தீர்வு சாண வேண்டிய பிரச்சனையாக இது நம்முன் உள்ளது.

18. கரும்பு விவசாயிகள் இயக்கம்

ஆலைவாரியாக பல சங்கங்கள் இருந்தபோதிலும் அவைகள் அரசுடனும், ஆலைநிர்வாகத்துடனும் சமரசப் போக்கை கடைப் பிடிக்கும் சங்கங்களாகவே உள்ளன. இந்த நிலையில் பாதிக்கப் பட்ட கரும்பு விவசாயிகளை திரட்ட மாநில அளவில் ஒரு அமைப் பை ஏற்படுத்த 6 2 87ல் திருச்சியில் மாநில அளவில் கரும்பு விவ சாயிகள் கூட்டம் நடத்தப்பட்டது. 5 6 87ல் திருச்சி மாவட்டம் புகளூரில் மாநில கரும்பு விவசாயிகள் மாநாட்டை நடத்தினோம். 14-ஆலைகளிலிருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாடு கிராம விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டு 25-பேர் கொண்ட கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வரு கிறது. கரும்பு விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆலைவா யிலில் நடத்தப்பட்ட ஒரு நாள் உண்ணாவிரதம் நல்ல பிரதி பலிப்பை தந்தது. இச்சங்கத்தை தொடர்ந்து செயல்படுத்த உரிய ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

19. கட்டுப்படியான விலைக்கான இயக்கம்

நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க நாம் ஆண்டு தோறும் போராடி வருகிறோம். அரசு மானியத்தை டோக்கனுக கொடுப்பதை மாற்றி ரூபாயாகக் கொடுக்க வைப்பதில் வெற்றி பெற்றோம். 1986ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய் விலை வீழ்ச்சியடைந்த போதும், கட்டுப்படியான விலை நிர்ணயம் செய் யக் கோரி மாநாடு நடத்தப்பட்டது. 1988-ல் தஞ்சை மாவட்டத் தில் எள் விலை வீழ்ச்சியால் பல ஆயிரக்கணக்கான விவசாயி களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டபோது எள்ளுக்கு நியாய விலை கேட்டு அரசு அலுவலகங்களுக்கு முன் ஆர்ப்பாட்டமும், பருத்தி விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கேட்டு மதுரை, அண்ணா மாவட்டங்களில் உண்ணாவிரதம், தர்ணு ஆகிய போராட்டங்க ளும் நடத்தியுள்ளோம். ஆனல் விவசாயிகள்கடும் நெருக்கடியில்

இக்கியுள்ள இந்த சூழலில் விலைப்பிரச்சனைக்கான ஒரு சக்தியான விவசாயிகள் இயக்கத்தை உருவாக்கும் நிலையிலோ; மத்திய-மாநில அரசுகளை நிர்ப்பந்திக்கும் அளவிலோ, நாம் இல்லை என்பதே இன்றைய நிலை.

20. மலைவாழ் மக்கள் கோரிக்கை

தமிழகத்தில் மலைவாழ் மக்கள் கோரிக்கைகளுக்காக குறிப்பாக, நிலப்பட்டா பெறுதல், குடியிருப்பு, போக்குவரத்து, கல்வி, வைத்திய வசதிகள் மற்றும் அவர்களுக்காக மத்திய-மாநில அரசுகள் கூடுதல் நிதி ஒதுக்கி அவர்கள் நல்வாழ்வு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தி தொடர்ச்சியாக பல ஸ்தல இயக்கங்கள் நடத்தி வந்துள்ளோம்.

சுமார் 20-க்கும் மேற்பட்ட மலைகளில் 5 லட்சத்திற்கும் மேல் உள்ள இம்மக்கள் அரசு மற்றும் காட்டிலாகா அதிகாரிகளால் கடும் தொல்லைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இவர்களுக்கு வர வேண்டிய சலுகைகள் மறுக்கப்படுகிறது. நிலத்தை விட்டு வெளியேற்றமும் தொடர்ந்து நடைபெறுகிறது, இப்பகுதி மக்களை சகலவிதமான சீர்குலைவுசக்திகளும் திசைதிருப்ப தொடர்ந்துமுயற்சிக்கின்றன. இந்நிலையில் இவர்கள் பிரச்சனைகளுக்காக 28.7.87ல் தென்னாற்காடு கல்வராயன் மலைப்பகுதி கள்ளக்குறிச்சியில் மாநில மாநாட்டை நடத்தினோம். இம்மாநாட்டிற்கு மாநிலத்திலுள்ள 11 மலைகளிலிருந்து 144 பிரதிநிதிகளும், 300க்கும் மேற்பட்ட பார்வையாளர்களும் ஆக 500 பேர்கள் வரை கலந்து கொண்டார்கள். இறுதியில் நடைபெற்ற பேரணியில் 2000 பேர் கலந்து கொண்டனர். இம்மாநாடு மலைவாழ் மக்கள் மத்தியில் நமதுசெல்வாக்கை அதிகப்படுத்த உதவியுள்ளது. தொடர்ந்து இவர்களுக்கு மத்தியில் வேலை செய்வதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும்.

21. விவசாயத் தொழிலாளர் இயக்கம்

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர் சங்கம் மாநில மட்டத்தில் தனியாக அமைக்கப்பட்டது. தஞ்சை, திருச்சி, மதுரை, தென்னாற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தனி மாவட்ட கமிட்டிகள் இருக்கின்றன. மற்றைய மாவட்டங்களிலும் வி.ச. மாவட்டக் குழுவே விவசாயத் தொழிலாளர் பிரச்சனைகளையும் எடுத்து இயக்கம் நடத்தி வருகிறது.

22. கூலிக்கான இயக்கம்

தமிழ்நாட்டில் 2 கூலி சட்டம் உள்ளது. கீழ்த்தஞ்சை தவிர தமிழகம் முழுவதும் குறைந்தபட்ச கூலிச் சட்டமும், கீழத்

தஞ்சையில் நியாயக் கூலிச் சட்டமும் அமுலில் இருக்கிறது. இப்போது குறைந்தபட்ச கூலிச் சட்டத்தில் இருப்பதைவிட நியாயக் கூலி சட்டத்தில் உள்ள கூலி குறைவாக உள்ளது. எனவேதான் நாம் இரு சட்டத்தையும் ஒன்றுக்கி தமிழகம் முழுவதும் குறைந்த பட்ச கூலியை அமுலாக்க நிர்வாக ஏற்பாடு வேண்டும் என்று இயக்கம் நடத்தி வருகிறோம். கீழ தஞ்சையில் அறுவடை கூலி, சட்டத்தில் 9-ல் ஒன்று என்று உள்ளது. இடையில் போராடி நாம் 8-ல் ஒன்று பெற்றோம். பிறகு 7-ல் ஒன்றுக்கு நாமும் சிபிஐ சங்கமும் சேர்ந்து போராடி ஏழரைக்கு ஒன்று என்று அமுலாக்கப்பட்டது. உழவடைக்கால கூலி இந்த ஆண்டு ஆண்களுக்கு ரூ. 15, பெண்களுக்கு ரூ. 10- என்ற அளவில், உள்ளது. மேல தஞ்சையில் சில பகுதிகளும் தென்னூற்காடு, சிதம்பரம், காட்டுமன்னார்குடி, மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம், திருச்சி மாவட்டத்தில் லால்குடி, முசிறி, திருச்சி, வட்டங்களிலும் சட்டக் கூலிக்கு போராடி சில இடங்களில் சட்ட கூலியையும், சில இடத்தில் இருப்பதை விட கூடுதலாகவும் பெற்றிருக்கிறோம்.

23. நெய் குப்பையில்

சட்டக் கூலிக்காக போராடிய போது தான், திருச்சி மாவட்டம் நெய்குப்பையில் சட்டக் கூலி கொடுக்க மறுத்து மிராசுதார்கள் 150 விவசாயத் தொழிலாளர்களின் வீடுகளை எரித்து சாம்பலாக்கினர்கள். இதில் ரூ. 15 லட்சத்திற்கு மேல் சேதம். நமது சகோதர சங்கங்கள் அவர்களுக்கு உதவியது. காவல்துறை பாதிக்கப்பட்டவர்கள் மீதே வழக்கு போட்டது. இதில் நமது இயக்கம் உறுதியாக நின்று போராடியதால் அவர்கள் நமது இயக்கத்தின் மீது நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அதன் பிரதிபலிப்பு பல கிராமங்களுக்கு நமது இயக்கம் பரவ உதவி இருக்கிறது.

24 குடிமனைப்பட்டா

தமிழகத்தில் பெரும் பகுதி விவசாயத் தொழிலாளர்களுக்கு குடிஇருக்கும் மனைப்பட்டா இல்லாமல் இருக்கின்ற நிலையில் பட்டா கோரி இயக்கம் நடத்தி வருகிறோம். அதில் 1987 ஆம் ஆண்டு இறுதியில் சேலம் மாவட்டத்தில் வி ச, வாலிபர் சங்கம், கட்சி ஆகியவை இணைந்து மாவட்டம் முழுவதும் இருந்து குடிமனைப்பட்டா இல்லாதவர்களை ஊர்வலமாக அழைத்து வந்து மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

அதேபோல் கள்ளக்குறிச்சியில் குடிமனைப் பட்டா கோரி பெரும் பேரணி நடந்தது. இவைகள் குடிமனைப் பட்டா வேண்

டும் என்ற பிரச்னையை அப்பகுதியில் ஒரு வெகுஜன இயக்கமாக முன்னுக்கு கொண்டு வந்துள்ளது.

25. அரசு சலுகைகள்

குடிநீர், நடைபாதை, வீடு, குடிசைக்கு ஒரு விளக்கு, வேலை வாய்ப்பு, கறவை மாடு, ஆடுவளர்ப்பு ஆகிய அரசு சலுகைகளை பெற்றுத் தர பல இடங்களில் நமது தோழர்கள் கமிட்டிகள் முயற்சி எடுத்து பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

26. கரும்பு பண்ணை கழகம்

நாம் தொடர்ச்சியாக இப்பிரச்னையில் போராடி வந்துள்ளோம். தஞ்சை மாவட்டம் வடபாதி மங்கலத்தில் உள்ள தமிழ் நாடு அரசு கரும்பு பண்ணை கழகம் கலைக்கப்பட்டு அதில் இருந்த நிலம் விவசாயத் தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ஒன்றரை ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இது இப்பகுதி விவசாயத்தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் நமது இயக்கத்தின் செல்வாக்கை அதிகரித்திருக்கிறது. இப்பகுதி சிபிஐ தளமாக இருந்தஇடம். அவர்கள் தொடர்ந்து கரும்பு பண்ணையை கலைக்கக் கூடாது என்று இயக்கம் நடத்தி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

27 அறுவடை இயந்திரம்

தஞ்சை மாவட்டம், நாகை வட்டம், மூங்கில்குடி கிராமத்தில் 1988 ஏப்ரலில் அறுவடை இயத்திரத்தை கொண்டு வந்து விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் செய்ய எடுத்த முயற்சியை நாம் தடுத்து அதில் வெற்றி பெற்றிருக்கிறோம். இதில் திமுக, அதிமுக, விவசாயத் தொழிலாளர்களும் நம்மோடு உறுதியாக சேர்ந்து இப்போதும் நிற்கிறார்கள். அதில் இரண்டுவழக்குகள் உள்ளது. இதில் அவர்களும் இருக்கிறார்கள்.

28. கூலி கமிஷன்

குறைந்தபட்ச கூலி சட்டத்தை மறு ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட கூலி கமிஷனில் நமக்கு பிரதிநிதித்துவம் இல்லை. இதை கண்டித்து நாம் இயக்கம் நடத்தினோம். அதோடு அ.தி.முக. ஆட்சி போய் ஆளுநர் ஆட்சி வந்தவுடன் காங்கிரஸ்காரர்களும் அதில் இல்லை என்ற காரணத்தால் அது திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும் நாம் கோரியதை காரணமாக வைத்து விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகளாக 3 அதிமுகவினர் இருந்

தில் 2 பேரை எடுத்துவிட்டு காங்கிரஸிற்கு ஒன்றும் நமக்கு ஒன்றும் என்று திருத்தி அமைக்கப்பட்டது. என்றாலும், விவசாயத் தொழிலாளர் குறைந்தபட்ச கூலி கமிஷனில் பிரதிநிதித்துவம் அளிப்பது நமக்கு இதுதான் முதல் முறையாகும். இதில் நமது தோழர் பி. குமாரவேல் உறுப்பினராக உள்ளார். இதில் நமது முயற்சியால் ஒரு இடைக்கால அறிக்கை கொடுக்க வைத்திருக்கிறோம், இறுதி அறிக்கையும் கொடுக்கும் தறுவாயில் உள்ளது. இந்தக் குழு மாவட்டங்களுக்கு வந்த போது அனைத்து இடங்களிலும் நமது கோரிக்கையை வலியுறுத்தி மகஜர் கொடுத்திருக்கிறோம்.

29 நிலத்தை பாதுகாக்க போராட்டம்

சென்னை பெருநகர குழுமத்தால் (M.M.D.A.) மறைமலை நகர் பகுதியில் 8 கிராமங்களை எடுத்து அதில் இருக்கும் நஞ்சை, புஞ்சை நிலங்கள் முழுவதையும் மறைமலை நகருக்கு எடுத்துக் கொண்டு அந்த கிராமத்து மக்களையே அங்கிருந்து வெளியேற்றுவது என்று நடவடிக்கை எடுத்து அனைத்து வேலைகளும் முடிந்து பணம் பட்டுவாடா செய்து வெளியேற்றும் நிலையில் தான் நமது கவனத்திற்கு வந்து நாம் தலையிட்டோம். அங்கு இருப்பவர்கள் அனைவரும் 5 ஏக்கருக்கு உட்பட்ட சிறு விவசாயிகள். அதில் குறிப்பாக நின்னுங்கரை என்ற கிராமத்தை மையமாக வைத்து அரசு இதை கைவிட வேண்டும். மறைமலை நகர் விஸ்தரிப்புக்கு பக்கத்தில் அரசுக்கு சொந்தமாக புறம்போக்குநிலம் உள்ளதுஎன்றுஎடுத்துக்காட்டி நாம்போராடினோம் நின்னுங்கரை கிராம நிலத்தை எடுப்பதில்லை என்று அரசு ஆணை வெளியிட்டுவிட்டது. மற்றறைய 7 கிராமங்கள நடவடிக்கையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது செங்கை வட்டத்தில் நமது இயக்கத்தை விஸ்தரிக்க உதவி உள்ளது.

30 தரிசு நிலத்திற்கான போராட்டம்

சேலம். தென்னாற்காடு. பெரியார் அண்ணா, நீலகிரி, வடஆற்காடு, திருச்சி, தருமபுரி மாவட்டங்களின் மலையோரப் பகுதிகளில் தரிசு நிலங்களில் இறங்கி சாகுபடி செய்வது என்பது நடக்கிறது. இதில், குறிப்பாக சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் சுமார் 12ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதியில் சுமார் 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் நாம் விவசாயத் தொழிலாளர்களை நிலத்தில் இறக்கி சாகுபடி செய்ய வைத்திருக்கிறோம். இதில் பைத்தூர் பகுதி தவிர மற்றைய இடங்களில் நிலம் நிவசம் உள்ளது. விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள்

பைத்தூரில் நமக்கும் காட்டிலாகா அதிகாரிகளுக்கும் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது. பல வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. இது அப்பகுதியில் விவசாய இயக்க வளர்ச்சிக்கு உதவியுள்ளது. இந்த இடத்தை உறுதிப்படுத்தவும், மற்றைய இடங்களில் பட்டா பெறவும் போராட வேண்டியுள்ளது. இதை மற்றைய பகுதிக்கும், மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பது இயக்க வளர்ச்சிக்கு உதவும். இதில் மாவட்டக் குழுக்கள் கவனம்செலுத்த வேண்டும்.

31 கூட்டு இயக்கம்

இந்த மூன்று ஆண்டு காலத்தில் மற்ற விவசாயசங்கங்கள் பல சிதைவுண்டு கூட்டு இயக்கத்திற்கு அவைகளை கொண்டு வர முடியாத நிலையில் சிபிஐ விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கம் ஆகியவைகளுடன் கூட்டு இயக்கங்களையும் குறிப்பாக கீழத்தஞ்சையில் அறுவடைக் கூலிப் பிரச்சனையிலும் கூட்டு இயக்கத்தை நடத்தியுள்ளோம்.

32 பிரசுர வெளியீடுகள்

மத்திய அமைப்பு வெளியிட்ட கொள்கை அறிக்கையை தமிழாக்கி 10 ஆயிரம் பிரதிகளும், பொன்விழாவையொட்டி வெளியிடப்பட்ட 7 பிரசுரங்களில் பஞ்சாப் அபிவிருத்தி வரியை எதிர்த்த போராட்ட பிரசுரம் 10 ஆயிரம், விவசாய நெருக்கடி என்ற பிரசுரம் 5000; பொன் விழா ஆண்டு மலர் 4000; 1987ல் என் இந்த மறியல் 65,000; 1988 மறியலையொட்டி திருச்சி தீர்மானம் 50 ஆயிரம் வெளியிட்டு இருக்கிறோம். ஆங்கில பிரசுரம் வாங்கி விற்றிருக்கிறோம். என்றாலும் பொன்விழா ஆண்டை-யொட்டி வந்த 7 பிரசுரமும் தமிழில் கொண்டு வந்து வெளியிட இயலவில்லை. மையத்தில் காலத்தில் கவனம் செலுத்தாததும், மாவட்டங்கள் பிரசுர பாக்கியை அவ்வப்போது கொடுக்காததும் சேர்ந்து இந்த பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

33 உழவன் உரிமை

விவசாய இயக்கத்தின் சார்பில் ஒரு மாத பத்திரிக்கை 1982ல் துவங்கப்பட்டு இதுவரை விடுபடாமலும், நிறுத்தாமலும் நடத்தி வருகிறோம் என்பது பெருமைப்படத்தக்கது. சென்ற மாநாட்டின் போது 2300 பிரதிகள் இருந்து 6000க்கு போய் இப்போது ஒரு வருடமாக 5000 பிரதிகள் விற்கிறது. இதில் 249 ஆண்டு சந்தா சேர்க்கப்பட்டு அதில் 21 ஆயிரம் ரூபாய் வைப்பு நிதியில் பத்திரிக்கை பெயரில் வைக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 150 வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்

பிடத்தக்கது. ஆயிரம் ஆயுள் சந்தா சேர்த்து ஒரு லட்சம் ரூபாயை வைப்பு நிதியில் வைப்பது என்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதன் விற்பனையை அதிகப்படுத்த முடியவில்லை. இதில் ஏஜெண்ட்களிடம் அக்டோபர் முடிய சுமார் 18,000 ரூபாய் பாக்கி இருப்பது இதன் வளர்ச்சியை பாதிக்கிறது. சந்தாவை அதிகப்படுத்துவதும், ஏஜெண்ட் பாக்கிகள் தவறாமல் வருவதற்கு மாவட்டக் குழுக்கள் கவனம் செலுத்துவதும் போதுமானதாக இல்லை.

இருந்தாலும் உழவன் உரிமைவளர்ச்சிக்குஇவைகள் மட்டும் தடை என்பது ஒரு பகுதிதான். அதன் உருவம், உள்ளடக்கம், அதில் வரும் விஷயங்கள், அதன் வரவு—செலவு, நிர்வாகம் இவைகளை பெரும் அளவு அபிவிருத்தி செய்ய வேண்டிய குறைபாடுகளும் நீடிக்கிறது. இது எதிர்காலத்தில் போக்கப்பட வேண்டும்.

34. ஆதரவு இயககம்

1985-ல் ஆசிரியர்கள் போராடிய போதும், 1988-ல் ஆசிரியர்கள்-அரசு ஊழியர்கள் பேராடிய போதும் ஆதரவு இயக்கங்கள் நடத்தி இருக்கிறோம்.

35. உச்ச வரம்பு சட்ட திருத்தம்

உச்ச வரம்பு சட்டத்தில் நமது சிதம்பரம் மாநாட்டு தீர்மான அடிப்படையில் சட்டசபையில் ஒரு தனி நபர் மசோதாவை தயாரித்து சட்டமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சனையில் வலுவான பிரச்சார இயக்கமோ, குறிப்பிடத்தக்க கிளர்ச்சிகளோ நடத்த முடியாத பலஹீனம் நீடிக்கிறது.

36. அகில இந்திய கவுன்சில் கூட்டம்

அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் கவுன்சில் கூட்டம் திருவாரூரில் மே 29, 30, 31 (1986) தேதிகளில் நடைபெற்றது. தோழர். அரிகிஷன் சிங் சுர்ஜித் கலந்து கொண்டார். கவுன்சில் கூட்டத்தையொட்டி பேரணியும், பொதுக்கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

37 மாநில மாநாடு

தமிழ்நாடு மாநில 2-வது மாநாடு தஞ்சை நகரில் 198[illegible] செப்டம்பர் 3,4 தேதிகளில் சிறப்பாக நடந்தது. தோழர் கோதா[illegible] வரி பருலேக்கர் மாநாட்டில் கலந்து கொண்டார். பேரணி[illegible] பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

38 பாலக்காடு மாநாடு

1986 டிசம்பரில் பாலக்காட்டில் நடைபெற்ற அகில இந்திய 2-வது மாநாட்டில் ஏற்றும் செங்கொடியை கீழ் வெண்மணியிலிருந்து கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. கீழ்வெண்மணியிலிருந்து ஜீப் யாத்திரையாக எடுத்துச் செல்லப்பட்ட கொடிக்கு வழியிலிருந்த மாவட்டங்களில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. இறுதியாக கோவை நகரில் சி.ஐ.டி.யூ. சார்பில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. இது ஒரு பிரச்சார இயக்கமாகவே மாறியது.

39 தொழிலாளி வர்க்க உதவி

சி.ஐ.டி.யூ., வி.ச. உதவி நிதியினை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 19-ல் தியாகிகள் தினத்தன்று வழங்கி வருகின்றனர். இந்த நிதியைக் கொண்டு மாநில மைய முழுநேர ஊழியர்கள் நான்கு பேர்களுக்கும், மாவட்ட ஊழியர்கள் நான்கு பேர்களுக்கும் அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிதி இல்லையேல் மாநில வி.ச. மையம் இன்றுள்ள அளவிற்கு செயல்பட முடியாது. இந்த நிதி உதவியானது மாநில வி.ச. அமைப்பு செயல்படவும், 4 மாவட்டங்களில், தலா ஒரு முழு நேர ஊழியருக்கு அலவன்ஸ் தரவும் பயன்பட்டுள்ளது. ஆனால், இந்த நிதியாதாரத்தை மட்டும் சார்ந்து நில்லாமல், வி.ச. விற்கென தனியான நிதி திரட்டுவது உடனடி எதிர்காலத் தேவைகளுக்கு மிகவும் அவசியம் ஆகும்.

40 உறுப்பினர் சேர்ப்பு

சேலம் மாநாட்டின் போது வி.ச.வில் 60,000 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். இன்று 1.93 லட்சமாக இது வளர்ந்துள்ளது. வி.தொ.ச-வில் 73 ஆயிரமாக இருந்தது 91 ஆயிரமாக உயர்ந்துள்ளது. கட்சி முழுமையும் ஈடுபட்டு செயல்பட்டதாலே இந்த உயர்வு சாத்தியமாயிற்று என்பது கவனிக்கத்தக்கது. முன்பிருந்த நிலையை விட ஒரளவு வளர்ச்சி தான். எனினும் நாம் திரட்ட வேண்டிய மக்களின் ஜனத்தொகையைப் பார்க்கும் போது இது மிகவும் சொற்பமானது என்பதை உணரமுடியும்.

★ இப்படி சேர்ந்த உறுப்பினர்களையும் இரண்டு வகையாக பார்க்க வேண்டும். ஒன்று தொடர்ந்த இயக்கங்கள்; கிளர்ச்சிகள், நடத்துவதன் மூலம் வரும் உறுப்பினர் எண்ணிக்கை. இன்னொன்று நமது கட்சியின் பொதுவான செல்வாக்கு மூலமாகவும் உறுப்பினர் சேர்ப்பு காலத்தில் (மட்டும்) பல கிராமங்கள் அணுகப்படுவதாலும் வரும் உறுப்பினர் எண்ணிக்கை ஆகும். இன்றைய உறுப்பினர் எண்ணிக்கையில் இரண்டாவது பகுதி கணிசமானது என்பது மிகையல்ல.

★ ஸ்தலத்தில் விவசாயிகளை பாதிக்கும் கூர்மையான பிரச்சினைகளை எடுத்து போராடுவதன் மூலமே ஒரு உயிருள்ள ஸ்தாபனத்தை உருவாக்க முடியும். இதற்கு சிறந்த உதாரணமாக சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுகா அனுபவம் திகழ்கிறது. இங்கு அவர்கள் நடத்திய தரிசு நிலத்திற்கான போராட்டம், நமது சங்கத்தை நோக்கி அந்த தாலுகாவில் மட்டும் 13,000 விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளை ஆகர்ஷித்துள்ளது. திருச்சி மாவட்டம் லால்குடி தாலுகாவில் நெய்குப்பை போராட்டம், அதை ஒட்டிய வளர்ச்சி, தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியில், செங்கை மாவட்டத்தில் நின்னைக் கரையில் நடந்த போராட்டம், போன்ற ஒரு சில போராட்டங்களை நடத்தியுள்ளோம். அவைகள் மூலம் குறிப்பிட்ட பகுதிகளில் நம்மால் விவசாய இயக்கத்தை கட்ட முடிந்துள்ளது என்கிற அனுபவங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

★ கீழத்தஞ்சை, தென்னாற்காட்டில் சில தாலுகாக்கள் ஆகியவற்றில் தொடர்ந்து பல்லாண்டு காலமாக நடத்தப்பட்ட போராட்டங்கள் காரணமாக நம்மிடம் உள்ள தளங்களில் இக்காலத்தில் முன்னேற்றம் இன்றி ஒரு தேக்கம் இருப்பது கவலையுடன் பார்க்க வேண்டிய அம்சமாகும்.

★ மதுரை, திருச்சி, அண்ணா, சென்னை புறநகர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் சமீப காலங்களில் ஓரளவு கவனம் செலுத்தப்பட்டு உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இவைகளை போராட்டங்களின் மூலம் உறுதிப்படுத்துவது தேவைப்படுகிறது.

★ ஆனால் நமது இதர இயக்கங்கள் வலுவாக உள்ள கோவை, குமரி போன்ற மாவட்டங்களில் வி.ச. இயக்கம் பெயரளவுக்கே இருப்பதும்; மீண்டும் மீண்டும் பேசப்பட்ட பிறகும் இத்துறையில் முன்னேற்றம் இல்லையென்பதும் கட்சி மாவட்டக் குழுக்கள் இந்த வகையில் உணர்வு பூர்வமாக இல்லை என்பதையே காட்டுகிறது.

★ வருடவாரியாகவும், மாவட்ட வாரியாகவும் உறுப்பினர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. மிகவும் ஏற்றத்தாழ்வான நிலையிருப்பதையும் சில மாவட்டங்களில் ஒருவருடம் உறுப்பினர் எண்ணிக்கை திடீரென்று கூடும், அடுத்த வருடம் குறையும் என்றிருப்பதையும் பார்த்தால் பல பகுதிகளில் நாம் சேர்த்த உறுப்பினர்களை அடுத்த வருடம் இழக்கிறோம் அல்லது தொடர்ந்து தொடர்பு கொள்வதில்லை என்பதைக் காண முடியும்.

41. ஸ்தாபனம்

2-வது மாநில மாநாட்டிற்குப் பின் 5 செ. கு. உறுப்பினர்கள் மற்றும் 8 மாநிலக்குழு உறுப்பினர்களையும் கொண்ட வி.ச. சப்-கமிட்டி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இக்காலத்தில் சப்-கமிட்டி கூடி ஸ்தாபனம், இயக்கங்கள் குறித்து விவாதித்து முடிவுகள் செய்திருக்கிறது. குறிப்பாக கட்சி காங்கிரஸ், மாநில கட்சி மாநாடு ஆகியவைகளின் முடிவுப்படியும் மாநிலக்குழுவின் முடிவின்படியும், மாநில வி ச. மையத்தை பலப்படுத்துவது, முழுநேர ஊழியர்களை அதிகப்படுத்துவது, மாவட்ட மையங்களை பலப்படுத்துவது, மாவட்டங்களில் முழுநேர ஊழியர்களை நிச்சயிப்பது மற்றும் முக்கிய இயக்கங்கள், கொள்கை பிரச்சனைகளை குறித்து முடிவெடுப்பது ஆகியவை குறித்து விவாதித்து முடிவு செய்து வழிகாட்டி வந்துள்ளது. கடந்த காலத்தை காட்டிலும் சப்-கமிட்டி கூட்டங்கள் அதிகமாக நடந்துள்ளது. உறுப்பினர்கள் பங்கெடுப்பும் அதிகமாக இருந்து வந்துள்ளது. இவைகளையெல்லாம் செய்து வந்தபோதிலும் ஒரு வலுவான விவசாய இயக்கத்தை கட்டும் வேலையை செய்ய முடியவில்லை. அதற்கேற்ற முறையில் திட்டமிட வேண்டியுள்ளது.

இந்த சப்-கமிட்டி கூட்டங்கள் தவிர வி. ச. மையத் தோழர்கள் கூடுவது சமீபத்தில் அதிகரித்துள்ளது. சப்-கமிட்டி கூட்டங்களில் சில பிரதான ஸ்தாபன, இயக்க பிரச்சனைகளை விவாதித்து மாநிலக் குழுவிற்கு அறிக்கைகள் கொடுத்து வருகிறது. மாநிலக்குழு வி ச அரங்க பிரச்னையை இக்காலத்தில் இரண்டு முறை விவாதித்து முடிவுகள் செய்துள்ளது.

42 மாநில மையம்

கடந்த மாநாட்டிற்குப் பின் தொடர்ந்து மாநில வி ச மற்றும் வி தொ ச மையம் செயல்பட்டு வருகிறது. 1987 ஜுன் மாதத்திலிருந்து தோழர் வி.ஏ.கே மையத்தில் இருந்து செயல்படுகிறார். மைய வேலைகள் சுற்றறிக்கை அனுப்புவது, அ.இ அமைப்புக்களுடன் தொடர்பு கொள்வது, அறிக்கைகள் அனுப்புவது, மாவட்ட வி ச, வி தொ ச அமைப்புக்களுடனும் தொடர்பு கொள்வது, உழவன் உரிமை மாத இதழ் வெளியிடுவது மற்றும் மைய நிர்வாக வேலைகளை செய்து வருகிறது. மாவட்டக்குழு கூட்டங்கள், பேரவைக் கூட்டங்கள் நடத்துவதற்கு "முன்னேக்காட்டிலும் கூடுதலாக மையத்திலிருந்து உதவி செய்யப்பட்டு வருகிறது.

- ★ எனினும் யாராவது ஒருவர் மாற்றி மாற்றி மையத்தில் இருப்பது என்பதைக் கறாராக அமுலாக்க வேண்டியுள்ளது.
- ★ வேலைகளில் பிரியாரிட்டி தீர்மானித்து செயலாற்றுவதில் கூடுதலாக கவனம் தேவைப்படுகிறது.
- ★ உழவன் உரிமை நிர்வாகம் ஓரளவு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இன்னும் செம்மைப்படுத்த வேண்டும்.
- ★ உழவன் உரிமை தரத்தை உயர்த்த மேலும் திட்டமிட்டு கூடுதல் முன்னேற்றம் காண வேண்டும்.
- ★ இன்று மையம் என்று ஏற்பட்டுள்ள ஓரளவு நம்பிக்கை தரும் நிலையை தேவைக்கேற்ற செயல்பாடுகளுடையதாக்கி முன்னேற்றம் காண வேண்டும்.

43 மாவட்ட மையங்கள்

மாவட்ட மையங்களை உருவாக்குவது, பலப்படுத்துவது என்று இராமேஸ்வரத்தில் கூடிய பி.சி எடுத்தமுடிவுப்படி திருச்சி, சேலம் தலா 3 தோழர்களும் தர்மபுரி, வடஆற்காடு, புதுக்கோட்-டை, முகவை, காமராசர், பாண்டி ஆகிய இடங்களில் தலா ஒருவர் வீதமும், மாவட்ட மையத்தில் இருந்து இந்த அரங்கவேலைகளை பிரதானமாக கவனிப்பது என்று முடிவுகள் எடுக்கப்பட்டது. அதில் சில அபிவிருத்தி ஏற்பட்டது. ஆனால் திரும்பவும் அதை உறுதிப்படுத்தி முன்னுக்கு கொண்டு போவதில் தேக்கம் உள்ளது.

கோவையில் நீண்ட விவாதத்திற்கு பிறகு முடிவுகள் எடுக்கப்பட்டது. அது நடைமுறைக்கு வரவில்லை. சில மாவட்ட வி.ச. செயலாளர்களே கட்சியின் வட்டச் செயலாளர்களாக இருப்பதால், அது தான் இவர்களின் பிரதான வேலையாக மாற்றப்பட

கிறது. பல மாவட்டங்களில் மாவட்டம் பூராவும் உள்ள இயக்க நிலைகள் என்பது மாவட்ட வி.ச. செயலாளர்களுக்கே நேரடியாக தெரியாது என்ற நிலை உள்ளது.

இதில் குறைந்த பட்சம் மாவட்டத்தில் இருவர் அல்லது ஒருவர் குறிப்பாக மாவட்ட வி.ச. செயலாளர்கள் மட்டுமாவது அவர்கள் வேலை முழுவதும் இந்த அரங்க வேலைதான் என்று ஆக்கப்பட வேண்டும். மாவட்ட மையங்கள் உருவாக்கப் பட்டு அது தொடர்ந்து செயல்படுகிறது என்ற நிலை ஏற்படுத் தப்பட வேண்டும்.

நான்கு மாவட்டங்களுக்கு மையத்தில் இருந்து வேஜ் கொடுக் கிறோம். அதனால் அந்த மாவட்டத்தில் இந்த அரங்கத்தில் என்ன அபிவிருத்தி முன்னேற்றம், பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கும் தோழர்கள் அதற்கு பொருத்தமானவர்கள்தானா? அவ்வேலையைத் தான் அவர்கள் செய்கிறார்களா? என்று சம்பந்தப்பட்ட மாவட்ட கட்சி மையங்கள் பரிசிலித்து உரிய முடிவுகள் எடுக்கவேண் டும்.

44. வட்ட கமிட்டிகள்

தஞ்சை 16, திருச்சி 10, மதுரை 5, அண்ணா 5, தென்னாற் காடு 13, சேலம் 3, காமராஜர் 2, . பெரியார் 4, குமரி 2, புதுக் கோட்டை 8, நெல்லை 3, கோவை 1, வடஆற்காடு 3, தர்மபுரி 3, செங்கை 5, ஆக 82 வி.ச. வட்ட கமிட்டிகளும் தஞ்சை 15, தென் ஆற்காடு 2, திருச்சி 2, மதுரை 1 ஆக 20 வி.தொ.ச. வட்ட கமிட்டிகள் ஆக இரு அமைப்புகளிலும் 102 வட்ட கமிட்டிகள் உள்ளன. இவைகளின் செயல்பாடு உரிய அளவு இல்லை. இதில் அபி விருத்தி ஏற்படுத்தப்படவேண்டும். உறுப்பினர்கள் நிலைக்கேற்ப எங்கு சாத்தியமோ அங்கு வட்ட கமிட்டிகளை அமைத்து அதை செயல்பட வைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

45 கிராம கிளைகள் ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர் பதிவு முடிந்தவுடன் அந்த உறுப்பினர்கள் பேரவைக்கூட்டங்களை நடத்தி புதிய கிராம கிளைகள் அமைக்கப்பட வேண்டும். அந்த கிளைகள் விவசாயிகளின் அன்றாட பிரச்னைகளுடன் இணைக்கப்பட்டு அதன் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று மாவட்டங்களுக்கு பல முறை கூறப்பட்டு மாவட்டக் குழுக்களில் முடிவுகளும் எடுக்கப் பட்டிருக்கிறது. அதில் உரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. சில இடத்தில் அமைக்கப்பட்டதாக செய்திகள் வருகிறது. தொடர்ந்து அதன் செயல்பாடுகள் இருப்பதில்லை. தஞ்சை உள்பட இதுதான் நிலைமை. இது முற்றாக மாற்றப்பட வேண்டும்.

46 அரசியல் வகுப்பு: 1987-ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அ.இ.அரசியல் வகுப்பில் நமது மாநிலத்திலிருந்து வி.ச. வில் 6-பேர்களையும், வி.தொ.ச.வில் 4-பேர்களையும் அனுப்பி வைத்தோம் ஆனால் இவர்களைக் கொண்டு மாவட்டங்களில் அல்லது மாநில மட்டத்தில் வகுப்புகள் நடத்த திட்டமிடவில்லை.

கோவை மாவட்டத்தில் ஒரு நாளும், தென்னாற்காடு மாவட்டத்தில் 2-நாளும், மாவட்ட அளவில் உள்ள ஊழியர்களுக்கு மாநில மையத் தோழர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டன. ஊழியர்களிடம் எல்லா மட்டத்திலும் வகுப்புகள் நடத்த வேண்டியது மிகவும் அவசியம்.

★ பொதுவாகப் பார்க்கும் போது இக்காலத்தில் நாம் தொடர்ந்து சில முயற்சிகளை எடுத்துள்ளோம். உறுப்பினர் எண்ணிக்கை கூடுதலும், ஓரளவு செயல்பாட்டு முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது என்பதனைக் காண முடியும். ஆனால் நாம் நடத்தும் இயக்கங்கள் பரந்துபட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்கும் இயக்கமாகவோ. தமிழக கிராமப் புறங்களில் குறிப்பிடத்தக்க பிரதிபலிப்பு ஏற்படுத்தும் வகையிலோ இல்லை என்பதைக் காண முடியும்.

★ இது ஏதோ ஒரு அரங்கத்தைச் சார்ந்த ஊழியர்களாலோ சங்க அமைப்பாலோ மட்டும் செய்ய வேண்டிய பணியல்ல. மக்கள் ஜனநாயகப் புரட்சியை நோக்கி முன்னேற இன்றுள்ள வர்க்க பலாபலத்தில் பெருமளவு மாற்றம் காணாமல் சாத்தியமில்லை. விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களை சக்தி மிகுந்த இயக்கமாய் திரட்டாமல் நாம் தமிழக அரசியலில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துவதும் சாத்தியமில்லை.

★ இயக்கங்கள் மட்டும் போதுமானதல்ல. கிராமப்புற மக்கள் பிரச்சனையில் நமது கட்சி கிளைகளும், வட்ட, மாவட்ட கமிட்டிகளும் திட்டமிட்டு தலையிட்டு சக்தி வாய்ந்த போராட்டங்கள் நடத்திடாமல் இந்த மாற்றம் சாத்தியம் இல்லை என்பதை அனுபவம் காட்டுகிறது. இப்படித் தலையிட்டால் நல்ல பலன் காண முடியும் என்பதையே ஆத்தூர், நெய்குப்பை மற்றும் இதர சில போராட்டங்கள் நமக்கு உணர்த்துகிறது.

★ குறிப்பாக இன்றைய தமிழக கிராமப்புறங்களில் (எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின்) ஏழை பாட்டாளி மக்கள் மத்தியில் பல்வேறு அரசியல் இயக்கங்கள் தங்கள் பிடிமானத்தை வலுப்படுத்திக் கொள்ள கடும் முயற்சிகள் எடுக்கும் நிலையில் நமது தலையீடு என்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

★ நாம் தலையிடவில்லையெனில் பல்வேறு ஜாதிய அமைப்புக்களும், சீர்குலைவு சக்திகளும் தங்கள் நோக்கத்திற்கு திசை திருப்பும் பேரபாயத்தைத் தான் வன்னியர் கிளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

★ இவ்வரங்கை கட்டுவதின் முக்கியத்துவம் குறித்து நமது உணர்வு மட்டம் பெருமளவு உயர்த்தப்படவேண்டும் என்பதையே ராமேஸ்வரம் மாநிலக்குழு முடிவுகளைக் கூட பல்வேறு மாவட்டக் கமிட்டிகள் இன்னமும் அமுலாக்காதது காட்டுகிறது. இவ்வகையில் விவசாய அரங்க செயல் பாட்டிலும், வலுவிலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காண கீழ்க்கண்ட கடமைகளை நிறைவேற்றுவது அவசியமாகும்.

எதிர்காலக் கடமைகள்

1. மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள ஸ்தூலமான நிலைமைகளைப் பரிசிலித்து, உரிய கோரிக்கைகளை உருவாக்கி தொடர்ந்து இயக்கம், போராட்டம் நடத்துவதை பிரதான கடமையாக கொள்வது.

2. ஸ்தலப் பிரச்சனைகளை விவாதித்து போராட்டங்கள் நடத்துவது அன்றாடப் பணியாக்கும் அளவு கட்சி கிளை மற்றும் வட்டக் கமிட்டி செயல்பாடுகளை உயர்த்துவது.

3. தரிசு நிலங்கள், காடுகள் என்ற பெயரில் உள்ள சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கான போராட்டங்களை மாவட்டங்களில் ஒரிரு இடத்திலாவது அடுத்த ஆண்டில் எடுத்து மாநில இயக்கமாக மாற்றுவது.

4. பினாமி நிலம், உபரிநிலம் ஆகியவற்றுக்கான இயக்கங்களையும் குறிப்பிட்ட போராட்டங்களையும் நடத்துவது.

5. கரும்பு விவசாயிகள் பிரச்னையிலும், மலைவாழ் மக்கள் பிரச்னையிலும், குறிப்பிட்ட கவனம் செலுத்தி தனி இயக்கமாக வளர்ப்பது

6. விவசாயத் தொழிலாளர்கள் கூலி, சமூக அடக்குமுறை, வீட்டு மனைப்பட்டா ஆகிய பிரச்னைகளை பிரதானப்படுத்தி ஆங்காங்கே இயக்கங்களையும், போராட்டங்களையும் நடத்துவது.

7. விவசாயத் தொழிலாளர் பெண்களுக்கு என்றுள்ள குழந்தைகள் காப்பகம், கூட்டுப்பட்டா உள்ளிட்ட விசேஷ பிரச்சனைகள் மீது இயக்கம் நடத்திடவும், சமவேலைக்கு சமஊதியம் பெறுவதில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவும் வேண்டும். சங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கவும் விசேஷ கவனம் செலுத்திட வேண்டும்.

8 உழவன் உரிமை தரத்தை உயர்த்துவது, விநியோகத்தை குறைந்தபட்சம் 10,000 ஆக உயர்த்துவது.

9. மாநில மைய செயல்பாட்டில் பெரும் மாற்றம் காண்பதுடன், தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, மதுரை ஆகியமாவட்டங்களில் மாவட்ட மையங்களை கெட்டிப்படுத்துவதுடன் வட்டக்குழுக்களை முறைப்படுத்தி செயல்பட வைக்க விசேஷ கவனம் செலுத்துவது.

10. இதர மாவட்டங்களில் குறைந்தபட்சம் இரண்டு முழு நேர ஊழியர்களைக் கொண்ட மாவட்ட மையங்கள் உருவாக்குவது, குறிப்பாக கோவை, குமரி, அண்ணா, மாவட்டங்களில் மாவட்ட மையத்தையும், மாவட்ட கமிட்டியையும் உருவாக்கி தொடர்ந்து செயல்பட வைக்க விசேஷகவனம் செலுத்துவது.

11. மாநில, மாவட்ட, மட்டத்தில் ஊழியர்களை பயிற்றுவிக்கும் வகுப்புக்களை ஓராண்டுக்குள் நடத்தி முடிப்பது.

12 கிராமப்புறக் கட்சிக்கிளைகளின் மூலமும், இன்று கிராமப்புறங்களில் ஓரளவு வளர்ந்து வரும் வாலிபர் இயக்கத்தின் மூலம் கூர்மையாக முன்னுக்கு வரும் பிரச்சனைகள் மீது இயக்கங்கள், போராட்டங்கள் நடத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுவது ஆகிய கடமைகளை உறுதியாக நிறைவேற்றுவதன் மூலமும் ஒரு சக்திவாய்ந்த விவசாய இயக்கத்தை கட்டிவளர்க்க உறுதி எடுத்துக் கொள்வோம்.

★ ★ ★ ★

வாலிபர் அரங்கம்

1 வாலிபர் அரங்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியான இயக்கங்கள் மூலம் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் பரவலான அறிமுகத்தையும் பொதுவான நன்மதிப்பையும் பெற்றுள்ளது. 1985-ல் 76,538 உறுப்பினர்களும் 2,080 கிளைகளும் இருந்த நிலையிலிருந்து 1987-ம் ஆண்டில் 1,44,135 உறுப்பினர்களும் 3,392 கிளைகளும் உள்ள அமைப்பாக வளர்ந்துள்ளது. 2-லட்சம் உறுப்பினர்கள் என்பதை இவ்வாண்டு குறியீடாக தீர்மானித்து முயற்சித்து வருகின்றனர்.

2 எல்லா அரசியல் கட்சிகளும் மோசம் என பொதுவாக பேசுவது வெளித்தோற்றத்திற்கு தீவிரவாதம் போல் காணப்படுவதால் இப்போக்கிற்கு ஒரு பகுதி இளைஞர்கள் விரைவில் ஆட்படுகிற போக்கு சமீபத்தில் அதிகரித்து வருகிறது. ஜாதீய சங்கங்கள் இவ்வகையில் இளைஞர்களிடையே உள்ள அதிருப்தியைத் தவறாக திசை திருப்புகின்றன.

3 இளைஞர்களை ஜனநாயக நீரோட்டத்திலிருந்து பிரித்து வைக்கும் சதித்திட்டத்தின் ஒரு பகுதிதான் இந்த (NONPOLITICAL) அரசியலற்ற பார்வை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதே கால கட்டத்தில் தி.மு.க. இளைஞர் அணியை வளர்க்க விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளைஞர் காங்கிரசும் லோன் பாரங்களுடன் உறுப்பினர் சேர்ப்பில் அக்கறை காட்டி வருகிறது. இந்நிலையில் தோழர். லெனின் மேற்கோள் ஒன்றை நாம் நினைவில் கொள்வது அவசியம். "இளைஞர்களை ஸ்தாபன ரீதியாக திரட்டுவதிலும், செயலில் ஈடுபடத் தூண்டுகோல் போடுவதிலும் நீங்கள் தவறினால் அவர்கள் மென்ஷவிக்குகளை (திருத்தல்வாதிகளை) காபோன்களை (மதவாதிகளை) பின்பற்றிச் செல்வார்கள். இது அவர்கள் அனுபவமின்மையால் ஏற்படும் கேட்டினைவிட ஐந்து பங்கு பெருங்கேட்டினை உருவாக்கும்" என்ற எச்சரிக்கை இன்றைய தமிழகத்திற்கு மிகவும் பொருந்தும்.

சில முக்கிய வேலைகள்

★ 4) 1985 ஆகஸ்ட் வேலை கேட்டு மறியல் 168 இடங்களில் 15,654 பேர்கள் கைதாகினர். இம்மறியலையொட்டி "மனிதனாக வாழ்ந்திட வேணும் மனதில் வையடா" எனும் பிரசுரம் 15,000 அச்சிட்டு விற்கப்பட்டது.

★ 1986 ஜூன் 1-7 ஒரு வார காலம் ஜாதி, மத பிரிவினை எண்ணங்களுக்கு எதிராக வகுப்பு நல்லிணக்க வாரம் கடைப்பிடிக்கப்பட்டது.

★ 1987-ல் ஏப்ரல் 3, 4, 5 தேதிகளில் விருதுநகரில் மாநில மாநாடு நடைபெற்றது. பக்கத்து மாவட்டங்களை மட்டுமே திரட்டி இம்மாநாடு நல்ல முறையில் நடைபெற்றது, குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து வீடு வீடாக சென்று நிதியைத் திரட்டிய முறை இம்மாநாட்டின் தயாரிப்புகளில் சிறந்த ஒரு அம்சமாகும்.

★ 1987-ம் ஆண்டு நடைபெற்ற அகிலஇந்திய மாநாடு நமக்கு ஒரு நல்ல படிப்பினை. தோழர் பிஆர் மறைவினால் ஏற்பட்ட சிரமங்களும், சிக்கல்களும் இருந்த போதிலும் மாநாட்டினை வெற்றிகரமாக நடத்த முடிந்தது. அது சம்பந்தமாக சில தகவல்கள்.

வீடு வீடாக சென்று நிதி வசூலிக்கும் முறை நல்லபிரச்சார யுத்தியாக அமைந்தது. சென்னையில் 78 நாட்கள் 100குழுக்கள் இவ்வாறு செயல்பட்டன. பிற மாவட்டங்களிலும் இம்முறை ஒரளவு பின்பற்றப்பட்டது. மாநிலம் முழுவதிலும் 2,172 கிளைகள் 11, 310 ஊழியர்களை ஈடுபடுத்தியது. கிளை அளவில் செலவிட்டது உட்பட கணக்கிட்டால் சுமார் 8.5 லட்சம் நிதி வசூலிக்கப்பட்டது.

பேரவைக் கூட்டங்கள் மூலம் 13, 420 பேரை சந்தித்து மாநாடு குறித்து விளக்கப்பட்டது.

11, 87, 700 துண்டு பிரசுரம், 16, 775 சுவரொட்டி, 535 இடங்களில் பெரிய அளவில் சுவரெழுத்து, 374 சினிமா சிலைடுகள், 1, 804 தெருமுனைக் கூட்டங்கள், 250 பொதுக் கூட்டங்கள்.

13, 000 தீக்கதிர் விற்கப்பட்டது. 17,000 இளைஞர் முழக்கம் விற்கப்பட்டது.

பேரணியில் 177 பஸ், 104 லாரி, 220 ஜீப் மற்றும் ரயில், ஆந்திராவிலிருந்து 42லாரி, கர்நாடகாவிலிருந்து ரயில் மூலம் ஆக ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் 60 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் வரை பங்கேற்றிருப்பர் பார்வைக்கு 2-லட்சம் என்கிற உணர்வை ஏற்படுத்தியது.

...தி சங்க கிளர்ச்சிகள், காங்கிரஸின் தொழில்துறை தேக...் குறித்த பேச்சுக்கள் இப்பின்னணியில் 1988 மே 25, 26, 2... தேதிகளில் தமிழகத்தொழில் வளர்ச்சி, எல்லோருக்கும் வே... என்கிற கோரிக்கைகளுக்காக நடந்த பிரச்சார யாத்திரை ...குறிப்பிடத்தக்கது. மதுரை, அன்னூர், சேலம் தவிர பிற ...வட்டங்களில் நல்ல வரவேற்புடன் நடைபெற்றது.

★ 1987-ல் ஏப்ரல் 3, 4, 5 தேதிகளில் விருதுநகரில் மாநில மாநாடு நடைபெற்றது. பக்கத்து மாவட்டங்களை மட்டுமே திரட்டி இம்மாநாடு நல்ல முறையில் நடைபெற்றது, குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து வீடு வீடாக சென்று நிதியைத் திரட்டிய முறை இம்மாநாட்டின் தயாரிப்புகளில் சிறந்த ஒரு அம்சமாகும்.

★ 1987-ம் ஆண்டு நடைபெற்ற அகிலஇந்திய மாநாடு நமக்கு ஒரு நல்ல படிப்பினை. தோழர் பிஆர் மறைவினால் ஏற்பட்ட சிரமங்களும், சிக்கல்களும் இருந்த போதிலும் மாநாட்டினை வெற்றிகரமாக நடத்த முடிந்தது. அது சம்பந்தமாக சில தகவல்கள்.

வீடுவீடாக சென்று நிதி வசூலிக்கும் முறை நல்லபிரச்சார யுத்தியாக அமைந்தது. சென்னையில் 78 நாட்கள் 100குழுக்கள் இவ்வாறு செயல்பட்டன. பிற மாவட்டங்களிலும் இம்முறை ஓரளவு பின்பற்றப்பட்டது. மாநிலம் முழுவதிலும் 2,172 கிளைகள் 11, 310 ஊழியர்களை ஈடுபடுத்தியது. கிளை அளவில் செலவிட்டது உட்பட கணக்கிட்டால் சுமார் 8.5 லட்சம் நிதி வசூலிக்கப்பட்டது.

பேரவைக் கூட்டங்கள் மூலம் 13, 420 பேரை சந்தித்து மாநாடு குறித்து விளக்கப்பட்டது.

11, 87, 700 துண்டு பிரசுரம், 16, 775 சுவரொட்டி, 535 இடங்களில் பெரிய அளவில் சுவரெழுத்து, 374 சினிமா சிலைடுகள், 1, 804 தெருமுனைக் கூட்டங்கள், 250 பொதுக் கூட்டங்கள்.

13, 000 தீக்கதிர் விற்கப்பட்டது. 17,000 இளைஞர் முழக்கம் விற்கப்பட்டது.

பேரணியில் 177 பஸ், 104 லாரி, 220 ஜீப் மற்றும் ரயில், ஆந்திராவிலிருந்து 42லாரி, கர்நாடகாவிலிருந்து ரயில் மூலம் ஆக ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் 60 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் வரை பங்கேற்றிருப்பர் பார்வைக்கு 2-லட்சம் என்கிற உணர்வை ஏற்படுத்தியது.

..தி சங்க கிளர்ச்சிகள், காங்கிரஸின் தொழில்துறை தேக்..ம் குறித்த பேச்சுக்கள் இப்பின்னணியில் 1988 மே 25, 26, 2.. தேதிகளில் தமிழகத்தொழில் வளர்ச்சி, எல்லோருக்கும் வே.. என்கிற கோரிக்கைகளுக்காக நடந்த பிரச்சார யாத்திரை குறிப்பிடத்தக்கது. மதுரை, அன்று, சேலம் தவிர பிற ..வட்டங்களில் நல்ல வரவேற்புடன் நடைபெற்றது.

சென்னையில் நடந்ததும், ஜாதி பிரச்சனைக்கு மத்தியில் தென் ஆற்காட்டில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் அரசு ஊழியருக்கு ஆதரவாக முதலில் சென்னையில் 102 பேர் 27. 6. 88 அன்று கைதாகினர். 8. 7. 88 அன்று ஒரு வாரத் தயாரிப்பில் சுமார் 8, 400 பேர்களை இம்மறியலில் நம்மால் ஈடுபடவைக்க முடிந்தது. 125-க்கும் அதிகமான மையங்களில் நடைபெற்றது. இது 10-லட்சம் ஆசிரியர் அரசு ஊழியர் மத்தியில் நம் அமைப்பை அறிமுகப்படுத்த நன்கு உதவியது. சகோதர ஆதரவில் ஒரு நல்ல மாதிரியை ஏற்படுத்த முடிந்தது.

5 பன்முகப்பார்வை

வாலிபர் அரங்கம் என்பது பலதரப்பட்ட வர்க்க இளைஞர்களைக் கொண்டது. பல்வேறு கட்சி அனுதாபிகள் உண்டு. 15 வயதிலிருந்து 40 வயது வரை உள்ள இளைஞர்கள் உள்ளனர். இதில்வயதுக்கேற்ப தரமும் ஆர்வ ஈடுபாடும் வேறுபடும். இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்து, கலை, இலக்கியம், விளையாட்டு, சமூக சேவை, விஞ்ஞான பிரச்சாரம் என பன்முக நடவடிக்கைகளில் வாலிபர் சங்கம் ஈடுபடவேண்டும்.

''வருடந்தோறும் மதுரையில் ஜனநாயக வாலிபர் சங்கம் நடத்திவரும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பாராட்டுக்குரியவை. இவற்றில் பங்கேற்ற பல இளைஞர்களும் அகில இந்திய போட்டிகளில்கூட பரிசுகளைப் பெற்றுள்ளனர். ஆனால் பிற மாவட்டங்களில் இத்தகைய முயற்சி குறிப்பிடும் அளவிற்கு நடைபெறவில்லை. கோவை, சென்னை மாவட்ட குழுக்கள் இரத்ததான முகாம்களை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

6 ஸ்தல இயக்கங்கள்

வாலிபர் சங்கக் கிளைகளின் அன்றாடச் செயல்பாடு என்ன என்கிற கேள்விக்கு ஸ்தல இயக்கங்களும், பன்முக நடவடிக்கைகளும் என்றே பதில் சொல்ல வேண்டி வரும். பல்வேறு தொடர்ச்சியான வேலையின் காரணமாக . சமீபத்தில் ஸ்தல வேலைகள் முன்னைவிட குறைந்துள்ளது. இதனை உடைத்து ஸ்தல வேலைகளில் வாலிபர் சங்கக் கிளைகளை ஈடுபட வைப்பது கிளை உயிரோட்டமாக செயல்பட உதவிடும். இந்த கால கட்டத்தில் ஸ்தல வேலைகள் நடக்காமல் இல்லை. ஆனால் வளரும் தேவைக்கு போதுமானதாக இல்லை.

7 இளைஞர் முழக்கம்

இளைஞர் முழக்கம் இடைவிடாது தொடர்ந்து வெளி

வருகிறது. 15 ஆயிரம் பிரதிகள் விற்கின்றன, மாவட்டங்கள் கடன் வைப்பதைப் பொறுத்து விற்பனை 13 ஆயிரத்திற்கும், 15 ஆயிரத்திற்கும் மாறிமாறி அச்சிடப்படுகிறது.

"நமது பத்திரிக்கை அமைப்பின் நாவாகவும், அமைப்பாளராகவும் செயல்பட வேண்டும்" என்கிற நோக்கில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி, குமரி, தென்னாற்காடு, அண்ணா, பெரியார் என சில மாவட்டங்களே விற்பனையில் தனிக்கவனம் செலுத்துகின்றன. கடன் வாங்குவதை தவிர்த்து விற்பனை செய்தால் ஒவ்வொரு மாதமும் திணறல் இல்லாமல் வெளிவரும். உண்மையில் மாதம் ஒரு முறை தாலுகா தலைநகர்களில் பஸ்களில், பொது இடங்களில் விற்பது என்கிற முயற்சியைக் கையாண்டால் 20 ஆயிரம் பிரதிகள் உடனடியாக சுலபமாக விற்க முடியும்.

8. மாநில மையம்

மாநில மைய செயல்பாடு அதிகரித்துள்ளது. மாதம் ஒரு முறையாவது மையத்தில் சு.பொ. அகத்தியலிங்கம், ரவீந்திரன், பாக்கியம், கருணாநிதி என நால்வரில் மூவராவது கூடிப் பேசி செயல்படும் நிலை உள்ளது. புதிய அலுவலகம் மையமான இடத்திற்கு (சென்னை அண்ணா சிலை அருகில்) வந்த பிறகு செயல்பாடுகள் அதிகரித்துள்ளன. மையத்தில் ரவீந்திரன், அகத்தியலிங்கம் இருவரும் முழுநேர ஊழியராக அலவன்ஸ் பெற்று வருகிறார்கள். மனோகரன் அலுவலகச் செயலாளராக உள்ளார். அவருக்கு இளைஞர் முழக்கத்திலிருந்து அலவன்ஸ் தரப்படுகிறது. அகஸ்டின் என்கிற தோழருக்கு சிறு ஊதியம் கொடுத்து அலுவலகப் பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது

மாநில மையம் தேவைப்படும்போது கோவிந்தசாமி, இளங்கோ இவர்களுக்கும் தகவல் கொடுத்து கூட்டப்படுகிறது. இவ்வாறு செய்வதால் கூட்டாக செயல்படும் நிலை அதிகரித்துள்ளது.

9. ஸ்தாபனம்.

1984-ல் 17 மாவட்டக்குழுக்கள் 122 இடைக்கமிட்டிகள், 2,080 கிளைகள், 67,163 உறுப்பினர்கள் என இருந்தது. 1987 நிலவரப்படி 18 மாவட்டக்குழுக்களும், 150 இடைக்கமிட்டிகளும் 3,392 கிளைகளும், 1,44,135 உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாண்டு மேலும் பல கிளைகள் உருப்பெறும். வாலிபர் சங்கத்தின் ஸ்தாபனத்தில் ஏற்படும் ஊழியர் பிரச்சனையை தவிர்க்க கிளை மற்றும் இடைக்கமிட்டி மாநாடுகளை ஆண்டு தோறும் நடத்து

வது என்கிற முடிவு அகில இந்திய கமிட்டியின் வழிகாட்டுதலோடு எடுக்கப்பட்டது. இவ்வாண்டு இம்மாநாடுகள் நடைபெற்று வருகின்றன.

10. ஊழியர் பிரச்சனை

அ. உரிய மாற்று ஏற்பாடு இல்லாமல் வாலிபர் அரங்க பொறுப்பான ஊழியர்களை வேறு பணிக்கு மாற்றும் நிலை உள்ளது.

ஆ. வாலிபர் அரங்க நிர்வாகிகளை மாற்றும் போது ஸ்தாபனத்தின் ஜனநாயக முறை மீறப்படுகிறது. இது இவ்வரங்கின் ஜனநாயகத் தன்மையை பாதிக்கிறது

இ. கோவை, தஞ்சை போன்ற வளர்ச்சியடைந்த மாவட்டத்திலேயே இவ்வரங்கை முழுமையாக கவனிக்க ஊழியர் இல்லை. முக்கிய பொறுப்பாளர்கள் வேறு பல வேலைகளையும் செய்து, இந்த அரங்கப்பணிகளை செய்ய வேண்டியுள்ளது. பொதுவாகவே இவ்வரங்கப் பொறுப்பாளர்களும், பல பணிகளில் ஒன்றாக இவ்வரங்கப் பணியை சுருக்கிவிடுகின்றனர்.

ஈ. சுமார் 3,400 கிளைகளையும், 150 இடைக் கமிட்டிகளையும் இயக்குவிக்க தேவையான ஊழியர்கள் இல்லை. (1) மாவட்ட அளவில் குறைந்த பட்சம் ஒருவர் முழுநேர ஊழியராக இருக்க வேண்டும், (2) வட்ட அளவில் பகுதி நேர ஊழியர்கள் வேண்டும்,

உ. தகுதியான தோழர்கள் சிலரை இவ்வரங்கில் நீடிக்கச் செய்ய வேண்டும். வட்டங்களில், கட்சிக் கமிட்டியில் இதற்கென ஒருவரை பொறுப்பாக்க வேண்டும். வருடந்தோறும் வட்ட, கிளை மாநாடுகளை நடத்தி தக்க ஊழியர்களை அடையாளம் கண்டு பயன்படுத்த வேண்டும்.

ஊ. மாநிலம் முழுவதும் சென்று பிரச்சாரம் செய்ய, வகுப்புகள் எடுக்க, ஸ்தாபனத்தை வழிநடத்த, பத்திரிக்கை கொணர என ஆக பல்வேறு பணிகளை நிறைவேற்றிட மாநில மையத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

11. கடமைகள்

இப்போது சென்னை, கோவை மாவட்டக் குழுக்களுக்கே தனி அலுவலகம் உள்ளது. எல்லா மாவட்டங்களிலும் அலுவலகம் அமைவது நல்லது.

சில இடங்களில் வாலிபர் சங்க இயக்க சம்பந்தமான முடிவுகள் அமுலாவதில் முரண்பாடுகள் வருகின்றன. கட்சிக்கமிட்டிகள் இந்த முரண்பாட்டை தவிர்க்க வேண்டும். வாலிபர் சங்க

மாநிலக்குழு முடிவுகளை மாவட்டக்குழுக்கள் கறாராக அமுலாக்க மாவட்ட கட்சி கமிட்டிகள் உதவ வேண்டும்.

இந்த அமைப்பில் கட்சிக் கல்வி தொடர்ந்து நடைபெற வேண்டும். பல்வேறு அந்நிய கருத்துக்களோடு வரும் வாலிபர்களுக்கு நமது கண்ணோட்டத்தை உருவாக்கிட தொடர்ந்து கல்வி போதனையில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கருத்தரங்குகள், விரிந்த அளவில் கருத்து பிரச்சாரம் செய்ய வல்லது. பொதுக்கூட்டங்கள், பேரவைகள் என பொதுவாக நடத்துவது போக குறிப்பிட்ட தலைப்புகளில் கருத்தரங்குகளில் ஒன்றிரண்டு பேரை பேச செய்வதும், இதில் நூற்றுக்கணக்கில் பங்கேற்கச் செய்வதும் சிறந்த கருத்துப் பிரச்சாரம் ஆகும். இவ்வரங்கத் தோழர்களை இப்பணியை செய்ய கட்டாயப் படுத்த வேண்டும்.

வேலையின்மைக்கு எதிரான போராட்டமும், தேச ஒற்றுமைக்கான போராட்டமும் இவ்வரங்கில் வலுவாக்கப்பட வேண்டும். வேலையின்மைக்கு எதிரான போராட்டம் — தமிழக திட்டங்கள் — உணவுக்கான வேலைத் திட்டம் — வேலை வாய்ப்புரிமை — எல்லோருக்கும் வேலை — காலி இடங்களை நிரப்பக் கோரி — என கோரிக்கைகளை குறி வைத்து தொடர்ச்சியாக வலுவாக நடத்தப்பட வேண்டும். ஜாதி சங்கங்களின் சீர்குலைவு பிரச்சாரத்திற்கு தக்க பதிலாக அமையும்.

சிறுபான்மையோர், ஹரிஜனங்கள், மலை ஜாதியினர் இவர்கள் மத்தியில் இவ்வரங்கம் செயல்பட இப்பகுதியிலிருந்து இவ்வரங்க நிர்வாகிகளுக்கு (கிளையிலிருந்து துவக்கப்பட வேண்டும்) தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி கண்காணித்து வழிகாட்ட வேண்டும். (உதாரணம், சேலம், ஏற்காடு மலைப்பகுதியில் மலைவாழ் மக்கள் கோரிக்கை மாநாடு நடத்தியது. நம் கட்சி அங்கே செல்ல உதவியது).

இவ்வரங்கின் மூலம் தீக்கதிர் விற்பனை இயக்கம் நடத்த முடியும். அகில இந்திய மாநாட்டையொட்டி செய்த சோதனை முயற்சி இதை நிருபித்தது. இதைத் தொடர வேண்டும்.

★ சில மாவட்டங்களில் விவசாயிகள் சங்கம் உள்ளதைவிட அதிகமான கிராம, வட்டார தொடர்புகள் வாலிபர் சங்கத்திற்கு இருக்கிறது. இத்தொடர்புகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு இவ்வரங்க ஊழியர்களை கட்சிக்கு கொண்டு வருவதற்கான விசேஷமான கவனம் செலுத்

வேண்டியுள்ளது. இதை ஒரு முக்கிய கடமையாக கட்சி கமிட்டிகளும், கிளைகளும் பார்க்க வேண்டும்.

★ கிராமப் புறங்களிலிருக்கும் வாலிபர் சங்க ஊழியர்களுக்கு விவசாயிகள் பிரச்சனை சம்பந்தமாக வகுப்புகள் நடத்துவதற்கும் படிப்படியாக அவர்களை விவசாயிகள் அரங்கப் பணியில் ஈடுபடுத்துவதற்கும் முயற்சி செய்வது அவசியம். கிராமப்புறங்களில் வேலையில்லாத வாலிபர்களின் விசேஷ கோரிக்கைகளை முன்வைத்து இயக்கங்களை உருவாக்க வேண்டும்.

★ தாழ்த்தப்பட்ட ஜாதிகளைச் சேர்ந்த வாலிபர்களை திரட்டுவதற்கும், வாலிபர் இயக்கம் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த பணியினை திட்டமிட்ட முறையில் நடத்த வேண்டும்,

★ பெண்களை அதிகமாக சேர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

★ மாணவர் இயக்கத்தைக் கட்டும் பணியில் அதிகமாக கவனம் செலுத்தி, உதவிகளை செய்ய வேண்டும்.

12. வாய்ப்பு

18—வயது ஆனவர்களுக்கு வாக்குரிமை என்ற நிலைமை ஏற்படும்போது, அனைத்து கட்சிகளும் இளைஞர்களை ஈர்க்க தீவிரமாக முயல்வார்கள். ஜாதி, மத அமைப்புக்களும் அதிகமாக செயல்படும். மறுபக்கத்தில் பொதுவாக வேலையின்மை, சமூக கொடுமைகள் ஆகியவற்றின் விளைவாக வாலிபர் மத்தியில் வளரக் கூடிய மனக்கொதிப்பு அதிகமாகும் என்பதை உணர்ந்து அவர்களின் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து சரியான திசை வழியில் அவர்களை திரட்டும் வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்பதை உணர்ந்து கட்சி இவ்வரங்கத்தில் பணியாற்ற வேண்டும்.

— [illegible]

— [illegible] ★

மாதர் அரங்கம்

1. சமீப காலத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஸதி, வரதட்சணை போன்ற பெண்கள் மீதான கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் உள்ளிட்ட கிராமப்புற ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்கள் விசுவரூபமெடுத்துள்ளன. மதத்தின் பெயரால் முஸ்லீம் பெண்களின் தாழ்ந்த நிலைமையை மேலும் கீழிறக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, சமஊதியம் போன்றவற்றில் உழைக்கும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் தொடர்ந்து நீடிக்கின்றன. அதேசமயம், இவைகளை எதிர்த்து மாதர் அமைப்புகள் என்றுமில்லாத அளவு புதிய விழிப்புணர்வுடனும், எதிர்ப்புணர்வுடனும்போராடி வருகின்றன. பல்வேறு பிரச்சனைகளில் நாடு தழுவிய அளவில் மாதர் அமைப்புகள் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒருங்கிணைந்து வருகின்றன. இந்தசூழ்நிலையில் தமிழ் நாட்டிலும் மாதர் சங்கம் கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொண்ட இயக்கங்களை பரிசீலிப்போம்.

முக்கிய இயக்கங்கள்

2. அரசியல் இயக்கங்கள்

கோவையில் நடைபெற்ற கட்சியின் அரசியல் மாநாட்டிற்கு பெண்களைத் திரட்டும் முறையில் கோவை மாவட்டத்திலும் மற்றும் பல மாவட்டங்களிலும் பிரச்சார இயக்கமும் நடைபெற்றது. சிறப்புமிக்க இந்த மாநாட்டில் கணிசமாகப் பெண்கள் வந்துகலந்து கொண்டது நமது அரசியல் நிலைபாடு சம்பந்தமாக புதிய சிந்தனையை உருவாக்க உதவியது. கோவை மாவட்ட மாதர் இயக்கத்தில் இதன் பிரதிபலிப்பைக் காண முடியவில்லை.

3. இடது சாரி வெகுஜன அமைப்புகளின் பிரச்சார பயணம்

1987 நவம்பரில் நமது மாநிலத்தில் எல்லா மட்டங்களிலும் பெண்களைத் திரட்டி பயணக்குழுவிற்கு வரவேற்பு கொடுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயணத்தில் பெண்களை பங்கு பெறச் செய்யாதது ஒரு குறைபாடாகும்.

4. மார்ச் 15 பாரத் பந்த்

வரலாற்றுச் சிறப்புமிக்க ''பாரத் பந்த்'' குறித்து எல்லா மாவட்டங்களிலும் பெண்கள் செயல்பட்டனர். 14அம்ச கோரிக்

கைகளை விளக்கி 42-ஆயிரம் துண்டுப் பிரசுரங்களும், 1200 சுவரொட்டிகளும் 1378 மையங்களில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. பெண்களது தெளிவான அரசியல் பேச்சுக்களைகேட்ட மக்கள் மத்தியில் நல்ல பிரதிபலிப்பைஏற்படுத்தியது. பந்த்அன்று பஸ் மறியலில் போடி, காரைக்குடி, சங்ககிரி பகுதிகளில்பெண்கள் கைது செய்யப்பட்டனர். புதுடெல்லியில் தோழர் பிருந்தாகாரத் தாக்கப்பட்டதைஎதிர்த்து எல்லா மாவட்டங்களிலும் பெண்களது ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

நெல்சன் மாண்டேலாவை விடுதலை செய்யக் கோரி 22 ஆயிரம் கையெழுத்துக்கள் பெற்று அனுப்பப்பட்டன. தந்திகளும் தரப்பட்டன

5 சமாதான மாநாடுகள்

1987 ஜூனில் கல்கத்தாவில் தேசிய அளவிலான சமாதான மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்து 26-பிரதிநிதிகள் சென்று வந்தனர். இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தை விளக்கி 25-ஆயிரம் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டது.

மாநில ரீதியில் சமாதான மாநாட்டை நடத்த வேண்டுமென்ற கல்கத்தா மாநாட்டின் அறைகூவலையொட்டி திருச்சியில் மாநில மாநாடு ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் 6-ம் தேதி ஹிரோஷிமா தினத்தன்று நடைபெற்றது. இந்த மாநாடு, சமாதானத்திற்கான பிரச்சாரத்தை நம்அணிக்கு அப்பாலுள்ள மக்கள் மத்தியிலும் எடுத்துச் சென்றுள்ளது குறிப்பிட வேண்டிய விஷயமாகும்.

ஒரு நாள் மாநாடாக இருந்த போதிலும் வெற்றிகரமாக நடைபெற்றது. 779 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். படக்காட்சி, சிலேடு ஷோ பயனுள்ளதாக அமைந்தது. சமாதானம், யுத்தம் என்ற பிரச்சனை நமக்கு சம்பந்தம் இல்லாதது அல்ல; மக்களின் வாழ்வுடன் சம்பந்தமுள்ளது என்பது தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களில் விளக்கப்பட்டது. 90,500 துண்டு பிரசுரங்களும், 794 தெருமுனைக் கூட்டங்களும், 2000 போஸ்டர்களும் மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன. இப்பூவுலகம் அழியணுமா என்ற பிரசுரம் 10-ஆயிரம் பிரதிகள் விற்கப்பட்டன. மாலை பேரணியில் கொட்டும் மழையிலும் 3020 பெண்கள் பங்கு கொண்டனர். பொதுக்கூட்டம் மழை காரணமாக முழுமையாக நடத்த முடியவில்லை. திருச்சியில் 22ஆயிரம் ரூபாய் நிதியும், தமிழகம் முழுவதும் 50ஆயிரம் வரை நிதியும் வசூலிக்கப்பட்டது. வானொலியில் பூவையர் பூங்கா நிகழ்ச்சியில் மாநாட்டின் நிகழ்ச்சி

கள் தொகுக்கப்பட்டு 25நிமிடங்கள் ஒலிபரப்பாகியது. அன்றாடம் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளிலிருந்து வேறுபட்ட நிலையில் இந்த சமாதான மாநாடு மக்களிடம் வரவேற்பைப்பெற்றது. பத்திரிகைகளிலும் பிரசுரம் ஆனது.

6 மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம்

இதுதொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. 1987-ல் மாநில மையத்தில் அச்சிட்டு அனுப்பப்பட்ட 20ஆயிரம் பேட்ஜுகள் விநியோகிக்கப்பட்டன. ஆலைவாயில் கூட்டங்கள் பலநடத்தப்பட்டன. சென்னையில் கூட்டமும் நாடக நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. 1988 மார்ச் 8 அன்று பெண்கள் மீதான கொடுமைகளை தடுக்க சட்ட திருத்தங்கள், வழிமுறைகளைக் கூறும் மகஜர் அரசு அதிகாரிகளிடம் அளிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

சோவியத் கலாச்சார கழகம், மற்ற மாதர் அமைப்புகள் நடத்திய நிகழ்ச்சிகளிலும் நம் பிரதிநிதிகள் சென்று பேசினர். எனினும் இந்த இயக்கங்களின் சர்வதேச முக்கியத்துவத்தை உணர்ந்து சக்தியாகத்திரட்டி நடத்தப்படவில்லை. பற்பல வேலைகளுக்கு இடையில் சம்பிரதாய பூர்வமாக நடத்தப்படும் இயக்கமாகவே இது பெரும்பாலும் அமைந்தது.

7 சர்வதேச குழந்தைகள் தினம்

இது ஜூன் 1ம்தேதி தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் இத்தினத்திற்குள்ள முக்கியத்துவம் உணர்த்தப்படும் வகையில் நடத்தப்பட்டதாகக்கூற முடியாது. 1987-ல் ''பாலர் சங்கம்'' அமைப்பு இத்தினத்தன்று அமைக்கும் ஏற்பாடு தஞ்சை, குமரி, சென்னை, மதுரை, திருச்சி, நெல்லை போன்ற மாவட்டங்களில் ஓரளவு நடைபெற்றது. உறுப்பினர் சேர்ப்பும் நடைபெற்றது. ஆனால்இம்முயற்சிகளை தொடர முடியவில்லை.

1988ம் ஆண்டு குழந்தைகள் தினத்தன்று குமரிமாவட்டத்தில் 1400 குழந்தைகளும், சென்னையில் 400 குழந்தைகளும், திருச்சியில் 180 குழந்தைகளும், மதுரையில் 210குழந்தைகளும் ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சிவகாசியில் உழைக்கும் குழந்தைகளது ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

8. பாரதத்தைப் பாதுகாப்போம்

நாட்டு ஒற்றுமையை வலியுறுத்தும் முறையில், நாடு தழுவிய முறையில் நடத்தப்பட்ட பயனுள்ள இயக்கம் இது. தமிழகத்தில் 1988 ஜனவரி 20 முதல் 26 முடிய ஒருவார காலம் அனுஷ்டிக்கப்பட்டது. ''தேசத்தைக் காப்போம், நேசத்தை வளர்ப்போம்''

என்ற பிரசுரம்; (60காசுகள்) 20 ஆயிரம்பிரதிகள் விற்கப்பட்டது. சென்னை நகரில் ''இந்தியாவை வென்றெடுப்போம்'' என்று நாம் நடத்திய கருத்தரங்கில் பல்வேறுதரப்பட்ட பிரமுகர்கள் பல தலைப்புகளில் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சி டி. வி. யிலும் இடம் பெற்றது. திருச்சி, மதுரை, பாண்டிச்சேரி, சேலம் மற்றும் பல பகுதிகளில் கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள், தெவட்டி ஊர்வலம், குழந்தைகளின் அணிவகுப்புகள் ஆகியவை இடம் பெற்றன. 93ஆயிரம் துண்டுபிரசுரங்கள், சுவரொட்டிகள், 2123 மையங்களில் தெருமுனைக்கூட்டங்கள் ஆகியவை மூலம் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

9. 987 மார்ச் 31 - சென்னைப் பேரணி

பெண்கள் மீதான கொடுமைகள், குடிதண்ணீர், நியாய விலைக் கடைகளின் பிரச்சனைகளுடன் பிரதான்மாக கிராமப்புற பெண்களின் கோரிக்கைகளையும் முன் வைத்து நடத்தப்பட்ட இயக்கம் இது. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தேசிய மாநாட்டின் அறைகூவல்படி இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

கோரிக்கை மகஜரில் கையெழுத்து வாங்கும் இயக்கமும், பிரச்சார இயக்கமும் சேர்ந்து நடத்தப்பட்டதால் கையெழுத்து பெறுவதில் போதிய கவனம் செலுத்த முடியவில்லை. 62ஆயிரம் கையெழுத்துக்கள்பெறப்பட்டன. சென்னை நகரிலும் புறநகர் பகுதியிலும் மாநிலம் முழுமையும் தெருமுனைப் பிரச்சாரக்கூட்டங்கள் 482 வரை நடத்தப்பட்டது. ஒன்றரை லட்சம் ரூபாய் வரை வசூலிக்கப்பட்டது. மற்ற பல இயக்கங்களைக் காட்டிலும் வீடு வீடாக சென்றதும், மக்களிடம் கோரிக்கைகளைக் கொண்டு சென்றதும், இதில் கூடுதலாக நடைபெற்றது. பேரணியில் 1335 பெண்கள் கலந்து கொண்டனர். இதில் சென்னை 2004, செங்கற்பட்டு 650 ஆகும். காமராஜர், அண்ணா மாவட்டங்கள் தவிர்த்து 16மாவட்டங்கள் வாகனங்களில் பெண்களை அனுப்பின. சென்னை மாவட்ட கட்சியின் முழு ஒத்துழைப்பும் சகோதர அமைப்புகளின் வரவேற்பும் இந்த பேரணியின் வெற்றிக்கு உதவியது.

10. விலைவாசி உயர்வு எதிர்ப்பு இயக்கம்

ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் இப்பிரச்சனையில் தொடர்ச்சியான இயக்கங்கள் பல வடிவங்களில் நடத்தப்பட்டு வருகிறது. 1988 பிப்ரவரி 1—ம் தேதி நாடு தழுவிய முறையில் பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டது. நமது மாநிலத்தில் பரவலாகவும், விரிவாகவும் பிரச்சாரம் எல்லா மட்டங்களிலும் நடந்து

பட்டது. ஏறத்தாழ 3-லட்சம் மக்களிடம் பிரச்சாரம் கொண்டு போகப்பட்டது. மிக அதிகமான தெருமுனைக் கூட்டங்கள்-சில கூட்டங்கள் பொதுக்கூட்டங்கள் போல மக்கள் திரண்டனர். 87 ஆயிரம் துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

11. மனித சங்கிலி

1988-மார்ச் 2-ம் தேதி மத்திய பட்ஜெட் வரிகளைக் கண்டித்து மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னையில் அண்ணாசாலை தபால் நிலையத்தையும், எல்டாம்ஸ் ரோடு தபால் தந்தி அலுவலகத்தையும் முற்றுகையிடும் வகையில் மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தப்பட்டது. 780-க்கும் அதிகமான பெண்கள் கைகோர்த்து கோரிக்கை அட்டை பிடித்து நின்ற காட்சி கம்பீரமாக இருந்தது.

தமிழகத்தில் மாதர் சங்கம் இத்தகைய வடிவத்தில் முதன் முதலாக நடத்திய போராட்டம் இது.

12. ரேஷன் கடை முறைகேடுகளை எதிர்த்து

தொடர்ச்சியான பல்வகை இயக்கங்களும், போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. ரேஷன் கடைகள், அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் விரிவான முறையில் நடைபெற்றுள்ளன. சமீபத்தில் சென்னையில் நாம் தொடர்ச்சியாக ரேஷன் கடைப் பிரச்சனைகளில் நடத்திய இயக்கங்களையொட்டி நமது பெண்களை அரசுஅமைத்த ''கண்காணிப்புக் குழு''க்களில் இணைத்துக்கொண்டு சில பல பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் வாய்ப்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சனையில் 1988 செப்டம்பர் 26-ம் தேதி தஞ்சை மாவட்டம்முழுவதும் 11-மையங்களில் மறியல் நடத்தப்பட்டது. 2165பெண்கள் பங்கு கொண்டு கைதானார்கள். இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

வறட்சி

1987 அக்டோபர் 5-ம் தேதி நிவாரணம் கோரி மாநிலம் முழுவதும்112 மையங்களில் தர்ணா நடத்தப்பட்டது. 4751 பெண்கள் பங்கு கொண்டனர். வறட்சி கடுமையாக நிலவிய நேரத்தில் இயக்கமும் கோரிக்கைகளும் மக்களிடம் ஆதரவு பெற்றது.

13. ஆபாச திரைப்படம் மற்றும் விளம்பரத்திற்கு எதிரான இயக்கம்

இது அவ்வப்போது பல மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. சமீப காலமாக இப்பிரச்சனையில் 'நமக்கு அப்பாற்

பட்ட பகுதிகளிலிருந்தும் பெண்கள் ஆதரவு தருகின்றனர்.

14. மதப்பழமைவாதத்திற்கு எதிரான இயக்கங்கள்

முஸ்லீம் மக்களின் வாக்குகளைப் பெறும் குறுகிய அரசியல் நோக்குடன்-பழமை வாதத்திற்கு சரணடைந்து ராஜீவ் அரசு கொண்டுவந்த ''ஷரியத்'' சட்டத்தை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் ஆகியவை நடத்தப்பட்டது. சென்னை, பாண்டி, திருச்சி ஆகிய இடங்களில் இப்பிரச்சனையில் இதர மாதர் அமைப்புக்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இது குறித்து டெல்லி பாராளுமன்றம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்திலிருந்து 8-முஸ்லீம் பெண்கள் கலந்து கொண்டனர். பல்வேறு மாதர் அமைப்புக்களின் சார்பில் ஆளுநரிடம் கூட்டாக மகஜர் அளிக்கப்பட்டது.

15. சதி கொடுமைக்கு எதிரான இயக்கம்

1987 செப்டம்பர் ராஜஸ்தானில் ரூப்கன்வார் உடன் கட்டை ஏற்றப்பட்டது தொடர்பாக அக்டோபர் 17-ல் நாடு தழுவிய இயக்கம் நடத்தப்பட்டது. தமிழகத்தில் அக்டோபர் 24-ம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களும் கொடும்பாவி எரிப்பும் நடத்தப்பட்டன. 28 000 துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன மகஜரில் 13,000 கையெழுத்துக்கள் பெற்று டெல்லிக்கு அனுப்பினோம். மாவட்டங்களின் சார்பில் தந்திகள் கொடுக்கப்பட்டன. சதி மாதா என்ற பிரசுரம் 20,000 அச்சிடப்பட்டது. சென்னையில் பல்வேறு மாதர் அமைப்புக்களை அழைத்து கூட்டு இயக்கத்திற்கு திட்டமிட்டோம்

16 பால்ய விவாகத்திற்கு எதிராக

சிதம்பரம் கோவிலில் நடத்தப்பட்ட 42 குழந்தை திருமணத்திற்கு எதிராக நமது மாதர் சங்கம் ஆளுநர், அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றது. நமது கருத்தை துண்டுப் பிரசுரம் மூலம் கொண்டு சென்றுள்ளோம் சதி, தீண்டாமை கொடுமை ஆகியவற்றை ஆதரிக்கும் பூரி சங்கராச்சாரியாரை கைது செய்யக் கோரி ஒரு சில இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பொதுவாக, இக்காலத்தில் வலுவான பழமைவாதம் தலைதூக்கிய நிலையில், தமிழகத்தில் இப்பிரச்சனைகளில் முன்கையெடுத்து இயக்கம் நடத்திய அமைப்பு நமது அமைப்புதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இது நமது சங்கத்திற்கு பொதுவான மதிப்பை தேடித் தந்தது. —எனினும் பழமைவாதத்தால் பாதிக்கப்படும் பெண்கள்

மத்தியில் இதனைவிரிவாக எடுத்து சென்று அவர்களை ஆகர்ஷிக்கும் விதத்தில் இந்த இயக்கங்கள் நடந்ததாக கூறமுடியாது.

17 சென்னை நடுக்குப்பம் மீனவ மக்களுக்கு ஆதரவான இயக்கம்

4.12.85 அன்று சென்னை நடுக்குப்பம் மீனவர்கள் மீது நடந்த துப்பாக்கி சூட்டையொட்டி நமது சங்கம் சார்பில் இயக்கம் நடத்தியதுடன், வி.ஆர். கிருஷ்ணய்யர் தலைமையில் தகவல் ஆய்வுக்குழு ஒன்றும் நம்மால் அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையை ''கடலோரக் கண்ணீர் கதைகள்'' எனும் பெயரால் 10,000 பிரசுரங்கள் வெளியிட்டோம். நமது சங்கத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, எரிந்த வீடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என தீர்ப்பும் பெற்றோம். ஆனால் இந்தக் குப்பத்தில் தொடர்ச்சியாக தொடர்பு வைத்து இப்பகுதியில் ஸ்தாபனத்தை உருவாக்கும் பணி கவனிக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடு ஆகும்.

18 பெண்கள் மீதான கொடுமைகளுக்கு எதிராக இயக்கங்கள்

பெண்கள் மீதான கொடுமைகளுக்கு எதிராக தொடர்ச்சியான பல இயக்கங்களை நடத்தி வந்துள்ளோம். வரதட்சணை சாவு குறித்து நடவடிக்கை எடுக்கப்படாத வழக்குகள் மற்றும் கற்பழிப்பு, துன்புறுத்தல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோரின் பிரச்சனை குறித்து நாம் பல வடிவங்களில் தொடர்ந்து போராடி வருகிறோம். இது குறித்து டிசம்பர் 85ல் சென்னையில் ஐ.ஜி.அலுவலகம் முன்புஆர்ப்பாட்டம் நடத்தினோம். நாம் தொடர்ந்து எடுத்த முயற்சிகளின் விளைவாக 1988 ஜூனில் உள்துறை செயலாளர் நமது பிரதிநிதிகளை அழைத்துப் பேசினார். நமது சங்கம் சார்பில் சென்னையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட உதவி வழங்க ஏற்பாடு உள்ளது. இதுவரை 400-க்கும் மேற்பட்ட வழக்குகள் நம்மிடம் வந்துள்ளன. பாதிக்கப்படும்பெண்கள் ஆங்காங்கே நமது சங்கங்களை அணுகுவது என்பது அதிகரித்துள்ளது.

இப்பிரச்சனைகளில் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளும் இயக்கம் நமது இயக்கமே என்ற பிரதிபலிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆயினும், சட்ட ஆலோசனைக் குழுக்களில், அதில் வரும் வேலைப்பளுவை ஈடுகொடுத்து செய்யவும், அப்படிவரும் தொடர்புகளைத் தொடர்ச்சியாக தக்க வைத்துக்கொள்வதற்கான ஏற்பாடும்

நம்மிடம் போதுமானதாக இல்லை.

ஆதரவு இயக்கங்கள்

19 ஆசிரியர் - அரசு ஊழியர் போராட்டங்கள்

1987-ல் கல்லூரி ஆசிரியர்கள் நடத்திய ஒரு மாத கால போராட்டம், இந்த ஆண்டு அரசு ஊழியர் ஆசிரியர்கள் நடத்திய ஒரு மாத கால போராட்டம் ஆகியவற்றில் ஜனநாயக மாதர் சங்கத்தினர் பங்கு குறிப்பிடத்தக்கது. சென்னையில் தடையை மீறி 225பெண்கள் கைது, துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் வெளியிடுவது போன்ற ஆக்கபூர்வமான ஆதரவால் இப்பகுதியினரிடம் நல்லதொரு பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளது.

20 விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்

1987-ல் நமது சார்பிலும், 1988 செப்டம்பர் 12-முதல் 16 வரை இடதுசாரி கட்சிகளின் அமைப்புகள் சார்பிலும் நடைபெற்ற மறியல் போராட்டங்களில் ஜனநாயக மாதர் சங்கம் பங்கு கொண்டது. 1987ல் பல மாவட்டங்களில் பங்கு கொண்ட மறியலில் தென்னாற்காடு மாவட்டத்தில் மாதர் இயக்கப் பெண்கள் 25 பேர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். 1988செப்டம்பர் போராட்டத்தின் போது எல்லா மாவட்டங்களிலும் ஜனநாயக மாதர் சங்கம் விரிவான முறையில் பிரச்சாரத்திலும், பெண்களை திரட்டுவதிலும் பங்கு கொண்டது. 14,000 பெண்கள் வரை கைதான இப்போராட்டத்தில் மாதர்இயக்கத்தலைவர்கள், உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.

21. டி வி, வானொலி நிலையங்கள் முன்பு ஆர்ப்பாட்டம்

பாரத் பந்த் சமயத்தில் பொய்ப் பிரச்சாரம் செய்ததை எதிர்த்து கட்சியின் சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திலும், இந்திய ஜனநாயக வாலிபர்சங்கம்நடத்திய 2-வது அலைவரிசை தொடர்பான ஆர்ப்பாட்டத்திலும் ஜனநாயக மாதர் சங்கம் பங்கு பெற்றது. அதோடு, டி வி, வானொலியில் பெண்கள் பற்றிய நிகழ்ச்சிகளில் திட்டமிட மாதர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக்குழு அமைக்கக் கோரியும் மனுக்கள் தரப்பட்டன.

22. கூட்டு இயக்கங்கள்

மற்ற மாதர் அமைப்புகளுடன் கூட்டு இயக்கம் என்பதி மிகவும் சொற்பமே. பிரதானமாக சென்னை நகரிலும், ஓரளவு

பாண்டிச்சேரி, திருச்சி, கோவையிலும் நடைபெற்றுள்ளது. மற்ற மாவட்டங்களில் இல்லை.

மற்ற மாதர் அமைப்புக்களை பொறுத்தவரை அ இ ரீதியில் செயல்படும் என்எப் ஐ டபிள்யூ. -உடன் தான் நாம் இணக்கமானமுயற்சிகள் எடுப்பதுண்டு. நம்அமைப்பைப்போல, அனைத்து மாவட்டங்களிலும் அந்த சங்கம் தொடர்ச்சியான செயல்பாடுடன் இல்லை. தற்போது இரு பிரிவாக உடைந்து செயல்பாட்டில் தேக்க நிலையில் உள்ளது. தஞ்சை மாவட்டம் குடவாசல் பகுதியில் திமுக, அதிமுக குடும்பத்துப் பெண்கள் சிலர் ஸ்தல இயக்கங்களில் நம்முடன் சேர்கின்றனர்.

சென்னையில் மட்டும்தான் பல்வேறு அமைப்புக்களுடன் கூட்டு இயக்கத்துக்கு அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நம் பக்கமிருந்து கூட்டு நடவடிக்கைக்கான முயற்சிகளை மேற்கொள்வதில் உள்ள பலவீனம் களையப்பட வேண்டும்.

2?. பயிற்சி முகாம்

1) மார்க்சிஸம் ஓர் அறிமுகம்.
2) பிரபஞ்சம் மனிதன் தோற்றம்.
3) அரசியல் பொருளாதாரம்.
4) சட்டமும் பெண்களும் & மாதர் அரங்கக்கடமைகள்

—ஆகிய நான்கு பாடத் திட்டத்தின் அடிப்படையில் 16 மாவட்டங்களில் பயிற்சி முகாம்கள் 1987 அக்டோபர், நவம்பர் மாதங்களில்நடத்தப்பட்டன. இந்த பயிற்சி முகாம் ஆசிரியைகளுக்கான பயிற்சி 1987 ஏப்ரலில் தரப்பட்டது. 22 பேர் பங்கு கொண்டனர். வகுப்புக்களில் 653 பெண்கள் கலந்துகொண்டனர். பிரபஞ்சம், மனிதனின் தோற்றம் பற்றிய அறிவியல் இயக்கத்தினர் தயாரித்திருந்த சிலைடுகளும் பல மாவட்டங்களில் போட்டு விளக்கப்பட்டது. பொதுவாக புதிய விஷயங்களை தெரிந்து கொள்ள முடிந்தது என்பது கலந்து கொண்ட கணிசமான பெண்களின் கருத்து. இது குறித்து தொடர்ந்து கவனம் செலுத்துதல் அவசியம்.

24. மகளிர் சிந்தனை

5 பேர்களைக் கொண்ட ஆசிரியர்குழு, சென்ற மாநாட்டின் போது தான் உழைக்கும் பெண்கள் அமைப்பிடமிருந்து மாதர் சங்கம் ஏற்றெடுத்து முதல் இதழ் வெளிவந்தது. 1700 பிரதிகள் என்ற நிலையிலிருந்து 9500 வரை இன்று உயர்ந்துள்ளது. 2000 ஆண்டு சந்தா, 7500 தனி விற்பனை (95 சதம் பெண்களே விற்கும் ஏற்பாட்டுடன்) என்ற அளவில் போய்க் கொண்டிருக்கி

றது. 1988 மார்ச் முதல் ஆப்-செட்டில் ரூ. 1 விலையில் வெளிவருகிறது. சில பல குறைபாடுகள் களையப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் மகளிர் சிந்தனை வாசகர் வட்ட அமைப்பும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

நிர்வாக ஏற்பாடுகளுக்கு அலுவலகப் பெண்கள் நால்வர் சனிக்கிழமை தோறும் வந்து உதவுகின்றனர். மகளிர் சிந்தனைக்கென்று ஒரு முழுநேர ஊழியராவதுதேவைப்படுகிறது. பத்திரிக்கையின் தரத்தை உயர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

25. கட்சியில் பெண்கள்

சென்ற மாநாட்டின் போது 501 பி.எம்., 268 சி. எம். ஆக 769 கட்சிஉறுப்பினர்கள் இருந்தனர். துணைக்குழு உறுப்பினர்களாக 314தோழர்கள் இருந்தனர். தற்போது பி.எம்.701, சி.எம். 320, ஏ.எம். 452. (மாவட்டங்களில் பெண் உறுப்பினர்கள் பட்டியல் அனுபந்தத்தில் தரப்பட்டுள்ளது.)

★ உறுப்பினர் எண்ணிக்கையில் ஏறத்தாழ 35 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது முன்னேற்றமே என்றாலும், வளர்ச்சிக்குள்ள வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தியதாய் கூற முடியாது.

★ சேர்க்கப்படும் துணைக்குழு உறுப்பினர்களை, கிளைகளாக்கி இயங்கச் செய்வதில் பெரும் பலவீனம் உள்ளதால் பல குழுக்கள் செயலற்று நின்றுவிடுகின்றன.

இவ்வகையில் பெண்கள் கிளைகள் தனியாக அமைக்கப்படுவதும், மாவட்ட பெண்கள் பிராக்ஷன்கள், வட்டக் குழு உதவியுடன் இக்கிளைகளை இயக்க பொறுப்பேற்பதும் உதவிகரமாக இருக்கும்.

★ சமீபத்திய கட்சி வட்டக்குழு மாநாடுகளில் பல்வேறு வட்டக் குழுக்களில் பெண் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

★ மாவட்ட,வட்ட குழுக்கள் இதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதன் மூலம், கட்சியில் பெண்கள் எண்ணிக்கையை உயர்த்துவதுடன், மாதர் அரங்க செயல்பாட்டை பெருமளவு விஸ்தரிக்கவும் முடியும்.

26. மாதர் அரங்க மாநில ஃபிராக்ஷன்

கடந்த மாநாட்டு காலத்தில் 10-தோழர்களைக் கொண்டதாக இருந்தது. பின்னர் இருவர் சேர்க்கப்பட்டனர். 1986-ல் 6-முறையும், 1987-ல் 5-முறையும், 1988-ல் 4-முறையும் கூடியுள்ளது.

ஃபிராக்ஷன் பணிகள் பற்றி பொதுவாக கீழ்க்கண்ட வாறு கூறலாம்:-

★ மாநாடுகள், உறுப்பினர் சேர்ப்பு, மாநில, அகில இந்திய இயக்கங்கள் ஆகியவை பற்றி பரிசீலனை செய்வதில் முன் னேற்றம் உண்டு

★ ஸ்தாபனநிலை பற்றி ஒரு கேள்வித்தாள் தயாரித்து, மாவட் டங்களில் இருந்து பதில் பெற்று ஆய்வு செய்துள்ளது.

★ சில குறிப்பிட்ட மாவட்டங்களில் எழுந்த ஸ்தாபன பிரச் சனைகள் குறித்து விவாதித்து, சம்பந்தப்பட்ட மாவட்ட செயற்குழுக்களுடன் கலந்து கொண்டு தீர்த்து வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

★ கட்சியில் பெண்களை சேர்ப்பது குறித்து கடந்த இரண் டாண்டுகளில் பதிவு காலத்திற்கு முன் விவாதித்து— மாவட்டங்களுக்கு குறியளவும் நிர்ணயிக்கப்பட்டது.

★ எனினும், மாதர் அரங்கத்தில் கட்சியைகட்டும் பணியிலும், அரங்கத்தில் கட்சியின் நிலைபாட்டை எடுத்துச் செல்லும் பணியிலும் இன்னும் பெருமளவு முன்னேற்றம்காண வேண் டியுள்ளது.

27. மாநில மையம்

★ தோழர்கள் பாப்பா, மைதிலி, விஜயா, வாசுகி—ஆகியோர் கொண்ட மையம் அமைக்கப்பட்டுள்ளது.

★ செயல்பாட்டில் ஓரளவு முன்னேற்றம் உண்டு. மாவட்ட இயக்கங்களுக்கு அவ்வப்பொழுது சுற்றறிக்கைகள் அனுப்பு வது; துண்டு பிரசுரங்கள் மற்றும் பிரச்சாரத்திற்கான குறிப்புகள் அனுப்புதல்; மகளிர் சிந்தனை தயாரிப்பு மற் றும் நிர்வாக ஏற்பாடுகள் ஆகியவை நடைபெற்று வருகின் றன.

★ இக்காலத்தில் மாநில அலுவலக செயலாளராக தோழர் மாதம்மாள், நிர்ணயிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்.

★ மாநில மையக்கூட்டம் மாதம் ஒருமுறை அல்லது இருமுறை நடைபெறுகின்றது. மாநில செயலாளர் சென்னையில் இல் லாத காலங்களில் இதர மூன்று தோழர்கள் வாரம் ஒரு முறை கூடுவது என்பது அமுலாகவில்லை.மைய ஊழியர்களில் மூன்று தோழர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவு சென்னை மாவட்ட மாதர் சங்கப் பணிகள் இருப்பதும், அதிலும் ஒரு தோழர் வங்கியில் வேலை பார்த்துக் கொண்டு இந்த பணி

யையும் செய்ய வேண்டிய நிலையும் உள்ளது. இத்தகைய சூழலில் இன்று வளர்ந்துவரும் வேலைகளுக்கு ஈடு கொடுப்பதில் மிகுந்த சிரமம் உள்ளது. இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஊழியர்கள் முழுமையாக மையப் பணிக்கென்றே கிடைக்கச் செய்வதன் மூலம் மைய செயல்பாட்டில் அபிவிருத்தி காணவேண்டும்.

28 மாநிலக் குழு

44—தோழர்களை கொண்டது. *1986*-ல் 4—முறை, *1987*-ல் 4—முறை; *1988*-ல் 3—முறை ஆக 11—முறைகள் கூடியுள்ளது. 36—தோழர்கள் வரை கூட்டங்களில் பங்கு கொள்கின்றனர். மாநில நிர்வாகிகளுக்கு மாவட்டங்கள் பொறுப்பு பிரித்து கொடுக்கப்பட்டு உள்ளது. இவ்வகையில் மாவட்டங்களுக்கு உதவு வதில் அபிவிருத்தி உண்டு.

மாவட்ட குழுக்கள் அநேகமாக இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடுவது என்பது உத்திரவாதப்பட்டுள்ளது. (ஓரிரு விதி விலக்குகள் தவிர) மாவட்ட நிர்வாகிகளுக்கு, வட்டக்குழு பொறுப் புகள் நிர்ணயிக்கப்பட்டு கண்காணிக்கப்படும் இடங்களில் அபி விருத்தி காண முடிகிறது.

29 முழுநேர ஊழியர்கள்

அதிகரித்துள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி மாதர் இயக் கத்தை விரிவுபடுத்த பல மாவட்டங்களில் இன்னும் கூடுதலான முழு நேர மற்றும் பகுதி நேர ஊழியர்கள் அவசியம் தேவை. தற் போதுள்ள ஊழியர்கள் வெகு சொற்பமே. அலவன்ஸ் விஷயத் திலும் குறைந்த அளவு தொகையே அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த முழு நேர ஊழியர்களாக செயல்பட தயாராக உள்ள தோழர்கள் இருக்கின்றனர். இவர்களை பரிசிலித்து உத்திரவாதப் படுத்துதல் உடனடி தேவையாக மாறியுள்ளது.

30 வட்ட கமிட்டிகள் மற்றும் கிளை செயல்பாடு :

64 இடை கமிட்டிகளும், 1412 கிளைகளும் இருக்கின்றன. இதில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 412 கிளைகளும், 18—வட்டக் குழுக்களும் உள்ளன. புதுக்கோட்டை, பெரியார், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் இடைக்கமிட்டி இல்லை. கோவை, செங்கற் பட்டு, வடஆற்காடு, நெல்லை ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு இடைக் கமிட்டியே உள்ளது.

❋ கிளைகள் செயல்பாட்டில் ஓரளவு அபிவிருத்தி உண்டு. எனினும், அமைக்கப்பட்ட கிளைகள் அனைத்தும் தொடர்ச்சியாக இயங்கும் கிளைகளாக இருப்பதாக கூறமுடியாது. சமீப காலத்தில் புதிய பகுதிகளில் 122 கிளைகள்வரை அமைக்கப்பட்டுள்ளது.

கிளை அமைக்காத பகுதிகளில் அமைக்கவும், தொடர்சியான செயல்பாட்டுக்கும் கூடுதல் கவனம் செலுத்தி முயற்சிக்க வேண்டியுள்ளது.

.31 உறுப்பினர் சேர்ப்பு

❋ ஆண்டு வாரியாக உறுப்பினர் எண்ணிக்கை பட்டியல் தனியாகத் தரப்பட்டுள்ளது. 85-ம் வருடம் சுமார் 79,000-ஆக இருந்த எண்ணிக்கை 87-ல் 85, 000 ஆக ஆகியுள்ளது.(88 இன்னும் முடிக்கவில்லை). மிகச் சிறிதளவே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் காண முடியும். செய்துள்ள பணிகளுக்கும், செல்வாக்குக்கும் ஏற்ற அளவில் உறுப்பினர் எண்ணிக்கை உயர்வு பிரதிபலிக்கவில்லை.

❋ குறிப்பாக இன்றுள்ள உறுப்பினர் எண்ணிக்கை 85,000-ல் 36, 532 தஞ்சையில் மட்டும், மதுரை திருச்சி, சென்னை ஆகிய மாவட்டங்கள் சேர்ந்து சுமார் 25,000 உறுப்பினர்கள் உள்ளனர். ஆக இவ்வகையில் 61.500 போக, இதர 14 மாவட்டங்கள் சேர்ந்து 25,000-க்கு கீழ்தான் உறுப்பினர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

❋ எந்த மாவட்டத்திலும் மாவட்டம் முழுவதும் பரவலான இயக்கம் என்பது இல்லை, திட்டு—திட்டாக ஆங்காங்கே உள்ள நிலையே இருக்கிறது.

❋ நமது இயக்க செல்வாக்கு மற்றும் தொடர்ந்து செயல்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ற வகையில் உறுப்பினர் எண்ணிக்கை இல்லை, இதில் விசேஷ கவனம் தேவை.

❋ சமீபத்தில் நடத்திய பரிசீலனையில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் ஏறத்தாழ 10 முதல் 15 சதவிகிதத்தினரை மட்டுமே இயக்கங்களில் செயல்படுத்த முடிகிறது என்பதை பார்க்க முடிகிறது.

❋ கிளைகளை அமைத்து தொடர்ச்சியாக இயங்க வைப்பதன் மூலமும்,ஸ்தல இயக்கங்களை திட்டமிட்டு நடத்துவதன் . மூலமும், செயல்படும் பெண்களின் சதவீதத்தை உயர்த்த வேண்டும்.

❋ தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு முதல் மாதர் சங்க உறுப்பினர்களை தனியாக மாதர் சங்க குழுக்கள் மூலம் சேர்ப்பது என்று அமுலாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அது வரையிலும் வி.ச., வி. தொ. ச. சந்தா சேர்ப்புடன் இணைத்தே நடத்தப்பட்டது).

❋ இன்று திட்டு-திட்டாக உள்ள இயக்கங்களை, அவைகளைசுற்றிலும் குறிப்பிட்ட பகுதிக்கு விஸ்தரித்தல் என்பதும்,நகர்

புறங்களில் விசேஷ கவனம் செலுத்துதல் என்பதும் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

32. பொதுவான நிர்ணயிப்பு

இன்று தமிழ்நாட்டில் ஜனநாயக மாதர் சங்கம் வளர்ச்சியும், செல்வாக்கும் பெற்று வருகின்றது. மற்ற மாதர் அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் செயல்பாட்டில் முதன்மை பெற்ற அமைப்பாகத் திகழ்கிறது. கட்சியின் சென்ற மாநில மாநாட்டிற்குப்பின் மூன்றுண்டுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாதர் இயக்கம் சம்பந்தமான சரியான அணுகுமுறையுடன் குறிக்கோள்களுடனும் நமது கட்சியினுல் மட்டுமே இத்தகையதொரு மாதர் அமைப்பைக் கட்டமுடியும் என்பது மேலும் ஊர்ஜிதமாகி வருகின்றது. தமிழ் நாட்டில் திராவிட கட்சிகளும், மற்றும் சில கட்சிகளும் மகளிர் அணிஎன்று வைத்திருந்த போதிலும் அவரவர் கட்சியின் வட்டத்துக்குள்முடக்கப்படும் நிலையில், வெகுஜன அமைப்பு என்ற கண்ணேட்டத்துடன் நமது மாதர் சங்கம் செயல்பட்டு வருவது புதிய பகுதிப் பெண்களை, குறிப்பாக படித்த பெண்களை ஈர்த்து வருவது குறிபிடத்தக்க அம்சமாகும்.

33. பெண்களைப் பற்றிய முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ கருத்தோட்டங்கள், சமுதாய ஒடுக்குமுறைகள், கொடுமைகள், பெண்ணின் சார்புநிலை ஆகியவற்றின் விளைவாக பெண்களை அணி திரட்டுவதிலுள்ள சிரமங்களை நாமறிவோம். அதையும் சந்தித்து இன்று ஜனநாயக மாதர் சங்க அமைப்பை ஓரளவு கட்டி வளர்த்துள்ளோம். அதை மேலும் வளர்த்து நாடு தழுவிய முறையில் வளர்ந்து வரும் நம் மாதர் இயக்கத்தின் உறுதிமிக்க ஒரு பகுதியாக தமிழகத்தில் உருவாக்குவோம். இதனைச் செய்வதற்கு கீழ்க்கண்ட உடனடிக் கடமைகளை நிறைவேற்றுதல் அவசியம்.

உடனடிக் கடமைகள்

அ) மாநிலம் முழுவதும் உள்ள மாதர் இயக்க முன்னணி ஊழியர்களுக்கு மாநில ரீதியிலான வகுப்பை கட்சி நடத்துவது.

ஆ) ஒருலட்சம் உறுப்பினர்களை அடுத்த ஆண்டில் சேர்ப்பது.

இ) கட்சியின் துணைக்குழுவில் பெண்களை கொண்டுவர, அடுத்த ஆண்டுக்குள் 1000 பேர்களுக்காவது பயிற்சி அளிப்பது.

ஈ) மகளிர் சிந்தனையை அடுத்த ஆண்டு இறுதிக்குள் 15,000-ஆக உயர்த்துவது.

உ) மாநில ரீதியில் ஜனநாயக மாதர் சங்கம் செயல்படத் துவங்கிய 15 ஆண்டு கால அனுபவங்களை ஆய்வு செய்து மேற்கொண்டு முன்னேற புதிய யுக்திகளையும் தந்திரோபாயங்களையும் வகுத்து வழி காட்டுவது.

ஊ) மாவட்ட வாரியாக பாலர் சங்கங்களை உருவாக்கிவளர்க்க ஏற்பாடு செய்வது.

மாணவர் அரங்கம்

1. கடந்த 3 ஆண்டுகளில் படிப்படியாக இவ்வரங்க பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எஸ்.எப் ஐ. 1985ஆம் ஆண்டில் 19,225 உறுப்பினர்களும் 1986ல் 27,396 உறுப்பினர்களும் 1987ம் ஆண்டில் 32,037 உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டனர். 1986ம் ஆண்டில் 248 கல்வி நிலையங்களில் தொடர்புகள் இருந்த நிலையிலிருந்து 1988ல் 449 கல்வி நிலையங்களில் தொடர்பு என்ற அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

1988 செப்டம்பர் 26ம் தேதி அகில இந்தியமாணவர்கள் அமைப்புக்களின் வேண்டுகோளை ஏற்று, தமிழகத்தில் 1,97,600 (ஏறத்தாழ 2 லட்சம்) மாணவர்களை வேலை நிறுத்தத்தில் பங்கேற்க செய்ய முடிந்துள்ளது. அநேகமாக எஸ்எப்ஐ தோழர்களின் முயற்சியில் மட்டுமே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது என்று குறிப்பிட முடியும். மாணவர்களின் கோரிக்கைகளுக்காகவும், ராஜீவ் அரசு ராஜினாமா செய்யக் கோரியும், முன்கூட்டியே திட்டமிட்டு, பிரச்சாரம் செய்து இந்த அளவில் ஒரு வேலை நிறுத்தத்தை நடத்த முடிந்தது.

2. பெரும்பகுதியான மாணவர்கள் மத்தியில் கல்வி சிக்கல்கள், வேலைவாய்ப்பின்மை, ஊழல்கள் போன்றவற்றின் விளைவாக, என்ன செய்யவேண்டும் என்று தெரியாமல், விரக்தி மனப்பான்மை மேலோங்கி நிற்கிறது. பொதுவாக அரசியல் கட்சிகள் மீது அவநம்பிக்கை உள்ளது. இதனால் அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அக்கறை இல்லாத அல்லது எதிர்ப்பான மனோநிலை இருந்து வருகிறது. சமூக சீரழிவுகளும் கலாச்சாரத்துறையில் காணப்படும் எதிர்மறையான போக்குகள் காரணமாக இந்த விரக்தி மனோபாவம் அதிகமாகியுள்ளது.

3. இந்த சூழலில் ஜாதி, மத எண்ணங்களின் தாக்கமும், அத்தகைய அமைப்புக்களின் செல்வாக்கும் பரவலாக காணப்படுகிறது. தி.மு.க.விற்கு ஓரளவிற்கு பொதுவான செல்வாக்கு இருக்கின்ற போதிலும், திட்டமிட்ட செயல்பாடு குறைவு.

காங்கிரசின் செயல்பாடும் குறைவு. எஸ் யூ சி ஐ, நக்சலேட், கிறிஸ்துவ இடதுசாரி இயக்கங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. ஆர் எஸ் எஸ் செயல்பாடு சிறு அளவிற்கே உள்ளது.

அதே நேரத்தில் ஆட்சியாளர்கள் செயல்களையும், ஊழல்களையும் கண்டு வெறுப்புற்று வரும் ஒரு பகுதி மாணவர்கள்

மத்தியில் புதிய சிந்தனையும், தீவிர மாற்றம் வேண்டும் என்ற எண்ணங்களும் வளர்ந்து வருவதை பார்க்கிறோம்.

இத்தகைய மாணவர்களை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்தில் எஸ் எப் ஐ-யை கட்டுவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. ஓரளவுக்கு முன்னேறியுள்ளது.

இன்று மாணவர்கள் மத்தியில் தொடர்ச்சியாக செயல்படக் கூடிய பரவலான ஒரு அமைப்பாக எஸ் எப் ஐ மட்டுமே உள்ளது. எஸ் எப் ஐ-க்கு மாணவர்கள் மத்தியில் பொதுவான அறிமுகமும் கிடைத்துள்ளது.

இயக்கங்கள்

4. பல்வேறு ஸ்தல கல்லூரி பிரச்சனைகளுக்காக அங்குமிங்குமாக நடைபெற்ற இயக்கங்கள், வேலைநிறுத்தங்கள், எஸ் எப் ஐ-யின் முன் முயற்சியில் நடைபெற்றுள்ளன.

மாநில ரீதியாக, பொதுவான கோரிக்கைகளுக்கான இயக்கங்களை எஸ் எப் ஐ திட்டமிட்டு நடத்தியுள்ளது. 1986 ஜூலை 25ம் தேதியன்று விடுதி மாணவர்கள் உதவித்தொகை அதிகரிப்பு, படிப்பு கட்டண உயர்வு, ஊழல்கள், கட்டாய நன்கொடை வசூல், கல்லூரி பேரவை தேர்தல் கோரிக்கை, ஆகியவற்றை முன்நிறுத்தி மாநிலம் தழுவிய போராட்டத்திற்கு எஸ் எப் ஐ விடுத்த அறைகூவலின்படி, 50,000 மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்க முடிந்தது.

1987 கல்வியாண்டு துவக்கத்தில் பல்வேறு மாவட்டங்களில் உடனடி கோரிக்கைகளுக்கான வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் ஆகியவை நடந்தன.

5. தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பது என்று தமிழக அரசு முடிவுசெய்ததை தொடர்ந்து மருத்துவ கல்லூரி மாணவர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புஉணர்வு உருவாயிற்று. இந்தஉணர்வுகளுக்கு வடிவம் கொடுத்ததிலும், மாநில ரீதியான போராட்டக்குழு அமைப்பதிலும், 45நாட்கள் நீடித்த அனைத்து மருத்துவகல்லூரி மாணவர்களின் வேலைநிறுத்தம் நடத்துவதிலும்,எஸ்.எப்.ஐ. முக்கியபங்கினை ஆற்றியது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசு எல்லா கல்வி துறைகளையும் தனியார் துறைக்கு திறந்து விடுவதற்கான பிற்போக்கான திட்டத்தை தொடர்ந்து கடைப்பிடித்த நேரத்தில்,மருத்துவகல்லூரி மாணவர்கள் மட்டுமே இக் கொள்கைக்கு எதிராக உறுதியாகப் போராடினார்கள். இப் போராட்டத்தில் நமது தோழர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

6. ஐ.டி.ஐ. மாணவர்களின் பொது கோரிக்கைகளுக்கான போராட்டங்களை மாநில அளவில் உருவாக்கி நடத்திச் செல்வதில் எஸ்.எப்.ஐ. அதிக கவனம் செலுத்தி வந்துள்ளது. 1986-லும்,

1987-லும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவை மூலமாக இவ்வியக்கம் நடைபெற்றது.

அகில இந்திய வேலைநிறுத்தம்

7. பல்வேறு மாணவர்கள் அமைப்புக்களின் சார்பாக ராஜீவ் அரசு ராஜினமா செய்யக் கோரியும், புதிய கல்விக் கொள்கையை எதிர்த்தும், மற்றும் கல்லூரி, பல்கலை கழக மாணவர்களின் கோரிக்கைகளை முன்வைத்தும், 1988 செப்டம்பர் 26-ம் தேதியன்று அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டது.

இந்த அறைகூவலை ஏற்று, போராட்டத்தை தமிழகத்தில் நடத்தும் பொறுப்பை நமது மாநில அமைப்பு தனியாக நிறை வேற்ற வேண்டியிருந்தது. மற்ற அகில இந்திய அமைப்புக்களுக்கு தமிழகத்தில் கிளைகள் இல்லாத நிலை. சிபிஐ தலைமையிலான அமைப்பு, ராஜீவ் அரசு ராஜினமா கோரிக்கையை ஏற்க மறுத்ததி னால் ஒதுங்கி நின்றது.

இப்போராட்டத்திற்கு தயார் செய்யும் நோக்குத்துடன் சிதம்பரத்தில் 1988 செப்டம்பர் 4ம் தேதி எஸ்.எப்.ஐ. நடத்திய மாநில கல்லூரி பல்கலைக்கழக பிரதிநிதிகள் மாநாடு பயனுள்ள தாக அமைந்தது. 71 கலைக்கல்லூரிகளிலிருந்தும், 3 பல்கலைக்கழக மையங்களிலிருந்தும் 198 மாணவர்கள் பங்கேற்றனர். (25 பெண் கள் உட்பட.)

இம்மாநாட்டை தொடர்ந்து வேலை நிறுத்தப்பிரச்சாரம் நல்ல முறையில் நடந்தது. கோவை போன்ற இடங்களில் சில கல்லூரி பேரவைகள் போராட்டத்திற்கு ஆதரவாக திரட்டப்பட்டன. அகில இந்திய அறைகூவலுக்கு ஏற்ப, திட்டமிடப்பட்ட முறையில் நடந்த முதல் வேலை நிறுத்தம் என்ற முறையில் 194 கல்வி நிலையங் களில் 1,97,600 மாணவர்களை பங்கேற்கச் செய்தது ஒரு முன்னேற்றமே.

ஆதரவு இயக்கங்கள்

8. 1985—ஆம் ஆண்டு ஆசிரியர் போராட்டம், 1986—ல் கல்லூரி ஆசிரியர்களின் அகில இந்திய வேலை நிறுத்தம், 1988-ஆம் ஆண்டு மாநில அரசு ஊழியர்—ஆசிரியர் வேலை நிறுத்தம் ஆகிய பெரிய போராட்டங்களின் போது, நமது அமைப்பு, மாணவர்களை திரட்டி ஆதரவு இயக்கம் நடத்தியது. இதன் பயனாக எஸ்எப்ஐ ஆசிரியர்களின் பொதுவான நன்மதிப்பைப் பெற்றுள்ளது. பல இடங்களிலும் ஆசிரியர்கள் எஸ்எப்ஐயின் பால் அனுதாபத்துடன் செயல்படுகின்றனர்.

9. புதிய கல்விக்கொள்கையை எதிர்த்து கடந்த 3 ஆண்டுகளில் கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவை மூலமாக பல்வேறு மாவட்டங்களில் பிரச்சார இயக்கத்தை நடத்தியுள்ளது எஸ்.எப்.ஐ.

பொதுவாக மாணவ இயக்கங்களையும், போராட்டங்களையும் நடத்தியதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அரசியல் இயக்கங்கள்

10. பஞ்சாப், கூர்க்காலாந்து பிரச்னைகள் போன்றவற்றை முன்வைத்து பிரச்சார இயக்கங்கள் ஆங்காங்கு நடைபெற்றன.

இடதுசாரி அமைப்புகளின் பிரச்சாரப் பயணம், பாரத் பந்த் போன்ற அரசியல் இயக்கங்களில் நமது மாணவர்கள் சாத்தியமான அளவில் செயல்பட்டனர்.

11. 1986 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஹிந்தி பிரச்சனை சூடு பிடித்த நேரத்தில் (முதல் கட்டத்தில்) எஸ்எப்ஐ மிகவும் சிக்கலான நிலைமையை சந்திக்க நேரிட்டது. ஹிந்தி எதிர்ப்பு வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. கட்சியின் வழிகாட்டுதலையொட்டி, மாணவர்களின் உணர்களையும் கணக்கில்கொண்டு, நெளிவு சுளிவான நடைமுறை பின்பற்றப்பட்டது. நமது தோழர்கள் முதல் கட்டத்தில் தனிமைப்படாமல் தங்களை பாதுகாக்க முடிந்தது. தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் என்ற கருத்தினை படிப்படியாக பிரச்சாரம் செய்வதில் ஓரளவிற்கு வெற்றியும் பெற்றனர். நமது தோழர்களில் பெரும்பகுதியினர் ஹிந்திமொழி எதிர்ப்பு கோஷங்களை தவிர்க்க முயற்சித்தனர்.

ஹிந்தி மொழி எதிர்ப்பு உணர்வும் மாணவர்களுக்கிடையில் பழைய அளவு இல்லாததும் நமக்கு உதவியாக இருந்தது.

இலங்கை பிரச்சனையில் நமது நிலையை தோழர்கள், மாணவர்கள் மத்தியில் விளக்கிவந்துள்ளனர். இந்த பிரச்சனையிலும் ஆரம்ப நிலையில் இருந்த உணர்வுகள் குறைந்துள்ளதை பார்க்கிறோம்.

எஸ். எப். ஐ. அமைப்பு

12. எஸ்.எப்.ஐ.-யின் அமைப்பு ரீதியான செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநில மையத்தில் 2 தோழர்கள் (ஷண்முகம், குணசேகரன்) செயல்படுகின்றனர். வாலிபர் சங்கமும், எஸ்.எப்.ஐ. யும் சென்னையில் மையமான இடத்தில் மாநில அலுவலகத்தை திறந்துசெயல்படுவது உதவியாக இருக்கிறது. மாநிலக்குழு, 3 மாதத்திற்கு ஒருமுறைகூடுகிறது. 2 முறை மாநில

மாநாடுகள் நடந்துள்ளன. (தூத்துக்குடியில் 1986 லும், மதுரையில் 1988லும்) சில மாவட்ட கமிட்டிகளின் செயல்பாடுகளில் அபிவிருத்தி உண்டு. மாநில நிர்வாகிகளுக்கும், மாவட்டக்குழுக்களுக்கும் உள்ள தொடர்புகள் வலுப்பட்டுள்ளன. கல்லூரிகளில் முன்பு இருந்ததைவிட தொடர்புகள் அதிகமாகியுள்ளன. பெண்களும் ஓரளவு சேர்ந்துள்ளனர்.

உறுப்பினர் எண்ணிக்கை :

1985-ல்	19,222
1986-ல்	27,366
1987-ல்	32,037

என்ற நிலையிலும் கல்விநிலையங்களுடன் தொடர்பு என்ற அம்சத்தில் 248லிருந்து 449என்ற அளவில் முன்னேற்றமுள்ளது. இந்த ஆண்டில் 70,000 உறுப்பினர்களைச் சேர்க்க முயற்சி நடைபெறுகிறது ஆயினும், செய்த வேலைகளுக்கும், இயக்கங்களின் அளவிற்கும், தொடர்புகளின் விஸ்தரிப்புகளுக்கும் ஏற்ற அளவில் உறுப்பினர் எண்ணிக்கையில் முன்னேற்றம் இல்லை.

கீழ்மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சந்தா பணத்தை முழுமையாக மாவட்ட கமிட்டிகளில் சேர்க்கப்படாதது இதற்கு ஒரு காரணம். ஸ்தல செலவுகளுக்கு இப்பணம் செலவிடப்படுகிறது என்ற நிலை பல இடங்களில் நீடிக்கிறது.

ஆகஸ்ட் மாதத்தில் கல்லூரிகள் திறந்து செயல்பட துவங்கிய பின் உறுப்பினர் இயக்கத்தை 3 மாதத்திற்குள் (டிசம்பர் முடிவதற்குள்) நடத்தி முடிப்பதற்கான ஸ்தாபன உத்தரவாதத்தை ஏற்படுத்த முடிவதில்லை என்பதும் ஒரு காரணம்.

அரசியல் கல்வி :

13) 1987-ம் ஆண்டு ஜனவரி 21 முதல் பிப்ரவரி 15 வரை மாநிலத்தில் 36 மையங்களில் ஒரு நாள் வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. சர்வதேச தேச, நிலைமைகள் குறித்து அடிப்படையான கருத்துக்களை எளிய முறையில் விளக்குவதற்கும், மாணவர் அரங்க கடமைகளை தெளிவுபடுத்துவதற்கும் இவ்வகுப்புகள் பயன்பட்டன. இவற்றில் 1,136 மாணவர்கள் பங்கேற்றனர். இந்த முயற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இந்த முறையை தொடர்ந்து கடைப்பிடிப்பது அவசியம். 1987 மார்ச் மாதத்தில் சின்னாளப்பட்டியில் கட்சியின் சார்பாக நடத்தப்பட்ட 3 நாள் வகுப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

இவற்றைத்தவிர சில மாவட்டங்களில் மாவட்ட அளவில் வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

கட்சியின் வழிகாட்டுதல் :

14) மாநில பிராக்ஷன் 2 முறை மாற்றி அமைக்கப்பட்டது. பிராக்ஷன் கூட்டங்களும் மாநில நிர்வாகிகள் கூட்டங்களும் இணைந்தே நடந்து வருகின்றன. தனியாக பிராக்ஷன் 6 மாதத்திற்கு ஒரு முறைதான் கூடியுள்ளது.

மாநில அளவில் இயக்கத்தின் நிலைமை, ஸ்தாபன நிலை, கடமைகள் ஆகியவற்றினை மாநில பிராக்ஷன் 1987-ம் ஆண்டில் விவாதித்து ஒரு அறிக்கையை தயார் செய்தது. அரசியல் பயிற்சி முகாமில் இந்த அறிக்கை விளக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இந்த அறிக்கையும் விவாதமும் நமது தோழர்களுக்கு மாணவர்கள் அரங்கில் நமது பார்வை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், வேலை முறைகளில் செய்ய வேண்டிய மாற்றங்களையும் தெளிவுபடுத்துவதற்கு பெரிதும் உதவியது.

குறிப்பாக, கல்லூரிகளில் அதிக கவனம் செலுத்துவதன் அவசியம், அரசியல் கருத்துத்துறை பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய அவசியம், படிக்கின்ற மாணவர்களை இயக்கத்திலும், ஸ்தாபனத்திலும் அதிகமாக பங்கேற்க வைப்பது, கல்வி நிறுவனங்களில் யூனியன்களை அமைப்பது, பெண்களை அதிகமாக ஈடுபடுத்துவது, கட்சி கிளைகள் அமைப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவது முக்கிய கடமை என்று வற்புறுத்தப்பட்டது. இந்த பார்வையுடன் கூடிய அணுகுமுறையும், நடைமுறையும் பயனளிக்கத் துவங்கியதைப் பார்க்க முடியும்.

கட்சியின் மாவட்டக் கமிட்டிகள் முன்பு இருந்ததைவிட மாணவர் அரங்கத்தில் கவனம் செலுத்தத் துவங்கியுள்ளன. குமரி, நெல்லை, காமராஜ், மதுரை, அண்ணா, கோவை, தஞ்சை, தென்னாற்காடு, செங்கற்பட்டு, திருச்சி, சென்னை கமிட்டிகள் இவ்வரங்கத்தில் கவனம் செலுத்துகின்றன.

சேலம் மாவட்ட கமிட்டி அண்மையில் வாலிபர் அரங்கத்தில் உள்ள மாணவர்களை ஒருங்கிணைத்து மாணவர் இயக்கத்தைக் கட்ட முயற்சி செய்தது. வாலிபர் சங்கத்தில் ஆங்காங்கு மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பட்டியலை தயார் செய்து மாணவர் ஊழியர்களின் கூட்டத்தைக் கூட்டியது பயனுள்ளதாக இருந்தது. எல்லா மாவட்டக் கமிட்டிகளும் இந்த முறையில் சில ஏற்பாடுகளை செய்தால் மேலும் இந்த அரங்கத்தில் முன்னேற வாய்ப்பு உண்டு.

15. மாவட்ட பிராக்ஷன்கள், முழு நேர ஊழியர்கள்:

மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் பலவற்றிலும் பிராக்ஷன்கள் உள்ளன.

நெல்லை, காமராஜ், அண்ணா, தென்னாற்காடு, செங்கற் பட்டு, சென்னை ஆகிய மாவட்டங்களில் இவ்வரங்கத்திற்கு முழு நேர ஊழியர்கள் உள்ளனர். மாநிலத்தில் இவ்வரங்கில் 8 முழு நேர ஊழியர்களே உள்ளனர்.

16. பலஹீனம் :

பிராக்ஷன் அமைப்பதில் ஒரு முக்கிய பலஹீனம்காணப் படுகிறது. கல்லூரிகளில் படிக்கும் தோழர்களை கொண்ட விரிவான பிராக்ஷன்களுக்கு பதிலாக 3—4 தோழர்களைக் கொண்ட பிராக்ஷன்களை அமைக்கும் போக்கு சென்னை, மதுரை போன்ற மாவட்டங்களில் உள்ளன. கட்சியிலுள்ள சுறுசுறுப் பான, கட்டுப்பாடான படிக்கும் தோழர்களைக் கொண்ட பிராக் ஷன்களை அமைத்து, அவர்கள் பணியாற்றுவதின் மூலம் மட்டுமே இயக்கத்தை விரிவாக்க முடியும், கட்சியையும் கட்ட முடியும்.

மாணவர்கள் அரங்கில் கட்சியை கட்டுவதிலும் போதுமான அக்கறை செலுத்தப்படுவதில்லை. முன்பு இருந்ததைவிட கட்சி உறுப்பினர் எண்ணிக்கை சற்று உயர்ந்துள்ள போதிலும், கட்சியை நோக்கி வரக்கூடிய நூற்றுக்கணக்கான மாணவர்களை கட்சியில் சேர்ப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் கவனம் மிக குறைவே.

அதேபோல், மாணவர்களுக்கு அரசியல் வகுப்புகள் நடத்து வதிலும் பெரிய குறைபாடு இருக்கிறது. அரசியல் கருத்து பிரச் சாரம் இவ்வரங்கத்தில் மிகவும் அடிப்படையான கடமையாகும். இதை திட்டமிட்ட முறையில் செய்ய வேண்டிய பொறுப்பினை மாவட்ட கட்சி கமிட்டிகள் நிறைவேற்ற வேண்டும்.

17. கடமைகள்:

1. அடுத்த ஆண்டில் எஸ்எப்ஐ-யில் 1 லட்சம் உறுப்பினர்களை சேர்த்தல்.

2. கல்லூரி மாணவர்களை திரட்டுவதில் அதிக கவனம் செலுத் துதல்.

3. அரசியல் சித்தாந்தப் பணிகளுக்கு தனிமுக்கியத்துவம் அளிப் பது, வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை அதிகமாக நடத்துவது.மாவட்டங்களில் உள்ள பல்வேறு கட்சி அரங்க தோழர்களை இப்பணிக்கு பயன்படுத்த வேண்டும். உதாரண மாக: ஆசிரியர்கள், நடுத்தர வர்க்க அரங்க ஊழியர்கள், கலை அரங்க தோழர்கள்.

4. கட்சி உறுப்பினர்களை சேர்ப்பதில் விசேஷ கவனம். யூனிட்டுகள் அமைப்பதிலும், தக்க வைப்பதிலும், செயல் படுத்துவதிலும் முன்னேற்றம் காண்பது.

5. மாணவர் அரங்கத் தோழர்களின் அடிப்படையான பணி மாணவர்கள் மத்தியில் இருப்பதற்கு உத்தரவாதம் வேண் டும். (பல இடங்களில் அவர்களை அதிகமாக மற்ற கட்சி பணிகளில் மட்டும் ஈடுபடுத்தும் போக்கு இருக்கிறது).

18 நாளுக்கு நாள் புதிய, புதிய கல்லூரிகளும், பள்ளிகளும் நாட்டில் உருவாகி வருகின்றன. ஆனால் அதற்கு ஏற்றாற்போல் நமது மாணவர் அரங்கம் வேகமாக வளராத குறையிருக்கிறது.

ஆகவே, இந்த அரங்கில் எஸ் எப் ஐ-யின் வளர்ச்சி என்பது வெகுதொலைவில் உள்ளது என்பதை உணர வேண்டும். தமிழகத்தில் மாணவர் இயக்கத்தின் பலஹீனத்தை சால்க்கியா பிளீனம் தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளது. கட்சி முழுவதும் அதிக கவனம் செலுத்தினால் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து வாய்ப்புக்களை பயன்படுத்த அதிகமான முயற்சிகள் தேவை.

கலை-இலக்கிய அரங்கம்

1985-லிருந்து 88 வரை நடந்த மாநில அளவிலான பணிகள்:

1. சென்ற மூன்றாண்டுகளில் தொடர்ந்து பல்வேறு பிரச்னைகளில் இயக்கங்கள் நடத்தப்பட்டதுடன், கலை-இலக்கிய படைப்புகளை உருவாக்குவதிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் இவ்வரங்கில் நடைபெற்ற பிரதான வேலைகளைப் பார்ப்போம்.

2. 1986-ல் மதுரையில் 5-நாள் நாடகப் பயிற்சி முகாம் நடந்தது. இதில் சகஸ்ரநாமம், கோமல், எம். பி சீனிவாசன், ராமானுஜம் போன்றோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். நாடகத் துறையில் நாம் வளர அது உதவியாக இருந்தது.

3. 1987 ஜனவரியில் திருச்சியில் நான்காவது மாநில மாநாடு நடைபெற்றது. இந்த அரங்கத்தில் சிலர் செய்த சீர்குலைவு வேலைகளையும் சமாளித்து, நமது அணியினை ஒருங்கிணைப்பதில் இந்த மாநாடு வெற்றி கண்டது. மாநாட்டிற்கு மாநாடு உறுப்பினர் சேர்ப்பு என்று இருந்ததை, ஆண்டுக்கு ஆண்டு ரூ. 3 என்று மாற்றப்பட்டது.

4. சினிமாதடை மசோதாவினை எதிர்த்து ஒரு பெரும் இயக்கம் நடத்தப்பட்டது. சென்னையில் ஊர்வலமும், ஒரு சிறப்பு மாநாடும் நடத்தப்பட்டது. மாநிலம் முழுவதுமிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். திரைப்படக் கலைஞர்கள் பலர் இதில் பங்கு கொண்டனர். நமக்கும், திரைப்படத்துறையினருக்குமிடையில் ஒரு நல்ல தொடர்பு இதன்மூலம் உதயமானது. இந்த மாநாட்டின் முடிவின்படி மாநிலம்முழுவதும் உண்ணாவிரதமும் நடைபெற்றது. இதிலும் பல திரைப்படக் கலைஞர்கள் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

5. இசைப் பயிற்சி முகாம் கோவையில் நடத்தப்பட்டது. எம். பி. சீனிவாசன், இசைக்கல்லூரி முதல்வர் சண்முகசுந்தரம் ஆகியோர் பங்கு கொண்டு பயிற்சி அளித்தனர். இது இசைத்துறையில் கிராமிய இசை, கர்நாடக இசை என பலதரப்பட்ட இசை வடிவங்களையும் நாம் பயன்படுத்த வேண்டும் எனும் உணர்வினைக் கொடுத்தது.

கலைத்துறையில் நமது இந்த தலையீடு இலக்கியவாதிகள் கலைகளைக் கற்றுத்தேற வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது.

6. இலக்கியத் துறையில் நமது கண்ணோட்டத்தை பதித்திட நமது வட்டாரத்திற்கு அப்பாலுள்ளவர்களையும் ஈர்த்திட நாவல் முகாம், சிறுகதைப் போட்டி ஆகியவற்றை நடத்தினோம்.

நாவல் முகாமில் வெளி வட்டாரத்து இலக்கியவாதிகள்— அசோகமித்திரன், கந்தசாமி, இந்துமதி, பொன்னீலன் ஆகியோரும் நமது நாவலாசிரியர்களோடு பங்கு கொண்டனர். இது நமது வட்டாரத்தை விரிவுபடுத்தியது. இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகளும் விமர்சன வரவேற்பு குறிப்புகள் எழுதியுள்ளன.

7 சிறுகதைப்போட்டிக்கு 303கதைகள் வந்தன. அதற்கான பரிசுத் தொகை முழுவதும் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களிடமிருந்தே திரட்டப்பட்டது

தேர்ந்தெடுக்கப்படும் கதைகளை நம் செம்மலரில் வெளியிடத் தயாராக இருப்பதையும்,போட்டிக்கு முன்னர் த.மு.எ.ச. அறிவித்தது. இது செம்மலரின் வளர்ச்சிக்கும் உதவும். இலக்கியத் துறையில் நமது ஈடுபாட்டையும், தரத்தையும் உயர்த்தவும் இந்த போட்டியும், பரிசளிப்பும் உதவியுள்ளது பொதுவாகவே த. மு. எ.ச. எழுத்தாளர்களை செம்மலர் வளர்க்கிறது. செம்மலருக்கு விஷயதானம் பெரும்பாலும் த.மு.எ.ச. எழுத்தாளர்களிடமிருந்தே கிடைக்கிறது. இதனால் செம்மலரின் தரமும் ஓரளவு உயர்ந்து வருகிறது. த.மு.எ.ச. செல்வாக்கும் ஓரளவு வளருகிறது. இன்று த.மு.எ.ச. எழுத்தாளர் சிலரது படைப்புகளை இதர இலக்கிய ஏடுகளும் பிரசுரகர்த்தாக்களும் வெளியிட முன் வந்துள்ளனர்.

வேதம் புதிது, வீடு படங்களுக்கு பாராட்டு விழா நடத்தினோம்.

மதுரையில் இவ்வாண்டு நவம்பர் 11, 12, 13 தேதிகளில் நடைபெற்ற கலைவிழா. இவ்வரங்கில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை ஆகும். நமது கலைஞர்களை தேர்தல் மற்றும் அரசியல் பிரச்சாரத்திற்கென தயார்படுத்துவதில் உள்ள பெரும் வாய்ப்பினை இக்கலை விழா பறைசாற்றியது.

இக்கலை விழாவில் 11 மாவட்டங்களிலிருந்து 186 கலைஞர்கள் பங்கு கொண்டார்கள். 23 நாடகங்கள் நடத்தப்பட்டன. இன்றைய அரசியல் பிரச்னைகளை கலை அம்சத்தோடு வழங்கிய, சிறப்பான 18 நாடகங்கள் அனைத்து மாவட்டங்களில் தொடர்ந்து நடத்தக்கூடிய தரத்துடன் அமைந்தது எனவும் கலைவிழாவில் பங்கேற்ற 13 இசைக் குழுக்களையும் மாநிலம் முழுவதும் சிறு மாறுதல்களுடன் பயன்படுத்த முடியும் 'என்றும், கலைவிழாவை நடத்திய இயக்குனர் குழு பரிந்துரை செய்துள்ளது.

மாநிலக்குழு இதனைப் பரிசீலித்து முடிவுகள் எடுக்க வேண்டும்.

9. 16-மாவட்டக் குழுக்கள் உள்ளன. 4-மாவட்டங்களில் 5-வது மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இரு நாள் கலை இலக்கிய விழாவாகவும், கலை-இலக்கிய வகுப்பாகவும் நடந்தது.

உறுப்பினர் எண்ணிக்கை 1987-ல் 2395, 1988-ல் இது வரை 1681. இது இந்த ஆண்டு இறுதியில்தான் பூர்த்தியாகும்.

★ சில புதிய நாவல்கள், சில சிறுகதை தொகுப்புகள் வெளி வந்துள்ளன. 150-க்கும் மேற்பட்ட இசைப் பாடல்கள், சுமார் 60 ஓரங்க முழுநீள நாடகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

★ நமது ஸ்தாபனமே முறையாக இயங்கும் ஒரே ஸ்தாபன மாக தமிழ்நாட்டில் உள்ளது. மாவட்டங்களில் த.மு.எ.ச.-விற்கு மாவட்ட ஃப்ராக்‌ஷன் இவைகளுக்கு வழிகாட்டுவது அவசியம். இது இல்லாது, மாவட்டங்களில் த.மு.எ.ச. இணைப்பு பணி பாதிப் புக்குள்ளாகிறது.

10 கலை இலக்கிய பிரச்சாரம் வளர்ந்து வருகிறது. த.மு. எ.ச. மாவட்ட மாநாடுகளிலும், கிளைக் கூட்டங்களிலும், கருத்த ரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம் மூலம் இது நடைபெறுகிறது.

★ த.மு.எ.ச.-விலுள்ளோருக்கு அரசியல் சித்தாந்த கல்வி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். இது தொடர்ந்து நடைபெற வில்லை.

தீக்கதிர்

1. கட்சிப் பத்திரிக்கையை கட்சி அமைப்பாளன் என்றார் தோழர் லெனின். கட்சிக் கொள்கையை மக்களிடம் கொண்டு செல்லவும், மக்களை அணிதிரட்டவும் கட்சி பத்திரிக்கையை நல்ல முறையில் வெளியிடுவதும், அதனை விரிவான அளவில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதும் நமது முக்கிய கடமையாகும்.

2. நமது கட்சியின் அரசியல் தத்துவார்த்த கருத்துக்களையும், நமது இயக்கத்தை ஒட்டிய மாநில, தேசிய, சர்வதேசிய செய்திகளையும் தாங்கி வருகிறது. ஜனநாயக இயக்கம் சம்பந்தப்பட்ட மற்ற ஏடுகளில் இடம் பெறுகிற அரசியல் செய்திகளும் தீக்கதிரில் ஓரளவு வெளியாகிறது.

3. சேலத்தில் (1985 நவம்பர்) நடைபெற்ற 12வது மாநில மாநாட்டில் தீக்கதிருக்கு நவீன அச்சு இயந்திரம் வாங்குவதற்கு அறைகூவல் விடப்பட்டது. அந்த முடிவை நமது தோழர்கள் மிகுந்த உற்சாகத்துடன் நிறைவேற்றினர். 1987 ஜூலை முதல் நவீன அச்சு இயந்திரத்தில் தீக்கதிர் வெளிவரத் துவங்கியது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

4. நான்கு பக்கங்களுடன் நமது இயக்க செய்திகளை மட்டுமே அதிகம் தாங்கி வந்த தீக்கதிர் இந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து 6 பக்கங்களாக வெளிவரத் துவங்கியுள்ளது.

5. தீக்கதிர் பத்திரிக்கையை நல்ல முறையில் வெளியிடவும், அதன் தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நமது கருத்துக்களைப்பிரதிபலிக்கும் கட்டுரைகளோடு இதர ஏடுகளில் வரும் செய்திகளையும் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை ஒழுங்குபடுத்த தொடர்ச்சியான முயற்சிகளை செயற்குழு மேற்கொண்டது. தலையங்கம், கட்டுரை, கேள்வி-பதில், வண்ணக்கதிர், விமர்சனப் பெட்டிச் செய்திகள் ஆகியவை தொடர்ந்து வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. இந்த அடிப்படையில் தீக்கதிர் வெளிவருகிறது.

6. பத்திரிக்கையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு செய்திப் பத்திரிக்கையாகவும் அதே நேரத்தில் கட்சியின் அரசியல் - சித்தாந்தப் போராட்டத்திற்கான கருத்துப் பத்திரிகையாகவும் வெளியாவதில் தீக்கதிர் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது. டெலிபிரிண்டர் மூலம் கிடைக்கக் கூடிய தேசிய—சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை உடனுக்குடன் நமது ஏட்டிலும் வெளியிட்டுள்ளோம்.

7. மேலே குறிப்பிட்டுள்ளது போல் தேசிய அளவில் வெளியாகும் பல முக்கிய ஆங்கில நாளேடுகளை வரவழைத்து அவற்றில் கிடைக்கக் கூடிய நமது இயக்கத்திற்கும், பிரச்சாரத்திற்கும் உதவக் கூடிய செய்திகளையும், தகவல்களையும், கருத்துக்களையும் தமிழில் தந்துள்ளோம். தமிழில் வெளியாகும் மற்ற ஏடுகளிலிருந்தும் எடுக்கப்பட்ட, நமக்குப் பயனளிக்கக் கூடிய செய்திகளை வெளியிட்டுள்ளோம்.

8. இந்தச் செய்திகளை வெளியிடும் போதே, தேவையானால் நமது விமர்சனத்தையும் சேர்த்துத் தர நாம் தவறவில்லை.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் வார ஏடான ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''யில் வெளியாகும் முக்கிய கட்டுரைகள் மற்றும் விமர்சனங்களையும் மற்ற மாநில இயக்கச் செய்திகளையும் தீக்கதிர் வெளியிட்டுள்ளது. இவை தவிர தலைவர்களின் கட்டுரைகள், தேசாபிமானி, கணசக்தி, பிரஜா சக்தி ஏடுகளில் வெளியாகும் செய்திகள் கட்டுரைகள் முதலியவையும் தீக்கதிரில் வெளிவந்துள்ளன. தீக்கதிர் ஆசிரியர் குழு தோழர்கள் எழுதும் கட்டுரைகள். விமர்சனப் பெட்டிகள், கண்ணோட்டம், தலையங்கங்கள் தொடர்ந்து வெளியாகி நமது அரசியல் போராட்டத்துக்கு உதவியுள்ளன.

9. தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், மத்திய தர வர்க்கத்தினர், மாணவர், வாலியர், மாதர்களின் போராட்டங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து செய்திகள் வந்துள்ளன.

10. வாராவாரம் ஞாயிறன்று வண்ணக்கதிர் பகுதி இடையறுது வந்து கொண்டிருக்கிறது. இதில் அரசியல், கலாச்சாரம், வரலாறு, சமூக நடப்புகள், அறிவியல், விளையாட்டு தொடர்பான கட்டுரைகள் வருகின்றன. திரைப்பட, நாடக, நூல் விமர்சனங்கள் இடம் பெறுகின்றன. கவிதை, சிறுகதை, சிறுவர் பகுதி முதலிய அம்சங்களுடன் வரும் இப்பகுதி பரவலாக வரவேற்பு பெற்றுள்ளது.

11. வண்ணக்கதிரில் மற்றொரு குறிப்பான அம்சம் கேள்வி-பதில் பகுதி. நமது வாசகர்களின் பலதரப்பட்ட சந்தேகங்கள் கேள்விகளாக வருகின்றன. அரசியல் கலை-இலக்கியம், தத்துவம் தொடர்பான இக்கேள்விகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் ஆசிரியர் குழு அளிக்கும் பதில்கள் கட்சி அணிகளுக்கு உதவிகரமாக உள்ளன.

12) தற்சமயம் நமக்கு செய்தி கிடைப்பதற்கு பி.டி.ஐ. டெலிபிரிண்டர் உள்ளது. இது தவிர முக்கியமான ஆங்கில

தமிழ் பத்திரிக்கைகளும், செய்திகள் எடுப்பதற்கும், விமர்சனங்கள் எழுதுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. கட்சித் தோழர்கள் அனுப்பும் செய்திக் கடிதங்களும் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் நியமிக்கப்பட்டுள்ள முழுநேர நிருபர்கள் அனுப்பும் செய்திகளும் வெளியிடப்படுகின்றன. தஞ்சை, புதுக்கோட்டை, காமராஜர் மாவட்டங்களில் பகுதி நேர நிருபர்களை அண்மையில் நியமித்துள்ளோம். நமக்குள்ள வசதிக்குறைவு காரணமாக நமது இயக்கச் செய்திகளையும் தமிழக செய்திகளையும் இன்னும் முழுமையாகவும், தொடர்ச்சியாகவும் தர இயலவில்லை.

13) பத்திரிக்கையை குறித்த நேரத்தில் அச்சிட்டு விநியோகிப்பது முக்கியமான ஒன்றாகும். பத்திரிக்கை குறித்த நேரத்தில் அச்சிடப்படாத குறைபாட்டையும் விநியோக குறைபாட்டையும் செயற்குழு சுட்டிக்காட்டி சரிபடுத்தியது. தீக்கதிர் தினசரி இரண்டு பதிப்புக்கள் வெளியாகிறது. இந்த இரண்டு பதிப்புகள் அச்சிடப்பட வேண்டிய நேரம், தோழர்களின் பணி நேரம் ஆகியவை நிச்சயிக்கப்பட்டன. பொறுப்புக்களும் தீர்மானிக்கப்பட்டன. இதன் காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் அச்சிடுவதில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மின்தடை, போக்குவரத்து பாதிப்பு ஆகிய காரணங்களால் பத்திரிக்கை விநியோகம் சில நேரங்களில் தடைபடுவதுண்டு.

14) தற்போது தீக்கதிரை ஒரு மையத்திலிருந்து அச்சடித்து தமிழகத்தின் எல்லா பகுதிகளுக்கும் அனுப்ப வேண்டியுள்ளது. அநேகமாக ஒவ்வொரு மாவட்டத் தலைநகர்களிலிருந்து காலை, மாலை ஏடுகள் வெளியாகிவரும் சூழ்நிலையில் அவற்றோடு செய்திகளுடன் நாம் போட்டியிடுவதில் சிரமம் உள்ளது.

15) தீக்கதிர் "ஆப்செட்" இயந்திரத்தில் அச்சாகிறது. ஆனால் பழைய அச்சுக் கோர்ப்பு முறைதான் நம்மிடம் உள்ளது. புகைப்படங்களை அச்சுக்குப் பயன்படுத்துவதற்கான காமிரா ஏற்பாடு நம்மிடம் இல்லை. வெளியில் கொடுத்துத்தான் செய்கிறோம். எனவே, அச்சுவடிவத்தில் குறைபாடு உள்ளது. ஆப்செட் இயந்திரத்தை இயக்குவதற்கு தேவையான புதிய ஜெனரேட்டர் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

16) ஆப்செட் இயந்திரத்தில் குறைந்த அளவு பத்திரிகையை அச்சிடுவதால் நஷ்டம் ஏற்படும் என்பது நாம் எதிர்பார்த்தது தான். இதை ஈடுகட்ட தீக்கதிர், செம்மலர் பத்திரிக்கைகளுக்கு விளம்பரம் சேகரிக்கிறோம். வர்த்தக ரீதியில் விளம்பரம் திரட்ட திட்டமிட்டு பொறுப்பாளர்களையும் நியமித்துள்ளோம். இந்த ஏற்பாட்டின் காரணமாக ஓரளவு விளம்பரங்கள் கிடைத்து வருகின்றன.

இருந்தபோதிலும் நமக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட போது மான அளவுக்கு விளம்பரங்கள் கிடைப்பது இல்லை.

17) ஆப்செட் இயந்திரத்தில் தீக்கதிர் அச்சிடும் பணி ஒரு மணி நேரத்திலே முடிந்து விடுகிறது. எனவே, வர்த்தக ரீதியான பணியிலும், அச்சு இயந்திரத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் தீக்கதிர் நஷ்டத்தையும் ஈடுகட்ட வேண்டியுள்ளது, இதை கருத்தில் கொண்டு வர்த்தக ரீதியான ஆர்டர்களை நாம் மேற்கொண்டோம். அரசு பாடப்புத்த கங்கள் அச்சிடுவதற்கான டெண்டர்களை மிகுந்த சிரமத்திற்கிடை யில் பெற்று பணிகளை குறித்த காலத்தில் முடித்துக் கொடுத்துள் ளோம்.

18) மேலும் நமது அமைப்புகளுக்கும், இதரருக்கும் போஸ் டர், பிரசுரம்; நோட்டீஸ் ஆகியவற்றையும் நாம் அச்சிட்டுத் தந் துள்ளோம். இவற்றில் கிடைத்த வருமானம் தீக்கதிர், செம்மலர் நஷ்டத்தை ஈடுகட்ட உதவி செய்தது. வர்த்தக ரீதியான பணிகளை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கை களில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம்.

19) தீக்கதிர், செம்மலர் தவிர நமது கட்சியின் முக்கிய வெளி யீடுகளையும், பிரசுரங்களையும் நமது அச்சகத்தில் உடனுக்குடன் அச்சிட தற்போது நம்மால் முடிகிறது. இதிலுள்ள அச்சக ஏற் பாட்டுக் குறைகளைப் போக்கி இதை விரிவாக்க வேண்டியுள்ளது.

20) சேலம் மாநாட்டின் போது தீக்கதிர் விற்பனை 6500 ஆக இருந்தது. நவீன அச்சு இயந்திரத்தில் பத்திரிகையை அச்சடிக்கத் துவங்கியவுடன் கடந்த ஆண்டு நாம் விற்பனை இயக்கம் நடத்தி னோம். அப்போது 12 ஆயிரம் பிரதிகள் வரை சென்றன. தற் போது 9500 பிரதிகள் அச்சாகிறது.

21. செம்மலர்

மனிதநேயம், முற்போக்குச் சிந்தனை ஆகிய கருத்தோட் டத்தினைக் கொண்ட இலக்கியப் படைப்புகளை வெளி யிடுவதன் மூலம் தமிழ் இலக்கிய உலகில் கடந்த 18 ஆண்டுகளுக்கு மேலாக செம்மலர் ஒரு குறிப்பிடத்தக்க முற்போக்கு இலக்கியப் பணியாற்றி வருகிறது. இந்த இதழை நமது கட்சி வட்டாரத்தில் மட்டுமல்லாது, அதற்கு வெளியேயும் உள்ளவர்கள் படிக்கிறார்கள். நமது வட்டாரத்தை சேராத இதர இலக்கியவாதி களாலும், கவனிக்கப்படுகிற, மதிக்கப்படுகிற ஒரு ஏடாக இது வளர்ச்சி பெற்றுள்ளது. நமது இலக்கிய வட்டாரத்திற்கு வெளியே

யும் உள்ள பல எழுத்தாளர்களின் தொடர்பும் செம்மலருக்கு இன்று கிடைத்திருக்கிறது. டாக்டரேட், எம்.பில். படிப்பிற்காக செம்மலர் சிறு கதைகளையும், இதர விஷயங்களை பற்றியும் ஆய்வு செய்திட கல்லூரி மாணவர்கள் சிலர் முன்வந்தனர். உதவி செய்கிறோம். கல்லூரி பேராசிரியர் ஒருவர் செம்மலர் இதழின் ஆரம்பம், வளர்ச்சி, அதன் பணி பற்றி ஆய்வுசெய்திட உதவி கோரியுள்ளார். கல்லூரி வட்டாரத்திலும் ஓரளவு கவனிக்கப்படுகிற இதழாகவும் செம்மலர் இருக்கிறது.

22) செம்மலரை நீண்ட காலமாகவே ஆசிரியர் குழுவின் ஓரிரு தோழர்கள் மட்டுமே கவனித்து வந்தனர். சப்-கமிட்டியின் ஆலோசனையின்பேரில் இந்நிலை மாற்றப்பட்டு, தற்போது 4—ஆசிரியர் குழு தோழர்கள் கவனித்து வருகின்றனர். இதனால் இதழின் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதனை வாசகர்களும், எழுத்தாளர்களும் உற்சாகத்துடன் வரவேற்கின்றனர். இதர பிரபல இலக்கியப் பத்திரிகைகளை எல்லாம், பல அம்சங்களோடும், . அலங்காரத் தோற்றத்தோடும் காணும் வாசகர்கள், செம்மலர் உள்ளடக்கம் இன்னும் பலவித அம்சங்கள் கொண்டதாகவும், தோற்றம் இன்னும் அழகுடையதாகவும் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

23. தற்போது, செம்மலரில் பிரசுரிக்கப்படும் சிறுகதைக்கு ரூ. 50ம், கவிதைக்கு ரூ. 25ம் சன்மானம் வழங்கி வருகிறோம். இதனை இவ்வாண்டு ஜூன் இதழ் முதல் ஆரம்பித்துள்ளோம். சன்மான அளிப்புக்குப் பிறகு பல நல்ல கதைகள் வரத் தொடங்கியுள்ளன.

24. அண்மையில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற கதைகளையும் பிரசுரிக்கத் தேர்வு செய்யப்பட்ட கதைகளையும் எழுத்தாளர் சங்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் செம்மலர் பிரசுரிக்க முன்வந்தது. அதன் மூலம், மொத்தமாக 50க்கும்மேலான சிறுகதைகள் ஒரே சமயத்தில் கிடைத்தன. நல்ல பல சிறுகதைகள் கிடைத்தன என்பது மட்டுமல்ல, புதிய பல எழுத்தாளர்களின் தொடர்பும் கிடைத்துள்ளன.

25. தற்போது 12,000 (பன்னிரண்டாயிரம்) பிரதிகளாக வெளிவரும் செம்மலர் படிப்படியாக 20 000 பிரதிகளாக அதிகரிக்க முடியும். அதிகரிக்க வேண்டும்.

26. தீக்கதிர் சப்கமிட்டி தொடர்ந்து கூடி வருகிறது. தீக்கதிர் உள்ளடக்கம் பற்றி இருமுறையும், ஸ்தாபன ஏற்பாடுகள், செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பதற்கான வழிமுறைகள், ஆகியவை பற்றி பல முறையும் பேசப்பட்டு, ஆலோசனைகளை மாநில செயற்

குழு, மாநிலக்குழு ஆகியவற்றின் முன்வைத்து இறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

27. அன்றுட செயல்பாட்டை உத்திரவாதம் செய்ய தீக்கதிர் இடைக்கமிட்டி ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தோழர் சி.செல்லசாமியை செயலாளராகக் கொண்ட இந்தக்குழு அடிக்கடி கூடி, தீக்கதிர் வெளியிடுவதில் எழும் பல்வேறு பிரச்சனைகளை அவ்வப்பொழுது பேசி ஒழுங்குபடுத்த உதவுகிறது.

28. இவைகள் மூலம் நேரத்திற்கு வெளியிடுவது, தரத்தை உயர்த்துவது, அவ்வப்பொழுது எழும் ஸ்தாபனப் பிரச்சனைகளை தீர்ப்பது ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படுகிறது. ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிர்வாக ஏற்பாடுகளுடன் இணைந்து தீக்கதிரில் பணியாற்றும் கட்சி உறுப்பினர்களை கிளைகளாகப் பிரித்து தொடர்ந்து செயல்பட வைப்பதினை துவக்கியுள்ளோம். 6 கட்சி கிளைகளும், ஒரு துணைக்குழுவும் தீக்கதிரில் செயல்பட்டு வருகின்றன.

29. எனினும், தொடர்ந்து மாநிலக்குழு தலையிட்டு தீக்கதிர், செம்மலர் செயல்பாட்டில் அபிவிருத்தி காண விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

★

கட்சி ஸ்தாபனம்

1. கடந்த சேலம் மாநாட்டிற்கு பின்னர் நமது அரசியல் ஸ்தாபன வேலைகளில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளோம் நமது கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை இந்த மூன்று ஆண்டுகளில் 30% வளர்ந்துள்ளது. சேலம் மாநில மாநாட்டின் அறை கூவலை ஏற்று தீக்கதிர் மற்றும் கட்சி வளர்ச்சி நிதிக்காக வசூலித்த தொகை ரூ. 30 லட்சத்திற்கும் மேல்; இதுவன்றி தொடர்ந்து கட்சி வளர்ச்சி நிதி, தேர்தல் நிதி போன்ற பல்வேறு நிதிவசூலில் நமது தோழர்கள் உற்சாகமாக ஈடுபட்டு நிதி கோட்டாக்களை நிறைவேற்றக்கூடிய வகையில் வளர்ச்சி பெற்றுள்ளோம். கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற எண்ணற்ற கிளர்ச்சி பிரச்சாரங்களில் மாநிலம் முழுவதுமுள்ள நமது கட்சி அமைப்புகள், அணிகள் லட்சோப லட்சம் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், இதர வகை பிரச்சாரத்தின் மூலமாகவும் மக்கள் மத்தியில் நமது கட்சியின் நிலையினை எடுத்துச்சென்றுள்ளனர்.

2. தீக்கதிர் நவீன எந்திரம் நிறுவுவதிலும். பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதிலும் ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம். நமது கட்சி மற்றும் வர்க்க அமைப்புகளின் கீழ் ஓரளவு உழைக்கும் மத்தியதர வர்க்கத்தினரை வெகுஜன அமைப்புகளில் திரட்டியுள்ளோம்.

3. மத்திய கமிட்டி மற்றும் மாநிலக் குழுவின் முடிவுகளையும் பல்வேறு பிரச்சனைகளில் நமது கட்சியின் அரசியல் நிலையினையும், கட்சி அணிகளுக்கு கொண்டு போயுள்ளோம். நமது அரசியல் நிலைகட்சியில், கட்சி அணிகள் உறுதியாக நின்று பணியாற்றிடும் கட்சி அமைப்பினை உருவாக்க முயற்சித்துள்ளோம். கட்சி ஸ்தாபன அமைப்பை பரிசீலிக்கும் போது இத்தகைய முன்னேற்றத்தையும், அதே சமயம் நமது பலவீனங்களையும் சரியாக மதிப்பீடு செய்திட வேண்டும்.

4. சேலத்தில் நடைபெற்ற 12வது மாநில மாநாடு 64பேர் கொண்ட மாநிலக் குழுவினை தேர்வு செய்தது. புதிய மாநிலக்குழு ஏ. நல்லசிவன், ஆர். உமாநாத், என்.சங்கரய்யா, பி.ஆர்.பரமேஸ்வரன், பி. ராமச்சந்திரன், கே. ரமணி, என். வரதராஜன், ஆர். ராமராஜ், கே. முத்தையா, ஏ. அப்துல் வஹாப், ஜி. வீரய்யன் ஆகிய 11 தோழர்களை செயற்குழு உறுப்பினர்களாகவும், தோழர் ஏ. நல்லசிவன் அவர்களை செயலாளர் ஆகவும் தேர்வு செய்தது.

5. 18-1-86 அன்று மதுரையில் நடைபெற்ற மாநிலக்குழு கூட்டத்தில் தோழர் பி.ராமமூர்த்தி, கே.வரதராசன், ஏ.கே. பத்மநாபன், டி. லட்சுமணன் ஆகிய தோழர்களை மாநில செயற்

குழுவில் இணைப்பதென முடிவு செய்யப்பட்டது. இதேகூட்டத்தில் தோழர் பி.ஆர் அவர்களையும், தோழர் எஸ்.ஏ. பெருமாள் அவர்களையும் மாநிலக் குழுவில் இணைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. எனவே 66பேர் கொண்ட மாநிலக்குழுவும், 15பேர் கொண்ட செயற்குழுவும் செயல்பட்டு வந்தது. இடையில் மூன்றாண்டு காலத்தில் மாநிலக் குழுவில் நான்கு தோழர்களை இழந்தோம். அருமைத் தோழர்கள் பி.ஆர்., வி.பி. சிந்தன் எஸ்.வீரபத்திரன், கே.எஸ். அர்த்தனாரி ஆகியோர் நம்மைவிட்டுப் பிரிந்தனர்.

6. மேற்குறிப்பிட்டுள்ள மாநிலக் குழு கூட்டத்தில் கீழ் காணும் முறையில் மாநிலச் செயற்குழு, மாநிலக் குழு உறுப்பினர்களுக்கு வேலைப் பிரிவினை செய்யப்பட்டது.

அ) மாநில மையம்

1. ஏ. நல்லசிவன் 2. ஆர். உமாநாத், 3.என்.சங்கரய்யா, 4. பி. ஆர். பரமேஸ்வரன், 5.பி.ராமச்சந்திரன், 6. ஆர். ராமராஜ், 7. பி. ராமமூர்த்தி, - 8. என். வரதராஜன், 9. ஜி. வீரய்யன், 10 ஏ.கே. பத்மநாபன்

ஆ) தீக்கதிர் மையம்

1. கே. முத்தையா 2. ஏ.அப்துல்வஹாப் 3. எஸ்.எஸ்.கிரி 4. வி. பரமேஸ்வரன் (ஏ. அப்துல்வஹாப்- தீக்கதிர் நிர்வாகி பொறுப்பு ஏற்பது)

இ) சி. ஐ. டி. யு. மையம்

1. ஏ. கே. பத்மநாபன் 2. கே. வைத்தியநாதன் 3. வி. பி. சிந்தன் 4. டி. ஜானகிராமன் .

ஈ) வி. ச. மையம்

1. ஜி. வீரய்யன் 2. பி.குமரவேல், 3. ஆர்.ராமராஜ், 4. என். சங்கரய்யா

உ) மாவட்டக் கமிட்டிகளுக்கு மாநில செயற்குழு தோழர்கள் பொறுப்பு

1.	சென்னை	— ஏ. நல்லசிவன், என். சங்கரய்யா
2.	செங்கை & பாண்டி	— டி. லட்சுமணன்
3.	வ.ஆற்காடு|| தெ.ஆற்காடு|தர்மபுரி	— பி.ஆர்.பரமேஸ்வரன்
4.	தஞ்சை	என். சங்கரய்யா, — ஜி.வீரைய்யன்

5. புதுக்கோட்டை/ பெரியார் — கே.வரதராசன்

6. திருச்சி — ஆர். உமாநாத், கே. வரதராசன்

7. மதுரை/அண்ணா — என். வரதராஜன்

8. காமராஜர்/முகவை — ஆர்.ராமராஜ்

9. நெல்லை/குமரி — ஏ. அப்துல்வஹாப்

10. கோவை — பி. ராமச்சந்திரன் கே.ரமணி

11. சேலம் — பி. ராமச்சந்திரன்

ஊ. அரங்கப் பொறுப்புகள்:

1. அரசு ஊழியர் — டி. லட்சுமணன்
2. ஆசிரியர்கள் — என். வரதராஜன்
3. வங்கி — பி. ராமச்சந்திரன்
4. தபால் தந்தி — பி.ஆர். பரமேசுவரன்
5. எல்ஐசி, ரயில்வே — ஆர். உமாநாத்
6. வழக்கறிஞர் — ஜே. ஹேமச்சந்திரன், என். சங்கரய்யா
7. டாக்டர்கள் — பி. ராமச்சந்திரன்
8. மாதர் அரங்கம் — ஏ. நல்லசிவன்
9. மாணவர்—வாலிபர் — பி. ராமச்சந்திரன்
10. மருத்துவ பிரதிநிதிகள் — ஏ.கே. பத்மநாபன்

7. மாநில செயற்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களில் தோழர் கே.வி. மூன்று மாத காலத்தில் மாவட்ட பொறுப்பிலிருந்து விடுபட்டு மாநில மையத்திற்கு வர வேண்டுமென்றும், தோழர் டி. லட்சுமணனை உடனடியாக மாவட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்க இயலாத நிலையில், மாவட்டப் பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொண்டே, மாநில மைய வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்துவதென்றும், சிஐடியூ மாநில மையத்தில் உள்ள பணிகளை உத்தேசித்து தோழர் ஏகேபி கட்சியின் மாநில மைய வேலைகளுக்கு முடிந்தஅளவு உதவி செய்வதென்றும் முடிவெடுத்து அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

8. மேற்கூறிய வேலைப்பிரிவினை அடிப்படையில் எவ்வாறு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பது பற்றி மாநில செயற்குழு மீண்டும் ஓராண்டு கழித்து பரிசிலித்தது. ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட மாநில மையத் தோழர்கள் பலரும், தங்களது அரங்க பணிகளையும் கவனித்துக் கொண்டு அதிகரித்து வரும் கட்சியின் மாநில மைய பணிகளில் போதுமான அளவு பங்கு கொள்ள இயல

வில்லை என்பதையும், சில தோழர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கும் மாவட்டப் பொறுப்புக்கள் மாற்றப்பட வேண்டியுள்ளது என்பதையும், சிஐடியூ மாநில மையத்தின் செயல்பாட்டினை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது என்பதையும் பரிசீலனையில் காண முடிந்தது.

9) அந்த பரிசீலனையின் அடிப்படையில் கீழ்காணும் மாற்றங்களை மாநில செயற்குழு, மாநிலக்குழு செய்தது.

அ. தோழர்கள் ஏ.என், என்.எஸ், பி.ஆர்.பி,என்.வி, கே.வி, டி.எல் ஆகியோர் மாநில மையத்திலிருந்து பணியாற்றுவது எனவும்,

ஆ. மாநில மையத்தில் பணியாற்றும் தோழர்கள் குறைந்த பட்சம் மாதத்தில் 20 நாட்கள் மையத்திலிருப்பது எனவும்,

இ. மாநில மையக் கூட்டத்தை வாரம் ஒருமுறை நடத்துவது எனவும்,

ஈ. தோழர் ஆர். யு, சிஐடியு மையத்திற்கு உதவுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

உ. மாவட்டக் கமிட்டிகளுக்குச் சென்று வழிகாட்ட கீழ்க் காணும் தோழர்களுக்கு பொறுப்புகள் கொடுக்கப்பட்டது :

சென்னை	—	ஏ.என்.,என்.எஸ். என்பதற்குப் பதில் ஏ.என்., பி.ஆர்.பி. எனவும்
வட ஆற்காடு	—	ஆர்.பி-க்கு பதில் ஏ.கே.பி. எனவும்
தர்மபுரி	—	பி.ஆர்.பி-க்கு பதில் பி.ஆர்.சி. எனவும்
தஞ்சை	—	என்.எஸ்., ஜி.வி.-க்கு பதில் என்.வி.ஜி.வீ., எனவும்
திருச்சி	—	ஆர்.யு.,கே.வி.க்கு பதில் கே.வி.மட்டும்
காமராஜர்	—	ஆர். ஆர். க்கு பதில், என். வி. எனவும்
முகவை	—	ஆர். ஆர். க்கு பதில் லாசர் எனவும்
நெல்லை	—	ஏ. ஏ. டபிள்யு. க்கு பதில் ஏ.என் எனவும்
குமரி	—	ஏ. ஏ. டபிள்யு.க்கு பதில் டி.எல் நிச்சயிக்கப்பட்டு அவரதுவேலைப் பளு காரணமாக பின்னர் ஏ.என். எனவும் பொறுப்பு நிச்சயிக்கப்பட்டது.

10. தோழர் என்.எஸ்.அகில இந்திய விவசாய சங்கப் பொதுச் செயலாளர் பொறுப்பினை நிறைவேற்றும் வகையில் டெல்லியில் மாதத்தில் சில நாட்கள் தங்க வேண்டியுள்ளதால் அவரையும், தோழர் ஆர். ஆர் இதய நோயால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து பயணம் செய்வதில் சிரமம் ஏற்பட்டதால் அவரையும் மாவட்டப் பொறுப்புகளிலிருந்து விடுவித்தோம். இவைகளையொட்டியே மாவட்டப் பொறுப்புகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. தோழர் என் வி. க்கு மாநிலக்குழுவின் பொருளாளர் பொறுப்பு தரப்பட்டது.

11. மாநிலக் குழு, மாநில செயற்குழு, மாநில மைய வேலைகள்

அ. கடந்த மாநாட்டிற்குப்பின் மாநில செயற்குழுக் கூட்டம் 49முறை நடைபெற்றுள்ளது. மாநிலக்குழு கூட்டம் 17 முறை நடைபெற்றுள்ளது; சராசரியாக இரு மாதங்களுக்கு ஒருமுறை மாநிலக்குழுகூட்டமும், 3 வாரங்களுக்கு ஒருமுறை மாநில செயற்குழு கூட்டமும் நடைபெற்றுள்ளன. இந்த மூன்று ஆண்டுகளில் 50 மாநில மையக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

12. கடந்த மாநில மாநாட்டிற்குபின் கீழ்காணும் மாநிலக்குழு, மாநில செயற்குழு வேலைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

அ) மாநில மையத்தில் ஒன்று அல்லது அதற்கு அதிகமான மாநில செயற்குழு உறுப்பினர்கள் இருந்து செயல்படுவது என்பதை நிறைவேற்றியுள்ளோம்.

ஆ) மாநில செயற்குழு கூட்டங்களுக்கிடையில் மாநில மையக் கூட்டங்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வந்துள்ளோம். மாநிலக்குழு, மாநில செயற்குழு முடிவுகளை அமுல் படுத்துவதற்கும், அவ்வப்போது எழும் பிரச்சனைகளுக்கு வழிகாட்டுவதற்கும் இதனால் ஓரளவு முடிந்துள்ளது.

இ) அரசியல் நிலை, அரசின் அடக்குமுறை, மக்களின் போராட்டங்கள், இயக்கங்கள் போன்ற பிரச்சனைகளில் உடனுக்குடன் நமது கட்சியின் நிலையை தெளிவுபடுத்தவும், இயக்கங்களை முன்னெடுத்துச் செல்லவும் பத்திரிகைகளுக்கு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றோம்.

ஈ) மாநிலக் குழுவின் வேலைகளைப் பற்றி மத்தியக் கமிட்டிக்கு ஓரளவு எழுத்துப்பூர்வமான ரிப்போர்ட்டுகளை அனுப்பி வருகின்றோம்.

உ) மாநில செயற்குழு, மாநிலக் குழு மற்றும் மாநில மையம் எடுக்கும் முடிவுகளையும், நடைபெறவேண்டிய இயக்கங்கள் பற்றியும் உடனுக்குடன் சுற்றறிக்கைகள் மாவட்ட குழுக்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

ஊ) அரசியல் கட்சிகளின் தலைமைகளுடன் அரசியல் நிலை, இயக்கங்கள் குறித்து ஓரளவு விவாதித்து வந்துள்ளோம். குறிப்பாக சி.பி.ஐ., தி.மு.க. போன்ற பிறகட்சிகளுடன் அரசியல் நிலைமை குறித்து விவாதித்து, கூட்டு இயக்கங்கள் நடத்திட கவனம் செலுத்தியுள்ளோம்.

எ) மாவட்ட குழுக்களுடன் மாநில செயறகுழு நெருக்கமான தொடர்பு கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதவியுள்ளது.

ஏ) அவ்வப்போது எழுந்த பல்வேறு அரசியல் நிலைமைகளையொட்டி மாநில செயற்குழு, மாநிலக்குழு விவாதித்துச்சரியான, உறுதியான, அரசியல் நிலையை மேற்கொண்டது. சிக்கலான சில பிரச்சனைகளில் மத்திய கமிட்டி, அரசியல் தலைமைக்குழுவில் ஆலோசனை பெற்று முடிவுகளை மேற்கொண்டது. அரசியல் தலைமைக்குழுவுடன் நெருக்கமான உறவினை கொண்டு செயலாற்றி வந்துள்ளது.

ஐ) சேலம் மாநாட்டிற்குப்பின் மாநிலக்குழு கீழ்காணும் முக்கிய அரசியல் ஸ்தாபன பிரச்சனைகள், இயக்கங்கள் குறித்து விவாதித்து திட்டமிட்டது. எடுத்த முடிவுகளை நிறைவேற்றிடத் தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளது.

- உள்ளாட்சி மன்றத் தேர்தல்
- கட்சியின் ஓராண்டு வேலைத்திட்டம்
- தீக்கதிர் நவீன எந்திரம் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் (நிதி வசூல்)
- கோவை அரசியல் மாநாடு
- அகில இந்திய வாலிபர் மாநாடு
- சட்டமன்ற பணிகள்
- அகில இந்திய அரசியல் பிரச்சார பயணம்
- 1988 மார்ச் 'பாரத் பந்த்'
- இந்திய—இலங்கை உடன்பாடு, அதில் நமது நிலையை மக்களிடம் எடுத்துச் செல்வது
- இந்தி பிரச்சனை சம்பந்தமாக தி. மு. க. வின் தவறான போராட்டமும், அ.தி.மு.க.வின் எதேச்சாதிகார போக்கும், இந்த இரு திசை வழிகளுக்கெதிரான நமது கட்சியின் நிலை பற்றி விளக்கி பிரச்சாரம்

- எம்.ஜி.ஆர். மறைவிற்கு முன்னும், பின்னும் எழுந்துள்ள அரசியல் நிலை குறித்து விவாதித்து சரியான நிலை மேற்கொண்டது.
- நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் நாம் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் தந்திரங்கள் குறித்து விவாதித்து முடிவு செய்தது.
- தொழிற்சங்க, விவசாய சங்க அரங்கங்களின் வேலைகளில் அபிவிருத்திக்கான முடிவுகள் மேற்கொண்டது.
- வன்னியர் பிரச்சனையில் நாம் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள்
- மாவட்ட கட்சி அமைப்புகள் சம்பந்தமாக விவாதித்து வழிகாட்டுதல்
- ராஜீவ் அரசின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக நம்முடன் இணைந்து நிற்கும் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகள்-

மேற்கூறிய பிரதான இயக்கங்கள், பிரச்சனைகள் பற்றி விவாதித்து திட்டமிட்டு நிறைவேற்றியுள்ளோம்.

13. இத்தகைய முன்னேற்றத்திற்கு மத்தியில் நமது பலவீனங்களையும் நாம் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. எதிர் காலத்தில் கீழ்காணும் பிரதானமான பலவீனங்களை அகற்ற போராட வேண்டியுள்ளது.

அ) அரசியல் இயக்கங்களுமே, வர்க்க, வெகுஜன அமைப்புகளின் கிளர்ச்சிகளும், போராட்டங்களும் பெருகிவரும் நிலையில்இந்தப் பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல கட்சி அமைப்பை வளர்க்கவும் வலுப்படுத்தவுமான கடமை மாநில கட்சியின் முன் உள்ளது. ஆனால் இத் தேவையை நிறைவேற்றும் அளவிற்கு மாநில மையத்தில் போதுமான தோழர்கள் இருந்து வேலைகளை செய்ய முடியவில்லை.

ஆ) மாநில செயற்குழு உறுப்பினர்களில் தோழர் கே. எம்., வஹாப் ஆகிய தோழர்கள் தீக்கதிர் பொறுப்பினையும், தோழர் ஜி.வீ.வி.ச. அரங்க மாநில வேலைகளையும், தோழர் ஆர்.யு.,ஏ.கே.பி. சிஐடியு மைய வேலைகளையும், தோழர் கே.ஆர். உடல்நல குறைவு காரணமாக பெருமளவு கோவையிலிருந்து செயலாற்ற வேண்டியுள்ளதாலும் தோழர் டி.எல். செங்கை மூாவட்ட செயலாளர் பொறுப்பினை நிறைவேற்றவேண்டியுள்ளதாலும் தோழர் கே.வி. மாவட்ட பொறுப்புகளுடன் தீக்கதிருக்கு உதவ

வேண்டியிருப்பதாலும் மாநில மையத்தின் வேலைகளை பிரதானமாக கவனிக்க தோழர்களின் எண்ணிக்கை குறைகிறது. இதனால் மாநில மைய செயல்பாட்டில் உள்ள பலவீனம் நீடிக்கின்றது.

இ) தீக்கதிர் நிதிவசூல், நவீன இயந்திரத்தை நிறுவுதல், உள்ளாட்சி மன்றத் தேர்தல், கோவை அரசியல் மாநாடு, இடதுசாரி வெகுஜன அமைப்புகளின் அகில இந்திய பிரச்சார பயணம், விவசாய அரங்க மறியல் போராட்டங்கள், பாரத் பந்த், தொழிற்சங்க அரங்கத்தின் மாநில மைய வேலைகள், விவசாய அரங்க மாநில மைய வேலைகள் போன்ற பணிகளை மட்டும்தான் மாநில செயற்குழுவும் மாநிலக்குழுவும் விமர்சன ரீதியாக பரிசிலனை செய்ய முடிந்தது. கடந்த ஒராண்டு காலமாக எழுத்துப் பூர்வமான வேலை அறிக்கையை வைத்து மாநிலக்குழு விவாதிக்கவில்லை.

ஈ) 'தொழிற்சங்க அரங்கில் நமது கடமை' என்ற மத்திய கமிட்டியின் ஆவணத்தைதமிழ்நாட்டில்அமுல்நடத்துவது பற்றி மாநில செயற்குழுவும் மாநிலக் குழுவும் விவாதித்து முடிவுகள் மேற்கொண்டது. அதே போல் ரயில்வே, பஞ்சாலை போன்ற மாநில ரீதியான தொழில் அரங்க பிரச்னைகள் பற்றியும் விவாதித்து முடிவுகள் மேற்கொண்டது. சிஐடியுவின் மாநில மைய வேலைகளை வலுப்படுத்துவது சம்பந்தமாகவும் விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவ்வாறான முடிவுகள் தொடர்ச்சியாக அமல்படுத்துவது குறித்து பரிசீலனை செய்யாத நிலை நீடிக்கிறது.

உ) விவசாய அரங்க மாநில மைய வேலைகள் பற்றி விவாதித்தோம். தோழர் வி.ஏ. கருப்புசாமியை மாநில மையத்திற்கு கொண்டு வந்தோம். ஓரளவு வி.ச.மாநில மைய வேலைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இன்னும் பலவீனங்கள் நீடிக்கவே செய்கின்றன. இந்த அரங்கில் மாவட்ட அளவில் பெருமளவு பலவீனங்கள் உண்டு. இத்தகைய பலவீனங்களை போக்குவதற்குரிய கவனம் செலுத்த இயலவில்லை.

ஊ) வாலிபர், மாதர், மாணவர், எழுத்தாளர் போன்ற இன்னும் இதர அரங்கங்களில் அவ்வப்போது எழும் பிரச்சனைகளுக்கு வழிகாட்டி உதவியுள்ளோம். ஆனால் அரங்க

பணிகளைப் பற்றி முழு அளவில் ஒரு கால அளவிற்குள் விவாதித்து வழிகாட்டாத பலவீனம் நீடிக்கின்றது.

ஏ) இக்காலத்தில் மாவட்டக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு வழிகாட்டி உதவியுள்ளோம். குறிப்பாக சென்னை, மதுரை, தஞ்சை, குமரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தி ஸ்தாபன பிரச்சனைகளை பற்றி விவாதித்து வழிகாட்டியுள்ளோம். தெ. ஆற்காடு, புதுக்கோட்டை, பெரியார், காமராஜர், முகவை, நெல்லை, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களில் அவ்வப்போது எழுந்த கட்சி ஸ்தாபன பிரச்சனைகளுக்கு வழிகாட்டி உதவியுள்ளோம். இருப்பினும் அனைத்து மாவடடக் குழுக்களின் செயல்பாடு மற்றும் ஸ்தாபன பிரச்சனை குறித்து விசேஷ கவனம் செலுத்தி விவாதித்து வழிகாட்ட இயலவில்லை.

ஏ) தீக்கதிர் விற்பனையை அதிகரிக்கவும், அதன் நிர்வாகத்தை செம்மையாக நடத்திச் செல்லவும் மாநில செயற்குழு கவனம் செலுத்தி வருகின்றது. அதேபோல் தீக்கதிரின் உள்ளடக்கம் போன்ற அரசியல் அம்சத்தையும் விவாதித்து வழிகாட்டி வருகிறது. இருப்பினும் இன்னும் கூடுதல் கவனம் செலுத்த இயலவில்லை.

ஐ) அரசியல் பிரச்சனைகள், நடவடிக்கைகள் வர்க்க, வெகுஜன ஸ்தாபன பிரச்சனைகள், கட்சி ஸ்தாபன நடவடிக்கைகள் ஆகியவைகளையொட்டிய வேலைகள் மாநில குழுவின் முன் குவிந்த வண்ணமுள்ளன. இவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் செயல்பட போதுமான தோழர்கள் மையத்தில் இல்லை. எதிர்காலத்தில் பிரதான மாக மைய பணிகளை செய்வதற்கென குறைந்த பட்சம் நான்கு அல்லது ஐந்து தோழர்களை நிச்சயிப்பது அவர் களின் வேலை முறைகளில் மாற்றம் ஏற்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளின் மூலம் மேற்காணும் பலவீனங் களை களைய போராட வேண்டியுள்ளது.

14. ஓராண்டு வேலைத் திட்டம்:

அ) நமது அரசியல், ஸ்தாபனப் பணிகளை மூன்று ஆண்டு களுக்கு ஒருமுறை கட்சி மாநாட்டில் மறுபரிசீலனை செய்யும் நடைமுறைக்கு பதிலாக, அரசியல் நிலைமையை யும், கட்சி ஸ்தாபன பணிகளையும் ஆண்டுதோறும் மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று மத்திய கமிட்டி பணித் தது.

ஆ) ஒவ்வொரு ஆண்டும் ஓராண்டிற்கான வேலைத் திட்டத்தை தயாரித்து மாநில செயற்குழு - மாநிலக் குழுவில் விவாதித்து இறுதிப்படுத்தி மத்தியக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்றும், அந்த நகல் திட்டத்தின் மீது மத்திய கமிட்டி கூறும் ஆலோசனைகளை சேர்த்துக் கொண்டு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும், பின்னர் அதன்மீது ஓராண்டு கழித்து மறுபரிசிலனை செய்யவேண்டும் என்றும் மத்திய கமிட்டி ஆலோசனை தந்தது.

இ) அதனடிப்படையில் மாநில செயற்குழு ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்து, மாநிலக் குழுவில் விவாதித்து மத்திய கமிட்டிக்கு அனுப்பி வைத்தது. அதனை அமுல்படுத்தும் பணியையும் மேற்கொண்டது. அத்திட்டத்தின் பெரும் பகுதி பணியினை நாம் அமுல்படுத்தியுள்ளோம். ஆனால் அதன் பின்னர் வேலைத் திட்டத்தை அமுல்படுத்தியது பற்றி மாநிலக் குழுவில் பரிசிலனை செய்யப்படவில்லை. அடுத்த ஆண்டிலும் அத்தகைய ஓராண்டு திட்டத்தினை தயாரித்து அமுல்படுத்த இயலவில்லை.

15. மாநிலக்குழு அலுவலக செயல்பாட்டில் ஓரளவு அபிவிருத்தி காண முயற்சி செய்துள்ளோம், தற்போது அலுவலகச் செயலாளர் உள்ளிட்ட ஐந்து தோழர்கள் முழுநேர ஊழியர்களாக பணிபுரிகின்றனர். தொடர்ச்சியாக 24 மணி நேரமும் குறைந்தது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தோழர்கள் (மாநில செயற்குழு உறுப்பினர் அல்லாமல்) மாநிலக் குழு அலுவலகத்தில் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநில அலுவலக வேலைகள் குறித்து வரும் பிரச்சனைகள் பற்றி அவ்வப்போது அலுவலக கிளை கூடி விவாதித்து ஓரளவுக்கு ஒழுங்குப்படுத்தப்படுகிறது. இருப்பினும் இன்னும் முறையாக செயல்பட வைக்க வேண்டியுள்ளது. பெருகிவரும் அலுவலக பணிகளை உத்தேசித்து, வருங்காலத்தில் மேலும் ஓரிரு தோழர்களை மாநில அலுவலக பணிக்கு கொண்டு வரவேண்டியுள்ளது. மாநிலக் குழு அலுவலக செயல்பாட்டிற்கு ஒரு கார், ஒரு மொப்பட் பயன்படுத்தப்படுகின்றது.

16 மாநிலக் குழுவின் நிதி நிலை

அ) கடந்த சேலம் மாநாட்டிற்குப்பின் வரவு-செலவு கணக்குகள் மாநிலக்குழு கூட்டத்தில் முறையாக சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவு கணக்குகள் ஒருமுறை ஆடிட் கமிட்டியால் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஆ) மாநில மையத்தின் மாதாந்திர சராசரி செலவு விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

முழுநேர ஊழியர் அலவன்ஸ்	ரூ.	9000-00
போக்குவரத்து செலவினங்கள்	ரூ.	2500-00
தொலைபேசி கட்டணச் செலவு	ரூ.	2500-00
கார், மொபட் பெட்ரோல் பராமரிப்பு செலவு	ரூ.	2500-00
ஸ்டேஷனரி- தபால்- பத்திரிகை- அலுவலக பராமரிப்புச் செலவு	ரூ.	1500.00
செயற்குழு கூட்டம்-மையத் தோழர்கள் உணவு-இதரச் செலவினங்கள்	ரூ.	1500.00
அலுவலக கட்டிட பராமரிப்பு- மின்கட்டணம்-இதரச் செலவு	ரூ.	1500.00
ஆக மொத்தம்	ரூ.	21000.00

எனவே ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ, 21000- செலவாகின்றது. வருடத்தில் இரண்டரை லட்ச ரூபாய்க்கும் மேல் மாநிலக் குழுவிற்கு தேவைப்படுகின்றது.

இ) கட்சி வளர்ச்சி நிதி, கட்சி உறுப்பினர்கள் லெவி வரவு, சட்டமன்ற உறுப்பினர்கள் லெவி இவைதான் மாநிலக் குழுவின் பிரதான வரவினம். கடந்த 1986,87 ஆகிய இரு வருடங்களில் கட்சி நிதிக்கென தனியாக கோட்டா நிச்சயிக்கப்படவில்லை. தீக்கதிர் நிதியுடன் சேர்ந்தே கட்சி நிதி வசூல் நடைபெற்றது. 1988-ம் ஆண்டில் நிச்சயிக்கப்பட்ட கோட்டாவில் ரூ. 110000 என்ற அளவே மையத்திற்கு நிதி வந்துள்ளது. கட்சி உறுப்பினர் லெவி வகையில் கடந்த 1986,87, 88-ம் ஆண்டுகளில் முறையே ரூ.47000- ரூ51000-, ரூ, 53000- என்ற அளவே மையத்திற்கு கிடைத்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் லெவியும், உறுப்பினர் எண்ணிக்கை 5 ஆக குறைந்ததால், கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.65776.50 மாநில மையத்திற்கு கிடைத்துள்ளது. சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ.20000 என்ற அளவே கிடைக்கிறது.

ஈ) சென்ற மாநாட்டு அறிக்கையில் சுட்டிக் காட்டியது போலவே கட்சி உறுப்பினர்கள் கொடுக்கும் லெவியில் இடைக் கமிட்டிகள் எடுத்துக் கொண்டது போக மாவட்டக் குழுக்களுக்கு

வரும் லெவி தொகையிலிருந்துதான் 10 சதம் மாநில மையத்திற்கு கொடுக்கும் நிலை நீடிக்கிறது. கட்சி உறுப்பினர்கள் தரும் லெவியில் 10 சதவிகிதத்தை தருவதில்லை. சில மாவட்டக் குழுக்களே ஓரளவு முறையாக மாநில மையத்திற்கு லெவியை தருகின்றன.

உ) கட்சி வளர்ச்சி நிதி வகையில் மாநிலக் குழு நிர்ணயிக்கும் கோட்டாவை ஒருசில மாவட்டக் குழுக்களே முழுமையாக பூர்த்தி செய்கின்றன. பல மாவட்டக் குழுக்கள் ஒரு பகுதி நிதியை மட்டும் அளிக்கின்றன. அதிலும் சில மாவட்டக் குழுக்கள் நிதி தருவதில்லை.

ஊ) இந்நிலையில் மாநில மைய செலவிற்காக நிதி கையிருப்பு மிக குறைவாக உள்ளது. சில நேரங்களில் மாவட்ட கமிட்டிகளிடமிருந்து கடனாக பெற்றும் செலவுகளை சமாளிக்க வேண்டியுள்ளது. மாவட்டக் குழுக்கள் கட்சி நிதிக் கோட்டாவினை முழுமையாக பூர்த்தி செய்வதும், மற்றும் கட்சி லெவியினை முறையாக செலுத்துவதன் மூலம் மட்டுமே மைய செலவுகளை சமாளிக்க இயலும்.

எ) இக்காலத்தில் பல்வேறு விஷேசநிதிக்கென மாநிலக் குழு விடுத்துள்ள அறைகூவலுக்கிணங்க வசூலான நிதி விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

தீக்கதிர் நிதி	1627659. 45
பஞ்சாப் தோழர்கள் பாதுகாப்பு நிதி	54704. 45
கேரள தேர்தல் நிதி	42676. 25
திரிபுரா ஆதரவு நிதி	71960. 10
தோழர் எஸ்.வீ. குடும்ப உதவி நிதி	34636. 00 + 20000. 00
தேர்தல் நிதி வரவு (1988)	173571. 00

பல்வேறு அரசியல் ஸ்தாபன வேலைக்கு மத்தியில் கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து இவ்வாறு வசூல் செய்யப்பட்டுள்ளது. இது நமது அரசியல் ஸ்தாபன வளர்ச்சியை காட்டுகிறது. இவ்வாறு நிதி வசூலில் முன்னேற்றம் இருப்பினும், இவ்வாறான மாநில ரீதியான நிதி வசூல்களுக்காக மாநில மையத்திலிருந்து தரப்பட்ட ரசீது புத்தங்களின் மூலம் வசூலான தொகை பற்றிய கணக்கினை முறையாக முடித்து அடிக்கட்டைகளை மாநில மையத்திற்கு திருப்பி தருவது இல்லை என்ற நிலையே உள்ளது. பல்வேறு வட்ட-இடைக்கமிட்டிகள் தங்களது வரவு-செலவு கணக்கை முறையாக தங்கள் கமிட்டிகளில் சமர்ப்பிக்காத பெரும் பலவீனமும் நீடிக்கின்றது.

17. மாநிலம் முழுவதும் உள்ள நமது கட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், காலிமனை, இதர அசையா சொத்துக்களை மாநிலக் குழுவின் பொறுப்பில் கொண்டு வந்து நிர்வகிக்கும் வகையில் 'உழைக்கும் மக்கள் நல அறக்கட்டளை' என்ற பெயரில் ஒரு அறக் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் அனைத்து செயற் குழு உறுப்பினர்களும் டிரஸ்டிகளாகவும், மாநில செயலாளர் மேனேஜிங் டிரஸ்டியாகவும் இருப்பதென முடிவு செய்யப்பட்டு அமுல் நடத்தப்படுகிறது.

அ) மாநிலக் குழு, மாவட்டக் குழு மற்றும் இடைக் கமிட்டி களுக்கு சொந்தமாக உள்ள அனைத்து கட்டிடங்களும், அசையா சொத்துக்களையும் இந்த டிரஸ்டுக்குள் கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே வாங்கப்பட்டு பல்வேறு பெயர் களில் உள்ள கட்டிடங்களை படிப்படியாகவும், புதிதாக வாங்கும் அசையா சொத்துக்களை இந்த 'டிரஸ்ட்' பெயரில் வாங்குவதென வும் முடிவு செய்யப்பட்டு அமுல் செய்யப்பட்டு வருகிறது.

ஆ) கிருஷ்ணகிரியில் தோழர் டாக்டர் அண்ணாஜி தனது சொந்த மருத்துவமனையை நமது டிரஸ்டுக்கு எழுதி வைத்துள் ளார். தற்போது அந்த மருத்துவமனை டிரஸ்ட் பெயரில் இயங்கி வருகிறது.

இ) தோழர் பி. ஆர். மறைவதற்கு முன் தனது சொந்த பெயரில் இருந்த ரூ. 50000/- வைப்பு நிதியையும், ஒரு காரையும் மாநிலக் குழுவிற்கு அளித்துள்ளார்.

18. அ) மாவட்டக் கமிட்டிகளின் செயல்பாடுகள் :-

அரசியல், ஸ்தாபன தேவைகளையொட்டி கீழ்கண்ட மூன்று மாவட்ட குழுக்களை புதிதாக உருவாக்கி உள்ளோம்.

நெல்லை மாவட்டக் குழுவை	—	சிதம்பரனார்—நெல்லை என இரு மாவட்டக் குழுக்களாகவும்,
தஞ்சை மாவட்டக் குழுவை	—	மேற்கு தஞ்சை, கிழக்கு தஞ்சை என இரு மாவட்டக் குழுக்களாகவும்
கோவை—நீலகிரி மாவட்டக் குழுவை	—	கோவை, நீலகிரி என தனித்தனியாக இரு மாவட்டக் குழுக்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

ஆ) தமிழ்நாட்டில் ஏற்கனவே செயல்பட்டு வந்த 18 மாவட்டக் குழுக்களுடன் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த 3 மாவட்டக்குழுக்களையும் சேர்த்து தற்போது 21 மாவட்டக் குழுக்கள், செயல்பட்டு வருகின்றன.

இ) கடந்த மாநில மாநாட்டிற்கும், இந்த மாநாட்டிற்கும் இடையில் அண்ணா மாவட்டச் செயலாளராக இருந்த தோழர் வி. ஏ. கருப்புச்சாமி மாநில வி. ச. பொறுப்பிற்கு வந்ததினால் தோழர் பி.கே.கே. அவர்கள் மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். அதேபோல், கோவை மாவட்ட செயலாளராக இருந்த தோழர் கே. ஆர். அவர்களின் உடல்நிலை காரணமாக தோழர் தங்கவேல் மாவட்ட செயலாளராகவும், சேலம் மாவட்ட செயலாளராக இருந்த தோழர் கே.எஸ்.ஏ. கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் தோழர் பி. தர்மலிங்கம் அவர்களை சேலம் மாவட்ட செயலாளராகவும், பாண்டிச்சேரி மாவட்டச் செயலாளராக இருந்த தோழர் எஸ்.வீ. மறைந்ததால் தோழர் சங்கரன் மாவட்ட செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஈ) கடந்த மாநாட்டின்போது கோவை மாவட்ட கட்சி ஸ்தாபனத்திற்குள் கடுமையான கோஷ்டி போக்குகள் தலைதூக்கியதன் விளைவாக மாவட்ட கட்சி ஒருமித்த செயல்பாடுகொண்டதாக இல்லாத நிலை ஏற்படடது. அதில் மாநில தலைமை நேரடியாக தலையிட்டு இத்தகைய அபாயகரமான போக்கினை களைய உறுதியான நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் அத்தகைய போக்குகளைப் பெருமளவு களைய முடிந்துள்ளது. இருப்பினும் கோஷ்டிப் போக்குகளின் மிச்ச சொச்சங்கள் இருக்கவே செய்கின்றன.

உ) சமீபத்தில் மாவட்ட, வட்ட மாநாடுகள் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்று முடிந்துள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 90 சதத்திற்கு மேற்பட்டவர்கள் மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளனர். வேலை அறிக்கை மீது விமர்சன ரீதியான ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடத்தப்பட்டு, சிறந்தமுடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநாட்டின் பேரணியிலும் பொதுக்கூட்டங்களிலும் கட்சி அணிகள் முழுமையாகவும், திரளான பொது மக்களும் கலந்துகொண்டுள்ளது உற்சாகமளிப்பதாக உள்ளது. இவை நமது கட்சியை நோக்கி மக்களின் ஆதரவு அதிகரித்து வருவதையும், கட்சியின் வளர்ச்சியையும் காட்டுவதாக உள்ளது.

ஊ) இந்த மூன்றாண்டு காலத்தில் தொடர்ச்சியான பல்வேறு அரசியல் ஸ்தாபன பணிகளை நிறைவேற்றிக் கொண்டே மத்திய—மாநில கமிட்டிகளின் முடிவுகளையும் அமுல்படுத்த மாவட்டககமிட்

டிகள் ஓரளவு விடாப்பிடியான முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன. வர்க்க—வெகுஜன அமைப்புகளுக்கும் வழிகாட்டி உதவி வந்துள்ளன. இருப்பினும் அதிகரித்து வரும் இயக்க வேலைகள், நிறைவேற்றப்படவேண்டிய கட்சி ஸ்தாபன கடமைகள் ஆகியவற்றினை நிறைவு செய்யும்வகையில் கட்சியின் மாவட்ட மையங்கள் போதுமான பலம் பெற்றவையாக இல்லை.

எ) மாவட்டச் செயற்குழு, மாவட்டக்குழு கூட்டங்களுக்கிடையில் எழும் பிரச்சனைகளின்மீது கூட்டான முடிகளை மேற்கொள்ளவும், தாமதமின்றி பிரச்சனைகளில் தலையிடவும் வேண்டியுள்ளது. மாவட்டச் செயற்குழுவும், மாவட்டக் குழுவும் எடுத்த முடிவுகளைத் தொடர்ந்து நிறைவேற்றவும்வேண்டியுள்ளது. மாவட்டக் குழுவின் அரசியல் ஸ்தாபன வேலைகளில் அபிவிருத்தி காண மாவட்ட மைய வேலைகளை பிரதானமாகச் செய்யும் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்களை நிச்சயிக்க வேண்டும்.

ஏ) மாநிலக் குழுவுடன் தொடர்ச்சியான கடிதப் போக்குவரத்து கொள்வது, சிக்கலான அரசியல் பிரச்சனைகள் எழும்போது மாநிலக் குழுவின் வழிகாட்டுதலை கோரி பெறுவது போன்ற விஷயங்களில் ஓரளவு அபிவிருத்தி இருப்பினும் இயக்கங்கள் பற்றிய விரிவான பரிசீலனை அறிக்கையினை உரிய காலத்திற்குள் மாநிலக் குழுவிற்கு அனுப்பி வைப்பது, ஸ்தாபனம் அல்லது இதர முக்கிய விஷயங்கள் குறித்து மாநிலக்குழு தகவல் அல்லது விபரங்கள் கோரும் போது அவற்றை அனுப்புவது ஆகியவற்றில் தொடர்ச்சியான பலவீனங்கள் உள்ளன.

ஐ) மாவட்டக் கமிட்டிகள் கட்சி பத்திரிகைகள், பிரசுரங்கள் விற்பதில் சிறிதளவு அபிவிருத்தி உண்டு. ஆனால் தொடர்ந்து பத்திரிகை, பிரசுர விற்பனையில் உள்ள பலவீனம் நீடிக்கவே செய்கிறது. தீக்கதிருக்கும், பிரசுரத்திற்குமான பாக்கியை அனுப்புவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, தீக்கதிர் பிரசுராலயத்தில் தொடர்ந்து பிரசுரங்கள் அடித்துக் கொண்டு வருவதற்கு நிதி பற்றுக்குறை ஏற்படுகிறது.

ஒ) மாவட்ட குழுக்களில் எழுத்துபூர்வமான வேலை அறிக்கைகளின் மீது விவாதிப்பதும், பரிசீலிப்பதும் போதுமான அளவு இல்லை.

19. அ) கடந்த மூன்றுண்டுகளில் பல மாவட்டங்களில் புதிய இடைக்கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள இடைக்கமிட்டிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன

மாவட்டம்	வட்ட இடைக் கமிட்டிகளின் எண்ணிக்கை	அமைப்பு குழுக்கள்
1. சென்னை	9	...
2. செங்கை	8	...
3. வட ஆற்காடு	4	...
4. தென்னாற்காடு	10	6
5. பாண்டிச்சேரி	4	...
6. கீழத்தஞ்சை	13	...
7. மேலத் தஞ்சை	8	...
8. திருச்சி	11	3
9. புதுக்கோட்டை	7	...
10 அண்ணா	6	...
11. மதுரை	9	3
12. பசும்பொன் முத்துராமலிங்கம்—முகலவ	8	1
13. காமராஜர்	5	...
14. நெல்லை	7	...
15. சிதம்பரனார்	5	...
16. குமரி	5	...
17. சேலம்	10	...
18. தர்மபுரி	5	...
19. கோவை	10	...
20. பெரியார்	10	...
	154	13

ஆ) கட்சியின் ஸ்தாபன வளர்ச்சி மற்றும் இதரத்தேவைகளைக் கருதி சில வட்டக் கமிட்டிகளை இரண்டாக பிரிப்பது என மாவட்டக் குழுக்கள் ஆலோசனைகளை முன் வைத்தன. மாவட்டக் குழுக்களின் ஆலோசனைகளுக்கு மாநில செயற்குழு ஒப்புதல் அளித்தது. (பிரிக்கப்பட்டுள்ள வட்டக் குழுக்களின் விபரம் அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது) கட்சி ஓரளவு வளர்ந்துள்ள பகுதிகளில் இடை பகுதி-வட்டக் கமிட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது 167 இடைகமிட்டிகள் உள்ளன, இதில் பாதிக்கு மேற்பட்ட இடைக் கமிட்டிகள் முழுநேர ஊழியர்கள், தனி அலுவலகம்

போன்ற ஏற்பாடுகளுடன் செயல்படுகின்றன. தமிழ்நாட்டின் கட்சியின் வளர்ச்சிக்கு இத்தகைய இடைக்கமிட்டிகளை இயங்க வைப்பது மிகவும் அவசியமானதாகும். அனைத்து இடைக்கமிட்டிகளிலும் முழுநேர ஊழியர்கள் பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளை உருவாக்க வேண்டும், வர்க்க, வெகுஜன அமைப்புகள் வலுவடையவும், நமது அரசியல் நிலையை மக்களிடம் சக்தியாக எடுத்துச் செல்லவும், இந்த இடைக் கமிட்டிகளின் பணி முக்கியமானதாக அமையும்

இ) சேலம் மாநாட்டில் லோக்கல் கமிட்டிகளை அமைப்பது பற்றி முடிவு செய்தோம். லோக்கல் கமிட்டிகளில் பணியாற்றத் தக்க ஊழியர்கள், ஓரளவு வெகுஜன அமைப்புகள், குறைந்தபட்ச நிதி ஏற்பாடுகள் கொண்ட பகுதிகளில் இத்தகைய கமிட்டிகளை நிறுவிட வேண்டும். இத்தகைய கமிட்டி அமைப்புகள் ஸ்தல தோழர்களின் முன்முயற்சிக்கும் உதவிகரமாக இருக்கும். சமீபத்தில் மதுரை, கோவை போன்ற நகரங்களில் புதிதாக பகுதி கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பகுதி கமிட்டிகளை உருவாக்கிட நாம் கவனம் செலுத்த வேண்டும்.

20. கட்சிக் கிளைகள்

அ) மாநிலம் முழுவதுமுள்ள கட்சி கிளைகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே தந்துள்ளோம். தமிழகத்தில் சுமார் 4409 கட்சிக் கிளைகள் உள்ளன.

	மாவட்டம்	கிளைகள்
1.	சென்னை	225
2.	செங்கை	164
3.	வடஆற்காடு	130
4.	தென்னாற்காடு	266
5.	பாண்டிச்சேரி	40
6.	திருச்சி	359
7.	தஞ்சை	600
8.	புதுக்கோட்டை	135
9.	அண்ணா	283
10.	மதுரை	650
11.	காமராஜர்	246
12.	பசும்பொன்முத்துராமலிங்கம்-முகவை	110
13.	நெல்லை	180
14.	குமரி	165
15.	கோவை	318
16.	பெரியார்	114
17.	சேலம்	196
18.	தர்மபுரி	155
19.	நீலகிரி	43

ஆ) 'கட்சியின் அரசியல், ஸ்தாபன முடிவுகளை அமுல்படுத்திட-வும், மக்களுக்கு, கட்சிக்கு இடையிலான பாலமாகவும் கட்சிக் கிளைகள் விளங்குகின்றன' என்ற சால்கியா தீர்மானத்தின் வெளிச்சத்தில் நமது கட்சி கிளைகளின் செயல்பாடு மற்றும் தரத்தை உயர்த்தவேண்டுமென சென்ற மாநில மாநாடு வற்புறுத்தியது. நடந்து முடிந்து மாவட்ட மாநாடுகளில் கட்சி கிளைகளின் செயல்பாடுகள் பற்றி பரிசீலிக்கப்பட்டுள்ளன. அதில்கீழ்காணும் விவரங்களை அறிய முடிகிறது.

இ) இக்காலத்தில் கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அரங்குகளின் சார்பில் ஒன்றுன்பின் ஒன்றுக, அடுக்கடுக்காக மேற்கொள்ளப் பட்ட இயக்கங்கள், நடவடிக்கைகளில் கட்சி கிளைகள் இயன்ற அளவு ஈடுகொடுத்து வேலைசெய்துவந்துள்ளன. மாநாடு, தேர்தல் பிரச்சார பயணம் போன்று விஷேச இயக்கம் மற்றும்நடவடிக்கைகளில் 70 அல்லது 80 சதவீத கிளைகள் உற்சாகமாக பங்கேற்று வந்துள்ளன ஒரு சில மாவட்டங்களில் நகர்ப்புற கிளைகள் முறையாக இயங்கி வருகின்றன. நடுத்தர வர்க்க கிளைகளின் செயல் பாட்டிலும் நல்ல அபிவிருத்தி காண முடிகிறது.

ஈ) அதே சமயம் சில மாவட்டக் குழுக்களின் அறிக்கைகள் கிளை செயல்பாட்டின பலவீனங்கள் பற்றி இவ்வாறு கூறுகின்றன: தஞ்சை மாவட்ட மாநாட்டு வேலை அறிக்கை கூறுவதாவது: ''கிளைகள் சுயமாக கூடுவதில் மிகுந்த பலவீனம் உள்ளது. வட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டினுல் மட்டுமே கூடும் கிளைகள் உண்டு. அப்போதும் முறையாக கூடாத கிளைகள் உண்டு. இயக்கங்களை நடத்துவதற்கு தேவைக்கேற்ப கூடும் போக்கு உள்ளது.

கோவை மாவட்ட மாநாட்டு அறிக்கை கூறுவதாவது: ''பல கிளைகள் சுயமாக கூடி வேலைகளுக்கு திட்டமிடுவதில்லை. மேல் கமிட்டி உறுப்பினர்கள் போய்தான் பல கிளைகளின் கூட்டங்களை நடத்துவது என்ற நிலை நீடிக்கிறது. இதை மாற்றி கிளைகள் சுயமாக கூடுவது என்ற நிலையை உத்திரவாதப்படுத்த வேண்டும்.''

பெரியார் மாவட்ட மாநாட்டு அறிக்கை கூறுவதாவது:'' கிளைக் கூட்டங்களை தாலுகா கமிட்டிகள் திட்டமிட்டு நடத்தினுல் கிளைகள் கூடுவதிலும் செயல்பாட்டிலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது''.

மதுரை மாவட்ட மாநாட்டு அறிக்கை கூறுவதாவது... ''சமீபத்தில் கட்சி விடுத்த மறியல் இயக்கங்களில் ஸ்தாபன ஏற்பாடுகளும் பங்கேற்போர் எண்ணிக்கையும் சிறிதளவு உயர்ந்துள்ளது, இது வரவேற்கத்தக்கது. கிளைகளில் தொடர்ந்து நடத்த வேண்டிய போராட்டம் என்பது ஒரு கடும் போராட்டமே என்பதை உணர்ந்து சோர்வின்றி செயல்பட வேண்டும்.''

எ) கட்சிக் கிளைகளின் செயல்பாடுகளில் உள்ள பலவீனம் பற்றி மேற்குறிப்பிட்ட நான்கு மாவட்ட மாநாட்டின் அறிக்கைகள் என்ன கூறுகின்றனவோ அதையேதான் பெரும்பான்மையான மாவட்ட மாநாட்டு அறிக்கைகளிலும் காண முடிகிறது. கிளைகளை கூட்டுவதற்கு மேல் கமிட்டி உறுப்பினர்கள் முன்முயற்சி எடுக்கும் போது தான் கிளைகளை ஓரளவு முறையாக கூட்ட முடிவதையும் இயக்கவைக்கமுடிகிறதுஎன்பதையும் பெரியார்மாவட்டமாநாட்டு அறிக்கை குறிப்பிடுகிறது. அதேபோல் கறுப்புக்கொடி, மறியல் போன்ற இயக்கங்களில் அதிக அளவு தோழர்கள் பங்கு கொள்கின்றனர் என்பதை மதுரை மாவட்ட மாநாட்டு அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. எனவே, கிளைகளை இயக்குவதற்கு மேல்கமிட்டி தோழர்கள் முன்முயற்சி எடுக்கும் பட்சத்திலும், தொடர்ச்சியான அரசியல் இயக்கங்களை முன் தயாரிப்புடன் நடத்தும் போதும் அதிக அளவு கட்சி உறுப்பினர்களை அதில் ஈடுபட செய்யவும் கிளைகளை இயங்கச்செய்யவும் முடிகிறது என்பது படிப்பினையாகும்.

ஊ) கிளை செயலாளர்களே கிளைகளை முறையாக கூட்டும் விதத்தில் அவர்களுக்கு அரசியல் ஸ்தாபன பயிற்சி அளித்திட வேண்டிய பெரிய கடமை நம்முன் உள்ளது. கிளை செயலாளர்களுக்கு மாதம் ஒரு முறை அரசியல் ரிப்போர்ட் செய்ய வேண்டுமென்றே சால்கியா தீர்மானத்தின் வழிகாட்டுதலை நாம் அமுல் நடத்தவில்லை, ஆனுல் பெரும்பான்மையான மாவட்டங்களில் கிளை செயலாளர் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அக் கூட்டங்களில் உடனடி இயக்கங்கள் பற்றியும், மேல் கமிட்டி முடிவுகள் பற்றியும் மட்டுமே ரிப்போர்ட் செய்யப்படுகின்றன. சால்கியா பிளீனம் சுட்டிக் காட்டியுள்ளவாறு கிளை செயலாளர்களுக்கு அரசியல் ரிப்போர்ட் செய்து, அதன்மீது அவர்களை கேள்வி எழுப்புவதற்கு தூண்டி அதற்கு பதிலளித்து அவர்களை அரசியல் ரீதியாக தயார் செய்வது என்ற வகையில் இக்கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை, இத்தகைய பலவீனத்தை களைந்து ஒரு முறிப்பை ஏற்படுத்துவதன் மூலமே நாம் கிளைகளின் செயல்பாட்டிலுள்ள தேக்க நிலையை உடைத்து அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியும்.

மாவட்ட, வட்டஅளவிலான பேரவைக் கூட்டங்கள் இந்த காலத்தில் பெருமளவு நடைபெற்றுள்ளன. இதில் கணிசமான எண்ணிக்கையில் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இப் பேரவைக் கூட்டங்களில் மத்திய, மாநில கமிட்டிகளின் முடிவுகள் மற்றும் பல்வேறு பிரச்சனைகளில் நமது அரசியல் நிலை பற்றி ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளன, இவைதான் கட்சி அணிகளின் செயல்பாட்டிற்கு பெருமளவு உதவியுள்ளன. ஆனுல் இதுவே போதுமானதல்ல. இப் பேரவைக்கூட்டங்களில்கலந்து கொள்ளும் தோழர்களுக்கு மட்டுமே நமது அரசியல் நிலை எடுத்துச் செல்லப்

படுகின்றது. பேரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத கட்சி களுக்கும் நமது அரசியலை எடுத்துச் செல்வதில் பெரும் பலவீனம் நீடிக்கிறது.

எ) தொழிற்சாலைப்பகுதிகளில் கட்சியை அமைப்பதிலும், இயக்க வைப்பதிலும் பலவீனம் நீடிக்கின்றது. இதனால், தொழிற் சங்க அரங்கில் நமது பணியை மேலும் விஸ்தரிப்பதில் பலவீனம் ஏற்படுகின்றது. கட்சி உறுப்பினர்கள் ஸ்தல வேலைகளை மட்டுமே செய்து கொண்டு தொழிற்சங்க வேலைகளில் போதிய கவனம் செலுத்தாத போக்கும் உள்ளது, தொழிற்சாலைகிளையிலுள்ள கட்சி உறுப்பினர்கள் பெரும்பாலோர் ஸ்தல வேலையில் ஆர்வம் காட் டாத போக்கு நீடிக்கிறது. இத்தகைய இருவித போக்குகளையும் களைந்தெறிய வேண்டும்.

ஏ) குடிநீர் வசதி, சாலைவசதி, பஸ்வசதி போன்ற இன்னும் இதர ஸ்தல மக்களின் பிரச்சனைகள் மீதான இயக்கங்களை சில கட்சி கிளைகள் நடத்துகின்றன. இந்த வேலைகளால் மக்கள் மத்தி யில் நமது கட்சிக்கு செல்வாக்கும், பிடிப்பும் அதிகமாவதைப் பார்க்க முடிகிறது. கடந்த காலத்தில் தமிழகம் முழுவதும் குடி நீர் பிரச்சனை பூதாகரமாக உருவெடுத்த போது அந்தப் பகுதி மக்கள் குடிநீர் கோரி சாலை மறியல், ஆர்ப்பாட்டம், அரசு அலு வலகங்கள் முற்றுகை போன்ற இயக்கங்களில் தன்னெழுச்சி யாகவே ஈடுபட்டனர். ஆனால் இத்தகைய மக்களின் தன்னெழுச்சியான இயக்கங்களில் கூட அவைகளுக்கு தலைமை தாங்குவதற்குகேற்ப நமது கட்சி கிளை கள் செயல்பட்டனவா என்றால் பெருமளவு இல்லை என்றே கூற முடியும். சில பகுதிகளில்தான் கட்சி கிளைகள் இப் பிரச்சனையை கையில் எடுத்தன. ஸ்தல மக்கள் பிரச்சனைகளுக்காக போராடும் போது கட்சி கிளைகளில் உள்ளவர்கள். நமது அனுதாபிகள் ஆகி யோர் துவக்கத்தில் கலந்து கொண்டு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வது அவசியமானதே. அதே சமயம் படிப்படியாக பிரச்சனை யில் சம்பந்தப்பட்ட மக்களையும் ஸ்தல கோரிக்கைளுக்கான இயக் கங்களிலும், போராட்டங்களிலும் கொண்டு வர நமது கட்சி கிளைகள் முயற்சித்திட வேண்டும். இத்தகைய ஸ்தல இயக்கங் களுக்கான பிரச்சனைகளை தேர்வு செய்து, தொடர்ந்து இயக்கங் களை நடத்திச் செல்வதற்கு கிளைகளுக்கு அனைத்து உதவிகளையும் மேல் கமிட்டிகள் செய்துகொடுக்க வேண்டும். சமீபத்தில் நடந்து முடிந்துள்ள மாவட்ட-வட்ட மாநாடுகளில் மக்கள் கோரிக்கை களுக்கான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளோம். அவற்றின் மீது இயக்கங்களை நடத்த கட்சிக் கமிட்டிகள் திட்டமிட வேண்டும்.

21. கட்சி உறுப்பினர் பதிவு;

அ) சென்ற மாநாட்டின் போது 27053 ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை தற்போது 33153 ஆக உயர்ந்துள்ளது. கூடுதலாக 6100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். வளர்ந்து வரும் நமது அரசியல் செல்வாக்கினை பிரதிபலிப்பதாக இது இல்லை, கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அரங்குகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற ஏராளமான இயக்கங்கள் மற்றும் அரசியல் கிளர்ச்சிப் பிரச்சாரங்கள் இவற்றின் பயனை நாம் முழுமையாக பெற்றதாக இது காட்டவில்லை.

ஆ) கட்சி துணைக்குழு உறுப்பினர்களை பரீட்சார்த்த உறுப்பினர்களாக்குவது, பரீட்சார்த்த உறுப்பினர்களை கட்சி உறுப்பினர்களாக்குவது என்ற கட்சிகயைக் கட்டும் பணி பலவீனமாக இருந்து வருகின்றது. உதாரணமாக 1986-ம் ஆண்டில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 21222 என்வும், பரீட்சார்த்த உறுப்பினர் எண்ணிக்கை 7085 ஆகவும் இருந்துள்ளது. ஆனால் 1987ல் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 22332 மட்டுமே. அதாவது ஏற்கனவே சென்ற ஆண்டில் இருந்த 21222 கட்சி உறுப்பினர்களில் கூடுதலாக 1110 பரீட்சார்த்த உறுப்பினர்கள் மட்டுமே 1987ல் கட்சி உறுப்பினர்களாக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 5975 பரீட்சார்த்த உறுப்பினர்கள் ஏன் கட்சி உறுப்பினர்களாக தேர்வு செய்யாமல் விடப்படுகின்றனர்? இது கட்சி உறுப்பினர் பதிவு செய்தலிலுள்ள ஸ்தாபன பலவீனத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

இ) பரீட்சார்த்த உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் மீண்டும் அடுத்த ஆண்டும் பரீட்சார்த்த உறுப்பினர்களாகவே பதிவு செய்யப்படுவது அல்லது பரீட்சார்த்த உறுப்பினர்களாக இருந்த பலர் நடப்பு ஆண்டில் பதிவு செய்யாமல் விடப்படும் நிலையும் உள்ளது. அதே போல் கட்சி உறுப்பினர்களிலேயே பலர் புதுப்பிக்காமல் விடப்படுகின்றனர் என்பதும், துணைக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோர் அடுத்த ஆண்டில் பரீட்சார்த்த உறுப்பினர்களாக தேர்வு செய்யாமல் விடப்படுவது என்பதும் நடைபெறுகின்றது.

சி. எம்., ஏ. எம். ஆக இருக்கும் உறுப்பினர்கள் அடுத்த ஆண்டும் அதே தகுதியுடன் இருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். கட்சி உறுப்பினர் பதிவியிலுள்ள இத்தகைய விபரங்களை மாவட்டக் குழுக்கள் உரிய முறையில் எழுத்துப் பூர்வமான அறிக்கைகளை வைத்து பரிசீலிக்காத நிலையும், மாநிலக் குழுவும் கட்சி உறுப்பினர் பதிவு பற்றி சால்கியா தீர்மானத்தின் வழிகாட்டுதல்படி பரிசிலனை செய்யாத நிலையும் நீடிக்கின்றது. அவசர கோலத்தில் கட்சி உறுப்பினர்கள் பதிவு நடைபெறுகின்றது. பதிவு சம்பந்தமான அடிப்படையான பலவீனத்தை களையாவிட்டால் உறுப்பினர் சேர்ப்பில் மாற்றத்தைக் கொண்டுவர இயலாது. கட்சி உறுப்பினர் பதிவு பற்றியும், அவர்களது அரசியல் உணர்வை உயர்த்த வேண்டியதன் அவசியம் பற்றியும் சால்கியா தீர்மானம் கூறுவதாவது :-

''வெகுஜன புரட்சிகரக் கட்சியை உருவாக்கும் போராட்டம் கட்சி உறுப்பினர்களை சேர்ப்பதற்கு முன்பும், சேர்த்த பின்னும் அவர்களது அரசியல் உணர்வை தொடர்ந்து உயர்த்துவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. கட்சி உறுப்பினர்

களின் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் தரத்தை உயர்த்துவதை வலியுறுத்துகின்றது. உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தல், அவர்களின் அரசியல் உணர்வை உயர்த்துதல் ஆகிய இரு பணிகளும், நமது குறிக்கோளை அடைய இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும். வெகுஜனப் போராட்டங்களில் முன்னுக்கு வரும் தீவிர ஊழியர்கள் துணைக்குழுக்களில் அமைக்கப்பட வேண்டும். இத்தகைய துணைக்குழுக்களின் உறுப்பினர்களிலிருந்து கட்சி உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். சேர்த்து பயிற்சியளிக்கப்பட வேண்டும். அரசியல் போதனை அளிக்கப்பட வேண்டும். இத்திசை வழியில் நமது கட்சி உறுப்பினர் பதிவு பணியும், கட்சி உறுப்பினர்களுக்கு அரசியல் போதனை தர வேண்டியுள்ள கடமையும் நம்முன் உள்ளது.

22. முழுநேர ஊழியர்கள்

அ) மாநிலம் முழுவதுமுள்ள முழுநேர ஊழியர்கள்-பகுதி நேர ஊழியர்கள் எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	மாவட்டம்	எண்ணிக்கை முழு நேர ஊழியர்	எண்ணிக்கை பகுதி நேர ஊழியர்
1.	சென்னை	35	5
2.	செங்கை	7	2
3.	வடஆற்காடு	12	8
4.	தென்னாற்காடு	15	—
5.	தஞ்சை	53	—
6.	திருச்சி	35	4
7.	புதுக்கோட்டை	7	1
8.	மதுரை	39	14
9.	அண்ணா	12	20
10.	காமராஜர்	19	—
11.	பசும்பொன் முத்துராமலிங்கம்-முகவை	6	—
12.	நெல்லை—சிதம்பரனார்	18	12
13.	குமரி	20	—
14.	கோவை	36	—
15.	பெரியார்	18	—
16.	சேலம்	17	10
17.	தர்மபுரி	10	—
18.	பாண்டிச்சேரி	4	2
19.	நீலகிரி	4	—
20.	மாநில மையம்—தீக்கதிர்	32	—
		399	78

மாநிலம்முழுவதும் 399 முழுநேர ஊழியர்களும் 78 பகுதி நேர ஊழியர்களும் வேலை செய்துவருகின்றனர்.

ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் இருமுறை அலவன்ஸ்களை உயர்த்தி ரூ. 100 கூடுதலாக தருவதென முடிவு எடுத்தோம். அதன்படி தற்போது திருமணமான முழுநேர ஊழியர்கள் ரூ. 700 வரையிலும், மற்ற ஊழியர்களுக்கு ரூ 500 வரையிலும் அளிக்கலாம் என மாநிலக்குழு நிச்சயித்துள்ளது. ஏற்கெனவே கொடுத்து வரும் அலவன்ஸுடன் உயர்த்தப்பட்ட தொகை ரூ. 100 உடனடியாக சேர்த்துத்தரும்படி மாவட்டக் குழுக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இ) "உத்தகைய முயற்சிக்கு முதல்படியாக கட்சி வளர்ச்சி நிதி வசூலில் முழுநேர ஊழியர்களின் அலவன்சுக்குரிய பணத்தை சேமிப்புக் கணக்கில் வைக்க சம்பந்தப்பட்ட வட்டக் குழுக்களும் மாவட்டக் குழுக்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்" என சேலம் மாநில மாநாடு அறிக்கையிலும் வற்புறுத்தப்பட்டது. சென்னை, செங்கை, திருச்சி, மதுரை, கோவை, பெரியார் போன்ற மாவட்டக் குழுக்கள் முழுநேர ஊழியர்களின் அலவன்சை மாவட்ட மையத்திலிருந்து மையப்படுத்திக் கொடுத்து வருகின்றார்கள். தஞ்சை மாவட்டக் குழு ஓரளவு இதை நிறைவேற்றி வருகிறது.

மற்ற மாவட்டக் குழுக்கள் அலவன்சை உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளனர். வட்டக் குழுக்கள் தங்கள் நிதி வசதிக்கு தக்கவாறு அலவன்சை அளித்து வருகின்றனர். கடந்த காலத்தைவிட முன்னேற்றம் இருப்பினும், அனைவருக்கும் நிச்சயிக்கப்பட்ட மாத அலவன்சை கொடுக்க கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நிச்சயிக்கப்பட்ட முழு அலவன்சை கொடுக்க இயலாமல் 'அலவன்ஸ் ஊழியர்கள்' என்ற பெயரில் ஊழியர்கள் நிச்சயிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அலவன்ஸ் ஊழியர்களின் வேலைகளை பரிசீலித்து அவர்களை முழுநேர ஊழியர்களாக்குவதற்கு மாவட்டக் குழுக்கள் முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஈ) நாம் தற்போது முழுநேர ஊழியர்களுக்கு கொடுத்து வரும் அலவன்ஸ் அவர்களின் குறைந்த பட்ச தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய போதாது என்ற போதிலும் கட்சி கமிட்டிகளின் நிதி நிலையை கணக்கில் கொண்டே இவ்வாறு நிச்சயிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் கட்சி கமிட்டிகளின் நிதி நிலைமையை அபிவிருத்தி செய்து அலவன்ஸ் உயர்த்தித் தர முயற்சி செய்ய வேண்டும்.

உ) முழுநேர ஊழியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படும் தோழர்களின் அரசியல் தத்துவார்த்த வளர்ச்சி, இயக்கத்திற்கு அவர்கள் செலுத்தும் பங்கு பணி பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்வது என்பதில் அறவே கவனம் இல்லை என்றே சொல்லலாம். இத்தகைய பரிசீலனை முழுநேர ஊழியர்களின் செயலாற்றும் திறனையும், தகுதியையும் உயர்த்தவும், அதே சமயம் கட்சி வேலைகளை முறையாக நடத்தி செல்லவும் உதவிடும். இதுவரை அத்தகைய பரிசீலனையை சம்பந்தப்பட்ட கட்சி கமிட்டிகள் மேற்கொள்ளவில்லை. எதிர்காலத்தில் அத்தகைய பரிசீலனைகளை மேற்கொள்ளவேண்டும்.

23. அ) கிளர்ச்சிப் பிரச்சாரம்

விசேஷமான நிதியளிப்பு கூட்டங்கள், மாநாடுகள், தேர்தல் பிரச்சாரம் போன்றவற்றிற்கு அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் அவ்வப்போது உதவி வருகின்றனர். மாநில செயற்குழு உறுப்பினர்கள் பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் ஓரளவே பொதுக் கூட்டங்களுக்கு போக இயலுகிறது. இருப்பினும், மாநிலக்குழு உறுப்பினர்களும், பல்வேறு அரங்கங்களில் பணியாற்றும் தோழர்களும் பிரச்சார பொதுக்கூட்டங்களில் அதிக அளவு பங்கு பெறுகின்றனர். புதிய பேச்சாளர்கள் உருவாகி வருகிறார்கள். பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கருத்தரங்குகள் என்ற ரூபத்திலும் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்படுகிறது. மதுரை மாணவாளன் கலைக்குழு, ராமசாமி கலைக்குழு, நெல்லை கரிசல் கலைக்குழு ஆகிய கலைக் குழுக்கள் மாநில அளவில் பிரச்சாரத்தை எடுத்துச் செல்கிறார்கள். மேலும் இவர்களுக்கு பயிற்சி அளித்திட கவனம் செலுத்த வேண்டும். பெரும்பாலும் நமது கட்சி அணிகள் தான் பொதுக்கூட்டங்களுக்கு வருகிறார்கள். சமீப காலங்களில் பொது மக்களை ஓரளவு திரட்ட முடிகிறது. வட்ட, மாவட்ட கட்சி மாநாடுகளில் நமது அணிகளும், பொது மக்களும் ஓரளவு திரட்டப்பட்டதை காண முடிகிறது. பொதுக் கூட்டங்களுக்குரிய தயாரிப்புகள், விளம்பரங்கள் செய்வது, நமது அணிகளை திரட்டி வருவது என்பதில் இன்னும் பலவீனம் நீடிக்கின்றது பேச்சாளர்களுக்கு பயிற்சி அளிப்பது, பேச்சுக்கான குறிப்பு தயாரித்து கொடுப்பது போன்ற முயற்சிகளை மாநில மையம் மேற்கொள்ள வேண்டும். ஸ்தல கட்சி தோழர்களை ஸ்தலப்பிரச்சனைகள் மீது மக்களின் கவனத்தை ஈர்க்கும் முறையிலும், நமது அரசியல் நிலையில் நின்றும் பேச வைக்க வேண்டியுள்ளது.

ஆ) கலை இலக்கிய அரங்கத்திலுள்ள படைப்பாளிகளின் மூலம் சிறு நாடகங்கள், ஓரங்க நாடகங்கள், கிராமிய ஒயிலாட்டங்கள் போன்ற பயிற்சிகளை கொடுத்து பிரச்சாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். சமீப காலங்களில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களில் பெண்கள், வாலிபர்கள், கட்சித் தோழர்கள் பெருமளவு பங்கெடுத்து வருகின்றார்கள். இந்த பிரச்சாரத்தை பயனுள்ள முறையில் எடுத்துச்செல்ல வேண்டும்.

இ) நமது இயக்க பாடல்களை விரிவான மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்காக இக்காலத்தில் செங்கீதங்கள் என்ற கேசட் ஒன்றினை வெளியிட்டோம். முதல் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த கேசட் வெளியீடு ஓரளவு பிரச்சாரத்திற்கு பயன்பட்டது.

ஈ) தற்போது நடைபெற்று வரும் கிளர்ச்சி பிரச்சாரங்கள் அவ்வப்போது வரும் இயக்கங்களையொட்டியே உள்ளது. ஆனால் நமது கட்சியின் அடிப்படையான அரசியல், தத்துவார்த்த நிலையினை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் பிரச்சாரத்தை எடுத்துச் செல்வதில் கவனம் செலுத்த வேண்டும். கருத்தரங்குகள், பேரவை கூட்டங்கள், பிரச்சார பொதுக் கூட்டங்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் இதனை எடுத்துச் செல்லவேண்டும். கட்சிப் பிரச்சாரத்தின் அவசியம் பற்றி சால்கியா ஸ்தாபன அறிக்கை குறிப்பிடுவதாவது :

''ஒரு லெனினியக்கட்சி,கட்சியின் திட்டங்களையும்,மார்க்சியத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் பிரபலப்படுத்துவதன் மூலம் மட்டும் கட்டப்படுவதில்லை. நாட்டில் உலவும் மார்க்சியத்துக்கு எதிரான கருத்துக்கள், பிற்போக்கான மதக்கொள்கைகள், காந்தியிசம். காந்திய சோசலிசம், நேரு சோசலிசம், குறுகிய தேசியவாதங்கள், பிரதேசவாதங்கள்,ஜாதி,சிறுபான்மைபெரும்பான்மை வகுப்பு வாதங்கள் இவற்றிற்கெதிராக தொடர்ந்து போர் நடத்த இந்த தத்துவங்களுக்கெல்லாம் வர்க்க அடிப்படை என்ன என்பதை மக்களுக்கும், புதிய உறுப்பினர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். ஆளும் வர்க்கங்களும், அவர்களது கையாட்களும் மக்களைத் திசை திருப்புவதற்காகவும், பட்டாளி மக்களை பிளவுபடுத்துவதற்காகவும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வரும் ஆயுதங்களான ஜாதி மற்றும் வகுப்புவாதப் பிற்போக்குதனங்களையும் எதிர்க்கும் போராட்டம் எல்லாவற்றையும்விட அவசியம்.''

24. கட்சிக்கடிதம் மற்றும் தத்துவார்த்த மாத ஏடு

கடந்த சேலம் மாநாட்டிற்கு பின்னர் 9 கட்சிக் கடிதங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக கட்சிக் கடிதம் வெளியிடுவதில் பலவீனம் நீடிக்கின்றது. தத்துவார்த்த பத்திரிக்கையை தமிழில் கொண்டுவருவது என்ற சென்ற மாநாட்டு முடிவை அமுல்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால் வெளியீட்டைக் கொண்டுவர இயலவில்லை. 'மார்க்சிஸ்ட்' இதழில் வெளிவரும் சில கட்டுரைகளை தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட்டோம். எதிர்காலத்தில் ஒரு மாதாந்திர தத்துவார்த்த பத்திரிகை கொண்டுவர நாம் முயற்சித்திட வேண்டும்.

25. அ) கட்சிக்கல்வி

இக்காலத்தில் கட்சி அணிகளுக்கு கட்சிக் கல்வியை விரிவான அளவில் அளித்திட முயற்சி செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள மாநில ரீதியான கட்சி அரசியல் பயிற்சிப் பள்ளி

86 ம் ஆண்டு ஜூன் 17 முதல் 22 வரை 6 நாட்கள் மதுரையில் நடத்தப்பட்டது. 250 தோழர்கள் வரை இதில் பங்கு கொண்டனர் கீழ்க்கண்ட தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டது.

1. இயக்கஇயல் பொருள்முதல்வாதம்-வரலாற்றுப் பொருள் முதல்வாதம்
2. மார்க்சிய அரசியல் பொருளாதாரம்
3. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தத்துவார்த்த வேறுபாடுகள்
4. கட்சித்திட்டம்
5. கொள்கை அறிக்கை
6. கட்சி ஸ்தாபனம்

தோழர்கள் கே எம், பி ஆர், என் எஸ், பி ஆர் பி, பி ஆர் சி, கே வி. என் வி, பாலு ஆகிய தோழர்கள் இவ் வகுப்புகளை நடத்தினர்கள். உரிய தயாரிப்புகளுடன் இந்த கட்சி கல்வி வகுப்பு நடத்தப்பட வில்லை என்று பின்னர் மாநில குழு பரிசிலனை செய்தது. இதனைத் தொடர்ந்து மாவட்டங்களில் மார்க்சிய தத்துவம், கட்சித்திட்டம். கட்சி ஸ்தாபனம் ஆகிய விஷயங்கள் குறித்து கிளைச் செயலாளர் களுக்கு வகுப்பு நடத்தப்பட்டுள்ளது.

ஆ) மாநில செயற்குழுத் தோழர்கள் இந்த வகுப்புகளை நடத்தி யுள்ளனர். மாநிலம் முழுவதும் சுமார் 3000 தோழர்கள் இதில் பங்கு கொண்டனர். இதைத் தவிர வாலிபர், மாணவர் அரங்கத் தோழர்களுக்காக மாநில பயிற்சி பள்ளி நடத்தப்பட்டது. சில நடுத்தர பகுதி தோழர்களுக்காகவும் மாநில அளவிலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இவைகளில் மாநில செயற்குழு தோழர்கள் பங்கு கொண்டுள்ளனர் இருப்பினும் பெண்கள் மற்றும் வி.ச. அரங்க தோழர்களுக்கு இம்மாதிரியான வகுப்புகள் நடத்தப்படவில்லை. இக்காலத்தில் மாவட்டங்களில் அரசியல் வகுப்பு நடத்துமளவுக்கு பல தோழர்கள் வளர்ச்சி அடைந்துள்ள னர். இது ஒரு வரவேற்கதக்க நல்ல அம்சமாகும். அவர்களைக் கொண்டு மாவட்டங்களில் ஏராளமான வகுப்புகள் நடத்தப்படு கின்றன. இவைகளில் பங்கு கொண்டு உதவி செய்யவோ, கவனிக் கவோ மாநில செயற்குழு தோழர்களால் முடியவில்லை. இனி இதில் கவனம் செலுத்துவது அவசியமாகும், அரசியல் வகுப்பு இந்தளவு நடந்த போதிலும் நமது தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்ய வில்லை.

இ) கட்சிக்குள் வரக்கூடிய புதியவர்கள் அனைவருக்கும் திட்ட மிட்டு பயிற்சி அளிப்பதும் ஓரளவு பயிற்சிபெற்றவர்களுக்கு உயர் நிலை தத்துவ பயிற்சி அளிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட

வேண்டும். கடந்த ஓராண்டுக்குமேலாக பல்வேறு இயக்க பணிகள் குறுக்கிட்டதால், திட்டமிட்ட முறையில் அரசியல் வகுப்பு நடைபெறவில்லை. நிர்பந்தத்தின் காரணமாக சில வகுப்புகள் மட்டுமே நடைபெற்றன.

ஈ) தற்போது மாநிலம் முழுவதும் சுமார் 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் கட்சி கல்வி மற்றும் அரசியல் வகுப்புகள் நடத்த தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் பயிற்சியளித்து அவர்களை மாநிலம் முழுவதும் பல்வேறு மட்டத்திலுள்ள ஊழியர்களுக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் அரசியல் வகுப்புகள் நடத்த பயன்படுத்த வேண்டும்.

26. சப் கமிட்டி பிராக்ஷன்களின் செயல்பாடுகள்

அ) மாநில ரீதியாக அமைக்கப்பட்டுள்ள சப்கமிட்டி மற்றும் பிராக்ஷன்களின் செயல்பாட்டில் முந்தைய காலததைவிட ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. ஆனால் மாவட்டக்குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள சப்கமிட்டி மற்றும் பிராக்ஷன்களின் செயல்பாட்டில் பெருமளவு முன்னேற்றம் காணவேண்டியுள்ளது, வேலை அறிக்கையிலுள்ள அரங்கப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட சப்கமிட்டிகள்–பிராக்ஷன்கள் செயல்பாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆ) நமது கட்சியின் அரசியல் நிலையில் நின்று வர்க்க வெகுஜன அமைப்புகளை புரட்சிகரமான வழியில் இயக்க வைக்க தொடர்ந்து கவனம் செலுத்துவது மற்றும் அந்த அரங்கத்தில் நமது கட்சியை கட்டுவது போன்ற பணிகள் பற்றி சப்கமிட்டி பிராக்ஷன்களுக்கு ஒரு பொதுவான வழிகாட்டல் இருந்த போதிலும் அவற்றின் வேலை வரையறைகள் பற்றி மேலும் தெளிவு ஏற்பட வேண்டியுள்ளது. மாநிலக் குழுவிலும் இதுபற்றி விவாதிக்க வேண்டியுளளது. மத்திய கமிட்டியின் வழிகாட்டுதலைக் கோரிப் பெற வேண்டியுள்ளது.

ஈ) சப்கமிட்டி மற்றும் பிராக்ஷன்களின் செயல்பாடு முறையாக இல்லாத பட்சத்தில் வர்க்க வெகுஜன அரங்குகளில் இருவித போக்குகள் தலை தூக்குகின்றன.

கட்சி முடிவுகள் என்று கூறி வெகுஜன அரங்கத்தின் 'ஜனநாயக ரீதியான செயல்பாடு மீறப்படுகின்றது அல்லது வெகுஜன அரங்கத்தின் 'சுதந்திரமான செயல்பாடு' என்ற கண்ணோட்டத்தில் கட்சியின் பாத்திரம் கவனிக்கப்படாமல் போகும் அபாயமும் உள்ளது.

எனவே, வெகுஜன வர்க்க அமைப்புகளை முறையாக செயல்பட வைக்கவும், கட்சியின் நிலையினை கொண்டு செல்லவும்,

சப்கமிட்டி பிராக்ஷன்களின் செயல்பாடு மிகவும் அவசியமான தாகும். எதிர்கால கட்சி ஸ்தாபன கடமைகளில் இந்தப்பணியினை செம்மையாக நிறைவேற்றிட வேண்டும்

27. பிரசுரம்

கடந்த மூன்றாண்டுகளில் 42 பிரசுரங்களை மாநிலக்குழு வெளியிட்டுள்ளது. இவற்றில் கிளர்ச்சி பிரச்சாரத்திற்காக பயன் படுத்தப்பட்ட சிறு பிரசுரங்களும், நமது கட்சியின் அடிப்படை தத்துவார்த்த நிலைகளை விளக்கும் வகையிலான பிரசுரங்களும் அடங்கும். பிரசுர விற்பனையில் கடந்த காலத்தைவிட தற்போது சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, பிரசுரங்கள் சமீப காலங்களில் முன்பைவிட கூடுதலான பிரதிகள் அச்சடிக்கப்படு கின்றன. 'இந்தித் திணிப்பை எதிர்ப்போம்-இந்திய ஒற்றுமையை பாதுகாப்போம்' என்ற சிறு பிரசுரம் 130000 பிரதிகளும், 'பாரத் பந்த்' பற்றி சுர்ஜித் எழுதியது 66000பிரதிகளும், இ எம் எஸ் எழு திய 'ராஜீவ் அரசே ராஜினாமா செய்' என்ற கடடுரை சிறு பிரசுர மாக 110000 பிரதிகளும், அகில இந்திய பிரச்சார பயணத்தின் கோரிக்கையை விளக்கி சிறு பிரசுரமாக 50000 பிரதிகளும் அச் சிட்டு விநியோகித்துள்ளது குறிப்பிடத் தக்கவை.

நாம் வெளியிடும் பிரசுரங்கள் கட்சி உறுப் பினர்கள், ஆதரவாளர்கள் மட்டத்திலேயேதான் விநியோ கிக்கப்படுகின்றது. இதற்கு அப்பாற்பட்ட பொது மக்களை அடைவதில்லை. பிரசுர விற்பனையில் உள்ள இந்த பல வீனம் போக்கப்பட வேண்டும். கட்சிக்கு அப்பாற்பட்ட பொது மக்களை நமது பிரசுரங்கள் சென்றடைய ஏற்பாடு செய்ய வேண் டும் (மூன்றாண்டுகளில் வெளியிடப்பட்ட பிரசுரப் பட்டியல் அனு பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது).

28. தீக்கதிர்

அ) சேலம் மாநில மாநாட்டில் சென்னையில் நவீன அச்சு எந்திரம் ஒன்றை நிறுவி தீக்கதிர் இரண்டாவது பதிப்பு கொண்டு வருவது என முடிவு செய்தோம். அதற்காக நிதி வசூலுக்கு அறை கூவல் விடுத்தோம். தீக்கதிர் நிதி வகையில் ரூபாய் பதினேறேகால் லட்சம் தான் வசூலாகியது. சென்னையில் தீக்கதிருக்காக புதிய அச்சு இயந்திரம் வாங்கவும் (ஆப்செட் மெஷின்) நிலம் மற்றும் அச்சகத்திற்கான கட்டிடம் கட்டவும் ஆகும் செலவுகு றைந்தபட் சம் ரூ. 30 லட்சம் தேவையென வந்தது. இந்நிலையில் சென்னையில் இரண்டாவது பதிப்பு கொண்டு வருவது பற்றி மாநில குழு விவா தித்தது. தீக்கதிர் பத்திரிகை மதுரை மற்றும் அதைச் சுற்றியு ...

மாவட்டங்களில் தான் தற்போது பெருமளவு விற்பனை ஆகிறது என்பதாலும், மதுரையில் நமக்கென சொந்தமான கட்டிடம் மற்றும் இதர நிர்வாக ஏற்பாடுகள் இருப்பதாலும், சென்னையில் இரண்டாவது பதிப்பு என்பதற்குப் பதிலாக மதுரையில் நவீன அச்சு எந்திரத்தை நிறுவுவது என அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. சென்னையிலிருந்து இரண்டாவது பதிப்பு கொண்டு வருவது என்ற முடிவினை அடுத்து அமுல் நடத்துவது எனவும் மாநில குழு தீர்மானித்துள்ளது.

ஆ) தீக்கதிர் நிர்வாகம் செயல்பாடு பற்றி தனி தலைப்பில் விப
ரங்களைக் கொடுத்துள்ளோம். கடந்த மூன்றாண்டு காலத்தில் தீக்
கதிர் விற்பனை எண்ணிக்கையை 6500ல் இருந்து 9500 ஆக
உயர்த்தியுள்ளோம். தொடர்ச்சியான விடாப்பிடியான கட்சி
கமிட்டிகளின் நடவடிக்கைகள் மூலமாகத்தான் இதுகூட சாத்திய
மாயிற்று. ஆனால் நமது கட்சி மற்றும் வர்க்க வெகுஜன ஸ்தாப
னங்களின் இன்றைய வளர்ச்சிக்கு ஒப்பிடும்போது இது மிக குறை
வானதே. சில மாவட்டக்குழுக்களில் உள்ள கட்சி உறுப்பினர்
களின் எண்ணிக்கைக்கும். அம் மாவட்டத்தில் விற்பனையாகும் தீக்
கதிர் எண்ணிக்கைக்கும் பெருத்த வித்தியாசம் உள்ளது. இதே
நிலைமை தான் பல மாவட்டக் குழுக்களிலும் உள்ளது. மாவட்ட
வட்டக் குழுக்களில் தீக்கதிர் பொறுப்பை கவனிக்க தோழர்களை
நிச்சயிக்க வேண்டும். தீக்கதிர் பிரசுர விற்பனை பணியான—அரசி
யல் பணிக்கு கட்சி கமிட்டிகள் முதலிடம் கொடுக்க வேண்டும்.
(மாவட்ட வாரியான தீக்கதிர் விற்பனை பற்றிய விபரம் அனுபந்
தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.).

இ) ஒவ்வொரு கட்சி கிளையும் குறைந்தபட்சம் ஒரு தீக்கதிர்
வாங்க வேண்டுமெனவும், ஒவ்வொரு கட்சி கிளையும் குறைந்தது
5 பத்திரிகை விற்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் முடிவு செய்
தோம். ஆனால் அதை பெரும்பான்மையான கிளைகள் அமுல் நடத்த
வில்லை.

ஈ) ஒரு பத்திரிகை கூட வரவழைத்து படிக்க முடியாத கட்சி
கிளைகள் அவ்வப்போது எழும் அரசியல் பிரச்சனைகள் மீது கட்சி
யின் நிலையை அறிந்து கொள்ள எவ்வித வாய்ப்புமில்லாமல்
போகும். எனவே கட்சி கிளையில் உள்ள கட்சி உறுப்பினர்களின்
அரசியல் ஞானத்தை அபிவிருத்தி செய்வதில் குறைபாடு ஏற்படும்.

உ) எனவே வருங்காலத்தில் ஒவ்வொரு கட்சி கிளையும் ஒரு
தீக்கதிர் வரவழைப்பது, ஒவ்வொரு கட்சி கிளையும் 5 தீக்கதிர் விற்
பனை செய்வது என்ற முடிவு அமுல்படுத்தப்பட வேண்டும்.

29. உள்ளாட்சி மன்ற மாநில உபகுழு

உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் பணிகளுக்கு வழி காட்டி உதவி செய்யும் வகையில் தோழர் என். சங்கரய்யா, சி. கோவிந்தராஜன், கே ஆர். சுந்தரம், பி.எஸ். தனுஷ்கோடி, ஜெ. ஹேமச்சந்திரன், கே. துரைராஜ் ஆகியோர்களைக் கொண்ட மாநில உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி மன்றங்களில் எழும் கொள்கை பிரச்சனைகள், வீட்டு வரி உயர்வு, அதிமுக அரசின் உள்ளாட்சி மன்ற அதிகார பறிப்பு போன்ற பிரச்சனைகள் பற்றி விவாதித்து நமது கட்சியின் நிலையில் நின்று முடிவுகள் மேற்கொண்டது. மாவட்டங்களிலும் உள்ளாட்சி மன்ற பிராக்ஷன்களை அமைத்து அவ்வமைப்புகளில் பணிபுரியும் தோழர்களுக்கு உதவும்படி மாவட்டக்குழுக்களை கேட்டுக் கொண்டோம். உள்ளாட்சி மன்ற தோழர்களுக்கு போதுமான அளவு உதவிட முடியவில்லை. 16 ஆண்டுகளுக்கு பின் அந்த மன்றங்கள் செயல்படும் நிலையிலும், பல புதிய பிரச்சனைகள் எழுவதும் சேர்ந்து சில இடங்களில் மிக சிக்கலான நிலைமை உருவாகும்போது அவற்றை பொறுப்பில் உள்ள நமது தோழர்களே சமாளித்து பணியாற்ற வேண்டியுள்ளது. இருப்பினும் மக்களின் நன்மதிப்பை பெறும் வகையில் நமது உறுப்பினர்கள் பணியாற்றி வருகின்றனர். சில இடங்களில் தோழர்கள் செயல்பாட்டில் சில பலவீனங்களையும் காண முடிகிறது.

30. மாவட்ட, வட்ட, கிளை மாநாடுகள்

நமது கட்சியின் 13வது கட்சி காங்கிரஸ் டிசம்பரில், நடைபெறுவதையொட்டி கிளை, வட்ட, மாவட்ட மாநாடுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாநில குழு மேற்கொண்டது. கிளை முதல் மாவட்ட கமிட்டிகள் வரை அறிக்கைகள் தயாரிப்பதற்கு உதவியாக அறிக்கை தயார் செய்வதற்கானகுறிப்பு மற்றும் இதர அம்சங்களையும் விளக்கி கட்சி கடிதம் ஒன்று வெளியிட்டது. மாவட்ட கமிட்டியில் மாநாட்டு அறிக்கையை தயார்செய்ய மாநிலக்குழு, மாநில செயற்குழு தோழர்கள் கலந்து கொண்டு உதவியுள்ளனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர்களும் மாநில செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டு கூட்டத்தில் புதிய மாவட்டக் குழுக்களுக்கான 'பேனல்' பற்றி விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. கிளை முதல் மாவட்டகமிட்டிகள் வரை நடைபெற்ற மாநாடுகள் திட்டமிட்ட முறையில் சிறப்பாகநடைபெற்றன. இம்மாநாடு

கள் பலவற்றிலும் கட்சியில் அதிகார வர்க்க போக்கும், தாராள வாத போக்கும் தன்னிச்சைப் போக்கும் இருப்பதாகவும், கட்சியின் ஜனநாயக மத்தியத்துவம் மீறப்படுவதாகவும் கடுமையான விமர்சனங்கள் வந்துள்ளன. இத்தகைய போக்கினை மாநிலக்குழுவிலிருந்து கிளைவரை விமர்சனம், சுயவிமர்சனம் ரீதியில் உறுதியான உட்கட்சி போராட்டங்களை நடத்தி களைய வேண்டும். கட்சியில் ஜனநாயக மத்தியத்துவத்தை காத்திடவேண்டும்.

31. அ) இந்த காலத்தில் நாம் நடத்திய இயக்கங்கள், போராட்டங்கள் ஆகியவற்றில் நமக்கு கிடைத்த அனுபவங்களையும் அலைகளின் பரிசீலனையில் கிடைத்த விமர்சனங்களையும் கொண்ட மதிப்பீடு என்ற வகையில் இந்த அறிக்கையை உங்கள் முன் வைத்திருக்கின்றோம். இந்த அறிக்கையின் மீது தோழர்கள் விவாதத்தினை நடத்தி சிறந்த ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் முன்வைத்து அறிக்கையை செழுமைபடுத்திட வேண்டுகிறோம் நமது பலவீனத்தை நாம் எப்படி குறைவாக மதிப்பிடக் கூடாதோ அதைப்போல் நமது முன்னேற்றத்தையும் குறைத்து மதிப்பிடக் கூடாது.

ஆ) கடந்த மூன்றாண்டுகாலத்தில் எழுந்த அனைத்து அரசியல் பிரச்னைகளிலும் நமது கட்சி ஒருமித்தகருத்தோட்டத்துடன் நின்று அணிகளுக்கு வழிகாட்டி போராடியுள்ளது. இடதுசாரி வெகுஜன அமைப்புகளின் அகில இந்திய அரசியல் பிரச்சார பயணம், 'பாரத் பந்த்' போன்ற அகில இந்திய இயக்கங்களை தமிழகத்தில் நாம் வெற்றியுடன் நடத்தியுள்ளோம். இடதுசாரி ஜனநாயக கட்சிகளை மக்களுக்கான கூட்டு இயக்கங்களில் கொண்டுவர நாம் முன்கையெடுத்து செயல்பட்டுள்ளோம். நமது தலைமையின் கீழ் உள்ள வெகுஜன அமைப்புகளான வாலிபர், மாதர்சங்க அமைப்புகளின் வளர்ச்சி தொடர்ந்து முன்னேறிவருகிறது.

தொழிற்சங்க அரங்கத்தில் உறுப்பினர் எண்ணிக்கையில் பெருமளவு முன்னேற்றம் இல்லையென்ற போதிலும், பல்வேறு தொழிற்சங்க போராட்டங்களையும், தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைகளையும் விடாப்பிடியாக மேற்கொண்டு தொழிற்சங்க அரங்கிலும் நமது செல்வாக்கை உயர்த்தியுள்ளோம்.

நமது கட்சியின் கிளர்ச்சி பிரச்சாரங்களில் முன்னெப்போதையும் விட இந்தக்காலத்தில் பெருமளவு மக்கள் பகுதியினரை திரட்டி போராட முடிந்துள்ளது. கணிசமான மக்கள் பகுதியினரிடத்தில் நமது கட்சியின் அரசியல் நிலையினை கொண்டு செல்ல முடிந்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 30%, வாலிபர் சங்க உறுப்பினர் எண்ணிக்கை 100%. மாதர் சங்க உறுப்பினர் எண்ணிக்கை 20%, மாணவர் சங்க எண்ணிக்கை 70% விச உறுப்பினர் எண்ணிக்கை 300% அதிகரித்துள்ளது. இது நமது உயர்த்தியுள்ளது.

இத்தகைய முன்னேற்றத்திற்கு மத்தியில் நமது பலவீனங்களைப் பற்றி ஸ்தூலமாக மதிப்பிட்டு அவற்றை களைய வேண்டியுள்ளது.

இ) குறுகிய காலத்தில் கட்சியின் பலவீனங்கள் களையப்பட வேண்டும் என்பதை பற்றி 12வது கட்சி காங்கிரஸ் தீர்மானம் கீழ்க்கண்டவாறு வற்புறுத்துகின்றது.

"நன்றாக கட்டப்பட்ட ஒரு பலமான கட்சி மட்டுமே முன்னணிப் படையின் கட்சி செய்ய வேண்டிய கடமையைச் செய்ய இயலும். நமது கட்சி மக்களிடையே ஆழமாக வேர் கொள்ள வேண்டும் என்பதோடு, ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான புதிய ஆதரவாளர்களைப் பெறவேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் கட்சிக்கு உள்ள பலவீனங்கள் மிகக் குறைந்த காலத்தில் அகற்றப் படவேண்டும்".

தோழர் லெனின் அவர்களின் புகழ் பெற்ற பொன்மொழி ஒன்றினை இந்த இடத்தில் நினைவு கூருவோம்:-

"அதிகாரத்தை பிடுங்குவதற்கான அதன் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தனது கட்சி ஸ்தாபனத்தைத் தவிர வேறெதையும் ஆயுதமாகக் கொள்ள முடியாது".

லெனின் காட்டியுள்ள இந்த பாதையில் நமது கட்சி ஸ்தாபனத்தை வலுப்படுத்தி, தமிழகத்தில் நமது கட்சியை கட்டும் பணியை மேற்கொள்வோம்.

நமது எதிர்கால கடமைகளை இதற்கேற்ப நிறைவேற்ற சபதமேற்போம்.

★ கட்சியின் மாநில மாவட்ட மையங்களை, பெருகி வரும் அரசியல் ஸ்தாபன பணிகளுக்கு ஏற்ப வலுப்படுத்துவோம்.

★ கட்சி கிளை செயலாளர்கள் கூட்டத்தை மாதம் ஒருமுறை கூட்டி, கட்சி கிளைகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் காணுவோம்.

★ நமது கட்சியின் நாளேடான தீக்கதிர் விற்பனையை இரு மடங்காக்குவோம்.

★ தத்துவார்த்த, அரசியல் பயிற்சிக்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுவோம்.

★ தத்துவார்த்த மாத இதழ்-ஒன்றினை விரைவில் கொண்டு வருவோம்.

★ தொடர்ச்சியான அரசியல் பிரச்சாரத்தை வலுவுடன் முன் கொண்டு சென்று, சீரழிந்து வரும் முதலாளித்துவ சித்தாத்தங்களையும், திராவிட இயக்க சித்தாத்தங்களையும் முறியடித்து, மார்க்சிய—லெனினிய சித்தாந்தத்தை முன்னெடுத்துச் செல்வோம். இதற்கென பல்லாயிரக்கணக்கான பிரசுரங்களை வெளியிட்டு விநியோகிப்போம்.

★ வர்க்க வெகுஜன அமைப்புகளில் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களை சேர்ப்போம்.

★ இடதுசாரி ஜனநாயக சக்திகளை பலப்படுத்துவோம்.

★ எதேச்சாதிகார சக்திகளுக்கெதிராகவும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்குமான போராட்டத்தில் முன்னணியில் நிற்போம்.

★ பிரிவினைவாத, வகுப்புவாத, ஜாதிய சக்திகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவதற்கான போராட்டத்தை விடாப்பிடியாக முன்கொண்டு செல்வோம்.

★ தொழிலாளிகள், பெண்கள், அரிஜனங்கள், சிறுபான்மையோர் என அனைத்துப் பிரிவிலிருந்தும் ஆயிரக்கணக்கான கட்சி உறுப்பினர்களை உருவாக்குவோம். பலமான கட்சியை கட்டுவோம்.

இத்தகைய குறிக்கோள்களுடன் பணியாற்றுவோம்
முன்னேறுவோம்

வாழ்க இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி

வெல்க மக்கள் ஜனநாயகப் புரட்சி!

புரட்சி வாழ்த்துக்களுடன் ...

— மாநிலக் குழு

★ ★ ★ ★

தீக்கதிர் பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ் மதுரை-18

தொழிற் சங்க அரங்கம் - சங்க உறுப்பினர்கள் பட்டியல்

வ. எண்	மாவட்டம்	1985	1986	1987	1988
1.	மதுரை	13029	11986	12985	——
2.	வடஆற்காடு	——	——	——	8000
3.	புதுக்கோட்டை	890	——	970	——
4.	சேலம்	——	——	9000	——
5.	நெல்லை-சிதம்பரனார்	8614	10020	10611	——
6.	செங்கை	——	2646	3487	2902
7.	பெரியார்	2796	2904	3768	——
8.	திருச்சி	——	6532	6588	8107
9.	காமராஜர்	1926	3009	2440	2217
10.	தர்மபுரி	3647	——	——	3401
11.	தென் ஆற்காடு	——	5461	6671	8037
12.	அண்ணா	3216	4618	4707	5405
13.	தஞ்சை	——	——	——	5100
14.	கோவை—நீலகிரி	25407	24706	24555	——
15.	சென்னை	25000	——	25555	26398
16.	குமரி	——	6622	7672	——
17.	பாண்டிச்சேரி	——	——	1954	——
18.	பசும்பொன்-முத்துராமலிங்கம்	——	1070	1674	2231

(விடுபட்ட விபரங்கள் மாவட்டக் குழுக்கள் அளிக்கவில்லை)